31305

# திருக்கோயில்களும் பண்பாடும்



திருவாவடுதுறை ஆதீனம் 1995

எட்டாவது

# உலகத் தமிழ் மாநாட்டு மலர்

*திருவள்ளுவர் ஆண்டு 2025*

1—1—1995

வெளியீடு எண்: 426

உ

சிவமயம்

# திருக்கோயில்களும் பண்பாடும்

# TEMPLES AND CULTURE

இது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

இருபத்து மூன்றாவது குரு மகாசந்நிதானம்

**சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்**

திருவுளப் பாங்கின் வண்ணம் வெளியிடப்பெறுவது

**திருவாவடுதுறை ஆதீனம்,**

திருவாவடுதுறை - 609803.

1995.

உரிமை பதிவு
விலை ரூ. 30 - 00.

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
திருவாவடுதுறை,

ஆசிரியர் :

'திருமுறை உரைமணி' 'செஞ்சொற்கொண்டல்'

'நல்லாசிரியர்'

**டாக்டர். சொ. சிங்காரவேலன்**, எம். ஏ., பிஎச். டி., டிப். மொழியியல்,

(முன்னாள் சிறப்புநிலைப் பேராசிரியர் - தமிழியல்துறை,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

**மயிலாடுதுறை.**

உ

சிவமயம்

# அருள்திரு நமசிவாய மூர்த்திகள் வாழ்த்து

இருதய நாப்பண் அஞ்செழுத்து உருவின்
இறைவனை உயிர்க்கொலை செயாமை,
அருள், பொறி அடக்கல், பொறை, தவம், வாய்மை,
அன்பு, அறிவு என்னும்எண் மலர்கொண்டு
ஒருமையொடு அருச்சித்து இடுகஎன்று அடியார்க்கு
ஒள்ளிய தீக்கைசெய்து உணர்த்தத்
திருஅமர் துறைசை உறைஅருள் குருவாம்
திருநமச் சிவாயர்தாள் போற்றி.

— பழம்பாடல்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குருமுதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

உ

சிவமயம்

## குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— தவத்திரு மாதவச் சிவஞான முனிவர்.

உ
சிவமயம்

# சிவப்பிரகாசக் குறள்

விக்கிரம சிங்க புரத்தில் தவம்பெருக்கும்
இக்குரவன் வந்தான் இனிது. 1

துறைசைக் குருபீடம் துலங்கிடவே ஏற்ருன்
நிறைநிலையை நற்றவத்தால் நின்று. 2

ஆளுடைய பிள்ளை, அகத்தியனே டொன்ருகி
நீளுலகில் வந்த நிலை. 3

சமயம், சமூகம், நலப்பணிகள் ஆற்றும்
இமயம் இவனே இயம்பு. 4

ஆவுடையார் கோயில் குடமுழுக்கை ஆற்றியே,
பாவுயரக் கொண்டான் பரிந்து. 5

சிவஞான மாமுனியோ சீர்த்துறைசை போந்து
தவஞானம் ஈந்தான் தனித்து. 6

ஆட்சி,நிர் வாகம், அருங்கலைகள் பேணுகின்ற
மாட்சிகள் கொண்டான் மலிந்து. 7

திருக்குறள்போற் சொற்சுருக்கம், தேர்ந்தபொரு ளாழம்
பெருக்கும் இவனுரைக்கும் பேச்சு. 8

பஞ்சாக் கரமூர்த்தி பாதங்கள் எப்பொழுதும்
நெஞ்சுடையான் இந்த நிலத்து, 9

சிவப்ர காசத்தால், சீர்த்துறைசை தன்னை
உவந்தெடுத்துப் போற்றும் உலகு. 10

அடியேன்,

சொ. சிங்காரவேலன்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்துமூன்றுவது குரு மகாசந்நிதானம்
**சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச்சந்நிதி அவர்கள்**

# உள்ளுறை


முகவுரை

அருள்திரு நமசிவாயமூர்த்திகள் வரலாறு

திருக்கோயில்களும் சமுதாயமும் ... 1

1. திருக்கோயில்களும் இலக்கிய வளர்ச்சியும் .. 5

2. திருக்கோயில்களால் அறியப்படும் மக்கள் சமயப் பண்பாடு ( நாயன்மார்களைப் போற்றுதல் ) ... 12

3. திருக்கோயில்களைப் பேணிய தமிழ் மன்னர்களின் பண்பாட்டுத் திறன் ... 29

4. கல்வெட்டுக்கள் உணர்த்தும் பண்பாட்டு நெறி - சில குறிப்புகள் ... 36

5. திருக்கோயில்களின் அமைப்பும், சிறப்பும் - ஒரு கண்ணோட்டம் ... 39

6. சக்தி வழிபாடும், மக்கள் வாழ்வு நெறியும் ... 48

7. நவக்கிரகத் திருக்கோயில்களும் மக்கள் வழிபாடும் ... 56

உ
சிவமயம்

# முன்னுரை

வாழ்க்கை வாழ்வதற்கே. வாழ்வது என்றால் எப்படி? குறிக்கோள் ஒன்று வேண்டும். அந்தக் குறிக்கோளும் உயர்ந்ததாக இருக்கவேண்டும். அதனை அடையும் நெறியும் தூயதாக இருக்கவேண்டும். குறிக்கோள் இலலாத வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லை. "குறிக்கோள் இலாது கெட்டேன்" என்பார் திருநாவுக்கரசர். அத்தகைய குறிக்கோளே அமைதி, இன்பம், நிறைவை நமக்குத் தரும். தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த உயர்ந்த குறிக்கோளை நமக்கு அடைவிப்பனவே தமிழகத்தின் திருக்கோயில்கள் என்பது முற்றிலும் உண்மை.

"திருக்கோயில்களும் பண்பாடும்" என்ற இந்த நூல், நம் திருக்கோயில்கள் பண்பாட்டைக் காத்து நிற்கும் கருவூலங்களாக விளங்குதைப் பல்வேறு சான்றுகளுடன் விளக்குகின்றது. 'மனம் ஒன்றிய வழிபாடே நிலைத்த இன்பத்தை, அமைதியைத் தரும்' என்பதற்குத் திருக்கோயில்கள்தாம் தக்க சான்றுகள்.

திருக்குறளில் ஒவ்வொரு குறளிலும் ஏழுசீர்கள் அமைந்துள்ளது போலவும், உயர்ந்த கர்நாடக சங்கீதம் ஏழு ஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்டது போலவும், சைவ நாயன்மார் அருளிய தோத்திரப் பாக்கள் முதல் ஏழு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டதுபோலவும் இந்த நூற் கட்டுரைகளும் ஏழு என்ற எண்ணிக்கையில் அமைந்துள்ளன. இது எண்ணி எடுத்த முடிவு அன்று. இறைவன் திருவருளால் வந்த ஒரு பொருத்தமே என்று கூறுவது தவறாகாது.

திருக்கோயில்களுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள நெருங்கிய பிணைப்பை முதல் பகுதி சுருக்கமாக எடுத்துரைக்கிறது. இக்கட்டுரை இந்த நூலுக்கான முன்னுரைப் பகுதியாகவும் அமைந்தது எனலாம். சமுதாய நல வாழ்வையும், ஒற்றுமையையும் மையமாகக் கொண்டே திருக்கோயில்கள் அமைந்துள்ளன. திருக்கோயில் அன்றாட பூசைகள், திருவிழாக்கள், திருப்பணிகள் முதலிய அனைத்தும் மக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. உழைக்கும் வர்க்கத்தினருக்கே திருக்கோயிற் பொருளாதாரம் பெரிதும் பயன்படுகின்றது என்பது உண்மை.

திருக்கோயில்களில் காணப்பெறும் கல்வெட்டுக்கள் எனப்படும் சாசனங்களில் காணப்படும் இலக்கியப் பகுதிகள், திருக்கோயில்களில் பாடப்பட்ட தோத்திர இலக்கியங்களால் தமிழ் மொழிக்கு விளைந்த நற்பயன்களை முதல் கட்டுரை தக்க சான்றுகளுடன் விவரிக்கின்றது.

திருக்கோயில்களைச் சார்ந்த மெய்யடியார்கள், தோத்திரப் பாக்களை அருளிய தேவார மூவர், ஆகிய நாயன்மார்களை மக்கள் எவ்வெவ்வாறு போற்றினர் என்பதைக் கல்வெட்டுக்கள் வாயிலாக விளக்குவது இரண்டாம் கட்டுரை.

மக்கள் பண்பாட்டில் தெய்வ நலம் பொருந்திய சான்றோரைப் போற்றும் உயர்ந்த உணர்வு காலந்தோறும் வளர்ந்து வந்துள்ளமையைக் கல்வெட்டு ஆதாரங்களுடன் இக்கட்டுரை உரைக்கும். 'பெரியாரைத் துணைக் கோடல்' என்ற திருவள்ளுவர் கருத்திற்கும் மக்கள் பண்பாட்டிற்கும் உள்ள நெருங்கிய உறவு இதனால் புலப்படுத்தப் பட்டுள்ளது.

திருக்கோயில்களையும், திருக்கோயில் தருமங்களையும் சோழ, பாண்டிய மன்னர்கள் எவ்வாறு பேணிப் பாதுகாத்தனர் என்பதையும், மன்னர்களின் பக்தி ததும்பிய பண்பாட்டு உணர்வையும் விளக்குவது மூன்றாவது கட்டுரை.

திருக்கோயில்களில் உள்ள எண்ணற்ற கல்வெட்டுக்களால் உணர்த்தப்படும் மக்களின் தார்மீக உணர்வு, பண்பாட்டு நெறி, அரசியல் ஒழுங்கு, முதலியவற்றை அடுத்து வரும் நான்காம் கட்டுரை விளக்கும்.

சைவ ஆகமங்களின் படி அமைக்கப்பட்ட இத் திருக்கோயில்கள் எழுப்பப்படும் முறை, அவற்றின் அமைப்பு, அழகு, அவற்றின் பகுதிகள் வளர்ந்த வகை, தெய்வத் திருவுருவங்கள், அவற்ருல் விளங்கும் மக்கள் பண்பாடு ஆகியவற்றை ஆராயும் ஒரு கண்ணேட்டமே ஐந்தாவது இயல்.

சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாடும் இணைந்த புதுமையை, இதனுல் விளைந்த தமிழ் மக்களின் பண்பாட்டு வரலாற்றை இலக்கியம், நாட்டுப்புற மக்கள் வாழ்க்கையோடு ஒட்டிச் சுருக்கமாக ஆராய்வதே ஆருவது பகுதி.

இயற்கை வழிபாட்டின் ஒரு கூருக விளங்கும் நவக்கிரக வழிபாடு, தமிழகத்தில் பரவியதையும், நவக்கிரகம் பற்றிய விளக்கங்களையும், நவக்கிரகத் தலங்கள் பற்றிய தத்துவங்களையும் பற்றி விளக்குவதாக ஏழாவது பகுதி அமைகின்றது. மக்கள் பண்பாட்டு வளர்ச்சியில் இது ஒரு சிறப்பான இடத்தைப் பெறுவதை இது சுட்டுகின்றது.

இவ்வாறு திருக்கோயில்களும் பண்பாடும் பற்றிய இந்தச் சிறிய நூல், அறிமுகஅளவே என்ருலும் தமிழ் ஆராய்ச்சி முடிவுகளைத் தொகுத்துக் காட்டும் முயற்சியாகவும், தமிழகத் திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாகமட்டும் அமையாமல், மக்களின் ஒழுக்கத்தை, கடமை உணர்வை, நம்பிக்கையின் உறுதியை உலகிற்குக் காட்டும் அற்புதமான பண்பாட்டுக் கருவூலங்களாகவும் அமைந்திருப்பதை எடுத்துரைக்கும் பதிவு ஆவணமாகவும் அமைகின்றது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு தமிழகத்தில், பழம் பெருமை வாய்ந்த தஞ்சை மாநகரில் கூடும் போது இந்த நூல், திருக்கோயில்கள் பலவற்றின் இருப்பிடமாக விளங்கும் தஞ்சை மாவட்டச் சிறப்பை எடுத்துரைக்கும் சான்று நூலாகவும் மலர்கின்றது.

இம்மாவட்டத்தில் திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுர ஆதீனமும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடமும் ஞானப் பண்ணைகளாக விளங்கி ஞானப் பயிர் செழித்து வளரச் செய்து வருவதை உலகு அறியும்.

திருவாவடுதுறை, சூரியனுர் கோயில், ஆவுடையார் கோயில், திருவீழி மிழலை, மயிலாடுதுறை, திருவிடைமருதூர் முதலிய திருக்கோயில்களைத் தம் அருளாட்சியில் பேணி வரும், திருவாவடுதுறை யாதீனம் 23 ஆவது குரு மகாசந்நிதானம் **சீர்வளர்சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள்** தாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஞான பீடம் ஏறிய பத்தாண்டுகளுக்குள் கண்டுள்ள சமய, சமுதாய, இலக்கியப் பணிகள் கணக்கில் அடங்காதவை.

அவர்கள் இந்த மாநாட்டிற்கு வருகைதரும் உலகப் பேரறிஞர்களுக்குத் தம் திருக்கை வழக்கமாக வழங்கும் அருட்கொடையாக இந்த நூல் அமைகின்றது.

இந்திய அரசுக் கல்வெட்டுத்துறையினர் ஆண்டு பலவாக அரும்பாடுபட்டு வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கைகள், அபிதான சிந்தாமணி, கலைக்களஞ்சியம் தொகுதிகள் மு. இராகவையங்கார், சீனி-வேங்கடசாமி, கே. எம். வேங்கடராமையா, தி. வை. சதாசிவப் பண்டாரத்தார், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், கு. அருணுசலக் கவுண்டர், என். இராமகிருஷ்ணு முதலிய அறிஞர்கள் அவ்வப்போது கண்டுள்ள ஆய்வு முடிவுகள், சைவத்திருக்

கோயில் ஆகமமுறைகள் ஆகியவை அனைத்தும் பண்பாட்டு நெறியில், கூர்ந்து நோக்கப் பெற்றுள்ள கட்டுரைகள் வடிவில் எழுதப்பெற்ற இந்நிலையில், தமிழகம் இவர்களை என்றென்றும் நன்றி உணர்வுடன் எண்ணும் என்பது உண்மை.

இதனைக் கண்ணுறும் உலக அறிஞர்கள், தமிழகத் திருக்கோயில்களைச்சார்ந்த பண்பாட்டு வளர்ச்சியை சமய வளர்ச்சியை, இலக்கிய வளர்ச்சியை, இனிது உணர்வர் என்பதுதான் சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்களின் திருவுள்ளம்,

'தஞ்சையில் நடைபெறும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலராக இச் சிறு நூலை வெளியிட்டருள வேண்டும்' என்று சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்கள் திருவடித்தாமரைகளில் என் வேண்டுகோளை முன் வைத்தேன். **'21 ஆம் நூற்றாண்டிற்குத் தமிழ்மொழியின் பண்பாட்டுப் பங்களிப்பு' என்பதையே மையக் கருத்தாகக் கொண்ட இம்மாநாட்டில், திருக்கோயில் பண்பாட்டு வரலாறாக** உள்ள இந்நூல் வெளிவரல் பொருத்தம் என்று திருவுள்ளம் இசைந்து அழகுற அச்சிட்டு அருளியுள்ளார்கள்.

எளியேனது சிறு காணிக்கையைத் தம் கருணைப் பெருக்கால் ஏற்றுக்கொண்டருளும் **ஸ்ரீ நமசிவாய மூர்த்திகளின் திருவடிகளுக்கும், 23 ஆவது குருமூர்த்திகளாக விளங்கும் சீர் வளர் சீர் சிவப்பிரகாச பண்டாரச் சந்நிதி அவர்கள்** பொன்னார் திருவடிகளுக்கும் மன மொழி மெய்களால் ஆகிய என் வணக்கங்களைப் புலப்படுத்திக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,
சீர் வளர் சீர் குரு மகாசந்நிதானம் அவர்களின்
அருளாணையின்வண்ணம்,
***சொ. சிங்காரவேலன்***

*"ஞானவேல்"*
*2. மாயூரநாதர் சந்நிதித் தெரு,*
*மயிலாடுதுறை.*
10—12—94

# TEMPLES AND CULTURE

Life is to live. How to live? There should be a purpose. That purpose should also be one of the best. The Path to achieve it should be the purest Life without a purpose has no meaning. Saint Thirunavukkarasar says "I am damned without aim". Purposeful life gives us, peace, happiness and satisfaction. As far as Tamilnadu is concerned it is true that such lofty ideals are made possible by the temples of Tamilnadu.

This book "Temples and Culture" highlights with numerous evidence, how our temples like a treasury preserves the tamil culture. Our temples are the standing evidence to point out that "concentrated worship gives Happiness and peace"

Like, "Thirukkural" where in every Kural has seven words, as in carnatic music wherein every song has seven swaras and as our hymns of Saiva Nayanmars also have seven parts of Saiva Thirumurais; so also the essays on this book are "Seven" in number. This is not a Planned decision. It may not be wrong to say that it so suited due to the blessings of God.

The first part putsforth in brief the close link between Temples and Society. This essay serves as the prologue to the book. Social Welfare and integration are the centre piece of the temples. The daily Poojas, construction of temples etc are all done to serve people. It is true that temple economics revolves round and utilised much by the probtariat.

The First essay reveals with relevant evidence how Tamil language benefited much from the pieces of literature and hymns sung in temples that are found in the temple inscriptions the magnacartas.

The second essay explains through temple inscriptions how people adored the devotees of the temple, the "Thevara trios" who sung the humns, and other "Nayanmars". This essay also Ponders with the evidence of inscriptions how human culture was embeded with celebrating the doyans of religion. The close relationship between human culture and "getting the support of greatmen" is revealed through this.

The third essay exposes the maintenance of the temples and temple dharmas by the great Chola, Pandya Kings as well as the Bhakti brimming cultural feelings of the Great Kings.

The fourth Chapter depicts the peoples' righteous feelings, cultural depths, political orderliness etc through the temple inscription.

The fifth chapter surveys the construction details as adumbrated in Saiva Agamas, structure, beauty, the growth of the various parts, image of idols and their effects in the culture of the people.

The sixth part of the book briefly dealswith the combined worship of Siva-Sakthi, the consequent effects on the cultural history and literature of the Tamil people reflecting the daily life of the rural folk.

The last and the seventh chapter indicates worship of Navagraha wich is an aspect of nature worship and how it spread in Tamilnadu. It is significant that this aspect of worship gains an important place in the growth of People's culture.

Thus, the small book on 'Temples and Culture' though introductory in nature, synthesises the results of Tamil research and emphasises that the temples of Tamilnadu serve not only as places of worship but also act as an instrument to discipline their life style feel their responsibilities and the impeccable faith and thus act as a wonderful treasure of culture.

While the eighth World Tamil conference meet in this historic Tamil city of Tanjavur, this book will serve as an authortative evidence work on the city of Thanjavur which abounds in temples.

It is in this district the world renowned three South Indian Mutts viz. "Thiruvavaduthurai Mutt", "Dharmapuram Mutt" and "Thiruppanandal Sri Kasi Mutt" do the Yeoman service of originating, spreading and perpetuating "Gnana". His Holiness **Sri La Sri Sivaprakasa Pandarasannidhi avargal** is the 23rd Gurumahasannidhanam in the holy order of the distinguished heads. Within 10 years of his enthronement in the Gnanapeeth, as head of the biggest mutt he has been maintaining with all religious fervour and devotion, the temples in Thiruvavaduthurai, Suriyanarkoil, Aavudaiyarkoil, Thiruveezhimizhalai, Mayiladuthurai and Thiruvidaimarudur with grandeur and glory. Besides, he is responsible for innumerable services towards religious, social and literary fields.

This book is presented by His Holiness as "prashad" to the scholars attending the World Tamil meet.

It is the ardent and genuine belief and expectation of His Holiness Sri La Sri Guru Maha Sannidanam that the scholar of the world who chance to read this book will understand and appreciate the extent of growth of culture, religion and literature through the temples of Tamilnadu.

உ
சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

## குருமுதல்வர்

# அருள்திரு நமசிவாயமூர்த்திகள் வரலாறு

நீர் வளமும் நில வளமும் சிறந்தது தண்தமிழ்க் காவிரி பாயும் செந்தமிழ்ச் சோழ நாடு. அச்சோழ நாட்டின் ஒரு பகுதியாக விளங்குவது இன்றைய தஞ்சை மாவட்டம். அம்மாவட்டத்தில் திருக்குடமூக்கு என்ற பாடல் பெற்ற தலம் கும்பகோணம். அங்கிருந்து மற்றொரு பாடல் பெற்ற தலமாகிய திருமயிலாடுதுறை செல்லும் நெடுவழியில் திரு ஆவடுதுறைக்கும் மயிலாடுதுறைக்கும் இடையில் விளங்கும செல்வத்திருப்பதி திருமூவலூர் என்னும சிற்றூா.

திருமூவலூரில், இனறைக்கு ஏறத்தாழ 500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்துவந்த சைவக் குடிமக்களுள் சைவ வேளாளர் குடியில், பரம்பரையாகச் சிவபெருமானுக்கே திருத்தொண்டு புரிந்து வந்த சைவக் குடும்பம் ஒன்று. அக்குடும்பத்தில் நீண்ட நாளாக மகபபேறில்லாது வருந்திய பெரியார் ஒருவர். அவர் தமக்குத் திருமணம் ஆகிப் பலநாள் சென்றும் மகப்பேறு இல்லாமையால் தாமும் துணைவியாருமாய் ஒருநாள் அங்கிருந்து தில்லை செல்லும் வழியில் உள்ள திருப்புள்ளிருக்கு வேளூர்ப் பெருமானை வழிபட்டு வேண்டிவரச் சென்றனர். இன்று வைத்தீசுரன் கோயில் என்று வழங்கப்படுவது புள்ளிருக்கு வேளூர். அதுவும் பாடல் பெற்ற சிவத்தலமே.

அங்குச் சென்ற பெரியாரும் அவர்தம் துணைவியாரும் அங்குக்கோயில் கொண்டருளியிருக்கும் அம்மை தையல் நாயகி உடனுகிய வைத்தியநாதப் பெருமானை அன்பு கனிந்த மனத்தோடும் ஆராத வேட்கையோடும் வழிபட்டனர். வைத்தியநாதப் பெருமான் திருவருளும் அவர்க்கு வாய்த்தது. மகப்பேறு கைகூடிற்று.

திருப்புள்ளிருக்கு வேளூர் வைத்தியநாதப் பெருமான் இன்னருளோடும் திருமூவலூர் திரும்பிய பெரியோர்க்கு உரிய காலத்தில் சைவம் உய்யவும் தரணி ஓங்கவும் ஆண்மகவு ஒன்று பிறந்தது. வைத்தியநாதன அருளால் பெற்ற அக்குழந்தைக்கு வைத்தியநாதன் என்றே திருப்பெயர்சூட்டி மகிழ்ந்தனர் பெற்றோர் நம் பெரியோரும்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் ஆக வளர்ந்து வந்தார் வைத்தியநாதனர். அவர் தோன்றிய நாள்தொட்டுத் தூய உள்ளத்தராய்ச் சிவசிந்தனை அனறிப் பிறசிந்தனை இல்லாது வளர்ந்து வந்தார். இடையிடையே பெற்றோரோடும் கூடிப் புள்ளிருக்கு வேளூர் சென்று வைத்தியநாதப் பெருமானை வணங்கி வந்தார் பிள்ளை வைத்தியநாதர்.

ஏழாண்டு ஆயிற்று. ஒருநாள் வழக்கம் போல் வைத்தியநாதரின் பெற்றோர் அவரை அழைத்துக்கொண்டு புள்ளிருக்கு வேளூர் சென்று பெருமானை வழிபட்டு நின்றனர். இடையருது சிவசிந்தையுடைய வைத்தியநாதப பிள்ளைக்குச் சிவவழிபாடு செய்து சிறப்பதற்குரிய பக்குவ காலம் வந்துவிட்டது அதனை அறிந்த வேளூர் வைத்தியநாதப் பெருமானே அவர்க்குச் சிவபூசை எழுந்தருளப் பண்ணத்திருவுளளம் கொண்டார். தம்மை அருச்சித்து வரும் ஆதிசைவருள ஒருவர் போலத் திருமேனி கொண்டு அங்குத் தோன்றினுர். தம் திருமுன்பு வழிபட்டு நிற்கும் வைத்தியநாதர் முன் வந்து அவரைத் திருநோக்கம் செய்து தம் திருக்கைகளால் அவர் திருக்கைகளில் தம்மை வழிபடுதற்குரிய அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத் திருமேனி ஒனறனைக் கொடுத்தருளினுர். அவரை வழிபடும் முறைமையையும் வைத்தியநாதர்க்குச் செவியறிவுறுத் தருளினுர். அவ்வளவில் அங்கு நின்றும் மறைந்தருளினுர்.

இவ்வாறு மூவலூரில் தோன்றிய வைத்தியநாதப் பிளளை உரிய பருவத்தில் வேளூர்ப் பெருமானுலே திருக்கண்ணுலும் திருக்கையாலும் திருவாக்காலும் தீக்கை பெற்றுராகிச் சிவ வழிபாடு செய்தற்கும் தகுதி பெற்றுர். இதனை அறிந்த அவர் பெற்றோர் அளவற்ற மகிழ்ச்சியுடையராகி மீண்டும பெருமானை வணங்கி ஊர் திருமபினர். அன்றுமுதல் வைத்தியநாதர் வேளூர்ப்பெருமானுல் எழுந்தருள்விக்கப் பெற்ற பெருமானைத் தம்மை உடைய வராகக் கொண்டு நாள் தோறும தவருமல வழிபட்டுவரலாயினார்.

அகத்தே பொழியும் அன்போடு புறத்தேயும் சிவலிங்கத் திருமேனியில் பெருமானைக் கண்டு இடையருது வழிபாடு செய்து வருவார்க்கு மேலும் மேலும் திருவருள் சுரந்து பெருகிவரும். அதனுல் அவ் உயிர்க்கு ஆகவேண்டும் ஆக்கங்களும் விரைந்து

வரும். மூவலூர் வைத்தியநாதர்க்கும் அச் சிறப்பு பெறுதற்குரிய நாளும் தகுதியும் பொருந்திநின்றன. அப்போது நிகழ்ந்தது ஒன்று.

திருக்கயிலைமலையில் கல்லால் மரம் ஒன்று. அம் மரத்தின் நிழலில் ஓர் ஆசிரியர். அவர் தென்முகம் நோக்கிய கடவுள். தக்கணமூர்த்தி. அத்தென்முகக் கடவுளாயிருந்தவர் சீகண்ட பரமேசுரன். யாவர்க்கும் மேலாம் சிவபெருமானே தென்முகக் கடவுளாக வீற்றிருந்தார்.

உயிர்கள் மெய்ப்பொருள் உணர்ந்து உய்தி பெறுதற்காகச் சிவபெருமானால் அருளப்பட்டன சைவ ஆகமங்கள். அவ் ஆகமங்களின் பொருளை அறிய முற்பட்டார் திருநந்திதேவர். அவர்க்கு ஆகமப் பொருளைத் தெளிவதில் மலைப்பு ஏற்பட்டது. அம் மலைப்பினைத் தீர்த்தருளச் சிவபெருமானை வேண்டினார் நந்திபெருமான். அவர்க்கு உண்டான அம்மலைப்பினைத் தீர்த்தருளத் திருவுள்ளங் கொண்டார் சிவபெருமான். மேற்கூறியபடி ஆலமர் கடவுளாக அமர்ந்திருந்து நந்திபெருமானுக்கு ஆகமப்பொருளில் உண்டான மலைப்பினைத் தீர்த்து மெய்ப்பொருள் இதுவெனத் தெளிவுறுத்தருளினார். அவ்வாறு பொருள் தெளியுமாறு உணர்த்தியது சிவஞானபோதம் எனப்பட்டது.

மலைவு தீர்ந்து தெளிவெய்திய நந்திபெருமான் தாம் கேட்ட சிவஞானபோதத்தை சனற்குமார முனிவர்க்கு அருளினார். அவர் அதனைச் சத்தியஞான தரிசனிகளுக்கு அருளினார். அவர் பரஞ்சோதி முனிவர்க்கு அதனை அருளினார். சிவஞானபோதத்தை நந்திபெருமான் வழியில் கேட்டருளிய பரஞ்சோதி முனிவர் உலகத்தார் உய்யும் பொருட்டு அதனைத் திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர்க்குச் செவியறிவுறுத்தருளினார்

மெய்கண்டதேவர் பரஞ்சோதி முனிவரிடம் கேட்டுணர்ந்த சிவஞானபோதப் பொருளைப் பன்னிரு சூத்திரங்களில் தமிழில் நூல்வடிவாக்கி யருளினார். அவரை ஆசிரியராகக் கொண்ட அருணந்திசிவம் சிவஞானபோதச் செம்பொருளைத் தெளிவுறக் கேட்டு உணர்ந்து அதனைச் சிவஞான சித்தியார் என்ற பெயரில் விரிவான நூலாக்கித் தந்தருளினார். சிவஞானபோதப் பொருளை அவர் தம் மாணக்கருள் ஒருவரான மறை ஞான சம்பந்தர்க்கு அறிவுறுத்தருளினார். அக்காலத்தில் தில்லைவாழ் அந்தணருள் ஒருவரான கொற்றவன்குடி உமாபதிசிவம் மறைஞான சம்பந்தரை ஆசிரியராகக் கொண்டார். அவரிடம சிவஞானபோதம் தெளிவுறப் பெற்றார். சிவஞானபோதச் செம்பொருளை எட்டு நூல்களால் யாவரும் அறிய விளக்கம் செய்தருளினார்.

மெய்கண்டதேவர் மரபில் சந்தானகுரவர் நால்வரில் கடைசியாக வந்தவர் உமாபதிசிவனார். அவரோடு மெய்கண்ட சந்தானம் நின்றுவிடவில்லை. உமாபதிசிவம் நந்திமரபில் வந்த ஞானநன்னெறி உலகில் நின்று நிலவிடத் தமக்கொரு தக்க மாணக்கரைத் தேர்ந்தெடுத்தார். அவரே அருள்நமச்சிவாயர். உமாபதிசிவம் அருள்நமச்சிவாயருக்குச் சிவஞானபோதத்தைத் தெளிவுறுத்தியதும் அன்றி இறுதியில் தாம் வழிபட்டு வந்த அழகிய திருச்சிற்றம்பலம் உடையாரையும் அம்பலவாணரையும் தம் மாணக்கர் கையில்கொடுத்து வழிபட்டு வரவும் அருளினார்.

அக்காலத்தில் நவகோடிசித்தபுரம் என விளங்கிய திரு ஆவடுதுறைக்கண்ணும், திருமறைக் காட்டின் கண்ணும் சித்தராய் விளங்கிவந்த சிவப்பிரகாசர் என்பார், சைவசித்தாந்த சந்தான மரபில் தொடர்ந்து வந்த அருள் நமச்சிவாயரைத் தம் ஞானசிரியராகப் பெற்றார். சிவஞானபோதம் முதலான சைவ சித்தாந்த சாத்திரங்களின் தெளிபொருளைக் கேட்டுணர்ந்தார். தம் ஆசிரியருக்குப் பின் உமாபதி சிவத்தினிடமிருந்து வரப் பெற்ற அழகிய திருச்சிற்றம்பலம் உடையாரையும் அம்பலவாணரையும் தம் வழிபடுமூர்த்திகளாகவும் பெற்றார். திருஆவடுதுறையின்கண் திருமடம் ஒன்று அமைத்து அங்கிருந்து கொண்டு தம்பால் வந்த அன்பர்க்கெல்லாம் சிவஞானம் செவியறிவுறுத்தருளி வந்தார்.

பெருமை வாய்ந்த சித்தர் சிவப்பிரகாசர் ஒரு நாள் தம் அடியார் குழாத்துடன் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளினார். எழுந்தருளியவர் திருமூவலூர் வந்து சேர்ந்தார். அடியவர் கூட்டத்தொடும் அங்கு எழுந்தருளியிருந்த சித்தர் சிவப்பிரகாசரை நம் வைத்திய நாதராகிய இளையார் கண்குளிரக் கண்டு மகிழ்ந்தார். அவரது உள்ளம் அப்பெரியவர்பால் ஓடிச் சென்றது. அவ்வழியே வைத்தியநாதர் சிவப்பிரகாசர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்துநின்றார். தம்மை ஆட்கொண்டருளுமாறு அவரை மனங்குழைந்து வேண்டினார். அவரது பக்குவநிலையை அறிந்த சித்தரும் வைத்திய நாதரை நோக்கி. 'அன்பனே, நன்று, நீ நம்முடன் வருவாயாக!' என்று பணித்தருளினார். அவ்வளவுதான், அடங்காத மகிழ்ச்சி வைத்தியநாதருக்கு. துள்ளிக் குதித்தோடினார். தம் இல்லத்துத் தாம் வழிபட்டுவந்த வைத்தியநாதப் பெருமானை எழுந்தருளச் செய்தார். பெற்றோர்பால் விண்ணப்பித்தார். பெற்றோரும் மறுக்க வில்லை.

ஏற்கெனவே, முன்பு ஒரு நாள் புள்ளிருக்கு வேளூர்ப் பெருமான் அருளால் சிவலிங்கத் திருமேனி பெற்றமை நினைந்தனர். அதற்கு ஒப்பவே இப்போது வாய்த்த இதுவும் திருவருளே என மகிழ்ந்தனர். பிள்ளை

யின் கருத்திற்கு இசைந்தனர். வைத்தியநாதர் அடியார் குழாத்தொடும் கூடிச் சித்தர் சிவப்பிரகாசரைத் தொடர்ந்தார்.

சித்தர் சிவப்பிரகாசர் வைத்தியநாதரோடும் மற்றும் அடியாரொடும் திருமறைக்காடு சென்று மீண்டும் ஆவடுதுறை அடைந்தார். அங்குத் திருக்கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு மாசிலாமணிப் பெருமானையும் ஒப்பிலாமுலை அம்மையையும் வணங்கி வழிபட்டார். பின்னர் அங்கு சிவத்தொடும் பிரியாவகை திகழ்ந் திருக்கும் திருமாளிகைத் தேவர் திருமுன் சென்று வணங்கினர். வணங்கிவிட்டுத் தமது திருமடத்தில் வந்து வீற்றிருந்து, முன்போலவே அடியார்க் கெல்லம் சித்தாந்த ஞனத்தைத் தெளிவு வரச் செய்து கொண்டிருந்தார்.

வைத்தியநாதருக்கு மேன்மேலும் மிகுந்துநின்ற பக்குவம் நோக்கி அவர்க்கு ஞானதீக்கை செய்தருளி நமச்சிவாயம் என்று தம் ஆசிரியர் திருப்பெயரையே அவர்க்குத் தீக்கைத் திருப்பெயராகவும் சூட்டி மகிழ்வித்தார். சிவஞானபோதம் முதலான சித்தாந்த ஞான நன்னூல்களின் பொருள்களைத் தெளியுமாறு செவியறிவுறுத்தருளினர்.

நல்லதோர் இனிய நாள் திருஆவடுதுறை, நந்தி பெருமானிடம் ஞானம் பெற்ற திருமூலதேவர் சிவயோகத்தில் திளைத்திருந்து தமிழ் மூவாயிரம் ஆகிய திருமந்திரம் அருளிச் செய்த பெருமை வாய்ந்த திருத்தலம். நவகோடி சித்தர்கள் தமக்குச் சிறந்ததாகக் கொண்டமையால் நவகோடிசித்தர் புரம் என்ற சிறப்பினைப் பெற்ற இடம், திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருப்பதிகம் பாடிப் பொற்கிழியருளப் பெற்ற பொற்பினை உடையது. திருமாளிகைத் தேவராகிய மாபெருஞ்சித்தர் சிவமாய் அமர்ந்து திகழும் தலம். இத்தகைய சிறப் பெல்லாம் ஒருங்கே பொருந்திய இத்திரு ஆவடுதுறையே இனி எதிர்வரு காலத்தில் உலகெலாம் சைவம் தழைக்கச் செய்யும் சிவஞானியர் இருந்து திருஞானத்தை வாரி வழங்குதற்கு உரிய தகுதி வாய்ந்த இடமாகும் எனத் தெளிந்தார் சித்தர் சிவப்பிரகாசர். தமக்குப்பின் வழிவழி நின்று சிவஞானம் வழங்கிவரத் தக்கவர் நமச்சிவாயரே எனத் தேர்ந்தார்.

அன்று நமச்சிவாயர் காவிரிக்கு நீராடிவரச் சென்றிருந்த பொழுது, சிவப்பிரகாசர் தாம் எழுந்தளியிருந்த இடத்தைச் சூழ வரை கீறித் திரு அறை அமைத்தார், அங்கு நின்ற பிற தம் மாணுக்கரை நோக்கி ஒன்று கூறினர். "நாம், இப்பொழுது திருமறைக்காடு செல்கின்றோம். இன்று முதல் அழகிய திருச்சிற்றம்பலவர் பூசையையும் அம்பலவாணர் பூசையையும் நமச்சிவாயர் ஏற்றுக்கொள்வாராக! நாம் கீறிய இந்த அறையில் அமர்ந்து சைவ சித்தாந்த மரபு தழைக்க அன்பர்க்கெல்லாம் ஞானத்தை வழங்கிவருவாராக! இது நமது ஆணை என்று நீராடிவரும் நமச்சிவாயர்க்கு உரைப்பீராக"! என்று திருவாய் மலர்ந்தருளினர், பின்னர் அங்கு நின்றும் திருமறைக் காட்டிற்கு எழுந்தருளினர்.

காவிரிக்குச் சென்று நீராடி மீண்டார் நமச்சிவாயர். திருமடத்துக்கு வந்துசேர்ந்த நமச்சிவாயர் அங்குத் தம் ஞானசிரியப் பெருந்தகையைக் காணவில்லை. அவர் திருமறைக் காட்டிற்கு எழுந்தருளினர் என்ற செய்தியையும் நமச்சிவாயர்க்குக் கூறுமாறு ஆணைதந்த பிற செய்தியையும் அங்கிருந்தார் அறிவிக்க, அறிந்த நமச்சிவாயர் உள்ளம் கலங்கினர். 'ஆசிரியப்பெருமானை இனி என்று காண்போம்!' என எண்ணி அலமந்தார் அவர் அருளாணையை மறுக்கவும் ஒண்ணாது திகைத்தார். அச்சமும் உள்ள நெகிழ்ச்சியும் பொருந்த மேனி நடுங்கிக் கண்ணீர் வார்ந்து ஆசிரியப் பெருமான் சென்ற திசைநோக்கி நிலத்தில் வீழ்ந்து புரண்டு அலறினர், வணங்கி எழுந்தார், இருகையும் தலையேறத் தொழுது நின்றார். இனி என் செய்வது! ஆசிரியர் ஆணையுள்ளதே.!

அவர் அருளாணையைத் தலைமேற் கொண்டார். அன்று முதல் உமாபதிசிவம் வழிபட்டு வந்த அழகிய திருச்சிற்றம்பலம் உடையாரையும் அம்பலவாணரையும் தம் உயிர்த் தலைவனுகிய வைத்தியநாதப் பெருமானையும் சிவாகம நெறிப்படி வழிபாடாற்றி வரலானர். ஆசிரியர் சித்தர் சிவப்பிரகாசர் வகுத்தருளிய திருவறையில் அமர்ந்திருந்து தம்மை அணுகிவந்த அன்பர்க்கெல்லாம் ஞானப் பெரும்பொருளைச் செவியறிவுறுத்தருளி வரலானர்.

அக்காலத்து ஒருநாள் சூரியனர் கோயில் திருத்தலத் தில் திரு கந்தபரம்பரையில் வாமமுனி மரபில் வந்தருளிய சிவாக்கிர யோகிகள் நம் நமசிவாயரது பெருமையைக் கேள்வியுற்றார். நமச்சிவாயரைக் காண அவாவுற்றார். துறைசைக்கு எழுந்தருளினர். திருமடத்துக்குள் அவர் எழுந்தருளுவது கண்டநமச்சிவாயர் அவரை எதிர்கொண் டழைதது ஒடுக்கத்தில் சென்று அங்கு இருவருமாக இருந்து அளவளாவி இன்புற்றனர். யோகிகள் நமசிவாயர்பால் திகழும திருஅருட் பொலிவினையும் பத்திஞான வலிமை மையையும் கண்டார். அன்னாரைப் பிரியவொண்ணது சிலநாள் அங்கேயே தங்கிப் பினனர் ஒருநாள் நமச்சிவாய தேசிகரிடம் பிரியா விடை கொண்டு தம்மிடம் சென்றார்.

ஒருபொழுது, தம் திருக்கூட்டத்து அடியவருள் ஒருவர் குருபூசை, மாகேசுவர பூசைகளில் குறை நேராமல் இலை பறிததுக் கொள்ளக் கருதி திருமடத்தைச் சூழ்ந்த ஒரு மறைவிடத்தில் சில வாழைகள் வைத்து வளர்த்துவந்தா ராம. அதனை உணர்ந்த தேசிகர் அவரை நோக்கி, "நீ இந்நாள் ஒருவகைக் கட்டுற்றாய். நீ யாத்திரை சென்று

அக்கட்டினை ஒழித்து மீள்வாயாக!'' என்று அருளிச் செய்தார். அவ்வாறே அவ் அடியாரும் யாத்திரை சென்று பற்று நீத்து மீண்டதாகவும் சொல்லுவர்.

குடந்தையின் சைவவேளாளர் ஒருவர் குருவருள் பெறும் நாட்டத்துடன் நமச்சிவாய தேசிகரை அடைந்தார். தேசிகர் அவருக்கு ஞானதீக்கை செய்து தம் ஆசிரியர் திருப்பெயரையே அவருக்குத் தீக்கைப் பெயராகச் சூட்டினர்.

அந்நாளில் வேலூர் மன்னரான விருபாட்சிராயரின் ஆணைவழி நடுநாட்டை ஆண்டுவந்த அதிகாரி சிதம்பரத்துக்கு வந்தார். அங்கு அம்பலவாணர்க்கு நடந்து வந்த பூசைச் சிறப்பைக் கண்டார். பொறாமை கொண்டார். அங்கிருந்த கொடிமரத்தை எடுத்துப் பெருமாள் சந்நிதியில் நிறுத்த ஏற்பாடு செய்தார். அம்பலவாணர்க்கு வந்த வருமானத்தைப் பெருமாளுக்கு உரித்தாக்கினர்.

இதனைப் பொறுக்கமுடியாத தில்லைவாழ் அந்தணர் திருவாவடுதுறை வந்து நமசிவாய தேசிகரிடம் முறையிட்டனர். தேசிகர் தம மாணுக்கராகிய சிவப்பிரகாசரை, அரசரிடம கூறி முறை செய்துவருமாறு விடுத்தார். சிவப்பிரகாசர் வேலூா செனறா. அரசர் மாத்துவ சமயத்தினர் ஆதலால், சிவப்பிரகாசர் சைவராகிய முதலமைச்சரைக் கண்டார். அவர் இலிங்கணபத்தர். சிவலிங்க தாரணம் இல்லாதவரைக் கண்ணெடுத்தும் பாராத வீர சைவர். அவர் வழியாகத் தாம் கருதிச்சென்ற நன்மையைச் செய்து முடிக்கவேண்டும் எனறதால், தாமும் இலிங்கத்தைப் புறமும் தரித்துக்கொண்டு சென்று அமைச்சரைக் கண்டாா. அவர்வழி அரசரிடம் ஏற்பாடுசெய்து சிதம்பரத்தில் நிகழ்ந்திருந்த மாற்றத்தைத் திருத்திச் செம்மை செய்தார். அதிகாரியும் பணியிலிருந்து நீக்கப்பட்டார்.

பின்னர் சிவப்பிரகாசர் அங்குச் சிலநாள் தங்கி அமைச்சருக்கு வீர சைவ உண்மைகளைப் போதித்தார். அமைச்சர் திருவண்ணாமலையில் தாம் அமைத்துத் தரும் திருமடத்தில் சிவப்பிரகாசரை எழுந்தருளியிருக்க வேண்டினர். சிவபபிரகாசர் அப்படியே தில்லை வந்து அம்பலவாணரை வணங்கிவிட்டுத் துறைசை அடைந்தார். நமச்சிவாயரிடம் செய்தியை விண்ணப்பித்தார்.

நமச்சிவாயர் தம் மாணுக்கர் சிவப்பிரகாசர் பண்டை வினை வயத்தால் சித்தாந்த சைவ நெறியைக் கடந்து புறநெறியில வீழ்ந்த நிலைமை எண்ணினர். திருவருட் சய மதம் அதுபோலும் எனக் கருதினர். "நீ, இலிங்கண பத்தர் வேண்டுகோளின்படி அவருக்கு ஞானசிரியராக அமர்வாயாக!'' எனறு ஆணை தந்தார். அங்ஙனமே சிவப்பிரகாசர் அங்குச் சென்று வீரசைவ போதனை செய்துவரலானர், இந்த மரபில் பின்னர் வந்ததொன்று திருத்துறையூர் வீர சைவ ஆதீனம் என்று சொல்லுவர்.

தம் வழிக்குச் சிவப்பிரகாசர் வேறாகவே, நமச்சிவாயர் துறைசையிலே வாழ்ந்துவந்த சைவ வேளாளர் மரபினராகிய மறைஞானதேசிகர்க்கு ஞான நீராட்டினைச் செய்தருளினர். ஆனால், சில நாளிலே மறைஞான தேசிகர் தனியிடத்தில் இடையறாத நிட்டையிலே இனிது அமர்ந்துவிட்டார்.

பின்னர், தம் அடியார் திருக்கூட்டத்தில் இருவர்க்கு ஞானத் திருமுழுக்குச் செய்வித்தருளினர். அவ் இருவர் தட்சிணாமூர்த்தி தேசிகரும் அம்பலவாண தேசிகரும் ஆவர். அவருள் தட்சிணாமூர்த்தி தேசிகர் தசகாரியம், உபதேசப் பஃறொடை முதலான ஞான நூல்களை அருளிச்செய்து ஒரு மாசித் திங்கள் சித்திரை நாளில் சிவநிறைவில் இரண்டறக் கலந்தார்.

பின், நமச்சிவாயர் அம்பலவாணருடன் நீண்டகாலம் இருந்து மாணுக்கர் பலருக்கு அருள்ஞானம் வழங்கி வந்தார். தமககுச் சிவத்துடன் கலந்து ஒன்றும் சிறப்பு நாள் வரவே நமச்சிவாயப் பெருமான் தம் மாணுக்கர் அம்பலவாணதேசிகர்க்கு அருளாணை தந்து, தை அசுவதி நன்னாள் ஒன்றில் இப்பூதவுடம்பொடும் இருந்தபடியே இருந்து எங்கும் நிறைவான சிவபரம்பொருளோடு வேறறக் கலந்து சிவமாகவே அமர்ந்தருளினர். நமச்சிவாயரது அருளொளியே அன்று அம்பலவாணதேசிகர் திருமேனியிலும் பின்னர் இதுகாறும் வழிவழி வந்து கொண்டிருக்கும் குருமகா சந்நிதானங்களிடத்தும விளங்கிநின்று சைவ உலகத்தை வாழ்வித்துக் கொண்டு வருகிறது.

திருக்கயிலைப் பெருமான் சீகண்டர் தொடர்ந்து நந்திபெருமான மரபின் முதலாக வந்த மெய்கண்ட தேவராகவும் இன்று நமக்கொல்லாம் நமச்சிவாய மூர்த்தியாகவும் இருந்து அருள் செய்து வருகின்றன் என்பது அருளாளர் அறிந்த உண்மை யாகும்.

**கண்ணுதலும் கண்டக் கறையும் கரந்தருளி**
**மண்ணிடையின் மாக்கள்மலம் அகற்றும் –**
**வெண்ணெய்நல்லூர்**
**மெய்கண்டான் என்றொருகால் மேவுவரால்**
**வேறின்மை**
**கைகண்டார் உள்ளத்தின் கண்.**

— அருணந்தி சிவம்;

இருவினை தாம்இவை மும்மலம் ஈங்கு இவை ஈதுசிவம்
கருவுறும் ஆர்உயிர் உண்மை இது என்று காட்டவல்ல
குருபரன் நீஅன்றி வேறறி யேன் இக் குவலயத்தில்
திருவெண்ணெய் மெய்கண்ட தேவே பஞ்சாக்கர
தேசிகனே

— மாதவச் சிவஞானயோகிகள்

**நமச்சிவாயர் நற்றுள் வாழ்க!**



திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
அருள்மிகு கோமுக்தீசர் திருக்கோயில்
திருஇடபதேவர்

# தோற்றுவாய்

## திருக்கோயில்களும் சமுதாயமும்

1. உலகில் சமயம் என்றுதோன்றிற்று என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. தனக்குமேல், தன் ஆற்றலுக்கு அப்பால் – தன் செயலைத் தடுத்தும் திருத்தியும் வழிகாட்டும் ஒரு பொருள் இருக்கிறது என்று மனிதன் என்றைக்கு உணரத் தொடங்கினானோ அன்றே சமயம் உண்டாகிவிட்டது. முதன் முதல் அச்சமய நெறி அச்சத்தாலேதான் உண்டாகியிருக்கவேண்டும். வேதம் முதலியன அதை உண்மை எனக் காட்டுகின்றன. பின்னரே அன்பு வழி – ஆண்டவனைக் காணும் உணர்வு பிறந்திருக்க வேண்டும் என ஆராய்ச்சியாளர் கூறுவர். எந்த வழியிலாவது ஆண்டவனை வழிபடவேண்டும் என்பது நல்லவர் வேண்டுகோள். எனவேதான் அப்பரடிகள் "அஞ்சியாகிலும் அன்புபட்டாகிலும் நெஞ்சம் வாழி நினைமின்" என நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றார். இவ்வாறு பண்டுதொட்டு மக்கள் இறைவனைப் போற்றிவந்தார்கள், பழங்காலத்தில் வழிபாட்டிற்கு இன்று நாம் காணும் பெருங் கோயில்கள் கிடையா. காட்டிலும் மலையிலும் மர நிழல்களிலும் அவ்வப்போது கோயில் அமைத்து மக்கள் கூடி வழிபடுவர். பின் நிலைத்த மர நிழல்களை இறைவன் தங்கும் இடமாகக் கொண்டனர், அந்த இடங்கள் தூய்மை வாய்ந்தனவாகப் போற்றப்பட்டன. அம்மரங்களை மையமாகக் கொண்டே பிற்காலத்தில் இன்று நாம் காணும் பெருங்கோயில்கள் உருவாயின. அதனாலேதான் இன்றும் அம் மரங்களை விட்டுவிடாது 'தல விருட்சங்கள்' என்று போற்றிப் பாதுகாக்கின்றோம்.

2. சைவ சமயத்தில் மட்டுமன்றி உலகில் உள்ள ஒவ்வொரு சமயமும் தனித்தனியே தன்தன் வழிபாட்டு முறை, பண்பாடு முதலியவற்றிற்கு ஏற்பக் கோயில்களை அமைத்துள்ளன. ஆயினும் நம் தமிழ்நாட்டில் சைவம் வைணவம் இரண்டும் மிகப் பழங் காலத்திலேயே தோன்றி வளர்ந்த காரணத்தால் பல எண்ணற்ற கோயில்களைத் தன்னிடத்தே கொண்டு அது மிகப் பழங்காலந் தொட்டுச்சிறந்துள்ளது. பிற்காலச் சோழர், தம் காலத்தே இன்று காணும் இத்தகைய பெருங் கோயில்களை உருவாக்கி மக்களுக்கு அளித்தனர். இன்றும் உலகின் பல பாகங்களிலிருந்தும் தமிழ் நாட்டுக்கு வந்துசெல்லும் யாத்திரிகர்கள் இக் கோயில்களின் எழிலையும் அமைப்பையும் கண்டும் கேட்டும் உற்றும் உணர்ந்தும் போற்றிப் போற்றி வியப்பதைக் காண்கின்றோமல்லமோ!

3. இத்தகைய கோயில் தென்னாட்டு மக்கள் வாழ்வில் பண்டுதொட்டே சிறந்த தொண்டாற்றி வந்துள்ளது. இதன் பெருமை அறிந்த இடைக் காலப் புலவர் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்று திட்டமாக எழுதிவிட்டே சென்றார் எனவே மக்கள் வாழ்வு கோயிலை மைய மாகக் கொண்டது என அறியவேண்டும். மிகப் பழங்காலத்தில் கோயில்களாக விளங்கிய பரந்த நிழல்தரும் மரத்தின் அடிகள் நாட்டின் பல சிக்கலான வழக்குகளைத் தீர்த்து அமைதியை நிலை நாட்டின எனக் கண்டோம். இடைக்காலக் கோயில்கள் தமிழ்நாட்டு வரலாற்றுப் பெட்டகங்களாக - கலைகளை வாழ்விக்கும் நல்லிடமாக-மக்கள் தம் வேறுபாடுகளை மறந்து ஒன்றுகூடி மகிழும் தெய்வசபையாக - பொருளாதாரமும் சுகாதாரமும் கொண்டு ஊர் மக்களுககு உதவுவனவாகச் சிறந்திருந்தன என்பதை அறிய முடிகிறது. அத்துடன் கோயில்கள் தமது சுவர்களில் எண்ணற்ற கல்வெட்டுக்களைத் தாங்கிக் கொண்டு தென்னிந்திய வரலாற்றிற்கு ஊற்றுக்களென வற்றாது புதுப்புது உண்மைகளை உலகுக்குத தந்து கொண்டே இருக்கின்றன. இந்த நிலையில் தமிழ்நாட்டுக் கோயில்களும் மக்கள் வாழ்வும் பிரிக்கமுடியாத வகையில் பின்னி வாழ்கின்றன,

4. பல கிராமங்களில் கோயிற் கிணறுகளே மக்கள் உணவுக்கு உதவும் தண்ணீரைக் கொடுப்பது கண்கூடு. ஊரில் வீட்டுக்கு ஒரு கிணறு இருந்தாலும் அவற்றின் தண்ணீர் நன்றாக இருப்பதில்லை. ஆயினும் கோயில் கிணற்று நீர் மட்டும் நன்றாக இப்பதை அறிவோம். அதுவே ஊர் மக்களுக்கு உண்ணும்நீராகவும், உணவாக்கும் நீராகவும் பயன் படுகின்றது. விடியற் காலையிலிருந்து நடு இரவு வரையில் கோயில்களில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அவற்றின் நேரங்களறிந்து மக்கள் தத்தம் வாழ்க்கை முறைகளை

அமைத்துக் கொள்வதும் உண்டு. சில கோயில்களில் ஒவ்வொரு வேளையிலும் பல வகையில் உணவுகள் செய்து பணியாளர்களுக்கும் பார்க்க வரும் யாத்திரிகர்களுக்கும் பரிமாறுவதும் உண்டு. சில ஊர்களில இக்கோயில் சாப்பாடு பல குடும்பங்களைக் காக்கும் மருந்தாக அமைவதைக் காண்கிறோம். 'உணவுக்கு என்ன செய்வோம்?' என ஏங்கும் யாத்திரிகர்களுக்கு இந்தக் கோயில் உணவுகளே உதவிசெய்து அவர்தம் பசியைப் போக்கின. இன்று நாட்டில் ஊர்தோறும் பல உணவுக் கடைகள் இருக்கின்றன. ஆதலால் இக் கோயில் உணவைப்பற்றி யாரும் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. என்றாலும் எதை எதையோ உணவாக்கி அளிக்கும் பல சோற்றுக் கடைகளில் உண்டு, பலநோய்களைச் செல்லுமிடங்களில் பெறுவதிலும், கடவுளுக்கென ஆக்கப்பெற்ற இந்தத் தூய உணவுகளைக் கோயில்களிலிருந்து பெற்றால் நோய் இல்லாமல் யாத்திரை செய்ய முடியும் என்று சுற்றிவரும் பலரும் கூறுவர். இக் கோயில் உணவுகள் தூய்மையாக இருப்பதோடு விலை குறைவாகவும் இருக்கும். கிராமங்களில் பல குடும்பங்களை இவ்வுணவுகள் பாதுகாக்கின்றன. இந்த நிலையை இன்றும் திருப்பதி, திருவரங்கம், சிதம்பரம், மதுரை, புள்ளிருக்குவேளூர் போன்ற பெருங் கோயில்களிலும் பிறஇடங்களிலும் காணலாம். சில இடங்களில் குறிப்பிட்ட அளவு வருபவருக்கு இனமாகவே உணவு அளிக்க ஏற்பாடுகளும் செய்யப் பெற்றுள்ளன. இடைக்காலத்தில் வாழ்ந்த பல செல்வர்கள் தம் உடைமைகளுள் பலவற்றை இக் கோயில்களுக்கு இனமாக வழங்கி, அவற்றின் வாயிலாக இத்தகைய ஏற்பாடுகளைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்ந உண்மையையும் இக் கோயில்களின் கல்வெட்டுக்களே நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

5. தமிழ் நாட்டில் இன்றும் கோயில்களில் பல தான தருமங்கள் நடப்பதைக் காண்கின்றோம். சில கோயில்களில் விழாக் காலங்களில் இலட்சக் கணக்கில் மதிக்கததக்க பொன்னும் பொருளும் கடவுளருக்குக் காணிக்கையாக வந்து சேர்வதைக் காண முடிகின்றது. தமிழ்நாட்டு எல்லையாக இருந்த திருப்பதியில் இன்றும் இக்காட்சி கண்கொள்ளாக் காட்சியன்றோ! திருச்செந்தூரிலும், பழநியிலும், புள்ளிருக்கு வேளூரிலும் பலப்பல அடியவர்கள் தம் வாழ்வில் பெறும் எல்லாப் பொருள்களையும் கோயில்களுக்குத் தானமாக அளிப்பதைக் காண்கின்றோம். பொன்னும் விலையுயர்ந்த பொருள்களும் மட்டுமன்றி ஆடு, மாடுகளும் பிற உயிர்ப்பொருள்களும் கூட அளிக்கப்பெறுகின்றன. ஊர்களில் கோயில் மாடுகளை யாரும் தீண்டவோ, துன்புறுத்தவோ கூடாது. அதன் விருப்பப்படித் திரிய விடுவர். ஊரில் தன் விருப்பம் போல் திரிபவனைச் 'கோயில் மாடு' என்று உருவகமாக்கிக் கூப்பிடுவது வழக்கம். எனவே கோயிலுக்கு நாட்டு மக்கள் அத்துணை மதிப்பு வைத்திருந்தார்கள் எனத் தெரிகிறது. இவ்வாறு கணக்கற்று வரும் பொருள்கள் அனைத்தும் திரும்பி அவ்வப் பகுதி மக்களின் நல்வாழ்வுக்கே பயன்படுத்தப் பெறும். இன்று இப்பொருள்கள் கொண்டு பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் கூட அமைத்து வருவதைக் காண்கின்றோமன்றோ! இத்தகைய கோயில்கள் பல தமிழ்நாட்டில் உள்ளன.

6 ஊர்தோறும் உள்ள கோயில்களில் பலர் பணியாற்றுகின்றனர். சில ஊர்களில் கோயிற் பணியாலேயே பல குடும்பங்கள் வாழ்வு நடத்துவதும் உண்டு. கோயிலின் பொருளாதாரம் அததகைய பல பணியாளர் குடும்பங்களைத் தாங்கும் நிலையில் இருந்தது. இன்றைக்கும் தமிழ் நாட்டுக் கோயில்கள் பலவற்றிற்கு ஏராளமான நிலங்களும், நகரங்களில் வீடுகளும் உள்ளன. அவற்றைப் பயிரிடுவோரோ – அன்றி அவற்றில் குடியிருப்போரோ கோயிலுக்குக் கட்டவேண்டிய ஆண்டுக்கடனைத் தானியமாகவும் பணமாகவும் தருவர். அத்தகைய வருவாயால் செல்வம் கொழிக்கும் கோயில்களில் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் உள்ளனர். ஆண்டுக்கு ஒரு முறையோ இருமுறையோ நடக்கும் விழாக்களில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்குகொள்வார்கள். பண்டமாற்றும், பிறவாணிபங்களும் அக்காலங்களில் நடைபெறுகின்றன. இவ்வாறு நாட்டின் பொருளாதார ஊன்றுகோலாக கோயில் அமைந்து நிற்கின்றன.

7 பொருளாதார நிலைக்களனாக மட்டுமின்றிக் கோயில்கள் கலைவளர்க்கும் கல்லூரிகளாகவும் விளங்கின; விளங்குகின்றன. இசையும் இயலும் நாடகமும் கோயிலில் இடம்பெற்றன. தேவாரம் போன்ற இனிய சமயப் பாடல்களை இசை பொருந்தப்பாடும் பல 'ஓதுவார்கள்' கோயில்தோறும் பண்ஒன்ற இசைபாடுவார்கள். வடமொழி வாணர்கள் வேதம் ஓதுவார்கள். இவ்வேதங்களையும், திருமுறைகளையும், பிரபந்தங்களையும் கற்றுத்தரும் கலைக் கூடங்களாகக் கோயில் மண்டபங்கள் விளங்கின; இன்றும் சில இடங்களில் விளங்கி வருகின்றன. 'இடைக்கால மன்னர்கள் தமிழ் நாட்டில் இத்தனை மண்டபங்களையும் சுற்றுப்பிராகாரங்களையும் அமைத்து ஏன் இத்தனைப் பெருங்கோயில்களைக் கட்டினார்கள்' எனச் சிலர் குறைபடுவதும் உண்டு. எனினும் சிந்தித்துப் பார்த்தால் அவை எவ்வாறு பயன்

பட்டுவருகின்றன எனத்தெரியும். சில மண்டபங்கள் இத்தகைய கல்க்கல்லூரிகளாக விளங்கின. நீண்ட சாலைபோன்ற சுற்றுப்பிராகாரங்கள் நாடகசாலைகளாகவும், அரங்கேற்று மண்டபங்களாகவும் காட்சியளித்தன. ஆயிரக்கால் மண்டபம் போன்றவை பெரு மாநாடுகள் நடத்தவும், ஊர் மக்கள் மணிவிழா முதலிய செய்து கொள்ளவும் பயன்பட்டன. இன்றும் காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயில் பங்குனி உத்திரத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் பல திருமணங்கள் நடப்பதைக் காணலாம். பல மண்டபங்களில் இசைக் கல்லூரிகள் பல விடங்களில் சொற்பொழிவுகள்; இப்படிக் கோயில்கள் பல்கலைக்கழகங்களாகவே அமைந்து உள்ளன.

8. இத்தகைய கல்லூரிகளுக்கு இடமளித்ததோடு கோயில்கள், கலைகளுக்கு நல் உதவி செய்து வளர்த்தன எனவும் காண்கின்றோம். பல அறிஞர்களுக்குக் கோயில்கள் மானியம் வழங்கியுள்ளன. இசை பயிற்றுவார்க்கும், பயில்வார்க்கும் அப்படியே பிற கலையாளர்க்களுக்கும் கோயில்கள் இறைமாக நிலங்கள் வழங்கி இருந்தன. அவற்றின் வருவாயை அவரவர்கள் பெற்று, அதற்குப் பதிலாக அவரவர் தம் கலைத்தொண்டைத் திறம்பட ஆற்றிவந்தார்கள் என அறிகின்றோம். இன்றும் பலவிடங்களில் இந்நிலையினைக் காணமுடியும். திருவொற்றியூர்க் கோயிலிலிருந்து இலக்கணப் புலவருக்கு மானியம் வழங்கினார்கள் என்ற செய்தியை அறியமுடிகிறது. தமிழ்நாட்டுக் கோயில்களில் பல இசைக் கருவிகள் முழங்கின என அறிகிறோம். இன்று அவை என்னென்ன என்று அறியக்கூடா வகையில் மறைந்துவிட்டன என்றாலும், அவற்றின் பெயர்கள் மூலம் அக்காலத்தில் கோயில்களில் அவை இடம் பெற்றுத் தமிழ் இசையைச் சிறக்க வளர்த்தன என அறியமுடிகின்றது. அவற்றுள் சிலவற்றைத் தேவாரம் பாடிய சமயத் தலைவர்கள் குறித்துள்ளார்கள். இப்படியே பல கலை வளர்க்கும் காட்சிகளை நாட்டில் காணமுடியும். கலையையும், பொருளாதாரத்தையும், சமயத்தையும் வளர்த்ததோடமையாது கோயில்கள் நாட்டில் நலத்துறையையும், சுகாதாரத்தையும்கூட வளர்த்தன என அறிகின்றோம். இடைக்காலத்தில் பாலாற்றங்கரையில் உள்ள திருமுக்கூடல் என்னும் கிராமத்தில் அக்கோயில் வருவாயைக் கொணடு பெரிய மருந்தகமே நடத்தியதாகக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

9. கோயிலில் செய்யப்படும் உணவுகள் நோயற்று வாழ் வழிகாட்டும் வகையில் செய்யப்பெற்றன. கோயில்களில் பலருக்கும் உணவளித்தார்கள் என்கிறோம் கண்டோமல்லவா? அந்த உணவுகளில் பெரும்பாலும் மிளகே இடம் பெறும். நெய்யே பயன்படுத்துவார்கள். சில உயர்ந்த வாசனைப்பொருள்களை உடல் நலம் கெடாது வளர்க்கும் வகையில் பயன்படுத்துவார்கள். இவ்வளவு விலையுயர்ந்த பொருள்களை பயன்படுத்தப்பெறினும் அவ்வுணவினைக் குறைந்த விலைக்கோ அன்றி இறைமாகவோதான் மக்களுக்கு வழங்குவர். எனவே மக்கள் நலம் கெடுக்காத நல்உணவுக் களஞ்சியங்களாகக் கோயில்கள் விளங்கின.

10. கோயில் அமைப்பு ஊர் எல்லையின் உள்ளாகவோ அன்றி வெளியில் அமைந்திருப்பினும் அது சற்று உயர்ந்த காற்றோட்டமான இடத்திலேதான் இருக்கும். காற்றுப் புகக்கூடிய புறத்தாழ்வாரங்களும், சாளரங்களும், அகன்ற வாயில்களும் அணி செய்கின்றன. கோயில்களின் மேல் சூலங்கள் இருக்கும் எனத் தேவாரப் பாடல்களால் அறிகின்றோம். அந்தச் சூலங்கள் இடி மின்னல் முதலியவற்றைத் தாங்கிக்கொள்ளும் திறம் வாய்ந்தன என்பர் ஆராய்ச்சியாளர். அதுபோன்றே செம்பாலாகிய கலசங்களும் இயற்கையின் விளைவுகளைத் தடுக்க உதவுகின்றன. மற்றும் ஊர்தோறும் கோயிலை அடுத்து நல்ல குளங்கள் இருப்பது ஊரில் நீர்ப்பஞ்சத்தை நீக்குவதேயாகும்.

11. ஊரில் தீப்பிடித்தால் அந்நீரைப் பெருவாரியாகப் பயன்படுத்தி அணைக்கும் வழக்கம் இன்றும் உண்டு. கோயிலுக்கென அமைந்த தோட்டங்களும், மலர் வனங்களும் பிறவும் ஊர் மக்களுக்கே பலவகைப் பழங்களையும், மலர்களையும் உதவுவதோடு இனிய சூழலையும் ஆக்கித் தந்தன. இவற்றையெல்லாம் உண்டாக்குவதற்கும், வளர்ப்பதற்கும், காப்பதற்கும் இடைக்காலத்தில் மன்னரும், மற்றவர்களும் பலப்பல தானங்களைச் செய்துள்ளமையைக் கல்வெட்டுக்களால் அறிகின்றோம். இவ்வாறு கோயில்கள் நாட்டின் நிலைக்களனாகி நின்று ஊர்தோறும் பொருளாதாரம், கல்வி, கலை, நலத்துறை, அறிவியல் ஆன்ம இயல் ஆகியவற்றைப் பேணிவளர்த்து, ஊர்களை இயற்கைச் சூழலுக்கு உள்ளாக்கி, நாட்டையும் மக்களையும் வாழ்வித்த காரணத்தினால்தான் போலும் மக்கள் இவற்றை விடலாகாது என்ற கருத்தில் ஔவையார் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என எழுதிவைத்துச் சென்றனர்.

12. இக்கோயில்களில் ஆண்டுதோறும் நடக்கும் விழாக்களைப்பற்றி முன்னமே குறித்தோம். ஆம்!

அவை மக்கள் வாழ்வில் எத்தனையோ வகையில் உதவுகின்றன. விழாக்களே நாட்டில் பகையும், பிணியும் பசியும் நீங்குவதற்காகத்தான் உண்டாயின எனப் பாடுகின்றனர் பழங்காலப் புலவர்கள்.

> 'பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கெனவாழ்த்தி'

இதுபோன்ற விழாக்களையும் அவற்றின் நாட்களையும் வள்ளுவ முதுமகன் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்தினான் எனக் காட்டுகின்றது மணிமேகலை. எனவே திருவிழா என்றால் அக்காலத்தில் நாட்டில் உள்ள பசி, பிணி, பகை அத்தனையும் மறந்து விடவேண்டும். தங்களுக்குள் எத்தனை எத்தனை வேறுபாடுகள் இருப்பினும் கோயில் விழாக்களிலும் பிற பொதுவிழாக்களிலும் மக்கள் அவற்றையெல்லாம் மறந்து ஒரே உணர்வோடு பணிசெய்யவேண்டும். அப்படியே நாட்டில் அக்காலத்தில் பசித்தவர் இருக்கக்கூடாது. இன்றும் ஊர்தோறும் விழாக் காண வருகின்ற மக்களுக்கு நீரும் மோரும் அளிக்கத் தண்ணீர்ப்பந்தர்களும், உணவளிக்கச் சத்திரங்களும் இருப்பதைக் காண்கின்றோம். அப்படியே பிணியும் அக்காலத்தில் நாட்டில் உலவக்கூடாது. தமிழ்நாட்டு விழாக்களும், விரதங்களும் இந்த நோய் நீக்கும் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. இவை நீங்குவதோடு நாட்டில் மழை பெய்து வளம் கொழிக்கவேண்டும் எனவும் விழாச்செய்கின்றனர். இன்றும் நாட்டில் மழை இல்லையாயின் எத்தனையோ கோயில்களில் விழாவாற்றக் காண்கின்றோம். இப்படியே கோயில்களில் நாள்தோறும் நடைபெறும் பூசையும் விழாக்களும் மக்கள் வாழ்வை மலரச் செய்யப் பயன் படுகின்றன.

13. மற்றும் இடைக்காலத் தமிழ்நாட்டு வரலாற்றை விளக்கும் சீரிய வரலாற்று நிலைகளாக இக்கோயில்கள் விளங்குகின்றன. தமிழ்நாட்டுக் கோயில்களில் கல்வெட்டு இலாதனவே இல்லை என்னலாம். அவை மன்னராலும் மற்றவராலும் ஏற்படுத்தப்பெற்றன. அவற்றின் மூலம் அக்கால மன்னர் தம் வாழ்வையும் வளத்தையும் அறிவதோடு நாட்டு மக்களின் சாதாரண வாழ்வையும் பண்பாட்டையும் பிற சிறப்பியல்புகளையும் கூட அறிய முடிகின்றது. இவற்றையெல்லாம் படி எடுதது ஆராய்ந்து இந்திய அரசாங்கத்தார் அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர். அதற்கென ஒரு தனிப் பகுதியே உள்ளது. அப்பகுதி செய்த வேலை சிறிது, செய்யவேண்டிய வேலைகளோ கணக்கில் அடங்கா. அக்கல்வெட்டுக்களும், அவை போன்ற பட்டயம். கலை, பிற பொருள்கள் ஆகியவையும் நன்கு எடுத்து ஆராயப்பெறின் கோயில்களின் இன்றியமையாத தேவை இன்னும் உலகுக்கு நன்கு விளங்கும்.

14. தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் இக்கோயில்களின் பங்கு மிகமிக அதிகமாகும். இன்று தமிழ்நாட்டில் உலவும் இலக்கியங்கள் அனைத்துமே சமய இலக்கியங்கள் எனக் காட்டி விடலாம், எங்கோ தனி மனிதரையும் மன்னரையும் பாடிய ஓரிரு இலக்கியங்கள் தவிர்த்து அனைத்தும் சமய அடிப்படையில் கோயில்களை நிலைக்களனாகக் கொண்டே எழுதப்பெற்றுள்ளன. அப்படியே அந்த இலக்கியங்களைப் பயில்வதற்கும் பண்ணொன்றப் பாட்டிசைத்துப் பயன் பெறுவதற்கும் இக்கோயில்களே இடமாக அமைந்துள்ளன என்பதையும் காண்கின்றோம். எனவே வானோங்கிய கோபுரத்தையும் வற்றாத தென்றலை வாரிவீசும் வாயில்களையும் பிறவிரிந்த மண்டபம் போன்ற அமைப்புக்களையும் தன்னிடத்தே கொண்டுள்ள தமிழ் நாட்டுப் பெருங்கோயில்கள் மக்கள் வாழ்வொடு ஒன்றி, அவர்தம் கூட்டுச் சமுதாயம் வளர்ந்தோங்கவே வழிகாட்டி நின்றன என நன்கு அறியமுடிகின்றது. இந்த உண்மையை மறந்து அக்கோயில்கள் மக்கள் வாழ்வுக்குப் புறம்பானது எனச் சிலர் எண்ணுகின்றனர். அந்த எண்ணம் தவறு என உணரும் காலம் தொடங்கி விட்டது. இடைக்காலத்தில் ஓரளவு தம்மை மறந்த தமிழ் மக்கள் இக்கோயில் வாழ்வையும் மறக்க நினைத்தார்களென்றாலும், இன்று மறுபடியும் புத்துணர்ச்சிபெற்றுக் கோயில்களைச் செம்மைப் படுத்திச் சீராக்கி அவற்றை இறைவாழிடங்களெனப் போற்றுவதோடு, இவ்விறைவன் உறையும் கலை வளரிடங்களாகவும் ஆக்கி வருகின்றனர்.

15. "திருக்கோயில்களும் பண்பாடும்" என்ற தலைப்பில் ஆராயப்புகும்போது, அவ்வாய்வினைச் சிலவகைகளில் நிகழ்த்தல் வேண்டும். திருக்கோயில்களால் புலப்படும் மக்கள் பண்பாடு, மன்னாகள் பண்பாடு, கலை இலக்கிய வளர்ச்சியில் திருக்கோயில்களின் பங்கு, திருக்கோயில் அமைப்பு முறையிலும், விழா, வழிபாடு நிகழ் முறையிலும் காணப்படும் பண்பாட்டு நெறி முதலிய சிலவகைகளில் கூர்ந்து நோக்க வேண்டும்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச்
சொந்தமான

திருவாவடுதுறை
அருள்மிகு கோமுத்தீசப் பெருமான் திருக்கோயில்

# 1. திருக்கோயில்களும் இலக்கிய வளர்ச்சியும் :

## 1. அமைதி பெற :

உள்ளத்திற்கு அமைதி வேண்டும். இந்த அமைதியை எங்குப் பெறலாம்? விலைபோட்டு வாங்க இயலாத இந்தப் பேரமைதியை வழங்கி மனத்துக்கு உறுதியும், தெளிவும் தருவன திருக்கோயில்கள்; அங்குப் பாடப்பெறும் விழுமிய கவிதைகள் ஆகிய இலக்கியங்கள், வேறெங்கும் பெறவியலாத அமைதியை நெஞ்சிற்கு வழங்குவன இவ்விரு பகுதிகளுமே. கோயிலில உயிர் உலகத் துயரங்களினின்று விடுதலை பெற்றுப் பரம்பொருளோடு ஒன்றுபட்டு இன்புறும்; அதுபோன்றே உயர்ந்த சான்றோர் உரைத்தருளிய இலக்கியங்கள் புற உலகச் சூழலினின்றும் நம்மைப் பிரித்து அழைத்துச் சென்று அக்கவிஞன் பெற்ற ஒப்பற்ற ஆன்ம அனுபவத்தினை நாமும் அடைந்து ஒன்றிடச்செய்யும்.

## 2. கோயில் நாடு :

நமது நாட்டை நினைத்தால அழகான கோயில்கள் முன்னிற்கின்றன. மரங்கள் அடர்ந்த காடுகள்ல-ஓங்கி நிவந்த மலைகளிற் கோயில; சலசலத்தோடும ஆற்றங் கரைகளிற் கோயில்; ஆல், அரசு, புன்னை, வன்னி, வில்வ மரத்தடிகளெல்லாம கோயில. எங்கும கோயில்; எல்லாம் கோயில், உலகமே உயிர்மேனிப் பெருமான் உலாவும கோயில்; உள்ளம பெருங்கோயில்; ஊனுடல் ஆலயம. எல்லாவுயிர்க்கும் இறைவன் ஒருவனே; எல்லாவுடலும் இறைவன ஆலயமே. நமது நாட்டின் வடக்கெல்லையான இமாலயத்தில் கைலாயநாதரும, கௌரி அன்னையும, கோயில கொண்டிருக்கின்றனர். தெற்கே குமரியன்னை தவம் புரிகின்றள; இராமநாதர் கோயில் கொண்டிருக்கின்றர். கிழக்கே காசி விசுவநாதர் கோயில் கொண்டு காட்சியளிக்கின்றர். மேற்கே சோமநாதர் துலங்குகின்றர். திரைப்படங்கள் புலன்களைக் கவரும் இந்நாட்களிலும், கோயிலுக்குத்தான் கூட்டம் வருகிறது. காசி, துவாரகை, காஞ்சி, திருப்பதி, சீரங்கம, சிதம்பரம், மதுரை, பழனி, வேளூர், ஆரூர், சீர்காழி, இராமேசுவரம், திருச்செந்தூர் விழாக்களில ஏராளமான மக்கள கூடிக் குழுமிடுகின்றனர். நமது நாடு புண்ணியக் கோயில் நாடு.

## 3. கோயில் பண்பாடே வாழ்வு :

இந்தியப் பண்பாடே கோயில பண்பாடு. இந்தியாவின் பெருமை கோயிற் பெருமை; நாம் வணங்கும் அடியாரும, குருமாரும கோயிலார்களே; நாம் பாடும பக்திப் பாடல்களெல்லாம கோயிலிசைகளே. நாம் காலையும் மாலையும கேட்பது கோயில் மணிகளே; இந்தியர் வாழ்வு கோயிலுணர்வில் கூடிக்குழைந்து நிற்கிறது. கோயிலைச் சுற்றியே நமது வாழ்க்கை அமைந்து விளங்குகிறது. கோயிற் கருவறையிலிருந்தே நமக்கு அறிவும் அமைதி இன்பமும் வருகின்றன.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல், நெஞ்சே-ஆரூரா என்றென்றே அலறு நிலலே" என்கின்றர் அப்பர். "ஆலயந்தானும அரன் எனத் தொழுமே" என்றர் மெய்கண்டார், "ஆலயமாக அமர்ந்திருந்தானே", "ஐந்தன பெருமையே ஆலயமாவதும்" என்று இறைவனைக் குறிக்கின்றர் திருமூலர்

## 3. ஆலயமே சமய விளக்கம் :

ஆலயமே சமய விளக்கம்; ஆலயமே ஆன்ம, வித்தியா சிவ - தத்துவ விளக்கம்; ஆலயமே உயிர் -இறை-தளை (பசு பதி பாசம) ஆகிய முப்பொருளியல் பிணைப்பு. வேதாகமபுராண இதிகாசங்களின, சமய சாத்திரங்களின், பாதுகாப்பு நிலையம் கோயில்களே. அப்பர் சுந்தரர், சம்பந்தர், சேக்கிழார், திருமூலர் பாடல்களெல்லாம கோயில் காப்பறைகளினின்றே நமக்குக் கிடைத்தன. திருத்தொண்டர்களெல்லாம் கோயில கோயிலாகச் சென்றே பாடினர்; ஆடினர்; தொண்டு பரவினர். அருட் பெருமையைக் காட்டி மக்களுக்கு இறைவன் உண்மையை விளக்கினர். மூர்த்தி தலம தீர்த்தம முறையாகத் தொழுதால் வார்த்தை சொல்ல அருளாசான வாய்க்கிறன். கோயில் குருந்தடி நிழலிலேதான சிவகுரு வாதவூரரை ஆண்டுகொண்டு, மாணிக்கவாசகராக்கினர். மாணிக்க வாசகமும, சிதம்பரம கோயிலில் எழுதப்பெற்று, பஞ்சாட்சரப்படியிலிருந்து நமக்குக் கிடைத்தது. எச் சமயத்திற்கும இதயநிலையமாயிருப்பது கோயில்.

## 4, கோயிலே பேரின்ப வாயில் :

கிறித்துவ சமயம சர்ச்சிலேதான் கருக்கொண்டு உருக்கொண்டு பரவுகிறது, இஸ்லாமியம மசூதியிலிருந்து "அல்லாஹூ அக்பர்" என ஆர்க்கிறது. பௌத்த சமயம அழகான அமைதியான ஸ்தூபாக்களிலிருந்து உலகெல்லாம் பரவிப்பொலிகிறது. சமணம தீர்த்தங்கரர் கோயில்களிலிருந்து திகழ்கிறது. ஜைநஷ்டிரம தனலோங நம கோட்டங்களிலிருந்து பொலிகிறது, ஒவ்வொரு சமயத்தவரும உள்ளமைதிக்காகத் தம தம கோயில்களில் வழிபடுகின்றனர், ஞாயிறன்று கிறித்துலகம சர்ச்சுகளில் வணங்குகிறது. மணியடித்ததும் வரிசையாக நடந்து சென்று கிறித்துவரும இஸ்லாமியரும் கோயில் புகுந்து கூட்டமாகத் தொழுகின்றனர். கூட்டத் தொழுகையால் சமயம வளர்கிறது, சன்மார்க்கம் வளர்கிறது.

என்று தொடங்கி 136 வரிகள் மிகஅழகுற ஓடி, பின்வரும் இறுதிவரிகளுடன் முடிகிறது இது.

"திருவரு ளிவன்மேல் வைத்தன
ரிருநிலந் தன்னி லினிதுவாழ் கெனவே"

இதனுள்

"குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்
வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந் தழியவும்
போர்பல கடந்து பொருந்தா மன்னவ
ராரெயிற் சேர்ந்தூர் மலையர ணழித்து
நல்லிசைக் கடாம்புனை நன்னன் வெற்பில்"
(47-51)

என்னும் வரிகளில், மலைபடுகடாம் என்ற நூல் 'நல்லிசைக் கடாம்' என்று சிறப்பிக்கப்பெற்றுள்ளது. பத்துப்பாட்டுள் ஒன்றுன இதனைப் பாடிய சங்கப்புலவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனுர் என்பவராவர். பல்குன்றக்கோட்டத்துச் செங்கணமாத்துவேள் நன்னன் சேய் நன்னன இப்பாட்டாற் சிறப்பிக்கப்பெற்றவன் ஆவன். பத்துப்பாட்டு ஓலைப்பிரதியாயிருந்து அழிந்தொழிந்து போயிருப்பினும், கலவெட்டில் இவ்வாறு கவின்ஒழுகப் பதித்திருப்பதனுல், அஃது அழியாது நின்று தமிழ்த்தொன்மை அருர்புகழைப் பறைசாற்றுவதற்குத் தக்க வாய்ப்பாகும் அன்றே? இக்கல்வெட்டின காலம் கி. பி. 13 ஆம் நூற்றுண்டு ஆகும். இதிற் குறிக்கப்பெற்ற 'நன்னன்வெற்பு' என்பது நவ்வமலையையே குறிக்கும் என்பது திரு. சதாசிவ பண்டாரத்தார் கருதது ஆகும்.

இவ்வாறே 'பட்டினப்பாலை' என்று கூறப்பெறும் சங்கநூல பறறிய செய்தியும் திருச்சிராப்பள்ளிப் பகுதியில் உள்ள திருவெள்ளறையில் காணப்பெறுகினறது.

"வெறியார் தளவத் தொடைச் செயமாறன்
வெகுண்டதொன்றும்
அறியாத செம்பியன் காவிரிநாட்டில்
அரமியத்துப்
பறியாத தூணில்லை கண்ணன்செய்
பட்டினப் பாலைக்கன்று
நெறியால் விடுந்தூண் பதினுறுமேயங்கு
நின்றனவே."

இதனுல் மற்றொரு சங்க நூலும் கல்வெட்டின் வழிக் காக்கப்பெற்ற சிறப்பினை அறியலாம். பட்டினப்பாலை அரங்கேறியதனை நினைவாகச் சோழநாட்டில கரிகாற் பெருவளத்தான நிறுவியிருந்த அப்பதினுறுகால் மண்டபம் நீங்கலாக மற்ற அனைத்தும் அழிக்கப்பட்டன என்ற குறிப்பினை இது குறிப்பிடுகின்றது.

## 15. காரிகை நூல் :

மிழலை நாட்டு வேள் கந்தன் மாதவன் என்ற சான்றோர் ஒருவர், தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைப் பகுதியைச் சேர்ந்த நீடூர்ச் சிவன் திருக்கோயிலிற் செய்த திருப்பணிகளைப் பற்றிய செய்யுள் ஒன்றை இததிருக்கோயில் தென்புறச் சுவரில் காணலாம். இக்கந்தன் மாதவனின் முன்னேர் அமிருதசாகரரைக் கொண்டு யாப்பருங்கலக் காரிகை, யாப்பருங்கலம் என்ற அரிய யாப்பிலக்கணக் கருவூலங்களை இயற்றுவித்த சிறப்பை இச்செய்யுளிற் காணலாம். இதனுல் திருக்கோயில் கல்வெட்டுக்களில், தமிழ் இலக்கிய இலக்கண வரலாற்று நுட்பம் விரிக்கும் அருஞ்செய்திகள் பல உள்ளன என்ற உண்மையை அறிவுலகு அறிந்து மகிழ வாய்ப்பு உண்டு.

'நிகரிலாக் கற்றளி நீடூர்
நிலவினுற் கமைந்த நிலாவினு னமுத
சாகரனெடுத்த ... ... தொகுத்த
காரிகைக் குளத்தூர் மன்னவன் தொண்டை
காவலன் சிறுகுன்ற நாட்டுக்
கற்பகம் மிழலை நாட்டு வேளாண்
டவன் கந்தன் மாதவனே"

என்பது இப்பகுதி. இதைத் தொடர்ந்த பாட்லில்,

தண்டமிழமித சாகர முனியை
சயங்கொண்ட சோழ மண்ட லத்துத்
தண்சிறு குன்ற நாட்டகத் திருத்தி
... ... ... நூற் காரிகை அவனுற்
கண்டவன் மருமான் காரிகைக் குளத்தூர்
காவல் நிலாவினுன் எவர்க்குங்
கருணையும் தியாகமும் காட்டிய மிழலை
நாட்டுவேள் கந்தமா தவனே."

என்று வருவதும் நோக்கி உணரத்தக்கது.

## 16. கட்டளைக் கலித்துறைப் பெருக்கம் :

கட்டளைக் கலித்துறை என்ற புதிய யாப்பு வகையினைத் திருக்கோயிற் கலவெட்டுக்களில் இனிது பேணியிருப்பதற்குப் பலசான்றுகள் காட்டலாம்.

பல்லவ அரசன் ஒருவனைச் சோழன் வென்று ஆண்டதைக் குறிப்பது, திருக்கடவூர் அமிர்தகடேசுவரர் திருக்கோயில வாயில வலபுறச் சுவர்ச் செய்யுட் கல்வெட்டு. இது கட்டளைக் கலித்துறைகளால ஆகியது.

"சிவனன்று நல்கிய செஞ்சின வேற்றுக்
கொடியுயர்த்த
தவனந் தருபரிக்கச்சியர் கோன்பச்சை
யேயுயர்வித்
தவனங் குலபதி தன்னுடன் போந்துதண்
காவிரிநீர்ப்
புவனங் கொடுத்துக் கொண்டான் வன்பால்
வெம் புலிக்கொடியே."

திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில் தென்புறச் சுவரில உள்ள ஓர் அழகிய நேரிசை வெண்பா, பெருமானடிகள் என்று குறிக்கபபெற்ற, பல்லவ குலத்துக் கடைசி அரசனும் கவிவலலவனும ஆன அபராசிதவருமனே பாடியதாகும். அழகிய தமிழ்ச்சொற்களால் இனிய வடிவம் பெற்றுள்ளது இது, திருக்கோயில் வளர்த்த தெய்வத்தமிழ் நடையினது என்று பாராட்டத்தக்கது ஆகும. இவ் வீரட்டானேசுவரர் திருக்கோயிலைக் கட்டி முடித்த நம்பி அப்பி என்பாரை ஏத்துகிறது பாட்டு.

*" திருந்து திருத்தணியில் செஞ்சடை யீசர்க்குக்*
*கருங்கல்லாற் கற்றளியா நிற்க - விரும்பியே*
*நற்கலைக ளெல்லாம் நவின்றசீர் நம்பி அப்பி*
*பொற்பமைய(ச்) செய்தான் புரிந்து "*

இதன் அடியில் "இவ்வெண்பா பெருமானடிகள் தாம் பாடி அருளித்து" என்ற சொற்றொடரொன்றும் காணப் படுகின்றது.

## 17. தில்லைக் கோயில்:

இவ்வாறே தொடர்ந்த பல அழகிய வெண்பாக்கள் வடிவில, (38) சிதம்பரம நடராசர் திருக்கோயில் தெற்குத் திருச்சுற்றில் வெளிப்பக்கம தென்புறச் சுவரில் அமைந்துள்ள கல்வெட்டைக் காணலாம், முதற் குலோத்துங்கனின படைத் தலைவனாகிய நரலோக வீரன் எனபவன் தில்லைத் திருச்சிற்றம்பலததுச் செய்த எழில்மிகு திருப் பணிகளை இலக்கிய மதிப்புடைய அருந்தமிழ் வெண்பாக் களில காட்டுகிறது இது.

*" எவ்வுலகும் எவ்வுயிரு மீன்று மெழிலழியாச்*
*செவ்வியாள் கோயில் "* (2)

*"ஆடுந் தனித் தேனுக்கு அம்பலத்தே கற்பூரம்"* (9)

*" ஆடுந் தெளிதேனை ஆயிரநாழி நெய்யால்*
*ஆடும் படிகண்டான் "*

*" தில்லைவளருந் தெளிதே னொளிதழைப்ப "* (33)

முதலிய நயம்பொதிந்த தொடர்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது, இத் திருக்கோயிற் கல்வெட்டு.

## 18. திரிசிராமலை அந்தாதி

இவ்வாறே, தென்காசி விசுவநாதர் திருக்கோயில் முன்புறம இருந்துள்ள கோபுரச சுவரில எழுதியுள்ள கலவெட்டுக் கவிதைகள, கற்றாரை உருக்கம உடைய கவின் மிக்கவை. இறுதியாகத் திருச்சிராப்பள்ளி மலையின் மேலுள்ள குகைச் சுவர்களில் எழுதப்பட்டுள்ள 104 பாடல்கள கொண்ட ஓர் இலக்கியமாகிய சிராமலை அந்தாதி குறிக்கத் தக்கதாகும்.

திருக்கோயில்களில் உள்ள கல்வெட்டுக்களால், தனிப் பாடல்களால் இலக்கியத்தரம் பெற்று நிலைபேறு எய்தியவுடன், ஒரு சிறு இலக்கியமே நிலைபேறு எய்திட முடியும என்பதற்கு இஃது ஓர் எடுத்துக்காட்டென்று கூறிடலாம். இச்சிராமலை அந்தாதியைப் பாடியவர் நாராயணன. காலம் கி. பி 9 அலலது 10 - ஆம் நூற்றாண்டு என்பர்; சிராமலைச் சிவபிரான மீது பாடப்பட்ட அந்தாதி இலக்கியம் இது. கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் அடிகள் காலத்தே, திருவிருத்தம என்ற பெயருடன் திகழ்ந்த கட்டளைக் கலித்துறை இப்புலவரது இவ்விலக்கியத்திற்கும் பொருந்தி உள்ளது.

இந்நூலின் நடை, சொற்கள முதலியன அந்தாதி இலக்கியங்களுள் மிகப் பழமைவாய்ந்தது இஃது என்று உரைப்பதற்கு உறுதுணை புரிகின்றன,

அகபபொருள் துறைகள் பலவும இங்குக் கையாளப் பட்டுள்ளன ; 4, 9, 16, 27, 36, 45, 61, முதலியவை இந்நோக்குடையவை.

*" உறைவாய் சிராமலை யுள்ளுமென்*
*சிந்தையுள்ளுமென்றும்*
*பிறைவாய் மழுவாட் பெரியவனே*
*நுன்பியற்கணிந்த*
*கறைவா யரவங் கடியாவகை*
*யடியே னறியே*
*னறைவா யழலுமிழும் புரிந்தாடி*
*யலகுமே"* (29)

என்பது முதலிய பாடல்கள் உருக்கம் உடையவை.

*" மதியும்பகை முன்னை வாயும்பகை*
*மனையும் மனைசூழ்*
*பதியும்பகை பகையன்றில் என்றும்*
*பகை பான்மை தந்த*
*விதியும்பகை யெனிலு மன்பரன்பினர்*
*வெள்ளக் கங்கை*
*பொதியுஞ் சடையன் சிராமலை போலுமெம்*
*பூங்குழற்கே "* (33)

என்பது சொன்னயம பொருணயம் மிகுந்த ஒரு பாடல்.

*" நெஞ்சம் துணையுண்டு நீர்*
*நிலத்துண்டு நிழலுமுண்டு*
*தஞ்சப் பெருக்குள தானஞ்*
*சிராமலைச் சாரலுண்டு*
*துஞ்சுந் துணையுஞ் சிவனைத்*
*தொழுது துறக்க மெய்தார்*
*பஞ்சந் நலியப் பலிதிரிவார்*
*சிலர் பாவியரே "* (42)

என்பது வையக மாந்தர் பொருட்டுக் கவிஞர் வருந்தும் பகுதிகளுள் ஒன்று.

"இயக்கிய காலு நிலனும் எரியும் இருவிசும்பும்
மயங்கிய நீரும் மறையும் பிறவும் மருவியுரந்
தயங்கிய சோதியும் தானுந் திருமலைத்
தத்துவன்றாள்
முயங்கிய சிந்தையி னார்கள் எந்நாளும்
முடிவிலரே" (58)

என்பது அட்ட மூர்த்தக் கொள்கைத் தத்துவத்தை அறிவுறுத்தும் அருமைத் திருவிருத்தம் ஆக உள்ளது.

'பொய்யினைப் பேசிப் பொருளினைத் தேடிப் புழுப்
பொதிந்த
மெய்யினைக் காத்து வெறுத்தொழிந்தேன் வியன்
பொன்மலைமேல்
ஐயனைத் தேவர்தங்கோனை மெய்மானை யம்மான்
மறிசேர்
கையனைக் காலனைக் காய்ந்த பிரானைக் கழல்
பணிந்தே" (97)

என்பது அப்பர் திருவிருத்தமோ என்று ஐயுறும் வண்ணம் சிறந்து திகழ்கின்றது.

"கற்பந்தனீழலின் வைத்த கவித்துறை நூறுங்
கற்பார்" (103)

"கற்பதித்தான் சொன்ன கவி" (104)

என்பவற்றுற் கல்லிலெழுந்த கவிதையாகவே இதனை ஆசிரியர் வேம்பை நாராயணன் இயற்றினர் என்பது விளங்குகின்றது. சுருங்கக் கூறிலை, திருக்கோயில் கல்வெட்டுக்களால் ஓர் இலக்கியமே வாழ்வு பெற்றிடும் என்பதற்கு இச் சிராமலை யந்தாதி தக்க சான்றாய் அமைகின்றது எனலாம்.

## 19. பக்தி இலக்கியக் காலம்:

கி பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சிவநெறியைச் செந்தமிழ் இன்னிசையோடு சேர்த்துப் பரப்பிய திருஞானசம்பந்தர் தாம் பாடிய திருப்பதிகங்கள் பலவற்றையும் தமிழ்மொழிஇலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டு விளங்குமாறு பாடியுள்ளமை இங்குக் கருதத்தக்கது. இவ்வாறே திருநாவுக்கரசர் பாடிய திருத்தாண்டகம் புதிய இலக்கிய வகையாகும். இவையனைத்தும் பாடப் பெற்றவை திருக்கோயில்களிலேயே என்பதை மறந்து விடலாகாது

## 20. மூல இலக்கியமும் கோயில்களும்:

சேக்கிழார், திருஞானசம்பந்தர் பாடிய புதிய இலக்கிய வகைகளாகிய சித்திரக் கவிகளைப் பற்றிக் குறிப்பிடுங்கால, 'மூல இலக்கியம்' என்று கூறுவது இங்குக் கருதத் தக்கது. தமிழ்மொழியில் இவ்வகையில் எழும் முதல் இலக்கியங்களாகவே இவற்றைக் கருதவேண்டும் என்பது சேக்கிழார் திருவுள்ளம் ஆகும்,

திருஞானசம்பந்தர் இறைவனைக் கசிந்து போற்றிப் பாடிய திருப்பதிகங்கள் பலவும் இவ்வாறு தமிழ்மொழிக்கும் புதிய பல இலக்கிய வகைகளில் அமைந்துள்ளமை எண்ணுந்தோறும் பெருமிதம் விளைவிப்பாதகும்.

"சக்கரம் சீர்த் தமிழ்விரகன் சொன்னதமிழ்"

"மாவின்பாச்சல் தம்மானென்றிய
ஞானசம்பந்தன் தமிழ்"

"வழிமுடக்கு ஞானசம்பந்தன் தமிழ்"

"தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே"

என்பன திருஞானசம்பந்தர் திருவாக்கில் வரும் தொடர்கள். ஈரடி மேல் வைப்பு, ஏகபாதம், கூட சதுக்கம், கொம்பிலாப்பாட்டு, சக்கரமாற்று, தாளச்சதி, திருவிருக்குக்குறள், நாலடி மேல் வைப்பு, மாலைமாற்று, முக்கால்மொழிமாற்று. இயமகம், வழிமொழித் திருவிராகம் ஆகிய அனைத்து வகைகளும் தமிழ்மொழி இவ்வாறு பெற்ற இலக்கியப் பாவகைகளே என்று கூறலாம்.

திருநாவுக்கரசர் கண்டு கையாண்ட புதிய இலக்கியப் பாவகையாகிய தாண்டகம் தமிழகத்துத் திருக்கோயில் களினின்றும் பெருகிச் செழித்தது: திருவிருத்தம் எனும் பெயரில் அப்பரடிகள் கண்டு களித்து இசைத்த பாடல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறை என்ற பாவகையைச் சார்ந்தனவே. எழுத்து வருக்கமோனை என்ற புதிய அமைப்பு அமைய ஒரு திருப்பதிகமும் அப்பரடிகள் பாடியுள்ளார். இவற்றால் இந்தப் புதிய இலக்கிய வகைகள் செல்வாக்குப் பெறவும் பிற்காலத்தே எண்ணற்ற பாடல்கள் இவ்வகையில தழைக்கவும் காரணம் ஆயிற்று.

### பிற வகைகள்:

சேரமான் பெருமாள் பாடிய திருக்கைலாய ஞானஉலா ஆதியுலா எனப்படுவது: இது தோன்றிய பின்னரே, இதே வகையில் பல உலாக்கள் பல்கிச் செழித்த பாங்கினையும் காண்கின்றோம். மாணிக்கவாசகர் தில்லைத் திருக்கோயிலில் பாடிய திருக்கோவையாரே தமிழிற்றோன்றிய முதல் கோவை இலக்கியம் என்று மொழியலாகும்: இதன் பின் அளவற்ற கோவைப் பனுவல்கள் தமிழில் தோன்றிச் செழித்தன. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய தூதுப் பதிகங்களைப் பின்பற்றி எழுந்த தூது என்ற இலக்கிய வகைகள் தமிழகத்திற் பெருகி வளரலாயிற்று. இவ்வாறே மாணிக்கவாசகர் அந்தாதி யாப்பில பாடிய திருச்சதகம் என்ற ஒன்றே எண்ணற்ற சதக இலக்கியங்கள் தமிழிற் காண வாய்ப்பாயிற்று.

திருப்பள்ளியெழுச்சி, தசாங்கம், முதலிய பிற பகுதிகளும் திருக்கோயில்களினின்று பெருகிச் செழித்த வைகளே யென்று கூறலாம். திருக்கோயில்களில் பக்தி இலக்கியங்கள், தலபுராணங்கள் படித்து அரங்கேற்றம் செய்யப்பட்டன. ஆளுடைபிள்ளையார் ஸ்ரீபுராணம் படிக்கப்பட்டமைக்குத் திருவொற்றியூர்க் கல்வெட்டுத் துணைபுரிகின்றது. காஞ்சிக் குமரக் கோட்டத்தில் கந்தபுராணம் பாடிக் கச்சியப்பர் அரங்கேற்றிய மண்டபம் இன்றும் உள்ளது, புள்ளிருக்குவேளூர் போன்ற தலங்களில், கலம்பகம், தனிப்பாடல்கள் முதலிய பல இலக்கியவகைகள் எழுந்து விளங்குகின்றன. குமர குருபரர், சிவப்பிரகாசர், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், மகாவித்துவான் மீனட்சிசுந்தரம் பிள்ளை போன்ரேருடைய பிரபந்தங்களும் பிற புராணப் பனுவல்களும் கி. பி. 17 – ஆம் நூற்ருண்டு முதல் எண்ணத்தக்க விழுமிய இலக்கியங்களாய் விளங்குதலை மறுப்பார் யாரோ !

# 2. திருக்கோயில்களால் - அறியப்படும் மக்கள் சமயப் பண்பாடு :

## ( நாயன்மார்களைப் போற்றுதல் )

**1. திருஞானசம்பந்தர்:**

சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும், சுந்தரரும் திருநெறிய மெய்ஞானத்தமிழ் பாடிச் சைவம் பரப்பிய வராவர். இம் மூவரும் பல்லவப் பேரரசு நிகழ்ந்த காலத்தில் திகழ்ந்தனர். சுந்தரர் தம் நாளிலும் தமக்கு முன்னும் இருந்த அடியார்களைத் திருத்தொண்டத் தொகையால் துதித்தார்.

அந்நாள்முதல் பெரியபுராணம் பாடப்பெற்றது வரையிலும் அதற்குப் பின்னும் செந்தமிழ்நாட்டுச் சான்றோர் அளவிலாத பெருமையுடைய அடியார்களை அமையம் வாய்ப்புழி எல்லாம் போற்றியுள்ளனர் என்று கல்லெழுத்துக்களால் அறிய வருகிறது.

திருஞானசம்பந்தரைப் பற்றிக் கல்வெட்டுக் களினின்று அறியப் படுவனவற்றுள் சில காண்போம்.

**திருஞானம் பெற்ற பிள்ளையார் :**

*"போதையார் பொற்கிண்ணத்து அடிசில்பொல் லாதெனத்*

*தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்''*

என்பது சம்பந்தர் வாக்கு.

அம்மையும் அப்பனும் இங்ஙனம் பாலமுதைச் சம்பந்தருக்கு அளித்து ஆட்கொண்டமையால சம்பந்தர் ஆளுடைய பிள்ளையார் ஆயினர். சேக்கிழார் பெரு மானும்,

*'' யாவருக்கும் தந்தைதாய் எனும் இவர் இப்படியளித்தார்*

*ஆவதனால் ஆளுடைய பிள்ளையாராய்...*

*... ... ... சிவஞான சம்பந்தராயினர் ''*

என்பர்.

இறைவியார் பாலமுது அளித்த செய்தியை நினைவு கூர்ந்து, கழுமலத்து ஆளுடைய பிள்ளையாருக்குத் திருப்பாற் போனகம் செய்தருளுதற்காகத் திருமடைப் பள்ளிப் புறமாகத் தலைச்சங்காட்டைச் சேர்ந்த சிற்றூர் சோழபாண்டிய நல்லூரில் 5 வேலி நிலம் அளிக்க பெற்ற தாக ஒரு சாசனம் கூறுகிறது.

முதற் குலோத்துங்க சோழன் காலத்திய, சிதம் பரத்தில் உள்ள வடமொழிக் கல்வெட்டுச் சுலோகங்களுள் ஒன்று.

'' மலைமகளின் ஸ்தனத்தில் இருந்து பாலைப் பருகிக் கலைமகளின் அருளைப்பெற்று ஆனந்தக் கூத்தாடி ஸ்ரீ கண்டன் புகழைப் பாடிய ஆளுடைய பிள்ளையாரான திருஞானசம்பந்தப் பெருமாளுடைய பொன் திரு மேனியை நிறுவி அதற்குப் பாயசம் நிவேதிக்க (நரலோக வீரன) ஏற்பாடு செய்தான்'' என்று கூறுகிறது.

*'' யத்வாணீ கிரிஜா குசப் பிரகளிதம்*
*பித்வா ப்ரந்ருத்தம் பயோ*
*மாதுர்யாததிகாம் ததோ விகவித*
*ஸ்ரீ கண்ட கீர்த்திக் கிர மா*
*மூர்த்திம் தஸ்ய த்ருசாம் மத்சவகரீம்*
*காந்யா குமாரஸ்ய தாம்*
*க்ருத்வா யாம்ச சாதகும்ப கடிதம்*
*தஸ்யாதி சத் பாயசம்''*

என்பது சாஸன வடமொழிப் பாடல்.

இங்ஙனம் சிவஞானம பெற்றமையால் திருஞான சம்பந்தர் '' திருஞானம் பெற்ற பிள்ளையார் '' என்று பல சாசனங்களில் குறிக்கப் பெறுகிறர்.

' அரும்பாக்கிழான் மணவில் கூத்தனன காலிங்க ராயன்' என்ற ஓரசியல் தலைவன் முதல் குலோத்துங்க சோழன காலததிறுதியிலும், விக்கிரமசோழன் காலத்து முதற்பகுதியிலும வாழ்ந்தவன். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த திருப்பணிகள் பல. அவை தில்லையில் 31 வடமொழிச் சுலோகங்களிலும் 36 தமிழ் வெண்பாக்களிலும், திருவதிகையில் 25 வெண்பாக்களி லும் அமைந்துள்ளன.

இவன் தில்லையில் தேவாரம் ஓதுவதற்கும், அன்பர்கள் இருந்து செவிமடுத்து இன்புறுவதற்கும் ஆக ஒரு மண்டபத்தைச் செய்தான்.

"நட்டப் பெருமானுர் ஞானம் குழைத்தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம் - முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான் தென் [வேந்தர் கெட
வாட்போக்கும் தொண்டையர்கோன் மன்"

என்பது அவ்வெண்பா. இதில் "ஞானம குழைத்து அளித்த சிட்டப் பெருமான்" என்ற பகுதியில், சம்பந்தர்க்கு இறைவன் ஏவலால் சிவஞானப் பால் கொடுக்கப்பெற்ற செய்தி குறிக்கப்பெற்றது.

## 2. தாளம் பெற்றமை :

ஈசன், "நாளும் இன்னிசையால தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன் தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும் தன்மையாளன்" என்பர் சுந்தரர். சம்பந்தர் திருக்கோலக்காவில் தாளம் பெற்ற செய்தியை நினைப்பூட்டும் நெறியில் முதல மாறவர்மன் சுந்தர பாண்டியனுடைய குடுமியான்மலைக் கல்வெட்டில், "தாளம பெற்றான் குடிக்காடு" என்று ஒரு நிலப்பகுதி குறிக்கப்பெற்றுள்ளது.

## 3. ஆணை நமதே :

திருஞானசம்பந்தரது முதலாவது தலயாத்திரை, திருக்கோலக்காவுக்குச் சென்றது. இரண்டாவது தல யாத்திரை, திருநனிபள்ளிக்குச் சென்றது. இது இவரது தாயாகிய பகவதியாரின் பிறந்தவூராகும். அங்குக் "காரைகள் கூகை முல்லை" என்ற திருப்பதிகத்தில் இறுதிப் பாடலில் "திருநனி பள்ளியை நினைப்பவருடைய வினைகள் கெடும்-ஆணை நமதே" என்று பாடியுள்ளார்.

"இடுபறை யொன்ற அக்கர் பிரான்மேல் இருந்து
இன் இசையால் உரைத்த பனுவல்
நடுவிருள் ஆடும் எந்தை நனிபள்ளிஉள்க
வினை கெடுதல் ஆணை நமதே"

என்பது அப் பாடல்,

சம்பந்தர் திருவேதி குடிக்குச் சென்று பாடிய பதிகத்தின் இறுதிப் பாடலிலேயும் இவ்வாணை குறிக்கப் பெற்றுள்ளது,

"சிந்தை செய வல்லவர்கள் நல்லவர்கள்
என்ன நிகழ் வெய்தி இமையோர்
அந்தவுல கெய்தியர சாளும் அதுவே
சரதம் ஆணை நமதே"

சம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டில் இருந்த பொழுது, சம்பந்தர் மதுரைக்கு வரவேண்டும் என்று அழைக்கப்பெற்றார். திருநாவுக்கரசர், "கோள்கள் தீமை பயக்கும் நிலையில் உள்ளன. செலலற்க" என்றார். சம்பந்தர் கோளறு திருப்பதிகம் பாடினர். அதன் ஈற்றுப் பாடல் வருமாறு :

"தேன்மர் பொழில் கொளாலை விளை செந்நெல்
வளர் செம்பொன் எங்கும் நிகழ [துன்னி
நான் முகன் ஆதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொன் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே"

சீர்காழித் திருப்பதியில் அவர் பாடிய பதிகங்களில் "மடல் மலிகொன்றை" எனும் திருப்பதிகத்தின் "கானலங் கழனி" என்னும் பாடலில் 'ஆணையும் நமதே' என்றுள்ளது.

இங்ஙனம் நான்கு இடங்களில் ஆணை நமதே என்று சம்பந்தர் பாடியுள்ளமையின், நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில், சம்பந்தரை "ஆணைநமது என்ன வல்லான்" என்று குறுப்பிட்டுள்ளார்.

"முத்திப் பகவன் முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தர் எதிர் ஆணை நமது என்னவல்லான்"

என்பன அவ்வரிகள்.

## 4. ஆணை நமதென்ற பெருமாள் :

"ஆணை நமது" என்றமையின் திருஞான சம்பந்தரை "ஆணை நமதென்ற பெருமாள்" என்றும் குறிப்பிட்டனர்.

"ஆணைநமது என்ற பெருமாள்" என்ற பெயர் பிரானமலைக் கல்வெட்டில் காணப்பெறுகின்றது. இத் தன்ம சாசனத்துள் கையெழுத்திட்டவருள் ஒருவர் "ஆணைநமதென்ற பெருமாள்" ஆவர்.

திருமையம் வட்டம் விராச்சிலை பில்வனேசுவரர் கோயில மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 16 ஆம் ஆண்டுக்குரிய சாசனத்தில, பெரிய திருக்கூட்டத்துத் தவனை முதலியார் மாணிக்க வாசகர் ஆணை நமதென்ற பெருமாள் ஆன கோயில் வாசகப் பிச்சை முதலியார்" என்று ஒருவர் குறிக்கப்பெறுகிறார்.

நார்த்தாமலையில் உள்ள திருமலைக் கடம்பர் கோயிலில் முதல் மாறவர்மன சுந்தரபாண்டியனின் ஒன்பதாம் ஆண்டுக் கல்வெட்டில் கையொப்பமிட்டவருள் "குடியுடையான் ஆணை நமதென்ற பெருமாள" என்பவனும் ஒருவன் ஆவன்.

**5. திருப்பாசுரம் :**

இது ஞானசம்பந்தர் புனல்வாதம் செய்தற்த அருளப்பெற்ற பாடலாகும். கொள்ளிடக்கரையில் கோவிந்த புத்தூரில் ஒரு சிவாலயம் உள்ளது. அங்கு மூன்றும் இராசேந்திர சோழனின் இரண்டாமாண்டுக்குரிய ஒரு கல்வெட்டின் தொடக்கத்தில் திருப்பாசுரப் பாடல் சிலாசாசனமாக அமைந்துள்ளது

**வேந்தனும் ஓங்குக :**

திருப்பாசுரத்தில் "வேந்தனும் ஓங்குக" என்று பாடியமையால், கூன் பாண்டியனுடைய கூன் நிமிர்ந்து அவன் நெடுமாறன ஆயினான். இதனைச் சேக்கிழார்,

"எம்பிரான் சிவனே எல்லாப்
பொருளும் என்று எழுதும் ஏட்டில்
தம்பிரான் அருளால் வேந்தன்
தன்னை முன் ஓங்கப் பாட
அம்புய மலராள் மார்பன்
அநபாயன் என்னும் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத்
தென்னன் கூன் நிமிர்ந்த தன்றே"

என்பர்.

பாண்டியனுடைய கூனை நிமிர்த்த இவ்வற்புதம் மணவில கூத்தன் காலிங்கராயனின் திலலையில கண்ட வெண்பாச் சாசனங்களுள பின்வருமாறு குறிக்கப்பெற்றுள்ளது.

"தென்வேந்தர் கூன் நிமிர்த்த செந்தமிழர் தென் கோயில்
பொன்வேய்ந்து திக்கைப் புகழ் வேய்ந்தான் —ஒன்னார்க்குக்
குற்றம் பலகண்டோன் கோளிழைக்கும் வேற்கூத்தன்
சிற்றம் பலத்திலே சென்று"

இப்பாடலில் பாணடியன் கூன் நிமிர்த்தமையும் ஞானசம்பந்தர் கோயில் பொன வேயப் பெற்றமையும் கூறப்பெறுகின்றன. இதனுள் "செந்தமிழர்" என்பது சமபந்தரை. சம்பந்தர் தமமைத் "தமிழ் ஞானசம்பந்தர்" என்று குறிப்பிடுவதும் இதனை நினைவுறுததும.

**6. பரசமய கோளரி:**

சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளியபோது, "பேர் பலவும் ஊதுமணிச் சன்னமெல்லாம் பரசமய கோளரி வந்தான் எனறு பரிமாற" எனபர் சேக்கிழார், பினனர்ச் சமபந்தர் போதிமங்கைக்கு அருகில் எழுந்தருளுமபோது, பார்குலவும் தனிக்காளம் சினனம் எல்லாம் 'பரசமயக் கோளரி வந்தான் என்று ஊதின' என்பர். இதனுன் சம்பந்தர் 'பரசமய கோளரி' எனப் பெயர்பெற்ருர் என அறியலாம்.

ஆச்சாள்புரம் (திருநல்லூர்ப் பெருமணத்து) கல்வெட்டில் "பரசமய கோளரி நல்லூர்" என்று ஓநர் குறிக்கப் பெறுகின்றது. ஆச்சாள்புரத்தில் "பரசமய கோளரி மடம்" என்று ஒரு மடம இருந்ததாகவும் அறியப் பெறுகிறது.

**7. திருஞானசம்பந்தன் குகை :**

முனிவர் வாழும் இடங்கள் குகைகள்; பிங்கலந்தை நிகண்டு, 'முனிவர் இருப்பிடம' எனக்கூறும். திருபபுத்தூர்த் தாலுக்கா சதுர்வேதி மங்கலம் என்ற ஊரில மூன்றும குலோத்துங்க சோழன காலத்திலும், குமபகோணம தாலுக்கா முன்னியூர் திருவகத்தீஸவரமுடையார் கோயிலின தெற்கில திருமடைவிளாகததில் மூனறும இராசராசன் காலத்திலும் 'திருஞானசம்பந்தன் குகை' இருந்தமையைக் கலவெட்டுக கூறும்.

**8. திருமறை தேவாரச் செல்வன் குகை :**

மூன்றும் இராசேந்திரனின் நான்காம் ஆட்சி ஆண்டுக்குரிய (கி. பி 1250) திருவிடைவாய்க் கல்வெட்டு, திருக்கழுமலத்தில திருத்தோணிபுரமுடைய நாயனர் கோயிலில "திருமுறை தேவாரச் செலவன் குகை" என்ற குகை இருந்ததனைக் கூறுகிறது. இக்குகை முன்னியூரில் உள்ள மூனறும இராசராச சோழனது இருபத்தேழாவதின எதிராமாண்டு (1244 க்குரிய) கல்வெட்டிலும குறிக்கப் பெறுகிறது

**9. காழிக் கற்பகக் குகை :**

மேற்படி முன்னியூர் கல்லெழுத்தில், 'காழிக் கற்பகம் குகை' என்று ஒரு குகை பேசப்பெறுகிறது. இக்குகை திருமுறை தேவாரச் செல்வன் திருமடத்துத் தலைவரால் நிறுவப்பெற்றது. "காழிக் கற்பகம" என்பது ஞானசமபந்தரைக் குறிக்கும்.

"தண்புனல் விளைவயல் காழிக் கற்பகம்
நன் புனல் அருமறை ஞான சம்பந்தன்"

என்பது திருப்பைஞ்ஞீலித் திருப்பதிகப் பகுதி.

முதல் ராசராசனுடைய 27 ஆம் ஆட்சியாண்டுக்குரிய அல்லூர்க் கலலெழுத்தில், "திருவெண்ணாவல் பூந்தோட்டத்தில் பெருந்திருவமிர்தது செய்தருள வசக்கின நிலன ஸ்ரீ யாழிக் கற்பகம் அரைமா" எனற பகுதியால் இததொடர் ஒரு நிலத்தின் பெயராக அமைந்தமை அறிய வருகிறது.

**10. சம்பந்தர் மனைவி :**

மூன்றும் இராசராசனின் 2ஆவது ஆண்டுக்குரிய ஆச்சாள்புரக் கல்வெட்டில் ஞானசம்பந்தர் திருமணம் செய்துகொண்ட அம்மையாரின் பெயர் காணப் பெறுகிறது.

'இந் நாயனுர் கோயில் ஆளுடைய பிள்ளையாரும் சொக்கியாரும் காவேரிக்குத் தெற்கே வடக்கூர்களில் திருவெண்காட்டிலும் திருநனிபள்ளியிலும் திருவாக் கூரினும் எழுந்தருளிப் பின்பு பெரும்பற்றப் புலியூரிலே எழுந்தருளிகிற இடத்து' என்பது சாசனம். இதனுல் ஞானசம்பந்தப் பெருமான் கைப்பற்றிய அம்மையார் பெயர் சொக்கியார் என அறிய வரும்.

விக்கிரம சோழனது திருநல்லூர்ப் பெருமணத்து ஆருமாட்சியாண்டுக் கல்லெழுத்தில், "இக்கோயில் உடைய பிளளையார் திருக்கல்யாணம் பண்ணின திருமாளிகையும் திருவீதியும் திருநந்தவனமும் திருமடை விளாகமும் நிலம் ஆறுமாவும்" என்பது காணப் பெறுகிறது.

**11. பிரம்மபுரீசர் :**

இரண்டாம் குலோத்துங்க சோழனுடைய திருவாரூர் வடமொழிக் கல்வெட்டில் திருஞானசமபந்தர் பிரமபுரீசர் எனப் பெற்றுர்.

"ஸ்ரீமத் பிரம்ஹபுரீச வாகாதிபதி: ஸ்வஸ்வாமி மித்ர" எனற பகுதியில் தேவார மூவரும் குறிக்கப் பெறுவர்; பிரமபுரி என்பது சீகாழியைக் குறிக்கும். பிரமபுரிசர் எனபது காழியர் கோவான ஞானசம் பந்தரைக் குறிக்கும்.

ஸ்ரீ காழி நாடுடைய பிள்ளை ஞானசம்பந்தர் திருக்கேதிச்சுரத் திருப்பதிகத்தில் "காழிநாடுளார்க் கிறைஞானசம்பந்தன்" எனக் குறித்துக் கொள்கிருர். "கனனி நாடுடையான் கோயில் காழிநாடுடைய பிள்ளை" என்பது சேக்கிழார் வாக்கு.

முதற் குலோத்துங்கனுடைய 49ஆம் ஆண்டுக் குரிய திருமாணிக்குழிக் கல்வெட்டு, "உதவி திருமாணிக் குழி உடைய மகாதேவர் கோவில் திருமடை விளாகத்தில் 'ஸ்ரீகாழி நாடுடையான திருமடம்' என்னும மடம் இருந்தது என்று கூறும். இது ஸ்ரீகாழி நாடுடைய பிள்ளையார் திருமடம் எனவும் கூறப்பெறுகின்றது. திருவேத்தூருடைய மஹாதேவர் தேவதானங்களுள் ஒனருக, "ஸ்ரீ காழி நாடன விளாகம்" என்னும் பகுதி மூன்ரும் குலோத்துங்கனின் 33ஆம் ஆண்டுக்கல் வெட்டில் உள்ளது.

**12. பூம்பாவை வழிபாடு :**

சம்பந்தர், சித்தம் இன்புறு சிவநேசர்பால் திருவருள் கொண்டு, மயிலை கபாலீச்சர மதிற்புறத்தே பூம் பாவையின் எலும்பினை 'மட்டிட்ட புன்னையங்கானல்' எனும் பதியம் பாடிப் பெண்ணுக்கினுர். இப்பூம்பாவை மயிலையில் வழிபடப் பட்டமையைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. பதின்மூன்ரும் நூற்ருண்டுக்கு உரிய எழுத்தமைதி கொண்ட விருபாட்சீஸ்வரர் கோயிலில் உள்ள பாண்டிய வேந்தன் கல்வெட்டொன்று திருப்பூம் பாவை உடைய நாயனுரைக் குறிக்கின்றது. செயிண்ட் தாமஸ் மவுண்ட் ஹேரலி அப்பாஸ் கான்வெண்டில் உள்ள துண்டுக்கல்வெட்டு ஒனறு திருமயிலாப்பூரில் உளள பூம்பாவைக்குக் காசு, கடமை, நல்லாயம் முதலியவற்றில் இருந்து விலக்களிக்கப் பெற்றதனைக் கூறுகிறது.

**13. கொத்தலர் குழலி :**

*"கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு*
*குணமாய வேட விகிர்தன்*
*மத்தமு மதியு நாக முடி மேலணிந்தென்*
*உளமே புகுந்த அதனுல்*
*புத்தரொடமணை வாதிலழிவிக்கு மண்ணல்*
*திருநீறு செம்மை திடமே*
*அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல*
*அடியா ரவர்க்கு மிகவே"*

என்பது கோளறு பதிகத்தின் பாடல்; தில்லையில் உள்ள கோப்பெருஞ்சிங்கன் காலக் கல்லெழுத்துக்கள் மூன்றனுள் "பிராமணி அம்பலத்தமுது கொத்தலர்குழலி" என்று ஒருத்தி குறிக்கப் பெறுவள். இவள் "பெரும் பற்றப் புலியூர் பெரும்கவிசியன் திருக்காழிப் பாலையுடையான் இரவி" என்பவன மனைவி ஆவள்.

**14. நாறுசாந் திளமுலை :**

*"தூறுசேர் சுடலையிற் சுடரெரி*
*யாடுவர் துளங்கொளிசேர்*
*நீறுசாந் தெனவுகந் தணிவர் வெண்*
*பிறைபுல்கு சடை முடியார்*
*நாறுசாந் திளமுலை அரிவையோ*
*டொருபகல் அமர்ந்தபிரான்*
*வீறுசேர் துருத்தியார் இரவிடத்*
*துறைவர் வேள் விக்குடியே"*

என்பது "ஓங்கிமேல் உழிதரும் ஒலிபுனல்" என்னும் திருப்பதிகத்தின இரண்டாம பாடல், இப்பாடலடிப் படையாக காமக் கோட்டமுடையநாச்சியார் 'நாறு சாந்திள முலை நாச்சியார்' எனக் கலவெட்டுக்களில் கூறப்படுகிருர். திருத்துருத்தியுடையார், 'வீங்குநீர்த்

துருத்தியுடையார் சொன்ன வாற்றிவார்' என்க் கல்வெட்டுப் பகுதி ''பைம் பொழில் சூழ் வீங்குநீர்த்துருத்தியார் இரவிடத் துறைவர் வேள்விக் குடியே' எனனும முதற்பாட்டுப பகுதியை நினைப் பூட்டுவது ஆகும்.

## 15. பையர வல்குலாள் :

திருவிற்கோலம் என்பது தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று. இது கூவம் என்று இந்நாளில் வழங்குகிறது. இங்குத் திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின மூன்றும் பாடல்,

*'' ஐயன்நல் லதிசயன் அயன் விண்ணோர் தொழும்*
*மையணி கண்டனர் வண்ணம் வண்ணவான்*
*பையர வல்குலாள் பாகம் ஆகவும்*
*செய்யவன் உறைவிடம் திருவிற் கோலமே ''*

என்பதாகும். இப்பாடலில் இறைவி, 'பையரவல்குலாள்' என்று குறிக்கப்பெறுகிறாள். திருக்கூவப் புராணத்தில் வாழ்த்துச் செய்யுளில்,

*'' எழிலுடை பையரவல்குலம்மை பதம் வணக்கம்*
*செய்வாம்''*

என்ற பாடற் பகுதியில் இத்தொடர் பயின்றுள்ளது. செந்நெல் வைத்த சருக்கத்தில,

*'' பொருவில் தன்னை விற்கோலத்தன் எனும்*
*பெயர்புதுக்க*
*உருவம் முன் வளைத்து ஒரு கழைத் தண்டு முன்*
*ஊன்றித்*
*திருவிறைஞ்சு பொற்பையரவல்குலாள் சிரிப்பத்*
*தரும் சீலர் தம் மனையிடைப் புகுந்தனன் தலைவன்'*

என்னும் பாடலிலும இத்தொடர் பயின்றுள்ளமையைக் காணலாம்.

1912 இல் 30 வது எண்ணுகைப் படி எடுக்கப் பெற்ற கல்வெட்டில பையரவல்குலம்மைக்கு வெள்ளிக்கிழமை வழிபாடாற்ற விற்கோலம் ஊரவர் நிவந்தம் அளித்ததாகச் சொல்லப் பெற்றுள்ளது.

## 16. தனி நின்று வென்றான் :

விக்கிரம சோழனின் ஐந்தாமாண்டுக் கல்வெட்டு திருவெண்காடுடையார் கோயில சுற்றுத் தெருவில் '' தனிநின்று வென்றான் படத்தில் '' திருவிழாச் சேவிக்க வந்த மாகேசுவரர்க்கு உணவூட்டுவதற்குக் கொடுக்கப் பெற்ற நிலக கொடையைக் குறிக்கிறது. தனிநின்று வென்றான் எனபது ஞானசம்பந்தரைக் குறிப்பதாகலாம். ஒரு பககம் எண்ணாயிரம சமண முனிவரும அவர்களை எதிர்த்துத் தனியாக நின்று சமணர்களை வென்றமையால் திருஞான சம்பந்தரைத் தனிநின்று வென்றான் என்று கூறல தகும.

## 17. இளவெண்மதி சூடினான்:

திரு அறையணிநல்லூர் என்பதும் சமபந்தர் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்ற; பெண்ணையாற்றின் கரையில் உள்ளது, இந்நாளில் அரகண்ட நல்லூர் என்று வழங்கப் பெறும் இத்தலப்பதிகப் பாடலுள் ஒனறு பின் வருமாறு.

*'' பீடினால் பெரியோர்களும்பேதமை கெடத் தீதிலா*
*வீடினால் உயர்ந்தார்களும் வீடிலார் இள*
*வெண்மதி*
*சூடினார் மறை பாடினார் சுடலை நீறணிந்து ஆரழல்*
*ஆடினார் அறை யணிநல்லூர் அங்கையால்*
*தொழுவார்களே '*

இப்பாடலில் இறைவன் ''இளவெண்மதி சூடினார்'' என்று குறிக்கப் பெறுகிறார். இப்பெயர் இவ்வூர்க் கல்லெழுத்தில் ஒருவனுக்குப் பெயராக வந்துள்ளது. அவ்வீர வரலாறு வருமாறு:

'' இவ்வூரில் நீண்ட காலமாக ஒரு மண்டபம் முற்றுப் பெறாமல் இருந்தது. ஒருவன் இம் மண்டப வேலை நிறைவுற்றால என்னுயிரைப் பலியாகக் கொடுப்பேன் என்று பிரார்த்தனை செய்துகொண்டான். மண்டப வேலை முடிவுற்றது. அவன் தன்னுயிரைப் பலி கொடுத்தான். இவ் வீரச் செயலைப் பாராட்டி அவன் சந்ததியார்க்கு 1000 குழி நிலம் உதிரப்பட்டியாகக் கொடுக்கப்பெற்றது. உயிரை ஈந்தவன் பெயர் இளவெண்மதி சூடினான் என்பது அக்கல்வெட்டிற் கண்டது''.

## 18. எம்பிரான் சம்பந்தன்:

திருத்தொண்டத் தொகையில் சம்பந்தர்,

*'' வம்பறு வரி வண்டு மணம் நாற மலரும்*
*எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்''*

எனச் சுந்தரரால் பாராட்டப் படுவர். இதிற் கண்ட ' எமபிரான் சம்பந்தன் ' என்ற தொடர் திருமழுவாடியில் (திருமழபாடி) மகேஸ்வரர்களில் ஒரு பெயரால அமைந் துள்ளது அறிந்து மகிழ்தற்கு உரியது.

## 19. திருஞானசம்பந்த நல்லூர்:

திருஞானசமபந்தர் பெயரால் சில ஊர்கள் இருந்தன. நாவலபாக்கமான திருஞான சமபந்த நல்லூரைத் திருவோத்தூர் ராஜநாராயணச் சமபுவராயர் கலவெட்டுக களும, தவசிகுழியான சமபந்த நலலூரைக் காளையார் கோவிலில் உளள சடையவர்மன சுந்தரபாண்டியன் கலவெட்டுக்கள் இரண்டும் குறிப்பிடுகின்றன,

"திருஞானசம்பந்தி சதுர்வேதி மங்கலம்" என்பது திரிபுவனச் சக்கரவர்த்திகள் இராசராசனின் 22 ஆம் ஆண்டுக்குரிய மன்னார்குடி கைலாசநாதர் கல்வெட்டு ஒன்றுள் கண்டது. போகீஸ்வரமுடையார் கோயில் திருஞான சம்பந்தன் தளத்தில் இருந்தது என்பது சடையவர்மன் விக்கிரபாண்டியனின் நான்காம ஆண்டுக்குரிய தேவிப்பட்டணக் கல்வெட்டு ஒன்றால் அறியப் பெறும்.

## 20. திருஞானசம்பந்தன் நாழி:

திருவலிதாயத்தில் உள்ள சோழ அரசன்ஒருவனின் பதினாறும் ஆண்டுக் கல்வெட்டில் "திருஞானசம்பந்தன் நாழி" என்னும் பெயருடைய அளவைக் கலன் குறிக்கப்பெறுகிறது,

## 21. ஆளுடையபிள்ளை வழிபாடு:

மாசி வைகாசித் திருவிழாக்களின்போது ஆளுடைய பிள்ளையார் திருமேனி சிருடைதுறையில் இருந்து திருமாறன்பாடிக்கு எழுந்தருளும். இவ்வாறு எழுந்தருளுங்கால் இவருக்கு அமுது செய்தருளவும், பட்டைப் பொதிசோறு வழங்கவும் சேக்கிழான பாலறுவாயன் ஆயின களப்பாளராகன மூன்றும இராசராசனின 19 ஆம் ஆண்டில் நிவந்தம் தந்தான்.

## 22. திருவிடைவாய்த் திருப்பதிகம்:

"பண்புற்ற திருஞானசம்பந்தர் பதிகம் முன்னூற்று என்பத்து நான்கு" எனபது திருமுறை கண்ட புராணம். ஆனால் அச்சிட்ட நூல்களில் காணப்பெறுபவை 383, ஆனால் திருவிடைவாய் என்னும ஊரில் சாசனமாக இருந்து சம்பந்தர் பதிகம் 1918ல் படி எடுக்கப் பட்டுளளது. இது "மறியார் கரத்தெந்தை" எனத் துவங்குவது. பதினொரு பாடல்களை உடையது.

## 23. திருஞானம் ஓதுதல்:

திருநெல்வேலி மாவட்டம் திருவாலீசுவரம் என்ற தலத்திலுள்ள சிவாலயத் திருமதில்களில், திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியனது 3 ஆம் ஆட்சியாண்டில் அமைந்த சாசனம் ஒன்றில் "திருஞானம் விண்ணப்பம் செய்வதற்குச் சிவப்பிராமணர் எண்மர் கோளகிமடத்து ஞானமிர்தாசாரிய சந்தானத்தைச் சார்ந்த புகலிப் பெருமாள் என்பாருடன் உடனபடிக்கையின் பேரில் நிலம் விற்றனர்" என்று வரையப்பெற்றுள்ளது. இதனால் சிவபபிராமணர் திருஞானம் விண்ணப்பித்தனர் என்று அறியலாம்.

திருநெல்வேலித் திருக்கோயிலில் திருஞானம் ஓத விக்கிரமசோழதேவர் கண்ட தவசிகளில் பதினொரு பேர்க்கும் அவர்கள் வர்க்கத்தில் திருஞானம் ஓதும் பேர்க்கும் பதினொரு மனைகள் யாண்டு 15 வது முதல் மடம் எடுத்திருக்கக் காணியாகத் தரப்பெற்றன என்று ஒரு கல்வெட்டு விவரிக்கின்றது. இனிப் போஜனம் உள்ளிட்டு வேண்டுவனவற்றுக்கு நிலம் ஒரு வேலியும் எட்டுமா கோமாறவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் சுந்தரபாண்டியரது ஆட்சியாண்டு பதினைந்தாவது முதல் திருஞானப்புற இறையிலியாகத் தரப்பெற்றது என்று இனனொரு சிலைமேல எழுத்துச் செப்புகினறது.

திருச்செந்தூர்த் தாலுக்கா ஆற்றூர் கல்வெட்டில் திருஞானம் ஓதுவதற்குத் திரிபுவனச் சக்கரவர்த்தி கோநேரின்மை கொண்டான் காலத்தில் நிவந்தம் கொடுக்கப் பெற்றது என்று படிக்கிறோம, இக்கல்வெட்டுக்குரிய அரசன 1239 ல் பட்டமபெற்ற மாறவர்மன சுந்தர பாண்டியன் II என்றும், விக்கிரம சோழதேவர் எனபார் கொங்குச் சோழர் என்றும் இச்சுந்தரபாண்டியர்க்கு மச்சுனனார் என்றும ஆராய்ச்சியாளர் கூறுவர்.

திருஞானம் என்பது தேவாரம் போலச் சமய குரவருள் ஒருவரால் அருளப் பெற்ற பக்தி நூலாக இருத்தல் கூடும் என்று ஆராய்ச்சியாளா கருதுவர், எனினும் சமபந்தராதிய மூவர்பாடிய தேவாரத்தையே திருஞானம் எனபது குறிக்கும் எனக் கொள்ளுதல் தகும். சீகாழிப் பகுதியில் இறைவியார் அளித்த பாலடிசில் உண்டு.

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங்
கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய
மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்
அந்நிலையில்."

என்று சேக்கிழார் பகர்வர். இதனால் ஞானசம்பந்தர் தேவாரத்தையே திருஞானம் என்று குறித்தனரோ என்று ஐயம் எழும்.

தலைஞாயர் என்னும் இடத்தில் உள்ள மூன்றாம் இராசேந்திரனுடைய 3 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இவ்வரசனது 23 ஆம் ஆட்சியாண்டுக்குரிய (கோவிலூர்) திருவுசாத்தானக் கல்வெட்டும் சமபந்தரைத் திருஞானம் பெற்ற பிள்ளையார் எனக் குறிப்பிடுகின்றமையின் இவ்வையம் பின்னும் மிகுகின்றது. ஆனல சம்பந்தர் முதலிய மூவர் அருளிச்செய்த தேவாரத்தை காழித் தாண்டவராயர் எனபார், தாம் எழுதிய திருவாசக வியாக்யானத்தில், திருமெய்ஞ்ஞானத் திருநெறித் தேவாரம்' என்றும், 'திருமெய்ஞானத் திருநெறித் தமிழாகிய தேவாரம்' என்றும, கூறியுள்ளமையால் திருஞானம் எனபது மூவர் தேவாரததையே குறித்தாகக் கொள்ளலாம்.

## 2. திருநாவுக்கரசர் :

திருநாவுக்கரசரைப் பற்றிக் கல்வெட்டுக்களினின்று அறியப்படுவனவற்றுள் சில காண்போம்.

### 1. பெயர் :

திருநாவுக்கரையர் என்றும் வாகீசர் என்றும் இவர் குறிக்கப்படுகிறார். தஞ்சைப் பெரிய கோயில் கட்டப்பெற்றது முதல் ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற அலுவலனுகத் திகழ்ந்தவன் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனுன தென்னவன் மூவேந்த வேளான, இவன் தஞ்சைப பெரிய கோயிலில் எழுந்தருளுவித்த பிரதிமங்களுள் ஒன்று திருநாவுக்கரையர் பிரதிமம்.

தஞ்சைப் பெரிய கோயிலில் முதல் ராஜராஜனது 29 ஆம ஆட்சியாண்டில் ( கி. பி 1014 ல் )

" உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வர முடையாருக்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீராஜராஜதேவர் குடுதத பிடாரர்கள் நாற்பத்தெண்மர் "

என்று ஒரு கல்வெட்டில் உள்ளது. இந்நாற்பத் தெண்மருள, 8 பேர் திருநாவுக்கரையர் பெயரைப் பூண்டிருந்தனர் என்பது அக்கல்வெட்டில் அறியப் பெறுவதுள் ஒன்று.

முதற் குலோத்துங்கன் காலத்திலும், அவன் மகன் விக்ரம சோழன் காலத்திலும் படைத் தலைவனுகத் திகழ்ந்தவன மணவில் கூத்தன கதலிங்கராயன் எனப் பெறுவான். இவன் தில்லையிலும் திருவதிகையிலும் செய்த திருப்பணிகள் அளப்பில இவன திருவதிகையில் ஆற்றிய திருப்பணிகளைத் திருவதிகை. வீரட்டானத்தில் சாசனம செய்யப பெற்றுள்ள 25 வெண்பாக்களால் அறியலாம். இவன் திருவதிகையில் திருநாவுக்கரசருக்குத் திருக்கோயில கட்டினுன

*" ஈசன் அதிகையில்வா கீசன் எழுந்தருள*
*மாசில் பெருங்கோயில் வந்தமைத்தான் - பூசல்*
*விளைவித்த வேணுடும் வெற்பனைத்தும் செந்தீ*
*வளைவித்தான் தொண்டையா மன் "*

என்பது திருவதிகைச் சாசனக் கவியாகும். இவ்வூரில் 'வாகீசர் திருமடம்' இருந்தமையை முதல் குலோததுங் கனின் நாற்பத்துநான்காம ஆட்சியாண்டுக் கலவெட்டு எடுத்துரைக்கிறது. இவற்றில் திருநாவுக்கரசர் வாகீசர் எனப் பெற்றமை காண்க.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருஞானசம்பந்தரை சீகாழியில் முதன முதல் சநதித்த பொழுது வணங்கத் திருஞானசம்பந்தர் அப்பரே என றழைத்தருளியதாகப் பெரியபுராணம் பகரும். எமமண்டலமும கொண்டருளிய ஸ்ரீகுலசேகர தேவர்க்கு யாண்டு பதினெட்டாவதில் அளித்த பில்லமங்கலம் ஆகமசீலினவரர் கோயில் கல்வெட்டில் கைழுெத்திட்ட மகேசுவரர்களில் ஒருவர் பெயர் அப்பர் என்று அறிய வருகிறது.

இரண்டாம் குலோத்துங்கனுகிய அநபாயன் சைவ சமய குரவர் மூவரிடத்தும் மிக்க பற்றுடையவன், அவர் தம் படிவங்களைத் திருவாரூர் திருமூலட்டான முடையார் கோயிலில் எழுந்தருளுவித்தான். தனது ஏழாவது ஆட்சியாண்டில் ஆளுடைய நம்பிக்கும் பரவை நாச்சியாருக்கும் அர்ச்சனு போகமாக அநபாய நல்லூர் என்ற மருகல நாட்டுத் திருவாதிரை மங்கலம் என்ற ஊரை அளித்தான், ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசு தேவர்க்கும வேண்டும் அர்ச்சனை களுக்குமாகப் பன்னிரண்டாவது ஆட்சியாண்டில் மருகல் நாட்டுக் கங்கை கொண்ட சோழ நல்லூரான சிவபாத சேகர நல்லூரரை அளித்தான்.

இத்தமிழ்க் கல்வெட்டோடு தொடர்ந்த வடமொழிக் கல்வெட்டில் தேவார மூவர், ப்ரஹ்மபுரீச ( சம்பந்தர் ) வாகதிபதி (திருநாவுக்கரசர்) ஸ்வஸ்வாமி மித்ர ( சுந்தரர்) என்று குறிக்கப் பெற்றுள்ளனர். இதனுல் திருநாவுக்கரசர் வாகீசர் ( வாகதிபதிபதி ) என்று வழங்கப் பெற்ருர் என்றும் அறியப்பெறும்.

மேற்படி கல்வெட்டில் சுந்தரர் ஆளுடைய நம்பி என்றும, சம்பந்தர் ஆளுடைய பிள்ளை என்றும் கூறப் பெற்றதினின்று திருநாவுக்கரசர் ஆளுடைய அரசு என்று பெற்றிருத்தல் கூடும் என்று ஊகிதது அறியலாம்.

தாராசுரதது இராசராசேச்சுரத்து இறையகப் புறச்சுவரில கணட சிற்பக்கீழ்க் கலவெழுத்துக்களில் " திருநாவுக்கரசாண்டார் " கதை என்று எழுதப்பட் டுள்ளது. இறைவன திருவடி சூட்டும் நிலையில் அச்சிற்பம் அமைந்துள்ளது. திருப்பனந்தாள் செஞ்சடையப்பர் கோயிலில் உள்ள திருத்தொண்டத் தொகைச் சிற்பங்களில் திருநாவுக்கரசர் உழவாரப் படையுடன் இருத்தல் கவனததிற்குரியது.

திருவீழிமிழலையில் திருநாவுக்கரசு தேவர் திருமடம் என்று ஒரு மடம் இருந்ததாக ஒரு கல்லெழுத்து நுவல்கிறது. அதில் திருமடத்திற்கு நிலங்களின பெயர் கூறபபெற்றுள்ளது. இனனொரு திருமடத்திற்குரிய நிலங்களின பெயர் கூறப்பெற்றுள்ளது. இனனொரு சாசனம் மகேசுவரருக்கு உணவளித்தற் பொருட்டு மேற்படி திருமடத்திற்கு, நிலமளித்த செய்தியைக் கூறுகிறது. பல ஊர்களிலும திருநாவுக்கரசர் திரு மடங்கள இருந்தன

### 2. சொற்றுணை :

திருநாவுக்கரசர் கல்லிற் பிணிக்கப் பெற்றுக் கடலிற் பாய்ச்சப்பெற்ற பொழுது பாடபபெற்றது " சொற்றுணை

வேதியன்'' என்ற (நமசிவாய) திருப்பதிகம் ஆகும். "மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரசேரி பன்மற்கு யாண்டு 41 ஆவது -- ... திருவாமாத்தூருடைய மகாதேவற்கு ... ... தேவென் சொற்றுணை அகமுடையான் செட்டங்கை வைத்த திருநொந்தா விளக்கு'' என்ற திருவாமாத்தூர்க் கல்வெட்டிலும் "விக்கிரமசோழ தேவற்கு யாண்டு மூன்ருவது வாகூருடையான் சொற்றுணை கங்கை சடைக் கரந்தானிடை நாங்கள் கொண்ட காசாவது'' என்ற திருச்செந்துறைக் கல்வெட்டிலும் சொற்றுணை என்பது மக்கட் பெயராய் அமைந்திருத்தலைக் காணலாம்.

### 3. கங்கை சடைக் கரந்தான் :

மேற்கண்ட திருச்செந்துறைக் கல்வெட்டில் கண்ட, வாகூருடையான் சொற்றுணை எனபானுக்குக் கங்கை சடைக் கரந்தான் என்றும் பெயரிருத்தலைக் காணலாம். மேற்படி திருச்செந்துறைக் கல்வெட்டின் இறுதியில் பிற்கண்ட வெண்பா உள்ளது.

*உண்ணலாம் நெய்யொடுசோ றேவாதே*
*எப்பொழுதும்*
*பண்ணெலாம் பாடி இருக்கலாம் - மண்ணெலாம்*
*அகன்மாட நீடூர்ஆர் கங்கை சடைக்கரந்தான்*
*பொன்மாடத் தெப்பொழுதும் புக்கு.*

கங்கை சடைக்கரந்தான் என்ற பெயர் திருநாவுக்கரசருடைய "வங்கமலிகடல'' எனற தேவாரத்து.

*"கங்கை சடையுட் கரந்தாய் அக் கள்ளத்தை*
*மெள்ளஉமை*
*நங்கை அறியிற் பொல்லாது கண்டாய்*
*எங்கள் நாயகனே''*

என்ற பகுதியை நினைவூட்டும்.

*"கங்கைவார் சடைக்கரந்தர்க் கன்பராகில்*
*அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''*

என்பதும் அப்பர் தேவாரம்.

#### நற்றுணை :

*"சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ*
*கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்*
*நற்றுணை யாவது நமச்சி வாயவே''*

என்பா அப்பர். இப்பாடலைப்போல பின்வருவதும் உள்ளது.

*"முற்றுணை ஆயினுனை மூவர்க்கும் முதல்வன்*
*தன்னை*
*சொற்றுணை ஆயினனைச் சோதியை ஆதரித்து*
*உற்றுணர்ந்துருகி ஊறி உள்கசி வுடைய வர்க்கு*
*நற்றுணையாவர் போலும் நனிபள்ளி*
*அடிகளாரே''*

இது அப்பர் திருநனிபள்ளியில் பாடியது. திருநனிபள்ளி இறைவன் பெயர்,"நற்றுணையப்பர்'' என்பது. இவ்வூர்க் கல்வெட்டொன்றில், 'நற்றுணையாண்டார் நந்தவனம்' என்று ஒரு நந்தவனம் காணப்பெறுகிறது.

### 4. சிலந்தியைச் சோழனுக்கினுன் :

பண்டொருகால் ஒரு சிலந்தி திருவானைக்கா எம்பெருமாற்குக் கூடுகட்டி வழிபட்டு வந்தது. அப்பெருமானை ஒரு யானையும் வழிபட்டு வரலாயிற்று. சிலந்தி கட்டும் கூட்டை அநுசிதம் எனறு கருதிய யானை அக்கூட்டை அழிக்கலாயிற்று. யானை தன் கூட்டினை அழித்ததனைப் பொருத சிலந்தி யானையின் துதிக்கையிற் புக, யானை உயிர் நீத்தது. சிலந்தியின் உயிரும் பிரிந்தது. எனினும் சிலந்தி மறு பிறவியில் அரசனுயிற்று. அவ்வரசனே கோச்செங்கட் சோழன். இங்ஙனம, சிலந்தி சோழனுன மையைத் திருநாவுக்கரசர்,

*"சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர்*
*செய்து*
*உலந்தவண் இறந்த போதே கோச்செங்க ணனு*
*மாகக்*
*கலந்தநீர்க் காவிரிசூழ் சோணுட்டுச் சோழர்*
*தங்கள்*
*குலந்தனில் பிறப்பித் திட்டார் குறுக்கைவீ*
*ரட்டனுரே''*

என்று திருக்குறுக்கை வீரட்டானத்துப் பதிகத்துப் பாடியுள்ளார். சிலந்தியைச் சோழனுக்கிய அருட்செயலை, வியந்து போற்றினர் அந்நாட்டுப் பெருமக்கள். இறைவனைச் "சிலந்தியைச் சோழனுக்கினன்'' என்று வாயார வாழ்த்தினர். திருவானைக்காவில் ஒரு தோப்புக்குச் "சிலந்தியைச் சோழனுக்கினன் திருதோப்பு'' என்றும் பெயரிட்டனர். இது "தேர்போல்'' என்று தொடங்கும் குலசேகரபாண்டியனது திருவானைக்காக் கலவெட்டில், காணப்பெறுவது. அத்தோப்பு ஒரு நிலத்துக்கு எல்லை கூறுங்கால் கூறப்பெற்றது. அக்கல்வெட்டுப் பகுதி பின்வருமாறு :

"இவர்க்கு விற்றுக்குடுத்த நிலமாவது உள்ளூர் திருப்புடை விளாகத்துச் சிலந்தியைச் சோழனுக்கினன திருத்தோப்புக்கு நீர் பாய்கினற வாய்க்காலுக்கு மேற்கு''

### 5. நல்லநாமம் உடையான் :

மேற்படி கல்வெட்டில் கையெழுத்து இட்டவர்களில் ஒருவர் 'நல்லநாமம் உடையான்' என்ற பெயருடையவர். நல்ல நாமமுடையான் என்பது சிவபெருமானைக் குறிக்கும். சிவபெருமானுடைய திருநாமங்களில் ஒன்று திருவைந் தெழுத்தாகும். "திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்", "எந்தையார் திருநாமம் நமச்சிவாய" என்ற அப்பர் வாக்கே இதனை வலியுறுத்தும். இத்திருப் பெயரையே "நல்ல நாமம்" என்று அப்பர் பின்வரும் பாடலில் கூறியுள்ளார்.

"கல்லி னேடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினுல்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே"

### 6. நஞ்சமுது செய்தான் :

திருநாவுக்கரசர்க்குச் சமணர்கள் நஞ்சு கலந்த பாற்சோறூட்டினர். நஞ்சும் அமுதாயிற்று நாதனடியாராகிய திருநாவுக்கரசருக்கு.

"துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதிநாளும் அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்ச முதாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே"

என்பது இதற்கு அகச்சான்று. இச்செய்தியை நினைப்பிப்பது போல், ஒருவர் பெயர் 'நஞ்சமுது செய்தான்' என்பதாகும் என்று சிதம்பரத்தில் உள்ள குலசேகர தேவர் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. அவரது முழுப் பெயர் 'பெரும்பற்றப் புலியூர் மூலப் பருஷையாரில் வாச்சியன் திருவலஞ்சுழியுடையான் நஞ்சமுது செய்தான்' என்பதாம்.

### 7. தோன்ருத்துணை :

கல்லையே தெப்பமாகக்கொண்டு கரையேறிய திருநாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூரில் பாடுங்கால் இறைவன் தனக்குத் தோன்ருத் துணையாய் இருந்தமையை பின்வருமாறு கூறியுள்ளார்.

"ஈன்ருளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்ருயுலகம் படைத்து கந்தா னென்மனத் துள்ளிருக்க
ஏன்ருன் இமையவர்க்கன்பன் திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்ருத் துணையாயிருந்தனன் தன்னடி யோங்களுக்கே"

இவ்வரிய செயலை நினைவு கூரும் வகையில் இந்நாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் திருப்பாதிரிப்புலியூர் இறைவனைத் "தோன்ருத் துணையாண்டார்" என்று கூறினர். கோயிலைத் "தோன்ருத் துணையாண்டார் கோயில்" என்றும் கூறலாயினர். இதனைப் பின்வரும் கல்வெட்டுத் தொடர்களால அறியலாகும்.

விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு ஏழாவது ராஜராஜ வளநாட்டு பட்டான் பாக்கை நாட்டுத் திருப்பாதிரிப்புலியூரான பர நிருபதுராக்கிரமச் சதுர்வேதி மங்கலத்துத் தோன்ருத் துணை ஆளுடையார் கோயில்.

'வீரமே துணையாகவும்' என்று தொடங்கும் வீர ராசேந்திர சோழனது 5 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டினின்று திருப்பாதிரிப் புலியூர்க் கோயிலில் இருந்த சிவபிராஹ்மணன ஒருவன் பெயர் "தோன்ருத் துணை பட்டன்" என்பது அறிய வருகிறது. இதனுல் தோன்ருத்துணை என்பது மக்கட் பெயராயமைந்ததும் அறியலாயிற்று.

### 8. தேனுருங் கொன்றையான் :

மூன்ரும் இராசராச சோழனது பதினைருவதின் எதிராமாண்டுக் கல்வெட்டொன்று, திருவானைக்காவில் உள்ளது. இக்கல்வெட்டில கையெழுத்திட்டவருள் ஒருவர் தேனாரும் கொன்றையன் என்ற பெயருடையவர் ஆவர். இப்பெயர் திருநாவுக்கரசு திருவானைக்காவில் அருளிய திருத்தாண்டகத்தில் காணப்படுகிறது.

"ஊனுகி உயிராகி அதனுள் நின்ற
உணர்வாகிப் பிறவனைத்தும் நீயாய் நின்ருய்
நானேதும் அறியாமே என்னுள் வந்து
நல்லனவும் தீயனவும் காட்டா நின்ருய்
தேனுருங் கொன்றையனே நின்றியூராய்
திருவானைக் காவிலுறை சிவனே ஞானம்
ஆனுயுன் பொற்பாதம் அடையப் பெற்ருல்
அல்லகண்டம் கொண்டடியேன் என் செய்கேனே"

### 9. தருணேந்து சேகரன் :

"சங்கரன் காண் சக்கரம்மாற்கருள் செய்தோன் காண்
தருணேந்து சேகரன்காண் தலைவன் தான்காண்"

என்பது திருவாரூர்த் திருத்தாண்டகப் பகுதி. இளம் பிறை சூடிய இறைவனைத் தருணேந்து சேகரன் என அப்பர் கூறிய இத்தொடர் மக்கட் பெயராக அமைந்துள்ளது. திருக்கழுக்குன்றத்தில் உள்ள சடையவர்மன் எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியனின்

ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில், திருக்கழுக் குன்றமுடைய நாயனுர் கோயிற் பூசகர் "தருணேந்து சேகர் பட்டர்" என்று ஒருவர் குறிக்கப்பட்டுள்ளார்.

**10. என்னுனைக் கன்று :**

போசள மன்னன் வீரராமனது திருவானைக்கா சாசனத்தில் திருவானைக்காவுடைய நாயனுரைப் பூசிக்கும் திருவெள்ளறைக் காச்யபன் என்னுனைக் கன்று பட்டன் என்று ஒருவன் குறிக்கப் பெறுகிறுன். திருநாவுக்கரசர் திருவானைக்காவில் பாடிய திருத்தாண்டகத்தில் இறைவனை "என்னுனைக் கன்று" என்று குறிப்பிட்டார். இதுவே திருவெள்ளறைக் காச்யபனுக்குரிய பெயரா யிற்று. அத்திருத்தாண்டகம் பினவருமாறு.

*"முன்னுனைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை*
*மூவாத சிந்தையே மனமே வாக்கே*
*தன்னுனை யாபபண்ணி ஏறி னுனைச்*
*சார்தற் கரியானை தாதை தன்னை*
*என்னுனைக் கன்றினைஎன் ஈசன் தன்னை*
*எறிநீர்த் திரையுகளும் காவிரிசூழ்*
*தென்னுனைக் காவானை தேனைப் பாலைச்*
*செழுநீர்த் திரளைச் சென்றுடி னேனே*

**செம்பொற்சோதி :**

*"திருவையா றகலாத செம்பொற் சோதி"*
என்பது திருநாவுக்கரசர் தேவார அடி. முதலாம் இராச ராசன் தஞ்சைப் பெரியகோயிலில் நியமித்த நாற்பத் தெண்மர் பிடாரர்களில ஒருவர் பெயர் 'திருவெணுவல் செம்பொற்சோதியான தக்ஷிணமேரு விடங்கப் பிச்சனுன ஞானசிவன்" என்பதாகும். 'பூமாதுபுணர' என்ற விக்கிரம சோழரது திருநெயததானக் கல்வெட்டில் "செமபொற்சோதி உய்ய வந்தான" என்பது ஒருவர் பெயராகக் காணபபடுகிறது.

**11 காக்குநாயகன் :**

*"மூக்கு வாய் செவி கண்ணுடல் ஆகிவந்து*
*ஆக்கு மைவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்*
*நோக்கு வானமை நோய்வினை வாராமே*
*காக்கும் நாயகன் கச்சியே கம்பனே"*

என்பது திருநாவுக்கரசர் திருக் கச்சிஏகம்பத்தில் பாடிய திருக்குறுந்தொகையாகும்.

திருப்பாலைத்துறை ஆதிகேசுவரர் கோயிற்கருகில் ஒரு திருமடம இருந்தது. அதற்குப் பெயர் "காக்கு நாயகன திருமடம" எனபதாகும் என்று ஒரு கல்வெட்டு நுவலகிறது. இது திருக்கசசியேகமபத்துத் திருக்குறுந் தொகைச் சொற்றொடரின் அடிப்படையில அமைந்ததே ஆகும். தென் ஆர்க்காடு மாவட்டம் பெருமுக்கில என்ற ஊரில் முக்யாசலேசுவரர் கோயிலைக் கட்டியவன் கனராயன் என்ற சிறப்புப் பெயருடையவன். அவருக்குக் காக்குநாயகன் என்பது இயற்பெயர்.

மதுராந்தகம் தாலூகா பெண்ணகரத்தில் உள்ள வீர பாண்டியனின் நான்காம் ஆண்டுக் கல்வெட்டில்,

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டுப் பெருநகர் பிரமீசுவர முடைய நாயனுர் கோயிலில்

"இவ்வூர் இருப்பைப் பாக்கிழான் தாழிகாக்குநாயகன் ஏறி யருளப பண்ணின முதலியார் காக்கு நாயகர்க்கு காக்கு நாயகன் விசையன் செம்பிய தரையன் வைத்த திருவிளக்கு ஆறு"

என்று காணப்பெறுகிறது. இதில் மூவர் காக்குநாயகன் என்ற பெயருடையவராகக் காணப்படுகின்றனர். இம் மூவரும் உறவினராதலும் கூடும்.

**12. கருவுணுயகர் :**

'நெற்குன்றக் கிழார் களப்பாளராயர்' என்பவர் முதற் குலோததுங்கன காலததிலும், விக்கிரமசோழன காலததில் சில ஆண்டுகளும் வாழ்ந்தவர். திருப்புகலூரில் உள்ள முதற் குலோததுங்க சோழனது 49 வது ஆட்சியாண்டுக் குரிய கலவெட்டொனறு,

"ஸ்ரீ புகலூர்த் தேவர் மத்தியானனம் அமுதுசெய்து அருளுமபோது.... நிததம பனனிரண்டு பிராமணர் உண்ப தாக ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டததுப் பேரூர் நாட்டு நெற்குன்றதது நெற்குன்றக் கிழார் அரையன கருவுணுயகரான களப்பாளராஜர் செய்வித்த சாலைக்கு ... சாலைப் புறமாக இறையிலி செய்து" எனறுள்ளது. இப்பகுதியிலிருந்து இவர் நெற் குன்றம எனனும் ஊரினர்; வேளாண் மரபினா; அரையன் எனனும் சிறப்புப் பெயருடையவர். கருவுணுயகர் எனபது இவருடைய இயற்பெயர். திருநாவுக்கரசர் கச்சி ஏகமபத் திருக்குறுந் தொகையில இறைவனைக் "கருவு ணுயகன" எனக் குறிபபர்.

*"திருவின் நாயகன் செம்மலர் மேலயன்*
*வெருவ நீண்ட விளங்கொளிச் சோதியான்*
*ஒருவ ணுயுணர் வாயுணர் வல்லதோர்*
*கருவு ணுயகன் கச்சியே கம்பனே"*

**13. எடுத்த பொற்பாதம் :**

*"குனித்த புருவமும் கொவ்வைச்*
*செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம்போல்*
*மேனியில் பால் வெண்ணீறும்*

*இனித்த முடைய எடுத்த பொற்*
*பாதமும் காணப் பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே*
*இந்த மாநிலத்தே''*

இது திருநாவுக்கரசரின் திருவிருத்தம் என்பது யாவரும் அறிந்ததே. சிதம்பரத்தில் உள்ள பல்லவன் கோப் பெருஞ்சிங்கனுடைய முப்பத்தாறும் ஆண்டுக் கல் வெட்டில், ''இவை அருளால் ஊர்க் கணக்கு எடுத்த பொற்பாதப் பிரியன் எழுத்து'' என்றுள்ளது.

## 14. நாடற்கரியதோர் கூத்து :

*''ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்*
*பாடல் பயின்றபல் பூதம் பல்லாயிரம் கொள் கருவி*
*நாடற் கரியதொர் கூத்தும் நன்குயர்*
*வீரட்டஞ் சூழ்ந்து*
*ஓடும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்*
*அஞ்சுவ தியாதொன்றுமில்லை அஞ்சவருவது மில்லை''*

என்பது திருநாவுக்கரசரின் திருவதிகைக் காந்தாரப் பண் பாடலாகும். இதில் கண்ட நாடற்கரியதோர் கூத்தினை ஆடியவன் இறைவனே யாவன். அவ்விறைவனை நாடற் கரிய கூத்தன் எனலாம். இப்பெயர் மாறவர்மனுன திரி புவனச் சக்கரவர்த்திகள் விக்கிரம பாண்டிய தேவனின் ஆறும் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் வந்துள்ளது. திரு வதிகைத் திருக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் ''முதலியார் நாடற்கரிய கூத்தரும்'' நாயகரும் எழுந் தருளுங்கால் முற்பாடு திரை எடுத்தால் பதியிலார் ஆடவும் பிற்பாடு திரையெடுத்தால தேவரடியார் ஆடவும் கடவ தாதல் வேண்டும் என்பது கல்வெட்டுச் செய்தி.

## 15. திறக்கப்பாடுவார் :

திருநாவுக்கரசர் திருமறைக்காட்டில் தம்மைத் ''திறக்கப் பாடியவர்'' என்று குறித்துக் கொண்டார்.

திருவொற்றியூரில் ஒரு கல்வெட்டில் இத் தொடர் காணப்படுகிறது. ராஜநாராயணச் சம்புவராயர் தம் 7 ஆம் ஆட்சியாண்டில் சில நிலங்களையும் மனைகளையும் திருவொற்றியூர்க் கோயிலுக்குக் கொடுத்தார். படம் பக்க நாயக விளாகம் என்பது திறக்கப்பாடுவார் மனைக்குக் கிழக்கில் உள்ளது என்று அக்கல்லெழுத்துக் கூறுகிறது.

புதுக்கோட்டை - குளத்தூர் தாலுக்கா - தென்னங் குடி - தருமபுரீசுவரர் கோயிலில் உள்ள வீரசுந்தர பாண்டியதேவரது கல்வெட்டில் திருவாசல் திறந்தான் காலாலே திருவாசலிலே அளப்போமாகவும் என்றுள்ளது. திருவாசல் திறந்தான் என்பது இங்கு ஒரு மரக்காலுக்குப் பெயராகக் காணப்படுகிறது. இச்சொற்றொடரும் ''கலை கொள் வேதவனப் பதிதன்னிலே கதவு தானும் கடுகத் திறந்த'' அப்பரது அற்புதத்தைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

## 16. தவப்பெருந்தேவு செய்தார் :

*''குவப்பெருந் தடக்கை வேடன்*
*கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்*
*துவர்ப் பெருஞ் செருப்பால் நீக்கித்*
*தூயவாய்க் கலசம் ஆட்ட*
*உவப்பெருங் குருதி சோர*
*ஒரு கணை இடந்தங் கப்ப*
*தவப் பெருந்தேவு செய்தார்*
*சாய்க்காடு மேவினாரே''*

என்பது திருச்சாய்க்காட்டில் திருநாவுக்கரசர் பாடிய திரு நேரிசை. இதில் கண்ணப்பரை இறைவன் ஆண்டு கொண்டருளிய செய்தி கூறப்பட்டுள்ளது. இப்பாடலிற் கண்ட 'தவப் பெருந்தேவு செய்தார்' என்பது சகர யாண்டு 1342 க்குரிய திருக்காளத்திக் கல்வெட்டில ஒருவர் பெயராகக் காணப் பெறுகிறது. திருக்காளத்தித் திருமணிக் கெங்கையுடைய நாயனர் கோயிலில் திருமணிக்கங்கை சீயன் என்ற அதிகாரி அவ்வூரில் உள்ள சில நிலங்களின் உரிமைகளை மாற்றியமைக்கின்றார். அச் சாசனத்தில பலரும் கையொப்பமிடுகிறார்கள். அவர்களுள் ஒருவர் திருக்காளத்தியாண்டார் தவப்பெருந்தேவு செய்தார் எனபவராவார். இதே நாளில் இன்னொரு அறக்கட்டளை பிறப்பிக்கப் பெறுகின்றது. திருக்காளத்தித் திருமணிக் கெங்கையுடைய நாயனர் கோயிலின் வடக்குத் திருவீதித் தெற்கடையப் பாதியில் தவப்பெருந்தேவு செய்தார்க்குரிய நிலம் திருநாமத்துக் காணியாகக் கொடுக்கப்பெற்றது.

## 17. குளிச்செழுந்த நாயனர் :

திருநாவுக்கரசர் கயிலையில் எம்பெருமானைத் தரிசிக்கச் சென்றவர் அது கூடாமையின், ஆங்கொரு குளத்தில் மூழ்கி திருவையாற்றில் ஒரு குளத்தில் எழுந்தார், இதனைச் சேக்கிழார் சுவாமிகள பினவரும் பாடலில் கூறியுள்ளார்.

*''ஆதி தேவர்தம் திருவருட் பெருமையார்*
*அறியாதார்*
*போத மாதவர் பனிமலர்ப் பொய்கையில்*
*மூழ்கி*
*மாதொர் பாகனர் மகிழும் ஐயாற்றில்*
*ஓர் வாவி*
*மீது தோன்றி வந்தெழுந்தனர் உலகெலாம்*
*வியப்ப''*

திருப்புகலூரில் ஒரு கல்வெட்டில் குளிச்செழுந்த நாயனர் என்று காணப்பெறுகிறது, இது மேலே கூறியவாறு திருநாவுக்கரசரைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

**18. திருநாவுக்கரசு நாழி :**

மாறவர்மன் குலசேகர பாண்டியனின் 16 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் ' திருநாவுக்கரசு நாழி' என்னும் அளவையின் பெயர் குறிக்கப்பட்டுள்ளது.

**19. வட்டணை காட்ட வந்த நாயகர் :**

*'' பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம்*
*பசுஞ்சாந்தம் கொண்டணிந்து பாதம் நோவ*
*இட்டெடுத்து நடமாடி இங்கே வந்தார்க்*
*கெவ்வூரீர் எம்பெருமான் என்றேன் ஆவி*
*விட்டுடுமா றதுசெய்து விரைந்து நோக்கி*
*வேறோர் பதிபுகப் போவார் போல*
*வட்டணைகள் பலநடந்து மாயம் பேசி*
*வலம் புரமே புக்கங்கே மன்னினாரே ''*

என்பர் நாவுக்கரசர். வலம்புரத்தில் இரண்டாம் ராஜாதி ராஜன் காலத்தில் வட்டணைக் காட்ட வந்த நாயகர் என்னும் திருமேனி எழுந்தருளுவிக்கப் பெற்றுள்ளது.

**20. திருநாவுக்கரசர் திருவீதி :**

திருவதிகையில் பிடாரி கோயிலின் வட பக்கத்தில் காடு கெடுக்கப்பெற்றுப் புதிய தெரு ஒன்று உருவாக்கப் பெற்றது. இத் தெருவுக்குத் திருநாவுக்கரசர் திருவீதி எனப் பெயர் சூட்டப்பெற்றது.

**21. திருநாவுக்கரசு குகை :**

குகை என்பது முனிவர் இருப்பிடம். தேவார மூவர் பெயரால் தமிழ்நாடெங்கும் பல குகைகள் இருந்தமையைக் கல்லெழுத்துக்கள் கூறுகின்றன. திருக்குறுக்கையில் உள்ள மூன்றாம் குலோத்துங்கனுடைய 29ஆம் ஆட்சி யாண்டு (கி. பி. 1201) க்குரிய கல்வெட்டு திருநாவுக்கரசு குகை என்ற ஒரு குகையைப் பற்றிக் கூறுகிறது. இக்குகை கட்டுவதற்கும் இக்குகைக்கு வரும் அபூர்வி களுக்கும் திருவைகாசித் திருநாளுக்கும் வரும் மாகேசுவரர் களுக்கும் உணவு அளிக்கவும் நெல் தானம் செய்யப் பெற்றது. திருத்தாண்டகம் ஓதுவது குறித்தும் இக்கல்லெழுத்து அறிவிக்கிறது.

**22. திருநாவுக்கரசர் திருவிழா :**

வடவார்க்காடு மாவட்டம் தீர்த்த நகரி ( திருத்தினை நகர் ) யில் உள்ள மாறவர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரபாண்டியனுடைய ஒன்பதாவ தாட்சியாண்டுக்குரிய முடிவு பெறாத கல்வெட்டால் திருநாவுக்கரசருக்கு விழா எடுத்தமை உணரப் பெறுகிறது.

**3. சுந்தர மூர்த்திகள் :**

சுந்தரரைக் குறித்துக் கல்லெழுத்துக்களினின்றும் நம்மால் அறியப் பெறுவனவற்றைக் காண்போம்.

**1. ஆலால சுந்தரர் :**

ஆலால சுந்தரர் என்பது சுந்தரர் திருக்கயிலையில் இருந்த பொழுது கொண்ட திருப்பெயர் ஆகும். இது திருவொற்றியூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டொன்றில் ஒரு விளக்கத்துக்குப் பெயராயமைந்திருந்தது.

'' ராஜநாராயணச் சம்புவராயற்கு யாண்டு ஏழாவது .... சிவத் துரோகிகளை ஆராய்ந்து ... இவர்கள் மனையும் காணியுமாய்ச் சண்டேசுவரப் பெருவிலையாக விற்று அம்மனைகள் நீக்கிநின்ற மனைகளும் காணியுமாய்க் கல்வெட்டினவிடத்தில் .... நங்காம்புலமான ஆலால சுந்தர விளாகம் மூன்றில் ஒன்று .... ''

அன்றியும் சோணாடு கொண்டு முடிகொண்ட சோழ புரத்தில் வீராபிஷேகம் செய்தருளிய ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவரின் 17ஆம் ஆட்சியாண்டில் ( கி. பி. 1233ல் ) திருநெல்வேலியில் ஆலால சுந்தரர் திருமடம் என்று ஒருமடம் குறிக்கப் பெற்றுள்ளது.

முதற் குலோத்துங்க சோழனின் 49ஆவது ஆட்சி யாண்டுக்குரிய காளத்திக் கல்வெட்டில் ஆலால சுந்தரன் நந்தவனம் என்று ஒரு நந்தவனம் குறிப்பிடப் பெறுகிறது.

ஆச்சாளபுரத்திற்கு அருகில் ஆலால சுந்தர நல்லூர் என்று ஓரூர் இருந்தமை கல்வெட்டொன்றால் அறிய வருகிறது.

மூன்றாம் ராசராசனின் ஆறாவதின் எதிராமாண்டுக் கல்வெட்டு, '' பூண்டி என்னும் ஊரினராகிய புகலி வேந்தர் என்பார் தங்குவதற்கு ஆலால சுந்தரன் குகை '' எனும் குகை கட்டுவதற்கு நன்கொடை வசூலித் தமையும் குறிக்கிறது. ( புகலிவேந்தர், என்பது சம்பந்தர் பெயரை நினைவூட்டும், புகலி - சீகாழி ) எனவே ஆலால சுந்தரர் என்ற பெயர் போற்றப்பட்டமை தெளிவு.

**2. இசை ஞானியார் :**

இவர் சுந்தரரின் தாய். இவ்வம்மையாரின் பெயரை இரண்டாம் குலோத்துங்க சோழருடைய (1113 - 1150 ) திருவாரூர் வடமொழிக் கல்வெட்டினில் அறியலாம். '' ஆளுடைய நம்பி என்று குறிக்கப் பெறுதலும், அவர் தாயார் இசை ஞானியார் என்பதும், அவ்வம்மையார் ஞானசிவாசாரியார் என்பவருடைய மகள் என்பதும், அக்கல்வெட்டினின்றும் சைவ கௌதம கோத்திரத்தில் அவ்வம்மையார் பிறந்தார் என்பதும் '' அறிதற் பாலனவாம்.

**3. நம்பியாரூரர் :**

ஆளுடைய நம்பி என்றமைபோல, நம்பி ஆரூரர் என்றும் சுந்தரர் குறிக்கப்பெறுகிறார். இதனை வீர

பாண்டிய தேவரது திருநெல்வேலிக் கல்லெழுத்தினின்றும், இராசராசனது தஞ்சை இராசராசேச்வரத்து கல்லெழுத்துக்களினின்றும், அறிகிறோம். முதலாம் இராசேந்திரன் 20ஆம் ஆட்சியாண்டுக்கு உரிய திருமழபாடிக் கல்வெட்டு நம்பியாரூரனார் படிமத்தைத் திருப்பள்ளித் தாமப்பிச்சன் எழுந்தருளுவித்து நிலமளித்தாகக் கூறுகிறது.

முதல் ராசராசனின் பத்தாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்துக் கூர்க் கோயிலில் சித்திரைத் திருவிழா நடத்த நிபந்தம் அளித்ததை அறிவிக்கிறது. இராசராசன் திருப்பதியம் ஓத நியமித்த 48 பிடாரர்களில் இருவர்க்கு ஆரூரர் என்ற பெயரும் மேலும் இருவர்க்கு நம்பியாரூரர் என்ற பெயரும் அமைந்திருந்தமை அறிகிறோம்.

## 4. தடுத்தாட்கொண்டருளிய நாயனார் :

சுந்தரர்க்குத் திருமணம் நிகழவிருக்கையில், சிவபெருமான் கயிலையில் அருளிய வண்ணம் தடுத்தாட்கொள்வான் வேண்டிக் கிழவனாராக வந்து சுந்தரரை நோக்கித் தமக்கு அடிமை செய்யவேண்டும் எனறார். இருவருக்கும வாது நிகழ்ந்தது. திருவெண்ணெய் நல்லூரில் இவ்வழக்கு விசாரிக்கபபெற்றது. கிழவனரே வென்று பணிசெய்ய வேண்டும என்றார்.

இங்ஙனம் சிவபெருமான் தடுத்தாட் கொண்டமையின, 'தடுத்தாட் கொண்டருளிய நாயனார்' என்றும், வழக்கில வென்றமையின 'விரைந்து வெல்லும் பெருமாள்' என்றும் வழஙகப்பெற்றார். இவ்வழககு அரிய வழக்கு என்பதை நாமறிவோம. இவ்வரிய வழக்கினை வென்றமையின் சிவபெருமான அரியவான வழககு வென்ற பெருமான் எனப் பெறுதல் பொருந்தும். இதனை நினைவுகூரும் வகையில் திருவெண்ணெய் நல்லூருக்கு அருகில ஓரூர், 'அரியவான் வழக்கு வென்ற பெருமாள நல்லூர்' எனப் பெற்றது. மேற் கூறியன யாவும இராசராசச் சமபுவராயனது கலலெழுததுஒன்றால் அறியலாம. மூன்றாம் குலோத்துங்கனது மூன்றாம் ஆண்டுக் கலவெட்டும், ஏழாம் ஆண்டுக கல்வெட்டும் இறைவனை 'ஆட்கொண்ட தேவர்' என்று சிறப்பிக்கின்றன.

இரண்டாம் குலோத்துங்கனுடைய திருவெண்ணெய் நல்லூர்க் கல்வெட்டொன்றால், தடுத்தாட் கொண்ட நலலூர் என்னும ஊர்ப்பெயரும், ஆலால சுந்தரப் பெருந் தெரு என்னும தெருவின் பெயரும் அறிய வருகிறது.

விசயநகர வேந்தர்கால அண்ணல் வாயில் கல்வெட்டில தடுத்தாட்கொண்ட நயினார் சிற்றம்பலவர் எனபவரும், பினனங்குடிக் கல்வெட்டொன்றில நமபி கருணாகரனை தடுத்தாட் கொண்டான் என்பவரும் குறிக்கப்பெற்றுள்ளனர். இவை சுந்தரர் வரலாற்றை நினைவிப்பனவாம்.

## 5. வழக்கு வென்ற திருவம்பலம் :

வெண்ணெய்நல்லூரில் விளங்கு பேரவையில் இறைவன் பொருவரும் வழக்கில் வென்றார்.

திருவெண்ணெய் நல்லூரில் "வழக்கு வென்ற திருவம்பலம்" என்னும் மண்டபம் இருந்ததனைக் குலோத்துங்க சோழனின் இருபத்தொன்பதாவது ஆட்சி யாண்டுக்குரிய திருவெண்ணெய்நல்லூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது.

## 6. வழியடிமை கொண்டான் :

இறைவன் வெண்ணெய்நல்லூர்ச் சபையில், "அருமறை நாவல் ஆதி சைவன் ஆரூரன் செய்கை பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக்கியானுமென் பால் வருமுறை மரபுளோரும வழித்தொண்டு செய்தற் கோலை இருமையால எழுதி நேர்ந்தேன். இதற்கிவை என்னெழுத்து" எனும் மூல ஓலை காட்டி வழக்குவென்று ஆட்கொண்டார். இறைவன வழிவழி யடிமையாகக் கொண்டதனால "வழியடிமை கொண்டான" என்னும் திருநாமம பெற்றார். கோப்பெருஞ் சிங்கனுடைய 19 ஆம் ஆண்டுக்குரிய தில்லைக் கல்வெட்டு ஒன்று, "ஆளுடைய நாயனார்க்கு வழியடிமை கொண்டான் எனனும் பெயரால் விக்கிரம சிங்கபுரத்தில் திருந்தோப்பு" செய்வித்தமையைக் குறிககிறது.

## 7. பழ ஆவணச் சொக்கன் :

"வெண்ணெய்நல்லூரில் அற்புதப் பழ ஆவணம் காட்டி இறைவன தனனை ஆட்கொண்டான்" என்பர் சுந்தரர்.

*"கற்ப கத்தினைக் கனகமால் வரையைக்*
*காம கோபனைக் கண்ணுத லானைச்*
*சொற்ப தப்பொருள் இருள் அறுத் தருளும்*
*தூய சோதியை வெண்ணெய் நல்லூரில்*
*அற்பு தப்பழ அவணம் காட்டி*
*அடிய னைஎன்னை ஆளது கொண்ட*
*நற்பதத்தைநள் ளாறனை அமுதை*
*நாயி னேன்மறந் தென்நினைக் கேனே"*

என்பது திருநள்ளாற்றுத் திருப்பதிகப் பாடல்,

திருவெண்ணெய் நல்லூரில உள்ள கோப்பெருஞ் சிங்கனின் 26 ஆம் ஆட்சியாண்டுக் கலவெட்டு ஒன்றில் சிறுபுத்தூருடையான பெருமாள் 'பழவாவணச் சொக்கன' என்பவன வெள்ளித் தனிக் காளங்கள் தந்தவை கூறப்படுகின்றது. பழவாவணச் சொக்கன் என்ற தொடர் மூலவோலை மாட்சியிற் காட்டிய இறைவனையே குறிப்பது.

**8. பிச்சன் என்று பாடச் சொன்னான் :**

சொற்றமிழ் பாடுக என்றார் தூமறை பாடும் வாயார்; யாதினை அறிந்து என் சொல்லிப் பாடுகேன என்றார் சுந்தரர்; முன்பெனைப் பித்தன் என்றமையின் பித்தன் என்றே பாடுக என்றார் பெருமான். இதனை நினைப்பிக்கிறது ஒரு கல்லெழுத்து; உதயன் ஸ்ரீ கயிலாய முடையான என்ற ஒருவர் "பிச்சன்" என்று பாடச் சொன்னான் என்று பெயரிட்ட காளங்களை வழங்கியதாகக் கோப்பெருஞ்சிங்கனது இருபத்தேழாம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்து நுவல்கிறது.

**9. வன்றொண்டர் :**

சுந்தரர் வன்மைகள் பேசிய பின் வன்றொண்டர் எனப் பெற்றார். இவ்வன்றொண்டப் பெயர் பூண்டவர் திருநெல்வேலி மாவட்டத்துக் கீழை மடஸ்தானத்து இருந்தனர் என்று கோநேரின்மை கொண்டானது கல்லெழுத்தினின்றும ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர் கலலெழுததினின்றும அறிகிறோம.

**10. தம்பிரான் தோழர் :**

திருவாரூரில் உள்ள வடமொழிக் கல்வெட்டில் சுந்தரர் ஸ்வஸ்வாமி மித்ர எனக் குறிக்கப்பெறுவர். தம்பிரான் தோழர் என்ற தமிழ்ச் சொல்லின் நேர் வடமொழி ஆக்கப் பெயரே இது; ஜடாவர்மன சுந்தர பாண்டியன் காலத் திருக்கச்சினம (கச்சனம்) 'சிறு கீழூரான முடிமான தமபிரான தோழச் சதுர்வேதி மங்கலம்' என்று ஊரின பெயரைக் கூறும.

**11. நங்கை பரவையார் :**

சுந்தரர் நங்கை பரவையாரைத் திருவாரூரில் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டவர். நங்கை பரவையாரத திருவுருவமும் நமபியாரூரது திருவுருவமும் தஞ்சை இராஜராசேச்வரததில் எழுந்தருளுவிககப் பெற்றன என்று ஒரு கலலெழுத்துக் கூறுகிறது. நஙகை பரவையார்க்குத் திருவையாற்றுக் கோயிலில விளக்கு எரிக்க நிலம விடப்பெற்றிருந்த செய்தியை "நங்கை பரவையார் திருவிளககுச் செய்" என்ற கல்லெழுததுப் பகுதி அறிவிககிறது. இரண்டாம குலோத்துஙகனுடைய 7 ஆம் ஆட்சியாணடுக்குரிய திருவாரூர்க் கலவெட்டு திருவாரூர் கோயிலில எழுந்தருளுவிக்கப் பெற்ற ஆளுடைய நமபி பரவை நாச்சியார் படிவங்களுககு அநபாயநல்லூர் என்ற ஊர் அளிககப்பெற்றதாகக் கூறுகிறது.

முதல் இராசேந்திர சோழன, இராசாதிராசன் காலக் கல்வெட்டுக்கள சிலவற்றில "அணுககியார் பரவை நங்கையார்" எனபவள குறிக்கப்பெறுகிறாள். பரவை நாச்சியாரின் பெயரைப் பூண்ட இவள் திருவாரூர் திருக்கோயிலில் பல திருப்பணிகள் ஆற்றினாள்.

முதல் ஆதித்த சோழன் காலத்தது எனக் கருதப்பெறும் வேதாரண்யக் கல்வெட்டொன்று "திருவாரூர் நங்கை பரவை" என்பவள் குறிக்கப் பெறுகிறாள்.

முதல் இராசராசன் சோழமண்டலத்தின் பல தளிச் சேரிகளினின்றும் கொண்டு வந்து தஞ்சைத் தளிச்சேரியில் பெண்டிரைக் குடியேற்றினான். திருவாரூரில் இருந்து தஞ்சைத் தளிச்சேரிக்கு மாற்றப்பெற்ற நாற்பத்து நாலவருள் பரவையின் பெயரைத் தாங்கியவள் ஒருத்தி யாவாள்.

**12. திருத்தொண்டத்தொகை :**

"ஈசனடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழவெடுத்துத் தேசமுயயத் திருத்தொண்டத் தொகை" பாடினார். இப்பதிகம் பெரிய புராணத்துக்குப் பதிகமாக விளஙகியது இது மக்கள் மனத்தைப் பெரிதும் கவர்ந்தது என்று கல்லெழுத்துக்களின்று அறிகிறோம்.

திருத்தொண்டத் தொகை நினைவாக திருவிடை வாயிலில, "திருத்தொண்டத் தொகையான் குகை" என்று ஒரு குகை இருந்தது என மூன்றாம இராசேந்திர சோழனுடைய நான்காம ஆட்சியாணடுக் (கி. பி 1250) குரிய கல்லெழுத்து கூறுகிறது. இக்குகையுள் திருமுறைகள் வைக்கப்பெற்றிருந்தன.

திருச்சி மாவட்டம் கோவந்தபுத்தூரில் உள்ள மூன்றாம் இராசேந்திரனது 2 ஆம ஆட்சியாண்டுக் கல்வெட்டு கோவந்தபுத்தூரில் திருவிசையமங்கை என்ற திருக்கோயிலின் திருமடைவிளாகத்தில், "திருத் தொண்டத தொகையான் திருமடம்" இருந்தது என்று கூறுகிறது. இக்கல்வெட்டில் சிதமபரத்திலும திருத் தொண்டத் தொகையான் திருமடம் இருந்தமை கூறபபெற்றுள்ளது. குலசேகரபாண்டியனது 13 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றிலிருந்து திருத் தொண்டத் தொகையான் திருமடம் ஒன்று திருப் புத்தூரில இருநததாகத்தெரிகிறது.

சிதமபரம் நடராசப் பெருமான் திருக்கோயிலின் வடக்குக் கோபுரத்தை அடுத்துத திருத்தொண்டத் தொகை ஈச்வரம் என ஒரு திருககோயிலில தொகை அடியார்கள் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபடப் பெற்றனர் என அறிகிறோம். இவ்வாலயம நவலிங்கம் கோயில என இந்நாளிலழைக்குகிறது. இக்கோயிலில் சுந்தரமூர்த்திசுவரமிகளின திருவுருவமும் அமைக்கப் பெற்றிருந்தது எனக் கல்வெட்டுககள புகல்கின்றன. மூன்றாம குலோத்துங்க சோழனது இரண்டாம் ஆட்சி யாண்டுக்குரிய கல்வெட்டு இத்திருக்கோயிலைக் குறிக்கிறது.

சிதம்பரத்தில் உள்ள இராசேந்திர சோழனது 24ஆம் ஆட்சியாண்டுக் கல்லெழுத்தொன்று தில்லையில், "திருமாசித் திருநாளில் திருத்தொண்டத் தொகை விண்ணப்பஞ் செய்வார்க்குக் காசு ஐஞ்சு" நிவந்தம் அளித்ததாகப் பகர்கிறது.

### 13. பொன்னார் மேனியன் :

சுந்தரர் திருமழபாடியில் பாடியருளிய திருப்பதிகம், "பொன்னார் மேனியன்" என்னும் தொடக்க முடையது. பொன்னார் மேனியன் என்னும் தொடர் 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு சேனாபதியின் மனத்தைக் கவர்ந்தது. அவர் "சேனாபதி அரையன் கடக்கங் கொண்ட சோழன் அணிமுரி நாடாழ்வான்" எனப் பெற்றார். அவர் திருமழபாடி கோயிலில செம்பு தராவால் பொன்னார் மேனியன என்னும திருமேனியை எழுந்தருள்வித்து, அதற்கு நாள் வழிபாட்டிற்கு நிபந்தம் அளித்ததோடு சில அணிகலன்களை அளித்ததாக இரண்டாம் இராசேந்திரனுடைய கல்லெழுத்து உரைக்கிறது. இனி இத்தொடர் 'பொன்னார் மேனி பட்டர்' என்று ஒரு பட்டர் பெயரில் அமைந்ததாகச் சுந்தர பாண்டியனது கல்லெழுத்து உரைக்கிறது. அன்றியும் மூன்றாம் குலோத்துங்கனது 34 ஆம ஆட்சி யாண்டுக் கல்வெட்டினின்று ஊரின் உட்பகுதி யொன்று "பொன்னார் மேனி விளாகம்" என்று பெயரிடப் பெற்றிருந்ததாக அறிகிறோம்.

### 14. கிழி பெற்றது :

சுந்தரர் திருப்பாச்சிலாச்சிராமத்தில் பொற்கிழி பெற்றார். மூன்றாம் இராசராசனது இருபத்தேழாம் ஆட்சி யாண்டுக் கல்லெழுத்தில் 'கிழி கொடுத் தருளிய திருவாசல்' என்று ஒரு வாசல் குறிக்கப் பெறுகிறது.

### 15. உளோம் போகீர் :

சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து, பின்னர்த் திருவாரூர்க்கு வரப் புறப்பட்டார். சூள் பொய்த்தமையின இரு கண்களையும் இழந்தார். கண்ணிழந்து செல்பவர் திருவெண்பாக்கத்துக்கு வந்தார். சிவபெருமானை நோக்கி கண் வேண்டித் 'திருக்கோயிலில் உளரீரோ' என்று பாடினார். இறைவன் "உளோம் போகீர்" என்று கூறினார். இதனை நினைவு கூரும் வகையில் திருவெண்பாக்கம் என்னும் திருத்தலத்திற்கு அண்மையில் "திருவுளம்பூதூர்புரம்" என்ற ஓரூர் "உளோம் போகீர் புரம" என்று அழைக்கப் பெற்றது எனச் சொல்லப்படுகிறது.

### 16. நொந்தா ஒண் சுடர் விளாகம் :

*"நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்*
*வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற*
*சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளி உறையும்*
*எந்தாய் உன்னையல்லால் இனி ஏத்த*
*மாட்டேனே"*

என்பது திருக்கச்சி மேற்றளித் திருப்பதிக முதற் பாடலாகும். சுந்தரர் திருவாய் மலர்ந்தருளிய இத்திருப் பதிக முதற்குறிப்புச்சொற்றொடர் ஒரு விளாகத்துற்குப் பெயராய் அமைந்திருந்தது. இராச நாராயண மல்லிநாத சம்புவராயனின் கச்சித் திருமேற்றளிக் கல்வெட்டில், "நொந்தா வொண் சுடர் விளாகம்" என்பது குறிக்கப்படுகிறது.

### 17. சேரமான் பெருமாள் :

சேரமான் பெருமாளையனார் சுந்தரருடைய உற்ற நண்பர். ஆகவே சுந்தரரைச் சேரமான் தோழர் எனல் பொருந்தும். ஸ்ரீ வீரபாண்டிய தேவரது மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டில் கையொப்பம் இட்டவர் ஒருவர். "சேரமான் தோழர்" என்று இப் பெயரைப் பூண்டிருந்தார். ராஜ நாராயணச் சம்புவராயரது காஞ்சி புரத்துக் கல்வெட்டு உடையார் ஏகாம்பர நாதர்க்குரிய திருத்தோப்புக்களில ஒன்று, "சேரமான் பெருமாள் திருத்தோப்பு" என்ற பெயரால் அமைந்திருந்ததென அறிவிக்கிறது.

### 18. அவிநாசியில் :

சுந்தரர் அவிநாசியில் நிகழ்த்திய அற்புதம் முதலை யுண்ட பாலகனை அழைத்ததாகும். வீரபாண்டிய தேவரது. அவிநாசியில் உள்ள பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தென் பள்ளியிலிருந்த சுந்தர நாயனார்க்கு அமுது அளிப்பதற்காகப் பாப்பாரப் பூண்டியாகிய வீர ராசேந்திர நல்லூர் அளிக்கப் பெற்றதெனப் பகிர் கின்றது. இக்கல்வெட்டில் கையொப்ப மிட்டவருள் ஒருவர் "தம்பிரான் தோழர்" என்ற பெயருடையவர் என்று அறிகிறோம். தம்பிரான் தோழர் என்பது சுந்தரருடைய பெயர்களில் ஒன்று. "தம்பிரான் தோழர் மானக்கஞ்சாரர்" என்று ஒருவரைக் குறித்துத் திருமுட்டம் கோயிலில் உள்ள அவரது படிமத்தின கீழ் உள்ள கல்லெழுத்தினின் றறியப் பெறுகிறது. இங்ஙனம் தம்பிரான் தோழர் என்று சுந்தரர் திருப்பெயர் மக்கட் பெயராயமைந்து போற்றப் பெற்றமை அறிந்து இன்புறத் தக்கது.

இனி, சுந்தர பாண்டிய தேவரது இருபத்தொன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று திருப்புக்கொளியூர் குளக்கரையில் சுந்தரர் திருமேனி அரசனால் எழுந்தருளு விக்கப்பெற்றது என்றும் அதற்குப் பாண்டி மண்டலத்து

வியாபாரி அலுகிய பாண்டிய தேவர் நிபந்தமாக 220 வராகன் புள்ளிக்குளிகை அளித்தார் என்றும் கூறுகிறது. குளக்கரையில் சுந்தரர் திருமேனியை எழுந்தருளச் செய்தமை முதலையுண்ட பாலகனை அழைத்த அற்புதத்தை நினைவு கூர்தல் பொருட்டேயாம் எனபது ஊகித் தறிதற்பாலது.

## 19. திருவடிப் போது நாறிய திருவீதி :

சிவபெருமான் சுந்தரர்க்காகப் பரவை நாச்சி யாரிடத்து ஒருமுறைக் கிருமுறை யாகத் தூது சென்ருர்.

*'படர்ந்த பேரொளிப் மன்மணி வீதிபார்*
*இடந்த ஏனமும் அன்னமும் தேடுவார்*
*தொடர்ந்து கொண்டவன் தொண்டர்க்குத் தூதுபோய்*
*நடந்த செந் தாம்ரையடி நாறுமால்'*

எனத் திருநகரச் சிறப்பில் சேக்கிழார்பாடுவார். திருவாரூரில், திருவடிப் போது நாறிய திருவீதி, என ஒரு திருவீதியின் பெயர் கல்வெட்டிற் காணப்பெறுவது இவ்வரலாறு காட்டுவது ஆகும்.

## 20. ஆளுடைய நம்பி ஸ்ரீபுராணம் :

இரண்டாம் இராசாதிராசன் தன் ஒன்பதாம் ஆட்சி யாண்டில் திருவொற்றியூர் கோயிற்குச் சென்றிருந்தான். அப்பொழுது திருவொற்றியூர் இறைவற்குப் பங்குனி யுத்திரப் பெருவிழா நடந்து கொண்டிருந்தது. அத்திரு விழாவின் ஆரும் திருநாளான புதன் கிழமையும் ஏகாதசியும் பெற்ற ஆயிலிய நாளில் படம் பக்க நாயக தேவர் திருமகிழின் கீழ் எழுந்தருள்விக்கப் பெற்ருர். இராசாதிராச தேவனும் அப்பொழுது அக்காட்சியைக் காணச் சென்றனன். அங்கு அரசனேடு மடமுடைய சதுரனன பண்டிதன், மாகேசுவரக்கண்காணி திருவீதி வேயிடம் கொண்டான் ஸ்ரீ காரியம் அரிய பிரான்பட்டான் சோம சித்தாந்த வக்காணிக்கும் வாகீசுவர பண்டிதன் காலும் பிடாரும் செயங்கொண்ட சோழ மண்டலப் பிடாரன். திருவொற்றியூர்ப பிச்சன், கோயில் நாயகம் படம்பக்க நாயகப்பட்டன், கோயில் கணக்குத் திருவொற்றியூருடையான் உறவாக்கினன் ஆகியோர் வந்திருந்தனர். இறைவன் திருமுன் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் படிக்கப் பெற்றது. எல்லாரும் புராணத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர் அபபொழுது அரசன் அமுதங் கிழவன் பெரியான் சோழன்" என்பவனுக்கு வடுகப் பெரும்பாக்கத்துக் காணியுரிமையை அளிக்குமாறு உத்தரவிட்டான் எனக் கி. பி. 1172 –73க்குரிய திருவொற்றியூர்க் கல்வெட்டொன்று கூறுகிறது.

சோம சித்தாந்தம் வக்காணிக்கும் வாக்ச பண்டிதரே ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணத்தை விரிவுரை செய்தார் என்று கருதுபவரும் உண்டு. அது பொருந்தாது. இவரும் பிறருடன் இருந்து ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணத்தைக் கேட்டார் எனக் கலவெட்டுத் தெளிவாக கூறுகிறது.

ஆளுடைய நம்பி என்பது சுந்தரரைக் குறிக்கும். சுந்தரர் வரலாற்றைக் கூறும் புராணம் ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் எனப் பெற்றது போலும். சேக்கிழார் பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணம், கழறிற்றறிவார் புராணம், ஏயர்கோன் கலிக்காமர் புராணம்,வெள்ளானைச் சருக்கம் என்ற நான்கு பகுதிகளில் சுந்தரர் வரலாற்றை மிக விரிவாகப்பாடியுள்ளார். ஆகவே பெரிய புராணத்தில் கண்ட இப்பகுதிகளையே ஆளுடைய நம்பி ஸ்ரீ புராணம் என்றனர், கேட்கவும் விளக்கவும் தக்கதாக இருப்பதனுலும், முன் வேறு நூல்கள் இல்லாமையாலும் பெரிய புராணத்துள் அடங்கிய சுந்தரர் புராணமே இந்த ஸ்ரீ புராணமாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகிறது.

## 21. மகிழடி சேவை :

சுந்தரர் புவியுள் சிவலோகம்போலத் திகழும் திரு வொற்றியூரை அடைந்தார். திருக்கயிலையிலிருந்து அனிந்திதையார் ஞாயிறு என்ற ஊரில ஞாயிறு கிழாரின் திருமகளாக அவதரித்திருந்தார். சங்கிலியார் என்று திருநாமம்பெற்ருர்.

சங்கிலியாருக்குத் திருமணப்பருவம் வந்தது. யாரையும் மணக்கவிரும்பாமல் கன்னிமாடத்தில் தங்கித் திருவொற்றியூர்ப் பெருமாற்குத் திருத்தொண்டு புரிந்திருந்தார். திருவொற்றியூரை அடைந்த சுந்தரர் பூமண்டபத்தின் உளளே சங்கிலியாரைக் கண்டு அவரைக் குறித்து வினவினர். செய்தியறிந்து சங்கிலி யாரைத் தந்தருளுமாறு இறைவனை வேண்டினர். இறைவனும் "சங்கிலியை உனக்குக் கொடுக்கின்ருேம். கவலை ஒழி" என்றருளினர்.

பின்னர் சிவபெருமான் சங்கிலியார் கனவில் தோன்றி, "நம்பியாரூரன் உன்னை மணஞ் செய்ய விரும்பி என்னை வேண்டினன்" என்றருளி, "உன்னைப் பிரியாதவாறு சபதம செய்து கொடுப்பான்" என்றும் கூறினர்.

பின்னர்ச் சுந்தரரிடம் எழுந்தருளிச் சங்கிலியிடம் "உன்னைப் பிரியேன் என்று சபதம் செய்து கொடுத்தல் வேண்டும்" என்ருர். சுந்தரர், பெருமானை நோக்கி "இறைவனே சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு வருமபோது தாங்கள் திருமகிழின் கீழ் எழுந்தருள வேண்டும்" என்று வேண்டினர். சிவபெருமான் இசைந் தருளினர். சங்கிலியாரிடம் சென்ருர்.

"சங்கிலியே! மகிழின் கீழ்ச்சபதம் செய்து கொடுத்தால் போதுமானது. சந்நிதியில் வேண்டாம் என்று கூறுவாயாக" எனக் கூறி மறைந்தருளினர்.

மறுநாள் சுந்தரர் சபதம் செய்து கொடுக்கச் சந்நிதிக்கு வந்தார். சங்கிலியார் இறைவன் திருமுன் சபதம் செய்தல் தகாது, மகிழின் கீழ்ச் சபதம் செய்தால் போதும் என்ருர். சபதம் செய்து கொடுத்தார். மறுநாள் திருமணம் நிகழ்ந்தது.

இச்சுந்தரர் வரலாற்றை நினைவுகூர்ந்து திரு வொற்றியூர்ப் பெருமானைத் திருமகிழ்க் கீழ் எழுந்தருள் வித்து விழாக்கொண்டாடுவது மகிழடி சேவை எனப் பெறும். இது ஒற்றியூரில் மட்டுமே கொண்டாடப் படுவது. இத்திருவிழா, "பங்குனி உத்திரப் பெரு விழாவில் ஆரும திருநாளில் ஆயிலிய நட்சத்திரம் கூடிய நாளில் நடைபெற்றது', எனறு இக்கல்லெழுத்திலிருந்து அறியப்பெறுகிறது. தற்போது மாசி மகத்தைத் தீர்த்தவாரி யாகக் கொண்ட பிரமோற்சவத்தில ஒன்பதாம் நாளில் ஆயிலிய நட்சத்திரத்தில் இவ்விழா நடைபெறுகிறது.

## 22. தாராசுரத்துச் சிற்பங்கள் :

கும்பகோணத்துக்கு அண்மையில உள்ள தாராசுரத்துக் கோயில் இரண்டாம் இராசராசனுல் கட்டப் பெற்றது. இக் கோயில் இறையகத்துச் சுற்றியுள்ள பகுதியில் நாயன்மார் சரிதங்களை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. அச்சிற்பங்களின மேல் அவ்வச் சிற்பத்தை விளக்கும் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. சுந்தரருடைய வரலாற்றைக் குறிக்கும் சொற்றொடர்கள் பினவருமாறு.

1. உடையநம்பி எழுந்தருளுகிருர்.
2. ஆவணவோலை காட்டினபடி
3. உடைய நமபிக்கு ஓலை வென்றருளினபடி
4. ஏயர்கோன் கலிக்காமாண்டார்
5. உடைய நம்பி வேடர் வழிபறித்தபடி
6. திருமுருகன் பூண்டியில் பெற்றபடி
7. அவிஞசியாண்டார் முதலைவாய்பபிள்ளை
8. சேரமான பெருமாள கதை.

## 23. தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஓவியங்கள் :

தஞ்சைப் பெருவுடையார் சோயிலில் கருவறையை ஒட்டிய திருச்சுற்றின உட்புறத்தின பல வண்ண ஓவியங்களும் நாட்டிய கரணச்சிற்பங்களும் உள்ளன. இவை இராசராச சோழன காலத்தவை. இவற்றுள் சுந்தரர் வரலாற்றோவியத்தை மேற்குப் புறத்தில் காணலாம். இவ்வோவியங்களை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.

### தடுத்தாட் கொள்ளல் :

முதல் ஓவியம் சுந்தரர் தடுத்தாட் கொள்ளப்பெற்ற காட்சி.

கிழவேதியர் கோலத்தில் சிவபெருமான் அமர்ந்த நிலை; ஒரு கையில் ஆவணவோலை; மறுகையை உயர்த்திச் சபையவரை நோக்கி வழக்குரைத்தல். எதிரில் சுந்தரர் நிற்கிருர்.

அடுத்து கிழவேதியர், கையிலே ஆவண ஓலையுடன் எழுந்து நிற்க, 'அந்த ஓலையுள் உள்ளதென்ன' என்பதனை அறியும் பேராவலுடன் அருகில் நிற்கிருர் சுந்தரர், நெஞ்சத்து உணர்வுகளைப் பிரதிபலிக்கும் முகம் உடையவராகச் சான்ருேர் காணப்படுகின்றனர்.

வழக்கில் வென்றபின் அனைவரும் கோயிலுள் நுழைவதாக ஓவியத்தொடரின் இறுதிப் பகுதி அமைகிறது.

இவ்வோவியத்தின் கீழ்ப்புறம் மகளிர் சிலர் உணவு சமைப்பவராகக் காணபெறுகின்றது அது சுந்தரின் திருமண ஏற்பாட்டினைக் காட்டுவது ஆகலாம்.

### ஓலையில் எழுத்து :

ஓவியத்தில் காணும் ஆவண ஓலையில், "இபபடி நானறிவேன்" என்னும் எழுத்துக்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன என்று ஆய்வாளர் அரிதிற் கண்டு கூறுவர். இப்பகுதி ஓலையின முடிவுப் பகுதியாதல் வேண்டும்.

"இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என்னெழுத்து" என ஓலையமைந்ததாகச் சேககிழார் கூறுவர்.

### கயிலை செல்லுதல் :

தடுத்தாட்கொண்ட காட்சி ஓவியத்தின் மேல், "சுந்தரரும் சேரமான் பெருமாளும் கயிலை செல்லும் காட்சி ஓவியமாக உள்ளது. நடுநாயகமாக வெள்ளானையின் மீது சுந்தரர் செல்கிருர். வலப்புறம் சேரமான் பெருமாள் வெண்குதிரையின மீது ஏறி முகில மண்டலத்தில பறக்கிருர் சேரமான் பெருமாள் குடுமியும், மீசையும தாடியும் உடையவராகவும். நெருக்கமான கழுத்தணியும் ஓர் உருத்திராகக மாலையும், உடையவராகவும், அரையில் மட்டுமே ஆடை உடையவராகவும் காட்சி தருகிருர். வெண் புரவியின சேணம கடிவாளம முதலியன மிக அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஓவியத்தின் வலப் புறம காந்தருவர் இசைக்கருவிகளால் இன்னிசை ஒலிக்க தேவமாதர் நாட்டியமாடுகின்றனர். இடப்புறம் பல முனிவர் உள்ளனர்.

இவ் வோவியத்துக்கு மேலே உள்ளது கயிலைக் காட்சி. சிவபெருமான் புலித்தோலின் மேல் யோகாசன நிலையில் அமர்ந்திருக்கிருர். நந்தி இவர்க்கு முன்னுள்ளது. பல முனிவர்கள, தேவ மகளிர் உருவங்கள் எதிரே உள்ளன. சிவபெருமான் உருவம் செந்நிறத்திலும் முனிவர் உருவங்கள் நீல நிறத்திலும் உள்ளன.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கப்பெருமான்
திருக்கோயிலும் காருணியாமிருதத் திருக்குளமும்

# 3. திருக்கோயில்களைப் பேணிய தமிழ் மன்னர்களின் பண்பாட்டுத் திறன் :

**1. திருக்கோயில்கள் பொது நிலை :**

கோயில் என்பது மக்கள் வழிபடும் கடவுளின் இல்லம். பண்டைக்காலம் தொட்டு பல சமயத்தாரின் கோயில்கள் இருந்ததாகச் சங்க நூல்களிலிருந்து அறிகிறோம். கிராம தேவதைகள், முருகன் சிவன், விஷ்ணு, இந்திரன், ராமன், துர்க்கை முதலிய இந்துமதத் தெய்வங்களின் கோயில்கள் பலவற்றைத் தமிழ் மக்கள் நிறுவி வழிபட்டு வந்தார்கள். தலவிருட்சங்களின் அடியில் பல கோயில்கள் விளங்கின. தில்லை – (சிதம்பரம்). மா (ஏகாம்பரர்). ஆல் – (ஆலங்காடு, ஆலந்துறை). மருது- (திருவிடைமருதூர்) என்பவை சில. பஞ்சபூதத் தலங்களாவன. திருவாரூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என்பவை.

சிவனுடைய எட்டு வீரச்செயல்களை விளக்கும் கோயில்கள் :- திருக்கண்டியூர் (பிரமன் சிரம் கொய்தது). திருக்கோவலூர் (அந்தகாசுர வதம்), திருவதிகை (திரிபுரம் எரித்தது), திருப்பறியலூர் (தக்கன் சிரங்கொய்தது) திருவிற்குடி (சலந்தராசுர வதம்) வழுவூர் (கஜாசுரன் வதம்) திருக்குறுக்கை (காமனை எரித்தது), திருக்கடவூர் (காலனைக் காலால் உதைத்தது).

இவைகள் தவிர சப்தவிடங்க தலங்கள், புலியூர்கள், நாகராஜன், சூரியன், குரங்குத் தலைவர்கள், பலவிதத் தாண்டவ விசேடங்கள், புராண ஐதீகங்கள் இவைகளை விளக்கும் பல கோயில்கள் தமிழகத்தில் இருந்தன; இருக்கின்றன.

சங்க காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்த கோச்செங்கணானை "எண்தோள் ஈசற்கு எழில் மாடம் எழுபதுசெய்து உலகாண்ட திருக்குலத்து வளச்சோழன்" என்று திருமங்கைஆழ்வார் போற்றுகிறார். யானை அழிக்கமுடியாமல் இரண்டாம் தளத்தில் மூலத்தானம் உடைய கோயிலுக்கு மாடக்கோயில் என்று பெயர்

விண்ணிழிவிமானம் உள்ள திருவீழிமிழலையும், தேர் உருவில் அமைந்த விமானத்தை உடைய கரக்கோயிலும் ( மேலைக்கடம்பூர் ) தனிச்சிறப்புடையவை. மன்னர்கள் பல கோயில்களைக் கட்டியுள்ளனர். பல்லவ மகேந்திரவர்மன் செங்கல், மரம், உலோகம், சுண்ணாம்பு இல்லாமல் ஓர் குடைவரைக் கோயிலை மண்டகப்பட்டில் எடுப்பித்தான். (கி. பி. ஏழாம் நூற்றாண்டு) தமிழகத்தில் பல குடைவரைக் கோயில்கள் குடையப்பட்டன.

பிந்திய பல்லவர் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட குடைவரைக்கோயில் நார்த்தாமலையிலுள்ள பழியிலீசுவரம். "ஸ்ரீ கோவிசைய நிருபதொங்க விக்கிரம வன்மற்கு யாண்டு ஏழாவது விடேல் விடுகு முத்தரையன் மகனான சாத்தம் பழியிலி குடைவித்த ஸ்ரீ கோயில். இக்கோயிலுக்கு முகமண்டபமும், இஷவமும், இஷவக் கொட்டிலும், பலிபீடமும் செய்வித்தான் சாத்தம் பழியிலி மகள் மீனவன் தமிழதியரையனான பாலன் அனத்தனுக்குப் புக்க பழியிலி சிறிய தங்கை".

இக்கோயில் அர்ச்சனா போகத்துக்கு காற்சேய் நிலமும் வழங்கப்பெற்றது. பண்டைக் கோயில்கள் மண்டளிகளே.

**2. பல்லவர்கள் பணி :**

தேவாரத்தைப் பாடிய சைவ சமயாசாரியர்கள் வாழ்ந்த காலத்தில் 274 கோயில்கள் பாடல் பெற்ற கோயில்கள். அவைகளில் 190 சோழ நாட்டைச் சேர்ந்தவை – பாண்டிய நாட்டில் 14ம், நடுநாட்டில் 22ம், தொண்டை நாட்டில் 32ம் இருந்தன. பல்லவர் காலத்தில் சில மண்டளிகள் கற்றளிகளாக ஆக்கப்பெற்றன. காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயில் மாமல்லபுரத்துக் கடற்கரையிலுள்ள இருதளிகள், பனைமலையிலுள்ள தாழபுரீசுவரர் கோயில் என்பன நரசிம்மவர்மன் என்ற இரண்டாம் இராசசிம்மன் காலத்தில் கட்டப்பட்டவை.

விஜய அபராஜித பல்லவ மன்னனின் 18ஆம் ஆண்டில் திருத்தணியில் திருவீரட்டானத்து தேவர்க்கு அழகிய கற்றளியை நம்பி அப்பி எடுப்பித்து திருவமிர்துக்கும் இரண்டு சந்திவிளக்குக்கும் நிலதானம் செய்தான்.

மண்டளிகள், கற்றளிகளைத் தவிர மாமல்லபுரத்தில் பல மலைத்தளிகளும் பல்லவ மன்னர்கள் செய்வித்தனர். இவைகளை இரதங்கள் என்று மக்கள் வழங்குகின்றனர்.

### 3. சோழர்களின் பணி :

கோயில்கள் கட்டுவதில் சோழ மன்னர்களின் பணி போற்றற்பாலது. முதலாம் ஆதித்தன் காவிரியின் இருகரையிலும் வானேங்கும் பல கற்றளிகளைச் சமைத்தான் என்று அன்பில் செப்பேடு புகழ்கின்றது. இம்மன்னன் காலத்தில் சுமார் ஐம்பது கோயில்களாவது கட்டப்பட்டன என அறிகிறோம். இவைகளில் முக்கியமானவை கண்ணனூர் சுப்பிரமணியர் கோயில் திருக்கட்டளை சுந்தரேசுவரர் கோயில், திருச்செந்துறைக் கோயில், லால்குடி கோயில், சீநிவாசநல்லூர் கோயில், மன்னு பெரும் பழுவூர் ( இரு தளிகள் கொண்ட ) அவனிகந்தர்ப்ப ஈசுவரம், திருவெறும்பியூர் ஆதித்தேசுவரம், குடந்தை நாகேசுவரர் கோயில், திருவையாற்றைச் சேர்ந்த சப்தஸ்தானக் கோயில் கள், கோயில் தேவராயன்பேட்டை, திருப்புறம் பயம், தக்கோலம், திருக்கழுக்குன்ற திருமூலத் தானப் பெருமானடிகள் கோயில் என்பவை.

தொண்டை நாட்டை வென்ற பிறகு முதலாம் ஆதித்தன் திருக்கழுக்குன்றத்துத் திருமூலத்தானப் பெருமானடிகள் கோயிலைப் புதுப்பித்தான். இம்மன்னனின் 27ஆம் ஆண்டுக் கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு.

"ஸ்வஸ்திஸ்ரீ கோ இராஜகேசரி வர்மற்கு யாண்டு இருபத்தேழாவது களத்தூர்க் கோட்டத்து களத்தூர்க் கூற்றத்துத் திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ மூலத்தானத்துப் பெருமானடிகளுக்கு இறையிலியாக ஸ்கந்த சிஷ்யன் கொடுத்தமையில் அப்படியே வாதாபி கொண்ட நரசிம்மப் போத்தரையரும் அப்பரிசே ரக்ஷித்தமையின் அந்துரையன் குணவன் மகன் புக்கன் விண்ணப்பத்தினல் பூர்வ ராஜாக்கள் வைத்தபடியே வைத்தேன் இராசகேசரி பன்மனேன்- இத்தன்மம் ரக்ஷித்தான் அடி என் தலை மேலன".

முதலாம் பராந்தகன் காலத்தில் எடுக்கப்பட்ட கோயில்களில் முக்கியமான கோயில்களாவன.

1. உய்யக்கொண்டான் திருமலை ( கற்குடி ) உச்சிவநாதர் கோயில்.
2. கொடும்பாளூர் - முசுகுந்தேசுவரம்
3. கீழைப்பழுவூர் - திருவாலந்துறை மகா தேவர்
4. நங்கவரம் - சுந்தரேசுவரர்
5. புள்ளமங்கை – பிரமபுரீசுவரர்
6. எறும்பூர் – கடம்பவனேசுவரர்
7. திருவாவடுதுறை - கோமுத்தீசுவரர்
8. கிராமம் - சிவலோகநாதர் (முண்டீசுவரம்)
9. திருநாமநல்லூர் – திருத்தொண்டீசுவரம்
10. காட்டுமன்னார்குடி – வீரநாராயணப் பெருமாள் (2) அனந்தீசுவரம்
11. தொண்டைமாநாடு - ஆதித்தேசுவரம்
12. திருவாமாத்தூர்-அபிராமேசுவரர் கோயில் முதலியன.

திருவாவடுதுறைக் கோயிலைக் கற்றளிப்பிச்சன் கட்டுவித்தான். இக்கோயிலைக் குடப்படைக்கு மேற் பட்டு விமானப்பகுதியைப் பூர்த்திசெய்ய முதலாம் பராந்தக சோழ மன்னரே 500 கழஞ்சு பொன்னை வழங்கினர்

எறும்பூர் ( தென்ஆர்க்காடு மாவட்டம் ) கோயிலின் ஸ்ரீ விமானத்தையும் அட்டப்பரிவாரக் கோயில்களையும், கோபுரத்தையும், முதலாம் பராந்தகனின் 28 ஆம் ஆண்டில் கட்டி முடித்தார்.

முதலாம் ஆதித்தனுடைய பள்ளிப்படைக் கோயில் ( ஆதித்தேசுவரம் அல்லது கோதண்டராமேசுவரம் ) பராந்தக மன்னரால் அவருடைய 34 ஆம் ஆண்டுக்குச் சற்று முன்பாகவே கட்டப் பட்டது.

வரலாற்றுக் காலத்தில் எடுப்பிக்கப்பட்டு கல்வெட்டுச் சான்றேடு உடைய கோயில் சோழ புரத்தில் இருந்தது. இது பிந்திய பல்லவர் காலத்தது. அக்கல்வெட்டுப்படி கோவிசய கம்பவர்மற்கு எட்டாவது பிருதிவீகங்கரையர் அதிதர் ஆயின பிற்பாடு தம் புத்திரர் ராசாதித்யன் மகாதேவன் தம் அப்பனரைப் பள்ளிப்படுத்த இட்த்து ஈசுவர ஆலயமும் அதிதகிரகமும் எடுப் பித்துக் கண்டு சேவித்தான்.

தொண்டைமானாட்டில் கட்டப்பட்ட கோயிலும் ஆதித்தனின் பள்ளிப் படைக்கோயிலே. முதல் பராந்தக சோழனின் மகனை, அரிஞ்சிகை சோழ நாட்டெல்லையிலுள்ள மேற்பாடியில் ( போரில் ) இறந்ததால் அரிஞ்சிகை ஈசுவரம் என்ற பள்ளிப் படைக்கோயில் ஒன்றை அவன் பெயரனை முதலாம் இராசராசன் ( அவனுடைய 20 ஆம் ஆண்டில் எடுப்பித்தான் )

சுந்தரசோழன் காலத்தில் கொடும்பாளூரில் மூவர்கோயிலைப் பூதி விக்கிரமகேசரி தன் பெயரலும். தன் இருதேவியர்கள் பெயராலும் மூன்று தளிகளைக் கட்டிவைத்தான்.

உத்தமசோழன் காலத்தில் சில கோயில்களைக் கண்டராதித்த தேவரின் தேவியாரும் உத்தம சோழரின் தாயாருமாகிய செம்பியன்மாதேவியார் ஸ்ரீகண்டராதித்த தேவரின் திருநாமத்தால் திரு

நல்லம் (தேவாரகாலப் பெயர்) உடையார்க்கு திருக்கற்றளி எழுப்பித்தார். நாகைக்கருகில் புதியதோர் ஊர் நிறுவினர். அவர் பெயரால் செம்பியன்மாதேவி என்று இவ்வூர் நிலவுகின்றது. அங்கே ஒரு புதிய கோயிலையும் கட்டுவித்தார்.

முதலாம் இராசராசர் தஞ்சையில் இராஜ ராஜேசுவரமும், திருவையாற்றில் வடகைலாசமும், தாதாபுரத்தில் (தென் ஆர்க்காட்டு மாவட்டம்) ராசராசன் தமக்கை குந்தவையாரால் எடுப்பிக்கப் பட்ட இரவிகுல மாணிக்க ஈசுவரர் கோயிலும், குந்தவை விண்ணகர் ஆழ்வார் கோயிலும், அவருடைய மகனார் முதலாம் ராசேந்திரன் (கங்கை கொண்ட சோழன்) எடுப்பித்த கங்கைகொண்ட சோளீசுவரமுங், கூழம்பந்தலிலுள்ள கங்கை கொண்ட சோளீசுவரமும், திருவொற்றியூரிலுள்ள கங்கை ஆதிபுரீசுவரர் கோயிலும், இரண்டாம் இராசராசனால் கட்டப்பட்ட ஐராவதேசுவரமும், மூன்றாம் குலோத்துங்க சோழரால் கட்டப்பட்ட திருபுவன ஈசுவரமும் (கம்பகரேசுவரம்) சோழ மன்னர்கள் கட்டிய தலைசிறந்த கோயில்களாகும்.

கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் சோழர் காலத்தில் விழுமிய நிலையில் இருந்தன. ஓவியக் கலையும் தக்க இடம் பெற்றுள்ளது. தஞ்சை இராசராசேசுவரத்து கர்ப்பக்கிரகத்துச் சுற்றிலுள்ள சுவர்களில் அக்காலத்து ஓவியக் கலையின் சிறப்பை அறியலாம்.

**4. கொடைகள் :**

மன்னர்களும். மக்களும் வழிபாட்டிற்குப் பல விதகொடைகள் கொடுத்தனர்.

**1. விளக்கு :**

(அ) திருப்பழனம் (143 – 1928) 2 ஆம் ஆண்டு ஆதித்தன் 1. "ஸ்வஸ்திஸ்ரீகோ இராச கேசரிபன்மற்கு யாண்டு 2 ஆவது மிறைக்கூற்றத்து தேவதானம் திருப்பழனத்து மகாதேவர்க்கு சோழப்பெருமானடிகள் பெருநற்கிள்ளி சோழர் நிசதம் ஒரு நொந்தாவிளக்கு இரவும், பகலும், சந்திராதித்தவல் எரிவதற்கு வைத்தபொன் 30 கழஞ்சு"

(ஆ) புள்ளமங்கை – (548 – 192.) சுந்தர சோழர்" கோ. இராசகேசரிபன்மற்கு யாண்டு 15 ஆவது திருவாலந்துறை மகாதேவர்க்கு வீரசிகா மணிப் பல்லவரையர் வைத்த நொந்தாவிளக்கினுல் சாவா மூவாப் பேராடு நிசதம் உழக்கு நெய்யால் எரிவதாகக் குடுத்த ஆடு 90".

**(2) ஸ்ரீபலி திருவிளாக்குடி : – 116 – 1926.**

கோவிராஜகேசரி பன்மற்கு யாண்டு 3 – ஆவது வடகரைக் குறுக்கை நாட்டு பிர்மதேயம் முருகவேள் மங்கலத்து 'ஸபையோம் இவ்வூர் மஹாதேவர் மங்கல நக்கருக்கு ஸ்ரீ பலிகொட்டிக்காளமுத இரண்டாளுக்கும், செகண்டிகை கொட்ட ஓராளுக்கும் நிவந்தம் செய்துக்கொடுத்த நிலமாவது."

**(3) அபிடேகம் (திருமஞ்சனம்)**

கோயில் – தேவராயன்பேட்டை (238 – 1923.) கோ இராசகேசரிபன்மற்குயாண்டு மூன்றுவது. "இச்சேய் திருச்சேலூர் மாதேவர்க்கு காவிரி நீர் குணந்து திருமஞ்சனமாட்டுவதாகக் குடுத்தேன்"

**(4) போனகம் அமுது திருச்சோற்றுத்துறை (192 – 1931)**

"கோ இராஜகேசரிபன்மர்க்கு யாண்டு 3-ஆவது" பயற்றுப் போனகம் அமுது செய் அரிசி நானாழியும், பருப்பு நாழியும், நெய் ஆழாக்கும் பொரிக்கறி ஒன்றும் நிசதம் வைச்சபடி இவை இற்றுக்கு குடுத்த நிலம். பிர்மதேயத்தில் படுநிலம் மேலே அலைமாவும் இந்நிலம் ஆக அரையே இரண்டுமா பானைக்கும் அடைக்கா யமுதுக்கும் நல்லு இருநாழி மத்தியானத்து அமுது செய்ய வைத்தேன்.

**5. திருநந்தவனம் கமுகு திருநந்தாவனம் சிதம்பரம் :**

பல்லவ கோப்பெருஞ்சிங்கனின் 15-ஆம் ஆண்டு (262 – ஆம் நாள்) வேசாலிப்பாடி பற்று பூபால சுந்தர சோழநல்லூரில் சொக்கச்சீயன் கமுகு திருநந்தாவனம் என்ற ஓர் பூந்தோட்டம் நிறுவப் பெற்றது. இதற்கு உடலாக 63 மா-நிலம் திருநந்தவனத்தரைக்கு உடலாகவும் 247 மாநிலம் தோப்புக் குடிகளின் சீவிதத்துக்காகவும் குடுக்கப்பட்டன்.

**5. திருப்பணிகள் :**

விக்கிரமசோழனின் மெய்க்கீர்த்தியால் முதலாம் பராந்தகன் தில்லைத் திருச்சிற்றம் பலத்தைப் பொன் வேய்ந்தான். இம்மன்னன் தன் 10-ஆம் ஆண்டில் சிற்றரசர்கள் சொரிந்த நிறைப் பொருள்களைக் கொண்டு தன் குலநாயகன் (சிதம் பரம் - நடராசர்) தாண்டவம் பயிலும் செம்பொன் அம்பலம் சூழ் திருமாளிகையும் (மேலைக்) கோபுர வாசலையும் கூடசாலைகளையும் பலிபீடத்தையும் பொன் வேய்ந்தான்.

2 கோப்பெருஞ்சிங்கனால் சிதம்பரம் நடராசப் பெருமானுக்குத் திருப்பள்ளித் தாமத்துக்கு வேண்டும் பூந்தோட்டங்களுக்காகவும் (412-1912) சோலைக்காகவும் (466-1932) செங்கழுநீர் மலர் களுக்கு வேண்டும் திருவோடைகளுக்காகவும் (460-1902) நகரத்துச் சாலியர்களின் குடியிருப்பு நத்தத்திற்காகவும் (திருப்பரிவட்டம் வழங்கு வதற்கு) தில்லையம்மனுக்குக் குங்குமம்வழங்கு வதற் காகவும் (396-1903) திருத்தேர் விழாவிற்கும் (455-1905) பல நிவந்தங்கள் விடப்பட்டன,

"கனகசபாபதி சபா, சர்வகாரிய, சர்வகால நிர்வாகன்" என்று போற்றப்படும் கோப்பெருஞ் சிங்கனின் ஐந்தாம் ஆண்டில் தில்லையம்பதியில் தெற்குக் கோபுரத்தைக் கட்டும் திருப்பணிக்கு உடலாக (செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள) ஆற்றூர் என்ற இராசஇராசநல்லூரில் 301 3/4 (வேலி) தேவதான இறையிலியாக இட்டான். இவன் பெயரால் இது சொக்கச்சியன் திரு எழுநிலைக் கோபுரம் என வழங்கலாயிற்று. (கி. பி. 1248) கோப்பெருஞ்சிங்கனும், அவன் மகனும் திருவண்ணா மலைப் பெருமானுக்குச் செய்த பல திருப்பணிகளை ஓர் அழகிய அகவற்பாவால் அறியலாம் (480-1902).

6. துலாபாரம்:

மன்னர்கள் துலாபாரம், இரண்யகர்ப்பம் என்ற சிறந்த விழாக்களை நடத்தினர். திருக் கோடிகாவில் நிருபதுங்க பல்லவ மன்னனின் 22 ஆம் ஆண்டில் அவருடைய தேவியாரான வீரமா தேவியார் இரண்யகர்ப்பமும் துலாபாரமும் புகுத்த பொன் 50 கழஞ்சை போனகத்துக்கும் நந்தா விளக்கும் அளிததார்.

உத்தரமேரூரிலுள்ள சுந்தரவரதப் பெருமாள் கோயில் துலாபாரக் கோயில் என்று வழங்கப் பெற்றது.

திருவிசலூரில் முதலாம் இராசஇராசசோழனும் (தந்திவிடங்க சக்தி என்ற) உலோகமாதேவியும், இவ்விழாக்களை இக்கோயிலில் நடத்ினார்கள்.

7. அரசியின் கோயில் வருகை:

திருவிடைமருதில் (215 - 1907) முதலாம் இராசஇராசனின் தேவியாரான பஞ்சவன்மா தேவி யார் இம் மன்னனின் 6 ஆம் ஆண்டில் திருவிடை மருதில் ஆழ்வாரைத் தொழவந்தருளினார்' அச்சம யம் செம்பியன்மாதேவியாரால் வழங்கப்பட்ட செண்பக நந்தாவனத்துக்கு நன்கொடை வழங்கி னார். அச்சமயம் திருவிடைமருதுடையார் ஸ்ரீகார் யம் ஆராய்கின்ற சிற்றயில் உடையாகும், தேவ கன்மிகளும், ஸபையும் திருவிடைமருதில் நகரமும் கூடி இருந்தனர்.

8. முடிசூட்டு விழாக்கள்:

மன்னவர்கள் கோயில் மண்டபங்களில் முடி சூட்டுவிழாவும் விசயாபிடேகமும் வீராபிடேகமும் நடத்தினர். சிதம்பரத்தில் உள்ள நூற்றுக்கால் மண்டபமும், ஆயிரக்கால் மண்டபமும் இவ்வாறு விழா மண்டபங்களாகத் திகழ்ந்தன. அனபாய சோழனான இரண்டாம் குலோத்துங்கன் தில்லையில் முடிசூட்டிக் கொண்டான் என்பது திருமாணிகுழி கல்வெட்டால் அறியலாம். "தில்லைமாநகர் சிறப் புடைத்தாகத் திருமுடிசூடிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்."

9. அணிகலன்கள்:

திருவெண்காட்டு மாதேவர்க்கு உத்தமசோழர் ஆட்சிக்காலம் முதல் முதலாம் இராச இராசரின் 6-ஆம் ஆண்டுவரை வழங்கப்பட்ட அணிகலன்களின் விவரங்கள் ஒரே கல்வெட்டில் பல கொடைகள் பொறிக்கப்பட்டுள்ளன.

1. செப்புக்கலசம்-செப்புக் குடம், செப்புக்கரகம் இவைகளை மூட செப்பு அகல் — 2048 பலம் நிறை
2. பொன்னின் கொள்கை இதில் சிகரத்திலும் நாலு முகத்திலும் ஏறின மாணிக்கம் 5 வைரம் 52 முத்து 3261 — (1500) கழஞ்சு
3. கோயில் மேல் ஒரு பொற்குடம் செம்பியன் மாதேவியின் கொடை — 1500 கழஞ்சு
4. பொன்னின் சந்திர சேகரத் திருமேனி - நிறை — 4898 3/4 கழஞ்சு
5. இத்தேவர்க்குச் செம்பினால் செய்த பாத பீடத்தின்மேல் போர்த்த தகடு நாலும் ஆணியும் உள்பட பொன் நிறை — 111 கழஞ்சு
6. இத்தேவர்க்கே செம்பினாற் செய்த பத்மத் தின் மேற்போர்த்த தகடு இரண்டுக்கும் ஆணிக்கும் பொன் நிறை 29 3/4 கழஞ்சு

7. இத்தேவர்க்கே செய்த வெள்ளிப்பிரபை வெள்ளி 286 கழஞ்சு, 3 மஞ்சாடி.

8. இதிற்மேற் போர்த்த பொன்நிறை 159 ½ கழஞ்சு

9. இத்தேவர்க்குச் செய்த ஆபரணங்கள் குப்பி 2, உழுத்து ஈரணை வாலி - பொன் நிறை - 2 கழஞ்சு. முத்து 5.

10. ஏகவல்லி வடம் 2, முத்து 28, பவழம் 2, ராஜாவர்த்தம் 2.

11. மாணிக்கமாலை 1, பொன் 9 கழஞ்சு, இதின் மேலேறின் மாணிக்கம் 6, பளிங்கு தடவிக் கட்டின 36, வைரம் 23, முத்து 38. மரகதம் 21

12. நேத்திரத்தின் பொற்தாணிச்ச பட்டிகை 1, பொன் 5, கழஞ்சு, மாணிக்கம் 1, பளிங்கு மாணிக்கம் 19, பளிங்கு வைரம் 10, பொத்தி 3, முத்து 212

13. இத்தேவருடைய பாகுவளையம் 2, பொன் 1 கழஞ்சு, மாணிக்கம் 2, வைரம் 6, முத்து 92.

14. வெண் சாமரை ஒன்று. இதில் கை – பொன் நிறை 31 கழஞ்சு 1 மஞ்சாடி செப்புப்பீடம் 1, நிறை 150 பலம்

15. பொற்பூ நிறை 3½ கழஞ்சு.

16. தாம் எழுந்தருளிவிச்ச சந்திரசேகரப் பெருமாளுக்கு அமுது செய்யக் குடுத்த வெள்ளித் தளிகை 1 நிறை 351 கழஞ்சு

17. திருபுவன மஹா தேவியார் குடுத்த வெள்ளித் கலசப்பானை 1 நிறை 27 பலம். தநவித் கூறிக்கால் 1 பொற்பூ 1 நிறை 25/8 கழஞ்சு.

18. உடையார் சிவசிராத்தஞ் செய்ய நிலவியாகக் குடுத்த பொற்பூ ஒன்றினல், நிறை நாற் கழஞ்சே முக்கால் 2 மஞ்சாடி.

19. உடையார் ஆபரணத்துக்கும், பொற்பூவுக்குமாக பொற்பூ 23 முத்தின் கல்லோடு நிறை 118 கழஞ்சு

20. நம்பிராட்டியாருக்குச் செய்த தாலியும், தாலி நூலுமாய் நிறை 5 கழஞ்சு.

21. பள்ளித்தொங்கல 1. இதில் பச்சை மொட்டு 1. பறளை 1. நிறை 40 கழஞ்சு,

22 கோயிற் பிள்ளையார்க்கு பொன்னின் பட்டம் நிறை 4 கழஞ்சு, 8–மஞ்சாடி 1 குன்றிட தராநிலை விள்க்கு 4.

23. செம்பியன்மா தேவி கண்டராதித்திய தேவரின் இரண்டாம் ஆண்டு திருவெண்காடு தேவர்க்கு திங்கள்தோறும் சங்கராந்தி ஸ்நபனஞ் செய்வதற்காகக் (திருமஞ்சனம்) கொடுத்த 400 காசுக்குப் பதிலாக நாங்கூர் சபையார் கொடுத்த ஏழுமா – சேய் நிலம் இம்மாதிரி பல கோயில்களுக்குப் பல கொடைகள், கொடுக்கப்பட்டன

தஞ்சை இராசராசேசுவரத்திற்கு முதலாம் இராசராசரும் அக்கன் குந்தவையும் அவருடைய பெண்டுகளும். ( தேவிமார்களும் ) சேனுபதிகளும் மற்றவர்களும். கொடுத்த நிவந்தங்களும், ஆபரணங்களும், செப்புத் திருமேனிகளும். படிமங்களும் அளவற்றவை. ஆபரணங்களின் மதிப்போ கணக்கில் அடங்காது.

## 10. கல்வி நிலையம் :

கோயில்கள் தேவாரம் திருவாய்மொழி, வேதம், வேதாந்தம், இராமாயணம். பாரதம். முதலிய சமய நூல்களைப் பரப்பிவந்தன. லால்குடி. திரு வெறும்பியூர், தஞ்சை, தாராசுரம் முதலிய பல ஊர்களிலுள்ள கோயில் கல்வெட்டுக்கள் இதை விளக்கும்.

நம்பியாண்டார் நம்பியின் உதவியால் முதலாம் இராசராசர் தில்லைக் கோயிலில் புதைந்து கிடந்த தேவாரங்களுக்கு உலகு உய்ய புத்துயிர் கொடுத்தார். திருவிடைவாயில் கலவெட்டு மூலம் தொகுக்கப்பட்டுள்ள தேவார நூல்களில் கிடைக்காத சம்பந்தரின் புதிய தேவாரப் பதிகம் ஒன்று கிடைத்துள்ளது. தேவாரம் விண்ணப்பம் செய்யக் குருடர்களுக்கும் அவர்களுக்கு வழி காட்டுவோருக்கும் வாய்ப்பு கிடைததது என்பது திருவாமாத்தூர் கல்வெட்டு தெரிவிக்கிறது. இது மாபெரும் சமூகத் தொண்டு.

## 11. கல்லூரி

திருமுக்கூடல் என்ற ஊர் செங்கல்பட்டு மாவட்டத்தில் பாலாறு. வேகவதி செய்யாறு என்ற மூன்று நதிகள் கூடும் இடததிலுள்ளது. இங்கு வெஙகடேசப் பெருமாள் (மஹாவிஷ்ணு) கோயிலில் உள்ள கல்வெடடு பல சிறநத அம்சங்கள் உடையது இது சோழ வீர ராஜேந்திர மன்னனின் 6 ஆம் ஆண்டைச் சேர்ந்தது (கி பி. 1069). வழிபாட்டுக்கும் கோயில் விழாக்களுக்கும் மன்னரின் பிறந்த நாள் கொண்டாட்டம் ஜனநாத மண்டபத்துக்குப் புதுக்குப்புறம் (Repairs) முதலிய பல செலவினங்களுக்கும், கல்லூரிக்கும், ஆதுலர் சாலைக்கும், (Hospital) 3243 கலம் நெல் வருவாயுடைய நிலமும்

216½ காசும் தானமாக வழங்கப்பட்டது. ரிக்வேதம் யஜுர்வேதம், ஓதுவிப்பார்க்கும், வியாகரணம், ரூபாவதாரம் மஹாபாஞ்சராத்திரம் ,சிவபிராமணர் வைகானசர் என்ற ஆகம நூல்கள் கற்பிக்கும் பட்டர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட்டது. ஓதுவாரும் ஒத்துக் கேட்பாரும் ஆக அறுபதின்மர்க்கு உணவைத்தவிர கிடக்கப்பாயும், இராஎரியும் விளக்குக்கு எண்ணெயும், ஓராண்டில் 51 சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக்கொள்ள எண்ணெயும் பணிசெய்யும் பெண்கள் இருவருக்கும் முதலீடு செய்யப்பட்டது.

தென்னார்க்காட்டு எண்ணாயிரம் என்ற ஊரில் கங்கைகொண்ட சோழன் காலத்தில் 4 வேலி நிலம் நன்கொடையாக வழங்கப்பட்டது. 14 ஆசிரியர் 70 சாத்திரர்கள் 270 பிர்மசாரிகள் அடங்கிய கல்வி ஸ்தானம் ஒன்று இங்கே இருந்தது அதேபோல் புதுவைக்கு அருகிலுள்ள திரிபுவனியில் 12 ஆசிரியர்கள் 200 பிள்ளைகளுக்குக் கல்வி பயில்வித்தனர்.

தென்னாட்டில் ஆய்குல மன்னரான கருந்த தடக்கன் பார்த்திபசேகர புரத்தில் 95 சட்டார்களுக்குச் சாலை ஒன்று நிறுவினான்.

### 12. சரஸ்வதி பண்டாரம் (நூல்நிலையம்) :

புத்தகசாலையும், கோயிலிலே இடம்பெற்றது. தில்லையிலுள்ள சடாவர்ம சுந்தரபாண்டியனின் இரு கல்வெட்டுக்கள் இக்கோயிலிலுள்ள சரஸ்வதி பண்டாரத்தில் 20 வித்வான்கள், அரிய வடமொழி, தமிழ் நூல்களைப் படிஎடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கின்றன.

### 13. ஆதுலர்சாலை

சிலகோயில்களில் ஆதுலர்சாலைகளும் இருந்தன. கங்கைகொண்ட சோழரின் காலத்தில் அவருடைய அத்தையரான குந்தவைப் பிராட்டியார் தம் தந்தையாரின் ஞாபகார்த்தமாகத் தஞ்சையில் சுந்தரசோழ விண்ணகர் ஆதுலர் சாலையை நிறுவி அதற்கு உதவ கோயில் தேவராயன் பேட்டையில் வைத்திய போகமாக நிலமும், வீடும் அளித்தார்.

மற்றொரு முக்கியமான ஆதுலர்சாலை திருமுக்கூடலில் தாபிக்கப்பட்டிருந்தது. அதற்கு வீர சோழன் என்று பெயர். வைத்தியன், சல்லியக் கிரியை செய்வான். ( Surgeon ) மருந்துகளுக்கும், வேண்டும் மருந்து பரித்தும் விறகு இட்டும் பரியாரம் பண்ணுவார். ஆதுலர்க்கு வேண்டும் பரியாரம் செய்வார். பணி செய்யும் நாவிதன் ( Barber ) என்ற பலருக்கும் பல இனங்களுக்கும் நிவந்தம் செய்யப்பட்டது. இருபது விதமான ஆயுர்வேத மருந்துகள் சேகரித்து வைக்கப் பட்டிருந்தன.

### 14. நிர்வாகச் சபைகூட்டம் :

ஊரின் நிர்வாகசபை கோயில் மண்டபத்திலேயே கூடிற்று. திருச்சி மாவட்டம் காமரசவல்லியிலுள்ள கார்க்கோடக ஈசுவரர்கோயிலுள்ள சுந்தரசோழரின் 5 ஆம் ஆண்டுக் கல்வெட்டு கூறுவதாவது :

" கோஇராஜகேசரிவர்மற்கு யாண்டு 5 வது வடகரை பிர்ம்மதேயம் ஸ்ரீ காமரசவல்லி சதுர்வேதி மங்கலத்து பெருங்குறிசபைகளோம் இவ்வாட்டை மகர நாயிற்று வெள்ளிக்கிழமை பெற்ற புனர் பூசத்திநான்று இரட்டைக்காளத்தி மூதி மண்டகத்தின் முன்பே எழுந்தருளி பெருங்குறி கூடியிருந்து ஆதனூர் பாலாசிரியன் பட்டன் சிவன் கூத்தன் இவ்வூரில் திருநல்லூர் மஹா தேவர்க்கு சிதாரி உத்தமொத்தமம் அகிலும், சந்தனமும், கற்பூரமும் நெரியாசமும், தேனும், மற்றும் வேண்டுவன வெல்லாம் குறைவறுத்து கொண்டு சிதாரி எப்பொழுதும் முட்டாமே இடுவதற்கு விலைக்கு கொண்டு கொடுத்த நிலம் ".

உத்தரமேரூர் வைகுந்தப்பெருமாள் கோயிற் சுவரில் உள்ள முதலாம் பராந்தக சோழரின் இரு கல்வெட்க்கள் ( 12 – 14 ஆம் ஆண்டுகள் ) ஊர் நிர்வாகத்தை சீரிய முறையில் நடத்த வாரியங்களை (கமிட்டிகள்) குடவோலை முறைப்படி தேர்ந்தெடுக்க வகை செய்தனர். இத்தேர்தல் முறையைப்பற்றி விளக்கும் கல்வெட்டும் மிகவும் அருமையானது.

### 15. அரசியல் நிகழ்ச்சிகள் :

கல்வெட்டுக்கள் மூலம் சில அரிய அரசியல் சம்பவங்களும் கிடைத்துள்ளன. பிந்திய பல்லவன் கோப்பெருஞ்சிங்கன் சோழ மூன்றும் இராசராசனை வென்று அவனுடைய தலைநகரான சேந்த மங்கலத்தில் சிறையில் வைத்ததை வாயலூர் சாசனப்பா வர்ணிக்கிறது :

" பொன்னி நாடனு முரிமையமைச்சரு மிருப்பதுன்
சிறைக்கூடம்
பொருப்பி ரண்டென வளர்ந்ததோள் வலியினாற்
கொண்டது சோணாடு
கன்னி காவிரி பகிரதி நின்பரியாடுதண் டுறை
வாவி காவன் மன்னவர்
நிறையுட னுணங்குவ துன்பெருந் திருவாசல்,

வென்னிடாத போர்க் கன்னடர் வென்னிடப்
பொருததுன் பெருஞ்சேனை
விளங்கு செம்பொனின் அம்பலக் கூத்தனை
விரும்பியதேவர் கடற்
பின்னி காவல! அவனி நாராயண! பேணுசெந்
தமிழ் வாழப்
பிறந்தகாடவ! கோப்பெருஞ்சிங்க!
நின்பெருமையார் புகழ்வாரே

போசள மன்னன் இச்சோழ மன்னனை விடுதலை செய்வித்ததைத் திருவகீந்திரபுரத்துக் கல்வெட்டு விளக்குகின்றது.

போசள வீர நரசிம்மதேவன் தன் தண்ட நாயகர்களை அனுப்பி கோப்பெருஞ்சிங்கன் நாட்டின்மீது படையெடுத்து சில ஊர்களையும் கைப்பற்றிக் கொள்ளை கொண்டும் "சேந்த மங்கலத்தை எடுத்துவிடப்போகிற அளவிலே கோப்பெருஞ்சிங்கன் குழைந்து சோழசக்கர வர்த்தியை எழுந்தருளிவிக்கக் கடவதாக தேவனுக்கு விண்ணப்பம் செய்ய இவர் விட்டு நமக்கும் ஆள்வரக் காட்டுகையிலே, சோழ சக்கரவர்த்தியை எழுந்தருளிவித்து கொடுபோந்து ராஜ்யத்தே புகவிட்டது "உ"

சோழமன்னர் திருவகீந்திரபுரத்தில் விடுதலை பெற்றார்.

கோயிலுக்குக் கொடைகளும், சபைத் தீர் மானங்களும், கோயிற்சுவர்களில் பொறிக்கப் பட்டன. இவைகளில் காணும் மன்னர்களின் மெய்க் கீர்த்திகளும் அவைகளில் காணப்படும் சம்பவங் களும் தென்னிந்திய வரலாற்றுச் சிறந்த ஆதாரங் களாகும்.

இவைகளின் அருமையும், பழைய பண்பாட் டையும் அறியாமல் கோயில்களைப் புதுக்குவோர் கல்வெட்டுக்களை அழிப்பதால் மாபெரும் இழப்பை விளைவிக்கின்றனர்.

இசை நடனம் (காக்கைக்கூத்து, ஆரியக்கூத்து) என்ற கலைகளுக்குக் கோயில்கள் வளர்ப்புப் பண்ணைகளாகும். இக்கலைகளுக்கு மன்னர்களும் பேராதரவு அளித்தனர்.

ஒருவகுப்பினருக்கு மாத்திரம் அல்லாமல் சமூக மக்கள் யாவருக்கும் நன்மை பயந்த மாபெரும் தானம் கோயிலாகும்.

கோனேரிராஜபுரத்து உத்தமசோழரின் ஏழாம் ஆண்டுக் கல்வெட்டிலிருந்து பலவித மக்களுக்கு அளித்த கோயிலின் பல பணிகள் தெரியவரும். தம் தாயாரான செம்பியன் மாதேவியின் வேண்டு கோளுக்கு இணங்க உத்தமசோழர் கொடுத்த நிலக் கொடையிலிருந்து பல செலவினங்களுக்கு வகை செய்யப்பட்டது.

நைவேத்தியம், சந்தனம், தீபம் ஸ்ரீ பலித் தேவைக்கு வேண்டிய பொருள்கள் பற்றியும், செம்பியன்மகாதேவியின் பிறந்த நட்சத்திரமான கேட்டையன்றும், மார்கழித் திருவாதிரை வைகாசி விசாக நட்சத்திரங்களிலும் நிகழும் திருவிழாக்கள் பற்றியும், அவற்றிற்கு வேதம் ஓதுவோர், சந்தனம் அரைப்போர், திருப்பதிகம் ஓதுவோர், மேளதாளம் சங்கு முதலிய கருவிகளோடு இசைபாடுவோர், கோயில் தளத்தைச் சாணத்தால் மெழிகிச் சுத்தம் செய்வோர், அபிஷேகத்திற்குக் காவிரியிலிருந்து நீர்கொணர்வோர், கோயில் காரியம் செய்வோர், கணக்கர், மண்கலம் இடுவோர், ஆடை வழங்கு வோர், கணக்குப் பரிசோதனை செய்யும் அரசாங்கத் ததிகாரிகள் நாள்கோள் நிலையின் ஓலையை வாசிப் போர்,ஸ்தபதி, தச்சன் கொல்லன் ஆகியோருடைய ஊதியம் பற்றியும், ஏனைய செலவுகள் பற்றியும் விரிவான விவரங்கள் எழுதப்பட்டுள்ளன. இக் கோயிலில் செம்பியன்மாதேவியால் செய்யப்பட்ட திரிபுரவிஜயர் (திரிபுராந்தகர்) விருஷப வாகனர். கணபதி முதலிய திருமேனிகளின் விசேஷ பூஜைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மன்னர்களின் சமயப் பண்பாடும், அறம் நிரம்பிய நெஞ்சமும், நாடுகாவல் தூய்மையும், செங்கோற் பண்பும் இவற்றால் விளக்குகின்றன.



# 4. கல்வெட்டுக்கள் உணர்த்தும் பண்பாட்டு நெறி சில குறிப்புகள்:

**1. கண்ணிழந்தோர்க்கு உதவி:**

திருக்கோயில்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கும் உதவிபுரியும் பண்பாடு சில கல்வெட்டுக்களால் விளங்குகின்றது. கண்பார்வையற்ற பதினறு பேர்கள் தேவாரத் திருமுறைகளை மூன்று சந்நிதிகளில் விண்ணப்பம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியும், அவர்களுக்குக் கண் காட்டுவார் இருவர்க்கும், வேலை நியமனம் செய்யப்பட்ட செய்தியும், திருவாமாத்தூர்க் கல்வெட்டுச் செய்திகள். அவர்களுக்கு ஒவ்வொருவர்க்கும் நெல் பதக்காக - நாள் ஒன்றிற்கு முக்கலமாக - 360 நாளுக்கு நெல் ஆயிரத்து எண்பது கலமும், புடைவை மு.தலுக்குப் பேரால் காசு ஒன்ருக, காசு பதினெட்டுக்கு, காசு ஒன்றுக்கு நெல் இருபதுகலமும் ஆக வந்த 1440 கலத்திற்கு, வேலி ஒன்றிற்கு நெல் 120 கலமாக ஆமாத்தூர் இறைவர் தேவதானம் கடுவனூரில் 12 வேலி நிலம் காணியாகக்கொடுக்கப்பட்டது. இந்நிலையில் " பூமேவு வளர் திருப்பொன் மார்வு புணர " என்ற தொடக்கம் உடைய மெய்க்கீர்த்தியை உடைய இராசகேசரி திரிபுவன சக்கரவர்த்தி குலோத்துங்கசோழன் தன் ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் தன் தேவாரத்து திருப்பதியம் பாடிய, பொய்யாதசேவடி தேவகண நாதனை இராசராசப் பிச்சனேயும், அவன் வர்க்கத்தாரையும் இத்திருக்கோயிலில் திருப்பதியம் பாடுவித்துக் கொண்டு, முன்பில் ஆண்டுகள் குருடர்களுக்கு விட்டு வரும் நிவந்தப்படி இவர்களுக்கும் கொடுக்குமாறு கட்டளையிட்டுள்ளான்.

இக்கல்வெட்டு, சமுதாயத்தில் கண் பார்வை இன்றிக் கவலைப்படுவோரையும், கடவுள் பக்தியில் ஈடுபடுத்திப் பயன்படுத்த அறநெறிப் படுத்துவதில் அக்காலப் பெருமன்னர் காட்டிய ஊக்கத்தை விளக்குவதாக உள்ளது. (எ. ஆர். எண். 433 - 1933 - தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி எட்டு - எண் 749 காண்க)

இவ்வாறே திருநுந்தா விளக்கு எரிப்பதற்கும்' துலைநிறை செம்பொன், ஆடுகள் இவைகளையும் தருவதற்கும் ஆக நிலநிவந்தங்கள் தரப்பெற்றதையும் இக்கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. சமுதாயக் கண்ணேட்டத்துடன் அறம்புரிந்த மாமன்னர் பண்பாட்டைத் திருவாமாத்தூர்க் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

**2. இலக்கியங்களில் காணப் பெருத உண்மைகள் சில:**

இலக்கியங்களில் காணப்பெருத அரிய உண்மைகளைக் கூடத் திருக்கோயிற் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. எடுத்துக் காட்டாகத் திருவாரூர்க் கல்வெட்டின்வழி, சுந்தரமூர்த்தி நாயனரின் அரும்பெறல் தாயார் இசைஞானியார் என்பதையும் அவ்வம்மையார் கௌதம கோத்திரத்தைச் சேர்ந்த ஞான சிவாசாரியாரின் மகளார் என்பதையும்: அவர் திருவாரூர்ப் பதியினர் என்பதையும் அறிகின்ருேம். இது சேக்கிழார் பாடிய பெரிய புராணத்தில் இசைஞானியார் புராணத்தில் இல்லாத குறிப்பு என்பதைக் கற்ருேர் உணர்வர். (திருஞானசம்பந்தர் தேவாரம் - இரண்டாம் திருமுறை, தருமையாதீனம் (1954) - தலங்களின் வரலாற்றுக் குறிப்பு - 22 ஆம் பக்கம் காண்க)

இவ்வாறே மனுநீதிச் சோழன் செயலை உறுதிப்படுத்தும் கல்வெட்டு, திருவாரூர்த் திருக்கோயிலில் பொறிக்கப்பெற்றுள்ள விக்கிரம சோழப் பெருமன்னரின் ஐந்தாம் ஆண்டில் தோன்றிய ஒன்ருகும். மனுநீதிச் சோழனின் அமைச்சராக இருந்தவன் பெயர் உபய குலாமலன் என்பதையும், அவன் சோழமண்டலத்தில் இங்கண் நாட்டு பாலையூரைச் சேர்ந்தவன் என்பதையும், அவ்வமைச்சரின் வழியில்வந்த பாலையூர உடையான் சந்திரசேகர னதி வீதி விடங்கனை குலோத்துங்க சோழ மாபலி வானராயன் என்பவன் விக்கிரம சோழன் காலத்தவன் என்பதையும் அறிகின்ருேம்.

(மேற்படி நூல் - பக்கம் 2. கு. காண்க.)

பெரிய புராணத்தில் காணப்பெருத உபயகுலாமலன் பிரியவிருத்தன், என்ற பெயர்களை இங்குக் காண்கின்ருேம்



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருவீழிமிழலை அருள்மிகு வீழிநாதசுவாமி திருக்கோயில்,
திருக்குளம், வௌவால் நத்தி மண்டபத் தோற்றம்.

3. ஏழை மக்களுக்குக் கடன் உதவி :

வறட்சிக் காலத்தில் நிலத்தைப் பழுது பார்க்கக் கடன் கொடுக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளமையைத் திருஇரும்பூளை என்ற திருத்தலக் கல்வெட்டில் காண்கின்றோம். மக்களது துன்பம் அறிந்து அரசு காவல் புரியும் மன்னர்களின் பண்பாடு இன்றைய ஆட்சிமுறைக்கும் வழிகாட்டுவது அன்றோ: (மேற்படி நூல் பக்கம் 2 எ குறிப்பு)

4. கலைஞர்களுக்கு உதவி :

கலைஞர்களைத் திருக்கோயிற் கல்வெட்டுக்களின் வழி, அரசர்கள் பாதுகாத்து வந்த செய்தி அறியப்படும். ஆடல்வல்ல - ஆடல், பாடல் ஆகிய பணிகளைப் புரியவல்ல பதியிலார் முப்பத்திருவர் பற்றியும், அவர்கள் அரசனால் கொடுக்கப்பெறும் மிகச் சிறந்த விருது ஆகிய 'தலைக்கோல்' பட்டம் பெற்றவர்கள் என்பதையும் திருவையாற்றுக் கல்வெட்டுக்களால் அறியமுடிகின்றது. (மேற்படி நூல்)

5. ஓதுவார்களுக்கு உதவி :

தேவாரங்களுக்குத் "திருமுறை" என்ற பெயர் வழங்கிய பண்பாட்டுச் செய்தியைத் திருக்காறுயில் கல்வெட்டுக்களால் அறியலாம். (ஏ. ஆர். 1909 / 431 – 454) திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜ தேவரின் இருபத்தெட்டாம் ஆண்டுக் கல்வெட்டு, இக்கோயில் திருக்கை கொட்டியிலிருந்து "திருமுறை பாடுவார்க்கு" நிவந்தம் அளிக்கப்பெற்றமையைக் குறிக்கிறது.

6. திருக்கோயில் மேற்பார்வை, தக்கார் நியமனம்

சிவபூசை குருபூசை, முதலிய சமய ஒழுக்கங்களில் சிறந்த சான்றோர்களைத திருக்கோயில் மேற்பார்வையாளராக நியமித்து அறம் புரப்பதில் தனிக் கவனத்தை ஆட்சியாளர் கொண்டிருந்தமையைச் சிக்கல் கோயில் கல்வெட்டுகளிலிருந்து அறிகின்றோம். (ஏ. ஆர். 1911 / 102 - 107) இத்திருக்கோயிலில் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி வீரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்று முதலாக ஏழு கல்வெட்டுகள் உள்ளன. சதாசிவ மகாராயர் கல்வெட்டு (சகம் 1482 ரௌத்திரி ஆண்டு) திருவாரூர் ஞானப்பிரகாச பண்டாரம் கிருஷ்ணமாராசன் கட்டளைப்படி சிக்கல் வடக்குடி, தெ.டச்சேரி முதலிய வற்றிற்கு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டிருந்ததைக் குறிப்பிடுகின்றது. இக் கமலை ஞானப்பிரகாச பண்டாரம் தருமையாதீன முதலாசிரியரின் குருநாதர் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பண்பாடும், நல்லொழுக்கமும் உடைய பெருமக்களையே திருக்கோயில் நிர்வாக மேற்பார்வையாளராக அமர்த்தவேண்டும் என்ற கருத்து, கூர்ந்து நோக்கத்தக்கது. அவர்கள் மேற்பார்வையில் ஒழுங்கீனங்கள் நிகழ வாய்ப்பு இல்லை என்று அக்கால அரசு கருதியது. அது எக்காலத்துக்கும் பொருந்தும் அன்றோ !

7. நீதித்துறையில் களங்கம் வராதபடி ஏற்பாடுகள் :

நீதித்துறையில் களங்கம் வந்துவிடாதபடி மன்னர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து பண்பாட்டின் காவலர்களாக விளங்கினர் என்பதை எண்ணற்ற திருக்கோயிற் கல்வெட்டுச் செய்திகளால் அறியலாம். எடுத்துக்காட்டாக இராசராசன் 24ஆம் ஆண்டுக்கல்வெட்டு திருமங்கலக் குடியில் உள்ளது. "முந்திய ஆண்டில் பஞ்சம் ஏற்பட்டதால் கோயில் சொத்தைச் சூறையாடிய சிலரை நீதிபதிகள் பரிகாரம் கேட்டதைச்" சுட்டுகின்றது (மேற்படி நூல்) இவ்வாறே கிருஷ்ண தேவராயர் 1439 - ஆம் ஆண்டில் கோயில்களின் நிதி நிலைமை கருதி வரி தள்ளுபடி செய்தமையும் அக்கல்வெட்டால் அறிகின்றோம்.

திருமாந்துறைச் சோழர் கல்வெட்டுக்கள் கூறும் செய்திகளும் இங்கு நோக்கத்தக்கவை. இராசராசன் 15ஆம் ஆண்டில் வானவ நாயக்கன் பெருந்திருக் குடிகள் வரி கொடுக்க முடியாமல் வெளியேறவே மீண்டும் அவர்களைக் குடியமர்த்தியமை இராசராசன் 16ஆம் ஆண்டில். நந்தவனம் வைப்பதற்காகக் கொடுத்த நிலத்தின் வரியைத் தள்ளுபடி செய்தமை - ஆகியவை நோக்கத்தக்க திறம் உடையவை (மேற்படி நூல்)

8. புறச்சமயத்தாரையும் மதித்தல் :

தஞ்சை நாயக்க மன்னரில் சேவப்ப நாயக்க ஐயன் காலத்தில், திருமலை ராசபுரத்துப் பிராமணர்கள். தாங்கள் வாய்க்கால் ஒன்றை வெட்டிக்கொள்வதன் பொருட்டு. திருவாலத்துறை புத்தர் கோயிலுக்கு உரிய நிலத்தைப் பயன்படுத்திக் கொண்டதற்கு அப்புத்தர் கோயிலுக்கு வேறு நிலம் விட்டதைத் திருக்குடமூக்குத் திருக்கோயிற் கல்வெட்டு குறிக்கிறது. வேறு சமயத்தவர் மனம் புண்படாத வகையில் பெருந்தன்மை உடைய

பண்பாடு அக்கால மாந்தர்க்கு இருந்தமையை இது காட்டுவதாக உள்ளது.

(திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள்-மூன்றாவது திருமுறை(1955)தலங்களின் வரலாற்றுக் குறிப்பு)

**9. ஊர்ச்சபை உறுப்பினர் நியமனம் : கூர்மையான விதிமுறை :**

திருச் சக்கரப்பள்ளித் திருக்கோயில் கல்வெட்டுக்களிலிருந்து (ஏ. ஆர். 1928/ 113-120) அறியப் படும் செய்திகளில் மிகச்சிறப்பான பண்பாட்டுச் செய்தி ஒன்று காணப்படுகின்றது. மூன்றாம் குலோத்துங்க சோழனின் 12 ஆம் ஆட்சி ஆண்டில் இவ்வூர்ச் சபைக்கு நாற்பது வயதுக்கு மேற்பட்டவர் தாம் உறுப்பினராக நிற்கவேண்டும் என்றும், அவர்களும் பத்து ஆண்டிற்குள் நிற்காதவர்களாக இருக்க வேண்டும் என்றும் விதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளமையைக் காண்கின்றோம்.

இவ்வாறு விதிக்கப் பெற்றதனால், எல்லாரும் ஊர்ச்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற வாய்ப்பு ஏற்படுவதுடன், இளம் பருவத்தினரும் அனுபவ முதிர்ச்சி இல்லாதவரும் உறுப்பினராக நிற்பதைத் தடுக்கவும் வழி காணப்பட்டது இதனால், நீதிக்கு மாறாகாத - அனுபவ முதிர்ச்சி உடைய தக்கோரே நிர்வாகத்திற்குத் தகுதி உடையோராவர் என்ற உண்மையை அக்கால மாந்தர் உணர்ந்து பின்பற்றியமை இதனால் தெளிவாகும். (மேற்படி நூல்)

**10 குத்தகை விதிகள் :**

நிலம் குத்தகை விடப்படுவதற்குச் சில விதிகளை உணர்த்தும் இததிருக்கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழன் 30 ஆம் ஆண்டுக் கல்வெட்டு நில உரிமை உடையவர்களும் நிலத்தை உழுது பயிரிடுவோரும் குழப்பமின்றி அமைதியும், பண்பாடும் கொண்டு வாழ நெறி காட்டுகின்றது. இதுவும் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு செய்தி ஆகும்

**11. வகுப்பு ஒற்றுமை பேணல் :**

வேற்றுச் சமயத்தாரின் உள்ளம் நோகாதபடி பண்பாடு காத்த செயலைப் போன்றே, இரண்டு வகுப்பாரிடையே ஒற்றுமை நிலவவும், பண்பாடும் நல்லிணக்கமும் பேணவும் செய்த ஒரு நடைமுறையைத் திருப்பட்டீச்சுரத் திருக்கோயிலில், இரண்டாம் கோபுரத்தின் உட்புறம் உள்ள நாயக்கர் காலக் கல்வெட்டு குறிக்கின்றது. அவ்வூரில் உள்ள செட்டியார், பட்டு நூல்காரர் ஆகிய இரு வகுப்பாரிடையே எவருக்கு முதலில் தாம்பூலம் கொடுப்பது என்ற தகராறு எழுந்தபோது முடிவில் அக்கோயிலில் எழுந்தருளியுள்ள அம்மனுக்கு ஒரு புடவையும், தாம்பூலத்தையும் கொடுத்துவிட்டுப் பின்னர் அவ்விரு வகுப்பாரும் எடுத்துக்கொள்வது என்று தீர்மானிக்கப்பெற்றது. இந்தக் குறிப்பு வகுப்பு ஒற்றுமை பேணுவதில் உள்ள உயர்ந்த நோக்கத்திற்கு எடுத்துக்காட்டாக உள்ளதன்றோ. (மேற்படி நூல்)

**12. புறத் தூய்மையும் போற்றுதல் :**

திருக்கோயில் வழிபாட்டிற்குச் செல்லும் மக்கள் அகத் தூய்மையுடன் புறத் தூய்மையும் உடையவர்களாக விளங்க வேண்டும் என்று அக்காலச் சான்றோர் கருதினர். கழுவாத கால்களுடன் படுக்கைக்குக்கூடச் செல்லக்கூடாது என்பார் வள்ளுவர். இஸ்லாமியத் திருக் கோயில்களிலும் இநத மரபு பின்பற்றப்படுகிறது. சைவ வைணவத் திருக்கோயில்களும் அமைந்துள்ள திருக்குளங்கள் இவ்வகையிலும் பயன்பட்டு வந்தன. திருமழபாடி கல்வெட்டிலிருந்து இது தொடர்பான ஒரு விளக்கம் காணலாம். மலை மண்டிலத்து ஒருபுரம் என்ற ஊரைச் சேர்ந்த வணிகன் ஒருவன் அத்திருக்கோயிலின் மூன்றாம் திருச்சுற்றில் தென் வாயிலில் ஒரு கிணற்றைத் தோண்டினான். அதன் அருகில் ஒரு தண்ணீர்த் தொட்டியை அமைத்தான். வேலையாள் ஒருவனை அங்கு நிறுத்திக் கோயிலுள் வருவோருக்குத் தண்ணீரை எடுத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபடுத்தினான். அப்பணிக்காக வாயிலாகக் குறிப்பிட்ட ஒரு நிலத்தைக் கோயிலுக்கு வழங்கினான். இதனைக் கூர்ந்து நோக்கினால் திருக்கோயிலுக்கு வரும் மக்கள் தம் தூய்மை காப்பதில் எவ்வளவு கண்ணும்கருத்துமாக இருந்தனர் என்று அறியலாம். (திருமழபாடி - மா. இராசமாணிக்கனார் சுதேசமித்திரன் வாரப் பதிப்பு - 19—6—37 )

இவ்வாறு பல்வேறு நிலைகளிலும் அக்கால மாந்தர்களது ஒற்றுமை, நல்லிணக்கம் முதலிய பண்பாடுகளைப் பேணுவதில் சமுதாயம் மேற்கொண்ட கவலையும், ஈடுபாடுகளும் எண்ணற்ற திருக்கோயில் கல்வெட்டுக்களால் விளங்குகின்றன, ஒரு சில சான்றுகளே இங்குக் குறிக்கப் பெற்றன.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச்
சொந்தமான
திருப்பெருந்துறை
அருள்மிகு ஆத்மநாதப்பெருமான் திருக்கோயில்

# 5. திருக்கோயில்களின் அமைப்பும், சிறப்பும் - ஒரு கண்ணோட்டம் :

**1. பெயர்கள் :**

கோயிலைக் குறிக்கும் சொற்கள் பல சிற்ப நூல்களில் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் இறைவனின் உறைவிடம் என்னுங் கருத்தைச் சுட்டுவன, இவை தேவகிருகம், தேவாகாரம், தேவாயதனம், தேவாலயம், தேவகுலம், தேவமந்திரம், தேவபவனம். தேவஸ்தானம், தேவவேஸ்மம், சைத்யம், க்ஷேத்திரம் முதலானவை. அர்ச்சாகிருஹம் என்னுஞ் சொல் வழிபடும் இடம் என்னும் பொருளையும், சைத்யம் என்பது அடுக்கடுக்காகக் கட்டி எழுப்பப்பட்ட கட்டிடம் என்னுங் கருத்தையும் உணர்த்துகின்றன. விமானம், பிராசாதம் என்பவையும் கோயிலைக் குறிக்கும் சொற்களே. மா என்னும் வடமொழி வினையடி அளத்தற்பொருளை உணர்த்தும். வி-மானம் என்பது விசேடமாக அளந்து அமைக்கப்பட்டது என்னும் கருத்தைக் காட்டுகின்றது. இறைவன் பெருமையினை அளத்தற்குச் சிறந்த கருவி என்பதனால் இதற்கு விமானம் என்னும் பெயர் உண்டாயிற்று என்றுங் கூறலாம். நம் அறிவிற் கெட்டியவாறு இறைவனை எல்லைக்குட்படுத்த நாம் கற்பித்துக் கொண்ட ஒரு வகை அளவு என்றும் இதை விளக்கலாம். சிற்பத்தின ஒவ்வொரு அம்சமும் அவனது இயல்புகளை ஒவ்வொன்றாகச் சுட்டி நிற்கும். அமரகோசம் என்னும் வடமொழி நிகண்டு நூல் தேவர்களின் ஊர்தி விமானம் எனக்கூறுகின்றது இவ்வூர்திகளில் தலை சிறந்தது தேர். புட்பக விமானம் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. தேரின் அம்சங்களைக் கொண்டு கோயில்கள் அமைந்திருப்பதை இந்தியச் சிற்பங்கள் எடுத்துக்காட்டுகின்றன. விமானம் என்னுஞ் சொல்லைக் கோயிலைக் குறிக்கப் பெரும்பாலானோர் எடுத்து வழங்கி வருகின்றார்கள் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்பார்கள தத்துவ நூல் வலலார். பிண்டம் என்பது நம்முடல். அண்டம் உலகமாகும். எங்கும் பரந்து வியாபித்து நிற்கும் இறைவன் குடிகொள்ளுவதாகக் கூறப்படும் கோயிலும் உலகமே.

பிராசாதம் என்னுஞ் சொல் வேறு கருத்தை அடிப்படையாகக் கொண்டு கோயிலைக் குறிக்க வந்தது. தம் அழகினால் தேவர்களதும் மக்களதும் உள்ளங்கவர்ந்து அகமகிழ்வினை எய்துவிப்பதனால் இது இப்பெயர் பெற்றது எனச் சிற்பரத்தினம் என்னும் சிற்பநூல் கூறும். அழகுக் கலை பொலியும அமைப்பினோடன்றித் தாம் மறை பொருளாய் நின்று பல தத்துவங்களைத் தெளியவைத்து அகம் மலரச் செய்யும் கோயிலுக்குப் பிராசாதம் என்னும் பெயர் பொருத்தம் உடையது. அரசர்களும் தெய்வங்களும் உறையும் இடம் பிராசாதம் என நிகண்டு எடுத்துரைக்கின்றது. கோயில என்னுந்தமிழ்ச் சொல். கருத்தளவில் பிராசாதத்தை நிகர்த்து நிற்கிறது. அளவைக்கேற்ப உருவாக்கப்பட்ட தோடமையாது, பிரயோகிக்கப் படும் பிராசாதம் முதலான மந்திரங்களினால் நன்கு மந்திரரூபமாகவும் நெருங்கிச் செறிந்து அமைவதனால் திருக்கோயில் பிராசாதம எனப்பட்டது என்று சிலர் விளக்குவர். யோக நெறி நிற்பவன் பிரசாதம் பெறுகிறான் என்று கீதை கூறும். இது புலன்களை யொடுக்கி யோகப் புணர்ப்பெய்துபவன் பெறும அமைதியைச் சுட்டுகின்றது. யோக நெறியில் முன்னேறுபவன் புலன்களொடுங்கப்பெற்று மனங் கட்டுண்டவனும் அல்லற்படாது அடங்கிப் பேரமைதியைப் பெறும்சூழ்நிலையினைத் தோற்றுவிக்க வல்லதாதல் பற்றிக் கோவில் பிராசாதம் எனப் படாலாயிற்று எனலாம்,

கோயில் என்னுஞ் சொல் கோவில் எனவும் வழங்குகின்றது. கோ என்றால் அரசன. இல் என்பது வீடு. ஆகவே கோயில் என்பது அரசனது வீடு ஆயிற்று. முன்னர்க் கூறிய பிராசாதம் என்னுஞ் சொற்பொருள் இதே வகையாக அமைந்திருப்பது நோக்கற்பாலது. இதனால் அரசனது வீடும், தெய்வத்தினது வீடும் ஒரே நிலையில் வைத்து மதிக்கப்படுவதைக் காண்கின்றோம். அரசனைக் கண்கண்ட தெய்வமாகப் பழைய நூல்கள் வருணிக்கின்றன. இந்திரன், அக்கினி, யமன், சூரியன் வாயு, சந்திரன, குபேரன் ஆகிய தெய்வங்களின் அமசங்களை எடுத்துச் சேர்த்து இறைவன் அரசனை உருவாக்குகிறான என மனு நீதி நூல் கூறுகின்றது, எனவே தெய்வமும், தெய்வாம்சம் பெறும் மன்னனும் வசிக்கும் இடம் ஒரே பெயரால் குறிப்பிடப்படுவது பிழையாகாது. அரசன தெய்வங்களின் உயர்நிலையினை வகிப்பதை இதிகாச புராணங்கள் தெளிவாகச் சுட்டுகின்றன.

கோயிலைக் குறிக்கும் இன்னொரு சொல் 'ஆலயம்'. இதுவும் பொருளளவிற் பிராசாதத்தை நிகர்த்து நின்று ஒடுக்கத்தையும், அமைதியினைத் தரும் நிலையமாக விளங்குவதைக் காட்டுகின்றது.

**2. உறுப்புக்கள்:**

கோயிலின் அமைப்பினைக் கூர்ந்து நோக்குவோமே யாகில் அங்குப் பல உறுப்புக்கள் இருக்கக் காண்கின்றோம். இவற்றுள் மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் கட்டிடம் முழுவதும் விமானம் எனப்படும். இதன் மேற் கூரை சிகரம் என்றும் ஸ்தூபி என்றும் பெயர் பெறும். ஸ்தூபியின் கீழ் உள்ள கருவறை கருப்பக்கிரகம் எனப்படும் இதன் வாயில் கிழக்கு நோக்கியதாகவே பெரும்பாலும் அமையும். இந்த வாயிலுக்கு முன் இருப்பது மண்டபம். மண்டபம் அடியவர்கள் கூடி வழிபடுவதற்காக அமைக்கப்பட்டது. மண்டபமும் கருவறையும் ஒரு காலத்தில் பிரிக்கப்பட்டிருந்தன என்பதைக் காஞ்சி கைலாசநாதர் கோயில், மாமல்லபுரம் சிற்பங்கள் முதலியவற்றுல் உய்த்து உணர்கின்றோம். இவ்விரு மண்டபங்களையும் ஒன்று சேர்த்துப் பிணைப்பதற்காக இடையே தொடுக்கும் வகையில் அமைந்த கட்டிடமும் தனிமண்டபமாயிற்று. தொடுக்கும் இக்கட்டிடம் அர்த்த மண்டபம் எனப் பெயர் பெறுகின்றது.

இதுவே கருப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபமாகிய மூன்று மண்டபங்களாகக் கருப்பொருளாய் அமைந்த கருவறை விரிந்த நிலை. இதையடுத்து இவ்வாறு வளர்ந்து உருவாகும் கோயிலைச் சுற்றிலும் பல அறைகள் வரிசை வரிசையாக நாற்புறங்களிலும் அமையும் வண்ணம் கோயிற் கட்டிடத்தை வளர்க்கும வழக்கம் தோனறலாயிற்று. கோயிலைச் சுற்றிலும அமையும் அறைகளின வரிசைகளே நாளடைவில் சுவர்களாக உருவாயின. இவ்வாறு உருவான மதிற் சுவர்களுக்கும் கோயிலுக்கும் இடையில் கருவறையைச் சுற்றி அமையும் இடைவெளி, கோயிலை வலம் வருவதற்குப் பயனபடும வழியாயிற்று. இவ் வழியை வீதி என்றும் பிராகாரம் எனறும் வழங்குவர். பிராகாரம் எனபது முதலில் உள் மதிற்சுவரைக் குறிக்கத் தொடங்கிற்று. நாளடைவில் இவ்வாறு வீதியையே குறிககலாயிற்று. திருவிழாக் காலங்களில் இவ் வீதிவழியே உற்சவ விககிரங்களை வலமாக எடுததுவரும் வழக்கம் இருக்கின்றது. மக்களைப் பொறுத்த அளவில கோயில் இறைவனின் உறைவிடம். எலலோருக்கும் இறையான எம்பிரான உறையும் பதியில் அவனுக்குக் குற்றேவல புரியும் பரிவாரங்களும் இடம் பெறுதல இன்றியமையாததன்றே! எனவே முதலில் கருவறையாகத் தோனறிய கோயில், பின் இம் மண்டபங்கள வேறு மண்டபங்களுடன தொடுக்கப் படுகின்றன. இதே போனற பல அறைகளாலும், சுவர்களாலும, வீதிகளாலும, சூழப்பட்டு அமையும் திருககோயிலுக்கு அங்கமாகத் தனித்தனிச் சிறு கோயிலகள தோற்றுவிக்கப்பட்டன இவை பரிவார தெய்வங்களுக்கென உரிய தனிக்கருவறைகள். இவற்றை விட கருப்பக்கிரகத்தின புறச் சுவர்களிலமைக்கப்பட்ட கூடுகளிலும் விக்கிரகங்கள் இடம் பெற்றன. இக் கூடுகள் 'பஞ்சர கோஷ்டங்கள்' எனப்படுவன.

3. கோயில் கட்டும் முறை தொன்றுதொட்டு நம் நாட்டில் வழங்கி வருகின்றதெனினும் இது கி. பி. 8ஆம் நூற்றுண்டில் சிறந்து விளங்கியதற்குக் கல்வெட்டுகள் முதலான சரித்திர ஆதாரங்கள் பல உண்டு. இதற்கு எவ்வளவு காலத்திற்கு முன் இக்கலை தோற்றம் பெற்றது என்பதை ஆதார பூர்வமாக விளக்குதல் எளிதன்று. எனினும் இவ்வெட்டாம் நூற்றுண்டை யடுத்துப் பல கோயில்கள் புதிதாக உருவாயின. ஏற்கனவே இருந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுப் புத்துருவம் பெற்று விளங்கின. இக் கலை மேன் மேலும் ஓங்கி வளர்ந்ததனுல் பல கற்கோயில்களும் மலைகளைக் குடைந்தெடுக்கப்பட்ட கோயில்களும் ஆயிரக் கணக்காகத் தென்னுடெங்குந் தோற்றலாயின. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கோயிலாவது இடம் பெற்றது.

வைதீக நூல்கள் கூறும் வேதியின் அடிப்படையின் கோயில் உருவாகி இருப்பதைப் பலவாறு பல நிலைகளில் நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. கோயிலின் அடித்தளம் – அதாவது அதிஷ்டானம, பீடம் – எப்புறங்களிலும் நன்கு மூடப்பட்டிருக்கும் கருப்பக்கிரகம், அதன் மேலமைந்து விளங்கும் விமானம், அதன் கீழ் விமானத்திற்கு ஆதாரமாயுள்ள கருவறை ஆகியன, வேதி கோயில் ஆகிய இரண்டிற்கும் பொதுவான அம்சங்கள். இவ்வுறுப்புக்களனைத்தும் கோயிற் கட்டிடக் கலையில் நிரநதரமான இடம் பெற்று இன்றியமையா அங்கங்களாய் விளங்குவன. பாரத மெங்கணும் சென்று நோககினுல் இக்கட்டிடகலை விரிவடைந்து விளங் குவதைத் தெளிவாகக் காணலாம். இவ்வாறு காணப்படுங் கட்டிடங்களுட் சில பிரமிக்க வைக்கும் பிரமாண்டமான கோயிலகளாக இருக்கலாம். சில போகும் வழியில் நாம காணும் சிறுசிறு கோயில்களாகவும் இருக்கலாம.

4. பெருங்கோயில ஒன்றினுள் நுழைந்து கருவறையை நோக்கிச் செல்லும பொழுது தூண்கள பல விரவிய மண்டபங்கள் பலவற்றைத தாண்டிச் செல்லல் கூடும். சில கோயில்களிலோவெனின் இம் மண்டபங்களின் எண்ணிக்கை மிகவும குறைவானதாக இருக்கலாம். நாம் புகுங்கோயிலைச் சுற்றிப் பல சிறு கோயில்கள் அமையலாம. அங்ஙனம் அமையாது இது தனிக் கோயிலாக மட்டும் இருக்கலாம். ஒரு கோயில் கிராமத்தின நடு இடத்தில் சுவர்களாலும், கோபுரங்களாலும் சூழப்பட்டு மிகவும பெரிதாக உயர்ந்து விளங்கலாம. எனினும், விமானத்தின உள்ளுறுப்பும் கருவறையும் ஒரே தன்மைத்தாய் விளங்கும தனி நிலையினையே பலவகைப் பட்ட கோயில்களில் பொதுவாகக் காண்கின்றோம்.

5. கருவறை :

வாயில் தவிர்ந்த ஏனைய நாற்புறங்களும் மேலுங் கீழும் ஆகிய பக்கங்களனைத்தும் அடைபட்ட இடம் கருவறை. கோயில்கள் அனைத்திலும் இக் கருவறைகள் சாதாரணமான அமைப்பினைப் பெற்றவை. தென்னிந்தியச் சிற்ப நூல்கள் இதை அதிஷ்டானம் (தந்த்ர சமுச்சயம் I–II 37, காச்யப சில்பம் X - I) எனவும் பீடம் (சமராங்கண சூத்திர தாரம் L X I) எனவும் பலவாறு கூறும். நன்கு நெருங்கி விசாலமாக விளங்கும் பீடத்தின்மேல வேதியிற் போன்று கருப்பக்கிரகத்தின் சுவர்கள் அமைந்திருக்கின்றன. இதன் அடித்தளம் வேதிகை என்னும் பெயர் பெறுவதும் நோக்கற்பாலது. இவ்வாறு வேதங் கூறும் வேதியே கோயிலின் அமைப்பாக உருவாகக் காண்கிறோம். கோயில், சிதி ஆகிய இரண்டுமே வெளியே இருந்து நோக்கும் பொழுது ஒன்றின் மேலொன்றாக வரிசையாய் அடுக்கி உருவாக்கப் பட்டவையாய்த் தோற்றமளிக்கின்றன. இது வெறுங் கட்டிடம் மட்டுமல்ல. பிராசாதம் முழுவதுமே சிதியாக அமைந்து விடுகின்றது. சொல்லமைப்பினைக் கொண்டு நோக்கும் பொழுது சிதி, பிராசாதம், சத்ம, சதனம் ஆகியவை அனைத்தும் இக்கருத்தினையே வலியுறுத்துவன.

6. கோயில் சைத்தியமாக விளங்குவதனால்கோயிலின் வெளித்தோற்றம் மக்கள் கண்டு தரிசிப்பதற்கு உரியதாக விளங்குகின்றது. வழிபடுதற்வதற்கு உரியதாக கோயிலை அமைப்பதற்கு இஷ்டகா எனப்படும் செங்கல் இன்றியமையாததாகின்றது. மரக்கட்டைகள் தாமும் மரத்தால் முழுவதும் அமையுங்கட்டிடத்துக்குப் பயன்படுத்தப்படும் வேளை இஷ்டகா எனப் பெயர் பெறுகின்றன. வழிபடுதல் என்னுங் கருத்தைக் குறிக்கும் யஜ் என்னும வினையடியிற் பிறந்த இஷ்ட என்னும் பெயரெச்சம். 'வழிபடப்பட்ட' என்னுங் கருத்தை உணர்த்திச் செங்கல்லைக் குறிக்கின்றது. கோயிலைக் குறிக்கும் சைத்யம் என்னுஞ் சொல் சிதி என்னுமடியிற் பிறந்தது. மகாபாரதத்தில் லைத்யங்களும் யூபங்களும நிறைந்ததாக நகரங்கள் வருணிக்கப்படக் காண்கின்றோம். இராமாயணமும தேவாயதனத்தையும் சைத்தியத்தையும் குறிப்பிடுகின்றது. இது தேவர்கள் வசிக்கும் கோயிலாகவும, அக்கினியின் உறைவிடமாகவும் விளக்கம் பெறலாம், இராமாயணத்தில் வீடு (கிருகம்) என்ற சொல இறுதியில் பொருந்தி பிரயோகத்தில் வருமாறு சைத்யகிருகம் எனனுஞ் சொல் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனித்தல வேண்டும.

7. வகைள் :

இந்தியற் கோயிற் கட்டிட வகைகளை மூன்று பிரிவுகளாக வகுப்பார்கள். அப்பிரிவுகள் நாகரம், வேசரம, திராவிடம் என்பன. நாகரம் எனனும் பிரிவைச் சார்ந்த கோயில்கள் வட இந்தியாவில் உள்ளவை, இவ்வகைக கோயிலகள் அடியில் இருந்து உச்சிவரை நாற்சதுரமாக அமையும். வேசரம் என்னும் இனத்தைச் சார்ந்தவை, பௌத்தக் கோயில்கள். நில அமைப்பிலும், விமான அமைப்பிலும், கட்டிடத்தைப் பொருத்த அளவிலும் வட்டவடிவமாக அமைபவை. இவற்றுட் சில அரைவட்ட வடிவமாகவும் காணப்படுவன. தென்னிந்தியக் கோயில்களுள் சில இவ்வாறு இருக்கக் காணலாம். திராவிடம் என்னும் பிரிவைச் சார்ந்த கோயில்கள் தென்னிந்தியாவில் பெருகிக் காணப்படுவன. கன்னியாகுமரி ஈறாகத் தென்னாட்டில் வழங்குவது திராவிடச் சிற்ப முறையே. தமிழர்களும் ஹொய்சலர்களும், சாளுக்கியர்களும், இவ்வகைக் கோயில்களையே எழுப்பியுள்ளார்கள். இவர்களுட் பல்லவர்கள், சோழர்கள். பாண்டியர்கள், விஜய நகர மன்னர்கள் தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்களே,

8. நடுவில் அமைந்திருப்பது கருஅறை. இதன் வெளிப்புறச் சுவர்களில் மூன்று பக்கங்களிலும் கோஷ்ட பஞ்சரங்கள் உண்டு, இவை விக்கிரகங்கள் வைப்பதற்காக அமைக்கப்பட்டவை. தென்புறச் சுவரில் உள்ளகோஷ்ட பஞ்சரத்தில் தட்சிணாமூர்த்தி இடம்பெறுவர், மேற்கேயுள்ள கோஷ்ட பஞ்சரத்தில் இலிங்கோற்பவரை நிறுவுவார்கள். வடக்கேயுள்ள கோஷ்ட பஞ்சரத்தில் பிரமன அல்லது நாராயணி (துர்க்கை) ஆகியோரின் விக்கிரங்களைப் பிரதிட்டிப்பார்கள். வடபக்கத்தில் சுவரிலிருந்து வடக்கு நோக்கியவாறு கோமுகை இடம்பெறும். கருவறையை அடுத்து அதனுடன் தொடுக்கப்பட்டவாறே முன்னே இருப்பது அர்த்த மண்டபம். இதன் வாயிலில் துவார பாலகர்கள் இடம் பெறுவார்கள். அர்த்தமண்டபத்தின் இரு பக்கச் சுவர்களிலும் புறத்தே, இரு கோஷ்ட பஞ்சரங்கள் உண்டு. அர்த்த மண்டபத்தின் முன்னர் இருப்பது மகா மண்டபம், கருப்பக்கிருகத்திற்கு இடது பக்கத்தில் தெற்கு நோக்கியவாறு தேவியின ஆலயம் அமையும. இதற்கும் கருவறையும் அதன முன் அர்த்த மண்டபமும உண்டு. இறைவன, தேவி ஆகிய இருவரது அர்த்த மண்டபங்களின் முன்பாக இருவருக்கும பொது வாகவே மகா மண்டபம் பெரும்பாலும் அமையும். இருவருக்கும தனிதனி மகா மண்டபங்கள் அமையும் இடங்களும் உண்டு. தேவிக்குத்தனி ஆலயம், அமைக்கும் வழக்கு பிற்காலத்தில் ஏற்பட்டது என ஆராய்ச்சியாளர் கூறுவர். மிகப் பழைய கோயிலகளில் கருவறையிலேயே ஒரு பக்கலில் இடம பெறுவள். அன்றிக் காஞ்சியில் காமாட்சி அம்மன ஆலயம் விளங்குவது போன்று தேவியின் ஆலயம் இறைவன ஆலயத்தைக் காட்டிலும் தொலைவில் புறமபாகக் காணப்பட்டது என்று கருத இடமுண்டு.

9. மூவகைகள் - வேறு வகை :

தேவலாலயம், மிச்ராலயம், சங்கீர்ணாலயம் என மூவகையாலயங்களை நூலகள் கூறுகின்றன. இறைவனுக்கு மட்டும் கோயில் அமையும்பொழுது இது தேவலாலய மாகும். முன்னர்க் கூறியபடி இவ்வகைக் கோயில்கள் வடஇந்தியாவிலேயே பெருமபாலும் காணப்படுவன,

இறைவனுக்கும் தேவிக்குமாகக் கோயில் அமையும் பொழுது மிச்ராலயமாகும். பிரிவாரங்களுடன் இறைவன் தேவி இருவருக்கும் அமையும மூன்றும் வகைக் கோயில் தென்னுட்டிலும் இலங்கையிலும் பெருகிக காணப் படுகின்றன.

10. இறைவன் ஆலயத்தில் உட்பிராகாரத்திலே அதன் எல்லையிலே, உட்பிராகாரத்தை நோக்கியவாறு வலப்புறத்தே விநாயகன் ஆலயமும், இடப்புறததில் கந்தன ஆலயமும், இடம் பெறும். இவைகளும ஒரு காலத்தே தனித்தனிக் கோயில்களாக விளங்கியிருக் கலாம. நாளடைவில் விநாயகனும், கந்தனும், பரிவார தெய்வங்களாக இடம் பெற, இவை தனிக் கோயில்களாக சிவபிரானது ஆலயத்துக்கு உறுப்பாக நிறுவப்பட்டுள்ளன என்பதை ஆராய்ச்சியாளர் ஆதாரங்ககொண்டு விளக்குவர்.

## 11. மண்டபங்கள் :

இறைவன் திருக்கோயிலில் பலவகை மண்டபங்கள் இடம் பெறுவன. இவற்றுள் முக்கியமானவை அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், பதினறு கால மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் என்பன. இவற்றைவிட ஸ்நபனமண்டபம், கேயமண்டபம், வாதயமண்டபம், முக மண்டபம், சோபானமண்டபம், கோபுரத்வாரசாலா மண்டபம், ஆஸ்தான மண்டபம். யாக மண்டபம, புஷ்பமண்டபம, பூஜாமண்டபம், விஜய மண்டபம், பிரதக்ஷிணமண்டபம், உத்யாணமண்டபம், ஸ்ரீவல்லிமண்டபம், ஸ்ரீசூர்ணமண்டபம, கிருஷ்ணகந்த மண்டபம், ஜலக்கிரீடாமண்டபம் சதுரஷ்டஷோடச ஸ்தமப மண்டபம் சதுஷ்ஷஷ்டிஸ்தம்ப மண்டபம், சதஸ்தம்ப மண்டபம, சஹஸ்ரஸ்தம்ப மண்டபம், கந்தமண்டபம, சுவர்ணமண்டபம், அபிஷேக மணடபம், அலங்காரமண்டபம, வசந்தமண்டபம், உபகாரமண்டபம், டோளாரோஹணமண்டபம், அத்திய யனமண்டபம், ஆகமமணடபம, புராணமண்டபம், தீக்ஷாமண்டபம், வீணுமண்டபம், துஜா ரோஹண மணடபம், ரதாரரோஹணமண்டபம் முதலிய மண்ட பஙகள் ஆகம கிரியை நூல்களிற் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 12. பரிவாரக் கோயில்கள் :

விருஷப தேவர், அக்கினி, மாதரர்கள், கணேசன், கந்தன், ஜ்யேஷ்டாதேவி, துர்க்கை, அடியவர்கள், பைரவர். சூரியன், சந்திரன், நடராஜர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நந்தி, அகோரமூர்த்தி, லக்ஷ்மி, விஷ்ணு, குருமூர்த்தி, வடுகன, பத்ரகாளி, கௌரி முதலிய பரிவார தெய்வங்களின் உறைவிடங்களும, பாகசாலை, யாகசாலை, கோசாலை, கஜசாலை, வாத்யசாலை, முதலிய சாலைகளும், ரத்னலயம, தனலயம், தானயாலயம், சண்டேசுவராலயம் முதலிய ஆலயங்களும் இறைவன் திருக்கோயிலில் உரியவாறு இடம் பெறுவன. நவக்கிர கங்களின் ஆலயமும், சனிசுவரனலயமும, பிற்காலத்திற் சேர்க்கப்பட்டுள்ளன.

## 13. ஆறு பகுதிகள் :

கோயில் கருவறையின் அமைப்பைக் கொண்டு அதை ஆறு பகுதிகளாகப் பிரிக்கலாம். இவை அதிஷ்டானம், பாதம, மஞ்சம், கண்டம், பண்டிகை, ஸ்துபி எனப்படுவன. அதிஷ்டானம், மசூரகம், ஆதாரம், தலம், பூமி, முதலியன ஒன்றையே குறிக்கும் பல பெயர்கள். கருப்பக்கிரகத்தை உடல், கருவறை, கால், பாதம், ஸ்தம்பம், கம்பம், முதலிய பெயர்கள் குறிப் பிடுவன. மஞ்சம் என்பது தளவரிசை. இதையே தோள் என்றும், பிரஸ்தரம் என்றும் கபோதம் என்றும் கூறு வார்கள். கண்டம் என்னும் நான்காவது உறுப்பிற்குக் களம். கர்ணம், கழுத்து என்னும் பெயர்கள் உண்டு. ஐந்தாவது உறுப்பு பண்டிகை. இது கூரையாக அமையும் பகுதி. இதற்குச் சிகரம், மஸ்தகம், சிரம், தலை என்னும் பெயர்கள் உண்டு. ஆறுவது உறுப்பான ஸ்தூபி, முடி, சிகை, சூளம் எனப் பெயர்பெறும். கலசம் என்னும் பெயர் இதற்குச் சிறப்பாக அமைந்துள்ளது. கரு வறையின் முக்கிய அம்சங்களை பாதபந்தம், பத்மபந்தம், பத்மாச்ரய பந்தம், பக்த புஷ்கர பிரதி கம்பு கண்டம், ஸ்ரீ கண்டம், பட்டிகை, ஸ்தம்ப மகாபட்டிகை, தள வேதிகை, பாதம், தோரணம், கபோதம், கீழ் போதிகை, உத்தரகபோதிகை, மேல் வியாளம், நாசிகை, கூடசாலை, பஞ்சரங்கள், முதல் தளம், இரண்டாந்தளம், மூன்றுந் தளம, நான்காந்தளம், ஐந்தாம் தளம், ஆறும்தளம், ஏழாந்தளம், எட்டாந்தளம, ஒன்பதாந்தளம், விருஷ பதளம், கர்ண நாசி, அநு நாசி, மகாநாசி, அக்ரசிகரம், ஸ்தூபி என அடித்தளத்திலிருந்து ஸ்தூபி வரை தனித் தனியே சிற்ப நூலகள் கூறுவன.

## 14. அமைப்பு ஆக்கம் :

கோயிற் கட்டிடங்களுக்கு நான்கு பொருள்கள் முக்கிய மாகப் பயன்பட்டன. இவை மரம், சுண்ணும்பு செங்கல், கல் என்பன. இவற்றுள் மரத்தால் அமைந்த கோயில்கள் மிகப் பழமையானவை. கட்டிடம் முதலிய ஆக்க வேலை களை மரத்தைக கொண்டே அமைத்தனர் என்பது இருக்கு வேதத்தில் உள்ள ஒரு பாடலைக் காட்டி, தெளிவுறுத் தலாம. எந்த மரததை வெட்டிப் பயன்படுத்தி விண்ணும், மண்ணும் சேர்ந்தமையும் இவ்வுலகத்தை நிறுவி யுளளார்கள் (இருக்கு வேதம் X 81 4) என்னும் வினவுடன் இப்பாடலின் தொடக்கம் அமைகின்றது. தைத்திரீய பிராமணத்தில் இதற்கு விடை கூறுவது போனற பகுதி காணப்படுகின்றது. பிமமம் என்ற மரத்தைக் கொண்டே ஆகாயமும், பூமியும உருவாக்கப் பட்டுள்ளன என இப் பிராமணம் விளக்கிக் கூறும்.

கோயிற் கட்டிடம் மரத்தாலாவது, செங்கல்லாலாவது கல்லாலாவது அமையினும் அது அளவைக்கு மிகவும் கட்டுப் படுத்தப்பட்டே ஆக்கப்படுவது. இணைக்கும் பொருள்கள இல்லாத தொடக்க நிலையில் கற்களை அப்படியே அடுக்கி வைத்தனர். மரங்களைப் பிணைப்பதற்கு இரும்பு, 'அள்ளு' களைப் பயன்படுத்தினர். இதைத் தொடர்ந்து வஜ்ரலேபம், அதாவது சுண்ணும்பினுல் அமைந்த சாந்து பயன்படத் தொடங்கியது சுண்ணுமபை வேலை செய்வதற்காகச் சேகரிக்கும் முறையினைச் சிற்ப நூல்கள் கூறுகின்றன. சுட்ட சங்கினைப் பொடியாக்கிய சூர்ணமும், வெள்ளை மணலும், பசையுள்ள இன்னும் சில பொருள்களும் கலக்கப்பட்டு சாந்து உருவாகின்றது. ஜ்ரலேபம் எனருல் மிகவும் வைரமாக நெடுங்காலம் சிதையாது இருக்கத் தக்க பூச்சு எனச் சில்ப ரத்னம் ( XIV 58 75 ) கூறுகின்றது. இதைக் கலந்து இரண்டு மாதங்களாவது நான்கு மாதங்களாவது பகுவமுறும் வண்ணம் வைப்பார்கள். இவ்வாறு செய்தல் கட்டிடம் நெடுங்காலம் கெடாதிருப்பதற்கு உதவும். இதைக் கொண்டு செய்யப்படும் சுதை வேலை மிக எளிதாகவும், நன்கு பிரகாசமுடையதாகவும், மெருகூட்டப்பட்டதாகவும் விளங்கும், செங்கல்லாலும், கல்லாலும் சாந்தை இணைப்பிற்குப் பயன்படுத்திக் கட்டிடம் கட்டுங்கலை, தென்னிந்தியாவில் நன்கு வளர்ந்து வந்தது.

கோயிற்கட்டிடங்களின் மேல்உருவங்களை இவ்வாறு நம் முன்னேரான சிற்பிகள் பன்னெடுங்காலத்திற்கு முன்னரே அமைத்திருக்கக் காண்கின்ரேம். காஞ்சிபுரம் கைலாசநாதர்கோயில் கல்லால் அமைந்த சிற்ப வேலைகளில் நுட்பமாக உருவாக்கப்பட வேண்டிய பகுதி மட்டிலும் சாந்தால் அமைந்து விளங்குகின்றது. சாந்தால் அமைந்து வெள்ளொளி பரப்பி நிற்கும் கோயில்களைப் பற்றிக் கூறுங் கல்வெட்டுகள் பல. இவ்வெண்மை சாத்துவிக குணம் மிகுந்த நிலையினையே சுட்டுகின்றது. அடியிற் பரந்த கன்ற விமானம் படிப்படியாகச் சுருங்கி ஒடுங்கித் தனிச் சிகரமாக விளங்கும் கேவல நிலையை அடைவதும் இச் சாத்துவிக நிலையையே சுட்டும் எனச் சிற்பம் வல்ல தத்துவ ஞானிகள் கூறுவார்கள். முக்குணங்களுக்குரிய நிறங்கள் முறையே வெண்மை, செம்மை, கருமை ஆகியன இவற்றின் இயலபும் அவ்வாறே உயர்தல், அகலுதல், இறங்குதல் (தாழ்தல்) என்னும் மூன்றுமாம். இவை பிரகிருதியின் உள்ளுறுப்புக்கள், இவற்றைக் கொண்டு அமைவதே உலகின இயற்கை.

சில கட்டிடங்கள் கல்லாலும், செங்கல்லாலுங் கலந்து கட்டபபட்டிருக்கக் காண்கினரேம. கோயிற் கட்டிடத்தின் பெருமபகுதி செங்கலலாலமையும. வாயிலில் பொருத்தப்படும் நிலையும, கருவறையின் சுவர்கள் முதலிய பெருமபகுதியும் கருங்கல்லால ஆக்கப்படும. கருவறையின மேல விளங்கும் விமானம முதலியனவற்றின் அமைப்பு செங்கற்களால் உருவாகும்.

மரம், செங்கல், சாந்து, கல் ஆகிய பொருள்களெல்லாம் கருத்தில் தோன்றுவதை உருவாக்கக் கருவிகளாய் விளங்கும் வெறுஞ் சாதனங்களாகும். இவற்றை அடிப்படைப் பொருள்களாகக் கொண்டே கட்டிடங்களும், கட்டிடங்களில் இடம் பெறும் உருவங்களும் உருவாகின்றன. எனினும் இப்பொருள்கள் கட்டிடத்தில் அவ்வவற்றிற்குரிய இடங்களில் பொருந்தி உறைந்து விடுகின்றன. இவ்வாறு உறைதல் பற்றி பிராசாதமாய் உருப்பெறுகின்றன. இவை கோயிலை உருப்பெறச் செய்வது மட்டுமின்றி அதற்கு உயிரூட்டும் உள்ளுறுப்புக்களாயும் விளங்குவன. ஈற்றில் இறைவன் உறைவிடமான கோயிலை உருவாக்கப் பயன்படும் இப்பொருள்கள் உள்ளுறையும் இறைவனுக்குப் புற உடலை உருவாக்குகின்றன. இந்நிலையில் நின்று நாம் கோயிலை நோக்கும்போழுது, எவ்வெப்பொருள்களால் கோயில் அமைக்கப்படுகின்றது என்ற விசாரணைக்கு இடமே இல்லை. இது பல பொருள்கள் கலந்து உருவாயிற்ரு, அன்றேல் இது ஒன்றன் மேல் ஒன்ருக பொருள்கள் அடுக்கிப் பொருத்தப்பட்டதனுல் கட்டிடம் ஆயிற்ரு? எவ்வாறு உருவம் பெற்றது என்ற கேள்விகளை ஒன்றன் மேல் ஒன்ருக அடுக்கி விசாரணை செய்ய இடமில்லை, நிறைவு பெற்ற திருக்கோயிலைக் கண்டதும் அக்காட்சி அமைக்கவேண்டும் திறனைச் செவ்வனே சிற்பி கையாண்டதனுல் ஒரே தோற்றம் வாய்ந்து ஒரே பொருளாக விளங்கும் கோயிலை ஒரு தனி உருவாக மனித்திற் பதிய வைக்கும் நிலையே தரிசிப்பவர்களுக்கு ஏற்படும். இந்நிலையில் செங்கல், மண், சாந்து, கல் ஆகிய பொருள்கள் மறைந்து விடுகின்றன. இத் தோற்றம் விளைவதற்காக இப்பொருள்களைச் செவ்விதாகக் கையாளும் சிற்பிக்கு மூவகைப் பண்புகள் வேண்டப்படும் என்பன சிற்பநூல்கள். இவை, பரம்பரையாக வழிவந்த அறிவு, உண்மையினை உய்த்துத் தாமே உணர்தல், இறையன்பு என்னும் மூன்றுமாம்.

செங்கல்லால் அமைந்த கட்டிடங்களையுடைய கோயில்கள் பல. கற்சுவர்களை உடைய கோயிலின் மேல் தளங்களின் மட்டும் செங்கலலால் அமைந்த வேலைப்பாடுடைய கோயில்களும் உண்டு. செங்கல்லும் மரமும் கலந்த கட்டிடங்கள் அநேகமாக மறைந்து விட்டன. இவை மிகப் புராதனமானவை, இந்தியாவில் இரு இடங்களில் மட்டுமே இவை பேணிப் பாதுகாக்கப் பட்டுள்ளன. மலையாளமும், இமயமலையை அடுத்த பகுதிகளும் இப் பிரதேசங்களாகும். மயமதம் என்னுஞ் சிற்பநூல் ( XV, 114 - 120 )செங்கல் அமைக்கும முறையை குறிப்பிடுகின்றது. இங்குக் கூறப்படும் முறையினைப் பறறிய அறிவுடன் பரம்பரையாக வரும் அநுபவமும் சேர்ந்தே இதைத் திறம்பட அமைக்க உதவுகினறது, செங்கல், யாகத்தின் உடல் எனக் கூறப்படும் (தைத்திரிய சங்கிதை ( IV. 4 - 9 ( யாக உடலை உருவாக்குவதற்குச்

செங்கல் இன்றியமையாதது. மண்ணும் நீரும் அதன் உறுப்புக்கள். பல கற்கள் சேர்ந்து வேதி உருவாகும் பொழுது செங்கல் என னும் நிலை மறைந்து விடும். ஒன்றின் மேலொன்ருக அடுக்கப்பட்ட செங்கற்கள் இதன் விளைவாக கட்புலனுகாது சமஷ்டி ரூபமாய் விளங்கும். அவற்றின் சாரபூதமான தோற்றமே புலனுவது. இதே போன்று அமைவதே திருக்கோயிலிலும், கருப்பக் கிருகத்தின் மேற்கூரையின் நடுவில் விளங்கும் சிறு துவாரத்தினை (பிரமரந்திரம்) நடுமையாகக் கொண்டு நாலா பக்கமும் அகன்று வளர்வது கோயில், வளரும் நிலையில் அது ஓர் ஒழுங்கிற் கேற்ப அகன்று கொண்டே செல்லக் காண்கின்ருேம். இச் செங்கற்கள் இந்நடுமையத்தி லிருந்தே அகன்று சென்று முறையே இடம்பெறுவன. நடுமையம் நிறுவப்பட்ட தொன்று அகலதலும் சுருங்குத லும் கட்டிடநிலைக்கேற்ப வேறுபட்லாம். அகலும் பொழுது ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனிப்பெயர் உண்டு.

**15. தூண்கள் :**

மண்டபங்களின் பல்வேறு பிரிவுகள் கூறப்பட்டன. இவற்றுள் தூண்கள் முக்கிய இடம் பெறுவன, மண்ட பங்களுக்குத் தக்கவாறு தூண்களின் எண்ணிக்கை வேறு படும். தூண்கள் சிற்பி தன் கைவண்ணத்தையும், சிற்ப நூற்புலமை சுவறிய நுண்ணறிவையும் புலனுக்க வாய்ப்பு அளிக்கின்றன. தூண்கள் கல்லினுலும் மரத்தினுலும் செங்கல்லினுலும் அமையலாம். இப்பொருள் களைக் கொண்டு கட்டுந் தூண்கள் வேறுபடுமாற்றை மானசாரம் சுட்டுகின்றது. சுத்தம், மிச்சரம் சங்கீர்ணம் எனத் தூண்களின மூவகைப் பாகுபாடுகள் இவ்வேறு பாட்டால எழுகின்றன. தனி ஒரு பொருளைக் கொண்டு கட்டப்படும் பொழுது தூண் சுத்தம் என்னும் வகையைச் சார்ந்ததாகும். இரு பொருள்களைக் கொண்டு கட்டப் படுந்தூண் மிச்ரம் என்னும் வகையினதாகும். மூன்று பொருளகளைக் கலந்து உருவாக்கப்படும் தூண் மூனருவதான சங்கீர்ண வகுப்பைப் பற்றியது. இதைத் தூணுக்கு மட்டுமல்லாமல் கோயிலின் முழுக் கட்டிடத் திற்கே பொருத்திக் கூறுவார்கள்.

தூண்களின் அதிஷ்டானம் பதினறு பிரிவுகளை யுடையது. பாதபந்தம, உரகபந்தம், பிரதிக்ரமம், குமுதபந்தம், ஸ்ரீ பந்தம், மஞ்சபந்தம், சிரேணிபந்தம், பத்மபந்தம, கும்பபந்தம், ( கலசபந்தம் ) வப்ரபந்தம், வஜ்ரபந்தம், ரதனபந்தம், பட்டபந்தம். கம்பபந்தம், குக்ஷிபந்தம், ஸ்ரீ காந்தம் என்பன இப்பிரிவுகள். ஸ்தம்ப லக்ஷணங் கூறும் மானசாரம் ( XV ) அதன அளவை, வடிவம், அழகுப் பொலிவு, நுண்ணிய வேலைப்பாடு, மடிப் புக்கள், தூணசெய்வதற்குகந்த மரங்களைத் தேர்ந்தெடுத் தல, தூணகளை நாட்டுதல முதலியன பற்றியும் எடுத்து உரைக்கின்றது.

தூண் சதுர வடிவாகவேனும், எண்கோண வடிவாக வேனும, பதினறு கோண வடிவாகவேனும் ஐங்கோண வடிவாகவேனும், அறுகோண வடிவாகவேனும், உருவாக லாம். இவ்வகைத் தூண்கள் முறையே பிரமகாந்தம், விஷ்ணுகாந்தம், உருத்திரகாந்தம், ஐங்கோணம், அறு கோணம் எனப் பெயர் பெறுகின்றன. தூணில் அதிஷ் டானம் சதுர வடிவினதாய் அமையலாம். தூணில் அடியும் முடியும் உரியவாறு ஒரே தன்மையனவாய் இருத்தல் அவசியம். மேற்கூறிய ஐவகைப் பிரிவுகள் தாமும் குறிப் பிடப்பட்டவாறு அலங்கார வேலைப்பாடுகளை உடையன வாவதையொட்டி சித்ரகர்ண ஸ்தம்பம், பத்மகாந்த ஸ்தம் பம், சித்திரகும்ப ஸ்தம்பம், பாலிசா ஸ்தம்பம், கும்ப ஸ்தம்பம் எனப் பெயர் பெறுவன. ஆருவது வகையான கோஷ்ட ஸ்தம்பத்தையும் சிற்ப நூல்கள் கூறுவன. இதற்கு குட்யஸ்தம்பம் என்ற பெயரும் உண்டு. முதற் கூறிய ஐவகை தூண்கள் தூணினது கம்பங்கள் எனப் படும் பகுதியின் ஆகிருதியைக் குறிப்பவை. பின்னர்க் கூறிய ஐந்தும் தூண்களின் தலையில் உள்ள நுண்ணிய வேலைப்பாட்டினைப் பற்றியவை. மண்டபங்களில் தூண்கள் பலவாகப் பெருகும்பொழுது அவை வரிசை யாக அமைதல் அவசியம். மண்டபங்களில் சிறு தூண்க ளும் இடம்பெறுவன. இவற்றிற்கு உபஸ்தம்பங்கள் எனப் பெயர் உண்டு. இச் சிறு தூண்கள் பெருந் தூண் களின் அளவைக்கு ஏற்றதா யமையும் வகையை நூல்கள் கூறுகின்றன. ஒரு பெருந் தூணுடன் சிறு தூண் சேரும் பொழுது ஏககாந்தம் எனவும், இரு சிறு தூண்கள் சேரும் பொழுது துவிகாந்தம் எனவும், மூன்று சிறு தூண்கள் சேரும் பொழுது திரிகாந்தம எனவும், நான்கு சிறு தூண்கள் சேரும்பொழுது பிரமகாந்தம் எனவும், ஐந்து சிறு தூண்கள் சேரும் பொழுது ஸ்கந்தகாந்தம் எனவும் எட்டுச் சிறு தூண்கள் சேரும பொழுது விஷ்ணுகாநதம் எனவும் பெயர் வழங்கும். கோயிற் சிற்பங்களில் சிறப்பாகத் தென்னிந்தியச் சிற்பங்களில, தூண்களின் அமைப்பே பல்வகைச சிறப்புவாய்ந்தது. தூண்களின் தலை, பாதம் இரண்டும நீங்கிய நடுக்கம்பத்தில். நான்கு பக்கங்களிலும் தெய்வங்களின உருவங்களையும, யாளி, சிங்கம் முதலிய வற்றையும் திறம்பட அமைக்கும மரபு தென்னுட்டுத் தேவ ஆலயங்களில் உண்டு.

**16. பிராகாரங்கள் :**

கோயில்களுக்கு அழகைக் கொடுப்பவை பிராகாரங் கள். இப் பிராகாரங்கள் வளரும்பொழுது கோயிலைச் சுற்றித் திட்டமிட்டு அமைக்கப்படும நகரம ஒன்று பல வனப்புகளுடன் உருவாகிறது. சிற்ப நூல்களும ஆக மங்களும கூறும இந்தத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு விரிந்த நகரத்திற்கு எடுத்துக்காட்டு, பாண்டி நாட்டின் சிகரமாக விளங்கும் மதுரை மா நகரம. இந்நகரம் ஆலயத்தை நடுவகமாய்க் கொண்டு விரிந்தது. பல பிரா காரங்களைக் கொண்டது. நாகரிகப்போககில் விதிகளைக்

கடைப்பிடிக்கும் முறை தளர்த்தப்பட்டிருக்கக் காண்கிறோம். எனினும், கோயில் அடிப்படையிலேயே தோன்றி பிராகாரங்களாக விரிந்து பெரு நகரம் உருவாகி அழகு பொலிந்து விளங்குவது கவனிக்கற்பாலது.

கருப்பக்கிரகம் பிராகாரங்களால் சூழப்பட்டு விரியும் முறையைக் காரணாகமம் விரிவாகக் கூறியுள்ளது. அந்தர் மண்டபத்தையடுத்து முதல் பிராகாரமும், இரண்டாவதாக அந்தர் துவாரத்தையடுத்து இரண்டாம் பிராகாரமும், மத்யபிராகாரம் மூன்றாவது பிராகாரமாகவும், மர்யம் நான்காம் பிராகாரமாகவும், மஹாமர்யம் ஐந்தாம் பிராகாரமாகவும் அமையும். இவற்றின் அளவைத் தனித்தனி ஆகமங்களிலும் சிற்பநூல்களிலும் கூறப்பட்டுள்ளது. பிராகாரங்களைச் சுற்றிச் சுவர்கள் அமையும். இச் சுவர்கள் பித்தி என்றும், மதில் என்றும் பெயர்பெறும். ஐந்து பிராகாரங்களையாவது, மூன்று பிராகாரங்களையாவது அல்லது ஒரு பிராகாரத்தையாவது கொண்டு கோயில் அமையலாம். ஒவ்வொரு பிராகாரத்திற்கும் தனித்தனி கோபுரம் அமைவதே முறை. இவ்வாறு நான்கு திக்குகளிலும் கோபுரங்கள் எழும் பொழுது அவற்றின் எண்ணிக்கை பெருகும். இவ்வாறு அமையும் பிராகாரங்களிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும் நகரம் விரிந்துருவாவதை நோக்குவோம். அக்கினி திக்கில் அமைவது பனவாலயம். இரண்டாம் பிராகாரத்தில் வடகிழக்கு மூலையில் கிணறு இடம் பெறும். கிழக்குக்கும் வடகிழக்குக்கும் நடுவில் இருக்கவேண்டியது வாத்தியசாலை. கிழக்குக்கும் தென் கிழக்குக்கும் நடுவில் பொக்கிஷசாலையை நிர்மாணித்தல் வேண்டும். தெற்குக்கும் தென்கிழக்குக்கும் இடையில் புஷ்ப மண்டபம் இடம்பெறும். தெற்குக்கும் தென்மேற்குக்கும் இடையில் குளிப்பதற்கு என அமைக்கப்பட்ட திருக்குளம் இருத்தல் வேண்டும். தென்மேற்குக்கும் மேற்குக்கும் இடையே விளங்குவது தர்ம சிரவண மண்டபம். மேற்குக்கும் வடமேற்குக்கும் நடுவில் ஆயுத மண்டபம் இருக்கும். வட மேற்குக்கும் வடக்குக்கும் நடுவில் பள்ளியறை அமையும். வடக்குக்கும் வடகிழக்குக்கும் இடையில் யாகமண்டபம் இடம்பெறும். கோயிலின் முன்பு நடுவதாக அமைவது ஆஸ்தான மண்டபம்.

**17. ஓவிய மாண்பு:**

அரசர்களுடைய அரண்மனைகளிலும் செல்வர்களின் இல்லங்களிலும் உள்ள கட்டிடச் சுவர்களில் ஓவியங்களை வரைந்து அழகுபடுத்தும் வழக்கம் நெடுநாளாக இருந்து வருகின்றது. இவ்வாறு விளங்கிய சுவரோவியங்கள் தான் தொன்மை மிக்கவையாக நெடுங்கால வழக்கில் இருந்துவந்ததற்கு இலக்கியங்கள் சான்று பகருகின்றன. இவ்வாறு ஓவியங்கள் பொலிந்து விளங்கிய இடங்கள் சித்திரமாடங்கள் எனப்படுவன. இந்நிலை கோயிலிலும் காணப்படுவதொன்றாகும்.

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலிலும், தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயிலிலும், புதுக்கோட்டை சித்தன்ன வாசலிலும் பழைய ஓவியங்கள் இடம்பெறக் காண்கின்றோம். குகைக் கோயில்களிலும் சித்திரங்கள் சுவரில் தீட்டப்பெற்றுக் கவர்ச்சி மிக்கனவாய்த் திகழ்கின்றன. குகைச் சுவர் மட்டமாயமைந்த பின் அதன்மீது சுண்ணாம்பு பூசப்பட்டு, அதனமீதே ஓவியங்கள் வரையப்பட்டன. இவ்வகை ஓவியங்கள் பல விரைவில் அழிந்து போகும் இயல்பு வாய்ந்தமையாலும் போதிய பாதுகாப்பு இல்லாததனாலும், அவற்றின் தொன்மை பற்றியும் அழிந்தொழிந்தன.

தென்னாட்டில் நாமறியக்கூடிய தொன்மையான ஓவியங்களைக் கால எல்லையைக் கருத்திற் கொண்டு, சித்தன்ன கோயில் வாசல் குகை ஓவியம், காஞ்சி கைலாசநாதர் கோயில் ஓவியம், தஞ்சைப் பெருங்கோயில் ஓவியம் என வரிசைப்படுத்திக் கூறுவர். திருநெல்வேலியைச் சார்ந்த திருமலைபுரக் கோயிற் பழைய சுவர்களிலும் சுவரோவியங்கள் காணப்படுவன. தஞ்சை, மதுரை ஆகிய இடங்களில் அரசு வீற்றிருந்த மன்னர்களின் கோயில்களும் ஓவியக்கலையைப் பெரிதும் வளர்த்தன.

கோயிலின் உள்ளே நின்று கூரையை நோக்கி அண்ணாந்து நோக்குவோமானால் அங்கு பல சித்திரங்கள் திறம்பட வரையப்பட்டிருக்கக் காண்கின்றோம். அண்ணாந்தவாறு நெடுநேரம் இருந்த நிலையிலேயே இக்கலையைக் கோயிற் கூரைகளின் அடித்தளங்களிலும் பொலிவுறச் செய்த சிற்பி, இதன்பொருட்டு மேற்கொண்ட சிரமம் உள்ளுந் தரமன்று.

கோயிலின் உட்பிராகாரத்தில் உள் உட்பக்கச் சுவரை மேல் பகுதி நடுப்பகுதி, கீழ்ப் பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரித்து, புராணங் கூறும் இறைவரின் பெருஞ் செயல்களைத் தொடர்ச்சிச் சித்திரமாக எழுதும் மரபு சில கோயில்களில் இருந்துவரக் காண்கிறோம். கோயிலில் சுற்றியமையும் சுவரின் மேல் பகுதியில் உள்ள சித்திரங்களைப் பார்த்துக்கொண்டே சென்று, தொடங்கிய இடத்திற்கே திரும்பி வருகின்றோம். இவ்வாறே தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் வரிசைகளைப் பார்த்து முடிந்ததும் தொடர்ச்சிச் சித்திர வரிசையின் ஈற்றை அடைகின்றோம். ஓவியங்கள் கவின் பெற அமையும் வனப்பு எம்மையறியாதே கோயிலை இடைவிடாது இவ்வாறு மூன்று முறை வலம் வரும் நிலையைத் தோற்றுவிக்கின்றது.

மேலும், கோயில்களில் சுதை வேலைப்பாடுடைய பகுதிகளிலும், மரங்களாலமையும் வாகனங்களிலும், ஓவியந்தீட்டுங் கலைஞரின் நுண்ணறிவு சுடர்விட்டுப் பேரொளி வீசிநிற்கக் காண்கின்றோம்.

தென்னிந்தியாவில் கோயிற் கோபுரங்கள் வானளாவி உயர்ந்து நிற்பவை. வழிபடவேண்டிக் கோயிலை நோக்கி வந்துகொண்டிருக்கும் அடியவரும் ஏனையோரும் இவற்

றின் கம்பீரமான தோற்றத்தினைத் தொலைவில் நிற்கும் பொழுதே தரிசித்து வணங்கும் பெற்றியதான வனப்பு வாய்ந்தவை.

## 18. கோபுரங்கள் :

கிழக்கே கோபுரம் அமையப் பெற்ற கோயில்கள் பல. இவற்றிற்கு மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது பதினொன்று, ஆக பல எண்ணிக்கை கொண்ட மாடங்கள் உண்டு. இவற்றின் உச்சியிலே மூன்று, ஐந்து, ஏழு அல்லது ஒன்பது கலசங்கள் நிறுவப்பட்டுள்ளன. கோயில்களை நிர்மாணிக்கப் பொருள் செலவிடும் கொடை வள்ளல்களின் சக்திக்கேற்பவும், கோயில் கருவறையின் பிரமாணத்திற்கேற்பவும் கோபுரத்தின் உயரம் வேறுபடும். கோபுரத்தின் முன் பின் ஆகிய இரு புறங்களிலாவது, இரு பக்கங்களிலாவது, நின்று அதனைப் பார்ப்பவர்க்கு அடி அகன்றும் உயர்ந்துகொண்டே போகும் பகுதியின் அகலம் இரு பக்கங்களிலும் சம அளவாகக் குறைந்தும், கோபுரம் மேல்நோக்கி உயர்ந்து செல்வது தெளிவாகத் தெரியும். கருவறையின் விமானங்களில் காணப்படும் பல்வேறு வேலைப்பாடுகள் இங்கும் இடம்பெறும். ஆயினும் கோபுரத்தில் ஒரே அளவினவாகிய முற்பக்கமும், பிற்பக்கமும், வலப்புறம் இடப்புறமாகிய இரு புறங்களைக் காட்டிலும் அளவில் மிக அகனறவை. முற்பக்கமும், பிற்பக்கமும் திறந்தவாறு சாளரங்கள் அமைக்கப்படுவன. இவற்றை நிலைகள் எனறும், மாடங்கள் எனறும் கூறுவார்கள். சில கோபுரங்களில் மட்டமான வேலைப்பாடு இடம்பெறும். சில கோபுரங்களில் விக்கிரகங்கள் சுதை வேலையாக அமைக்கப்படுகின்றன. கருவறை விமானத்தைக்காட்டிலும கோபுரம் உயர்ந்து விளங்குவதே வழக்கமாக நாம் கோயிலகள எல்லாவற்றிலும் காண்கின்றோம இருந்தும் தஞ்சை, திரிபுவனம, கங்கைகொண்ட சோழபுரம் முதலிய இடங்களில் கருப்பக்கிருகத்தின மீது உளள விமானம அவ்வக் கோயிற் கோபுரங்களைககாட்டிலும உயர்ந்திருப்பது நோககற்பாலது. இத்தலங்களில் கோபுரங்கள் மீது கவனம் செலுத்தப்படவில்லை.

கோயிலின் நடுவே உள்ள கோபுரம் மத்தியகோபுரம் எனப்படும். கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளில் இருக்கும் கோபுரங்கள் அவ்வத்திக்கைக் குறிககும சொல்லாற் குறிப்பிடப்படுவனவாய் பூர்வ கோபுரம் தக்ஷிணகோபுரம், பச்சிம கோபுரம், உத்தர கோபுரம், எனப் பெயர் பெறுவன. இவற்றைச் சிற்ப நூலகள் பஞ்சகோபுரங்கள் எனத் தொகுத்துச் சுட்டும், ஐந்து பிராகாரங்களுளள கோயிலகளில் ஒவ்வொரு கோபுரமாக ஐந்து கோபுரங்கள் விளங்கக் காண்கின்றோம. இவ்வைந்து கோபுரங்களும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு உயர்ந்தும் அகன்றும் உருவாகின்றன. அவ்வாறே இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களையும் அவன் பெருமையினையும குறிக்கும் திருவுருவங்கள் கோபுரங்களின் பலபகுதிகளில் இடம் பெறுகின்றன.

மானசாரம் ஐவகைப் பிராகாரங்களில் கோயிலுக்கு முற்பகுதியில் கோபுரம் அமைதல் வேண்டும் எனக் கூறி இவற்றைத் தனித்தனியே குறிப்பிடுகின்றது. அந்தர் மண்டபததிக் கணித்தான கோபுரம் துவார சோபை என்று பெயர் பெறும. இதையடுத்து இருக்கும் கோபுரம் துவார சாலை எனப்படும. மூன்றாங் கோபுரம் துவார பிராசதாம் எனவும், நான்காம் ஐந்தாம் கோபுரங்கள் முறையே துவார ஹர்ம்யம், மஹாமர்யதை எனவும் பெயர்பெறும. இவ்வைந்தாம் கோபுரத்திற்கு மகாகோபுரம், ராஜகோபுரம் எனறும் பெயர்களுண்டு. இவ்வைந்து வகைக் கோபுரங்களையும மானசாரம் "இவை உத்தமமானவை; இவை மததிமமானவை இவை அதமமானவை" என்று மூவகையாகக் குறிபபிட்டு கோபுரங்களைப் பதினைந்து பிரிவுகளாகக் கூறுகின்றது.

பத்து வகைக் கோபுரங்களுள் ஸ்ரீ போகம், ஸ்ரீ விசாலம், விஷ்காந்தம, இந்திரகாந்தம் பிரமகாந்தம், ஸ்கந்தகாந்தம், சிகரம, சௌம்யகாந்தம் எனனும் எட்டும குறிப்பிடப்பட்டுள்ளன. சிகரம், ஸ்தூபி, களகூடம், க்ஷத்ரநாசி ஆகியன கோபுரத்தின் முக்கிய உறுப்புக்கள். பதினைந்து வகைக் கோபுரங்களும ஒனறு முதல் பதினேழு வரை நிலைகள் (மாடிகள்) உள்ளவாறு உருவாக்கப் படலாம. இவற்றுள ஐந்து நிலைகள் உருவாகும் முறையை மட்டுமே கூறி மானசார நூலாசிரியர் ஏனைய வற்றைச் சிற்பியின் கற்பனைக்கு விட்டு விடுகின்றார். ஒவ்வொரு மாடியும் அமையவேண்டும் முறையும், அங்கே காணப்படும் அறைகள், தூணகள் சுவர்கள், முடிகளுடன் கூடிய விமானங்கள், நிலைகள், சன்னல்கள் முதலியன பற்றிய விபரங்களும் கூறப்படுகின்றன. கோபுரங்களின தோற்றம, அமைப்பு முதலியவற்றை அடிபபடையாகக் கொண்டு நாகபந்தம், வலலீ, கலாக்ஷம, குஜராக்ஷம், ஸ்வஸ்திகம், சர்வதோபேதம், நந்தியாவர்த்தம், புஷ்பதந்தம முதலிய பெயர்கள் வழங்குகினறன.

திருக்கோயிலை அமைக்கும் திறன் வாய்ந்த சிற்பியின் வரலாறு பற்றியும சிறிது தெரிந்திருத்தல் அவசியமாகும். படைத்தல தெய்வமாகிய பிரமனின நான்கு முகங்களிலிருந்தும விசுவர்மா, மயன், துவஷ்டா மனு ஆகிய நால்வர் தோன்றினர். இந்நாலவரது புததிரர்கள் ஸ்தபதி, சூத்திர கிராஹி, வர்த்தகி, தக்ஷகன எனனும நால்வர் பூவுலகில் சிற்பத தொழிலாற்றும் நால்வகைப் பிரிவினர்க்கு இவர்கள் மூல புருஷர்களாய் விளங்குபவர். இவர்களுள் உயர்நிலை வகிக்கும் ஸ்தபதி கட்டிடக் கலையில் கைதேர்ந்தவன. இவனுக்கு அடுத்தாற்போல் விளங்குபவன் சூத்திரகிராஹி;



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச்
சொந்தமான திருமயிலாடுதுறை
அருள்மிகு மாயூரநாதசுவாமி திருக்கோயில்

இவன் தம்மை அடுத்திருக்கும் இருவருக்கும் குருவாக விளங்குபவன். வர்த்தகி தக்ஷகனுக்குக் குருவாக விளங்குபவன். ஸ்தபதி சாஸ்திரங்களில் வல்லவன். வேத அறிவு மிக்கவன். ஆசாரியராக விளங்கிக் குறிப்பிட்ட கிரியைகளை ஆற்றும் ஆற்றலும் மிக்கவன் என மாநசாரம் கூறுகின்றது. சூத்திரகிராஹி வேதங்களையும், சாஸ்திரங்களையும் அறிந்தவனாகவும், ரேகா ஞானம் வாய்ந்தவனாகவும் இருப்பன். வர்த்தகி தேவ அறிவுமிக்கவனாயும், சித்திரக் கலையில், கை தேர்ந்தவனாயும் விளங்குவன். தக்ஷகனுக்குத் தச்சுத் தொழிலில் பெருந்திறமை உண்டு.

சிவாகமங்களின் அடிப்படையில் கோயில்களின் அமைப்பும் சிறப்பும் குறித்து அறியப்படும் செய்துகள் இங்குச் சுருக்கித் தரப்பட்டன. மக்கள் இவை பற்றித் தெளிந்த அறிவுடன் வரைந்த விழுமிய முடிவுகளே இவை என்று கூறலாம்,



# 6. சக்தி வழிபாடும், மக்கள் வாழ்வு நெறியும்:

### 1. தமிழ் நாட்டில் :

நமது கிராம தேவதைகளிலே காளி அல்லது மாகாளி முதலிடம் பெறுகிருள்; திருவொற்றியூரிலே வட்டபுரி அம்மன், மாமல்லபுரத்திலே கருக்கில் அமர்ந்தாள், தில்லையிலே காளி, கோயம்புத்தூரிலே கோணியம்மன், சமயபுரத்திலே மாரியம்மன், பாரியூரிலே கொண்டத்துக்காளி, நாட்டரசன் கோட்டையிலே கண்ணுத்தாள், காரைக்குடியிலே கொப்புடையம்மன். இவை தமிழ் நாட்டில் புகழ் பெற்ற காளி உருவங்களில் சில.

எல்லை அம்மன், எல்லைப்பிடாரி, வடக்குவாசல் செல்லி முதலிய பெயர்களுடன் காவல் தெய்வமாகப் பல ஊர்களிலே காளி வழிபடப் பெறுகிருள். தமிழகத்தின் தென்னெல்லையைக் குமாரி காத்து நிற்கிருள். இந்தக் ' கன்யாகுமரியை யவனுசிரியர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். இவர்கள் காலம் கி. பி. முதலிரண்டு நூற்ருண்டுகள்; மதுராபதியை மதுரையின் காவல் தெய்வம் என்று சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. மணிமேகலையில், தென்ஞட்டுக்கு நலிவு ஏற்பட்டபோது, சம்புதீவின் காவல் தெய்வமாகிய சம்பாபதி, அத்துன்பத்தைத் தவிர்ப்பதற்கு வடக்கே இருந்து தெற்கே போந்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காவிரிப் பூமபட்டினத்திலே அவளுக்குக் கோயில் இருந்தது. 'குமரி' என்றும் 'தொன் மூதாட்டி' என்றும், சாத்தனுர் போற்றுகிருர். இத் தெய்வத்தின பிரதிநிதியாகத் தற்போதைய கிராம தேவதைகளைக் கருதுவதிலே தவறு இல்லை.

இவையே அன்றி, வடநாட்டு உச்சைனியிலிருந்து வந்து திருநெல்வேயிலே குடியேறிய உச்சி(னி) மாகாளியையும் நாம அறிவோம். ஆந்திர தேசத்திலிருந்து வந்து கோயில் கொண்ட சக்கமாதேவி எக்ல – எல்லமா தேவிகளும உண்டு. திரௌபதி தஞ்சாவூர் பக்கம் காளிவேடம் தரித்துக்கொணடாள். ஜமதக்கினி முனிவரின் பத்தினியாகிய இரேணுகை திருவாரூரிலே எல்லையம்மன் ஆனுள. இவள வழிபாட்டை அறந்தாங்கி, பட்டுக்கோட்டையிலே காணலாம. கண்ணகி என்ற பத்தினி சிலப்பதிகார காலத்திலேயே காளியாகக் கருதப்பட்டிருக்கிருள்.

காளி கோயில்களிலே பெரும்பாலும் தேவி உட்கார்ந்த கோலத்தில் இருப்பாள். உக்கிரமான முகத்துடன் கோரப்பற்கள் வெளிப்பட்டுத் தோன்ற. கரங்கள் நான்கிலும் சூலம், உடுக்கை, கபாலம், சுரிகை வைத்திருப்பதாக அவளை உருவகப்படுத்தி விக்கிரகம் சமைத்துப் பிரதிட்டை செய்திருக்கிருர்கள். பாமரமக்கள் காளியைப் பல்வேறு பெயர்களில் பல வகையாக வழிபடுகிருர்கள். இவர்கள் வழிபாட்டிலே உயிர்ப்பலியும், தீமிதியும் முக்கிய இடம் ஏற்றுள்ளன. உயிர்ப்பலி தற்போது சட்டப்பூர்வமாய்த் தடுக்கப்பட்டிருக்கிறது. உபாசகரிலே சிலர் தமது உடல் உறுப்புகளைப் பலவிதங்களிலே வருத்தி, நேர்த்திக்கடன் செலுத்துவதும் உண்டு. வேறு சிலர், நவதுர்க்கை வடிவங்களில் ஏதேனும் ஒன்றை அல்லது பத்திர காளியாக யந்திரத்தைப் பொறித்து, மஞ்சள்பொடி, குங்குமம், அரிசிமாவால் உருவம் சமைத்து வழிபடுவதும் உண்டு. இவ்வழிபாடு பூதசுத்தி, ஆத்மசுத்தியில் தொடங்கி, பலி ஓமத்தில் முடியும. பீஜமந்திரம் ஓதி, துர்க்காசூக்தத்தினின்றும் துதிமொழிகள் புகன்று வழிபாட்டைப் பூர்த்திசெய்வர்.

### 2. அனைத்திந்தியாவிலும் :

தமிழ் மக்களிடையே காளி பிரபலமானது போலவே, அகில இந்தியாவிலும் தேவி வழிபாட்டுக்கு ஒப்பானது வேறு இல்லை. காஷமீரத்திலே அம்பாள், ராஜபுதனத்திலே பவானி, கூர்ஜரத்திலே கல்யாணி, வங்காளததிலே காளி, அசாமிலே காமரூபி, மைசூரிலே சாமுண்டி, தமிழகத்திலே காமாட்சி, மலையாளத்திலே பகவதி இப்படி வெவ்வேறு பெயர்களிலும் உருவங்களிலும இந்தியா முழுவதும சகதி வழிபாடு நடந்துவருகிறது. பல பிரிவினரான இந்துக்கள் அனைவரும் சக்தியை வழிபடுகிருர்கள்.

பராசக்தி எங்கும் நிறைந்தவள் ஆதலின் அவளைப் பூரணி, ராஜராஜேஸ்வரி, மூலப்பிரகிருதி என்பர். முத்தொழில் புரியுமபோது அவள் பிராம்மணி, வைஷ்ணவி ருத்ராணி ஆகிமருள ஈசுவரனுக்கு ஒப்பாகுமபோது துர்க்கை எனபபடுகிருள். கலவியாகக் கருதும் போது சரசுவதி என்பர். செலவமாய்த் திகழுமபோது லட்சுமி எனபர். காலசொரூபிணியாகக் கருதும்போது காளி என்பர். அவள் ' புக்தி முக்திப் பிராயிணி ' அதாவது போகத்தையும மோட்சத்தையும கொடுப்பவள். பிரமன விஷ்ணு சிவன் முதலானேர் தமது வலது கரத்தின் அபய முத்திரையால் மோட்சத்தையும், இடது கையில் வரதமுத்திரையால் போகத்தையும் கொடுப்பர். ஆனுல்,



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை
ஆதீனத்திற்குச் சொந்தமான
*நரசிங்கன்பேட்டை அருள்தரு கஸ்தூரி அம்மன்*
*திருக்கோயில்*

தேவி ஒருத்தியின் பாதகமலங்களுக்குத்தான் பக்தர் விரும்பும் பலன்களை அவர்கள் விரும்பியதற்கும் மிகுதி யாக வழங்கும் வல்லமை உண்டு என்று ஸ்ரீ சங்கரர் அவளுடைய திருவடி மாண்பைப் புகழ்ந்திருக்கிறார். அவள் சிலை அல்லது சிற்பத்தில் வர அபய முத்திரைகள் கைகளில் இலலாமை இங்கே கருதத் தகுந்தது.

### 3. தாயான தத்துவம்

சக்தி வழிபாட்டைச் சரிவர ஆராய்ந்தவர் அருமையே. ஆராய்ந்த சிலரும் அதைச் சரியாகப புரிந்து கொண்டனர் எனறு சொல்லுதற்கு இல்லை. உபாசகர் அதை மிகவும் மறை பொருளாகப் பேணி வந்தது அதற்குக் காரணம் ஆகலாம். இந்து மதத்தின் ஆபாசக் காட்சி என்று அதை ஒருவர் வருணித்திருக்கிறார். அங்கும் இங்கும் நிலவுகிற சிற்சில நடைமுறைகளைப் பார்த்து, அவர் இப்படிக் கருதினார்போலும். இக்கருத்தில் வாய்மை இல்லை. அரைகுறையாய் அறியப்பட்டிருக்கும் சக்திவழிபாடு உறுதியான அடிப்படையில்தான சமைந்திருக்கிறது.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை. பெற்றவள், வளர்ப்பவள். தேற்றுபவள், ஆதரிப்பவள் தாய் அல்லவா? அன்னையும பிதாவும் முனனறி தெய்வம். பிதாவினும முனனதாக அறியப்படும் தெய்வம் அன்னைதான். அவளிடம் குழந்தை மனம்விட்டுப் பேசுகிறது; பழகுகிறது. பக்தன் சிவன் என்னும் தந்தையைவிட, சக்தி எனற தாயிடம் நெருங்கிய நேயம் கொள்வதில் வியப்பில்லை.

சிவபரம் பொருள் புற உலகைப் பொருட்படுத்துவ தில்லை. அவர் ஒரு தியாகி; துறவி, ஆனந்தமாய்க் கூத்தாடுவார்; இல்லை என்றால், மோன நிலையில் அழுந்தியிருப்பார். தன அதிகாரத்தைத் தன் தேவியிடம் ஒப்படைத்திருக்கிறார் ஐந்தொழில்களையும் அவளே கவனிக்கிறாள். அவள அருள் எல்லை அற்றது, கருணை வரம்பற்றது. அறிவு அகண்டமானது. ஆற்றல் அளக் கலாகாதது. அவள் பூரணத்துக்கு எந்நாளும் குறைவில்லை. எங்கும் அவள் நிறைமாட்சி உடையவள். பழையோள் மிகப்பழையவள் எனினும் புத்தம புதியவளாகவே அவள் திகழ்கிறாள் அண்ட கோடிகளை ஈன்றபிறகும அவள் தன் நிலைகுலையாது எந்நாளும தன்மயமாய் இலங்குகின்றாள். ஆதலின் ஏக காலத்தில் அன்னையாகவும கன்னியாகவும் மிளிர்கின்றாள. 'அகிலாண்ட கோடி ஈன்றும், அன்னையே! பின்னையும் கன்னி என மறைகள பேச நின்ற ஆனந்த ரூபமயிலே' என்று பக்தர்கள அவளைப் புகழ்கின்றார்கள்.

வேறு விதமாகவும் இதை விளக்கலாம். அங்கிங்கு எனாதபடி ஆனந்த பூர்த்தியாய்க் கடவுள் இருப்பது மெய்யே. ஆனால் அதை நம்மால் எளிதில் அறிய முடியாது; மனம் வாக்குக்கு எட்டாத பொருள் அது. ஆதலால், உருவற்றதற்கு உருவத்தைக் கற்பித்து, குணம் இல்லாததற்குக் குணங்களை ஏற்றி, கணபதி, கார்த்திகேயன், பராசக்தி, பரமேஸ்வரன், மகாவிஷ்ணு என்று பல பெயர்களில் வழிபடுகிறோம். எங்கும் நிறை பொருள் ஆதலால் எவ்வுயிரினும் அவன் உண்டு. தூணில் இருப்பான்: துரும்பிலும் இருப்பான். அப்பன் அவன்; அம்மையும் அவன். அன்புடைய மாமனும் மாமியும் அவன்தான். எனவே, அவனைத் தாயாகப பாவிக்கும் தத்துவம் பொருளுடையதே. தாயைத் தெய்வமாக நினைப்பதுதான உலக நியதி. தெய்வத்தைத் தாயாக நினைப்பதுதான் சக்தி வழிபாடு. 'ஈன்றாளுமாய் எந்தையு மாய் உடன் தோன்றும' இறைவனை, 'தாயவன்காண் உலகிற்குத் தன் ஒப்பிலாத தத்துவன்காண்' என்று பக்தர் பாடுகின்றனர்.

புராணங்களின்படி சக்தி விஷ்ணுவின் தங்கை; சிவனுக்கு மனைவி, கணேசனுக்கும கார்த்திகேயனுக்கும் தாய். தத்துவரீதியில். சாக்தம் படைப்பு பரிணாம வாதங்களைச் சமரசப்படுத்துகிறது. சிவனுக்கும் பூமிக்கும் இடையிலே சக்தி தோன்றுகிறது. சக்தியின் தோற்றமே மாயை அல்லது பிரகிருதி: பிரகிருதியினின்றும் ஐந்து பூதங்கள். அப்படி வகுக்கப் பெற்றிருக்கும் இந்த சாக்த தத்துவத்தின் பெருமை என்னவென்றால் அது வேதாந் தத்தில் பிரமத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் இடையிலே தோன்றும் பிளவில் ஒரு பாலத்தைக் கட்டியிருக்கிறது. சாங்கிய தத்துவத்தை ஏற்றுக்கொண்டு நாஸ்திக வாத மாகிய. அதற்கு ஆஸ்திகத் தன்மை கொடுக்கிறது. இந்தக் கோட்பாட்டிற்கு ஆதாரம், தந்திர நூல்கள், தென்னாட்டவர் ஆகமம் என்பதைத்தான் வடநாட்டவர் தந்திரம் என்கின்றனர்.

### 4. சிவசக்தி

தென்னாட்டுச் சைவசமயத்துக்கு ஆகமங்கள்தான் அடிப்படை. காஷ்மீரத்தின் 'பிரத்யபிக்ஞான' பிரதி பலிப்பே சைவாமங்கள். சிற்சில வேறுபாடுகளுடன் பிரத்யபிக்ஞான சூத்திரங்களைச் சைவர்கள் போலவே சாக்தர்களும மேற்கொண்டனர். இவ்விருவர்களுக்கும் சிவம் வேறு, சக்தி வேறு அனறு, இவை ஒரே தத்து வத்தின் இணைபிரியாத இரண்டு அம்சங்கள். ஒரு காரியத்தைச் செய்யச் சக்தி இருக்கிறதா? இல்லாவிட்டால் சிவனே என்றிரு என்பது பாமரர் வாய்ச்சொல். சிவ பெருமான் சக்தியின் சேர்க்கையின்றி, எதையும் செய்ய முடியாதவராய் இருக்கிறார் என்பதைத்தான் அவ்வாய் மொழி உணர்த்துகிறது. சக்திதாண்டவம் இந்த உண்மையை விளக்குகிறது. தமிழ்நாட்டிலே முயலகன் என்ற மருளை மிதித்து மாய்த்து நடராஜர் தாண்டவம் ஆடுகிறார். இதைப் பார்த்துப்பழகுகிற நமக்கு வடநாட்டிலே சவமபோலக் கிடக்கும் சிவன்மீது பராசக்தி பாதம் ஊன்றித் தாண்டவம்புரிவது பொருந்துவதாகத் தோன்ற வில்லை. எனினும், பின்வருமாறு ஓர்ந்து அறிய இதிலே பேருண்மை பொதிந்திருப்பதைக் காணலாம். சிவன்

அசலன், கடஸ்தன். அதாவது 'போக்கும் வரவும் இல்லாப் புண்ணியன்' ஆதலால் அசைவற்றுச் சவம் போலக் கிடக்கிறான். அவனை ஆதாரமாகக்கொண்டு, மாயாசக்தி அவனமீது தாண்டவம் புரிகிறாள். அசை வற்றிருக்கும் அறிவு சொரூபம் சிவம் என்றால், செயலே வடிவெடுத்திருப்பது சக்தி. மழை பெய்கிறது. வெயில் எரிக்கிறது, விதை முளைக்கிறது. எங்கும் சக்தியின் தாண்டவந்தான். மேலும், விஷ்ணு, உருத்திரன், ஈசுவரன் சதாசிவன, சிவன், பரமசிவன் என்ற மூர்த்தி பேதங்கள் ஏழிற்கும பராசக்தி ஒருத்தியே சரசுவதி முதலிய சக்தி பேதங்கள் ஏழாய் நிற்பாள். 'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்' என்கின்றது சாத்திரம்

இதனாலே தமிழ்நாட்டிலே சிவாலயங்கள்தோறும் சிவனும சக்தியும் சேர்ந்தே இருக்கிறார்கள்; சுவாமி சந்நிதியை அடுத்து அம்மன் சந்நிதி இருக்கிறது. அம்மன் சந்நிதியைக் 'காமகோட்டம்' என்று முன்னோர் வழங்கினர். கி.பி.11 ஆம நூற்றாண்டுக்குப்பின் தோன்றிய கோயில்களிலேதான் மூலத்தானத்தை ஒட்டிக் காம கோட்டம் எழுந்தது. அதற்கு முந்திய காலங்களில் சிவாலயங்களின் வேறாகத்தான் அம்மனுக்குத் தனிக் கோயில்கள் இருந்தன; ஒரே ஆலயத்தில் அடுத்து அடுத்து இருந்தது இல்லை.

### 5. பரம்பொருள் அவள்தான் :

சிவம் வேறு சக்தி வேறு அன்று; ஒரே தத்துவத்தின் இணைபிரியாத இரண்டு அம்சங்கள் என்றோம். அந்தத் தத்துவத்தைக் சைவர் சிவன் என்பர். சாக்தர் சக்தி என்பர். சாக்தர் கொள்கை பின்வருவது. மும்மூர்த்திகளுக்கும ஆதாரமாய் இருப்பது சக்தி: சக்தி இல்லையேல் படைத்தல், காத்தல், அழித்தல் நடவா. புத்தியின் ஞானசக்தியும், மனத்தின் இச்சாசக்தியும் உடலின் கிரியாசக்தியும் அவளுடைமைதான். அவள் அன்றி ஓரணுவும் அசையாது. யாக்கையைத் தந்து, இன்ப துன்பங்களை அனுபவிக்கச்செய்து, பின் பிறவியை ஒழித்துப் பேரின்பத்தைக் கொடுப்பவள் அவள்தான். மூவர்க்கும் முதற்பொருளாய், முத்தொழிற்கும் வித்தாகி, நாவிற்கும் மனத்திற்கும் நாடரிய பேரறிவாய், விளங்குகிற அன்னை பராசக்தி, பேசரிய உயிரை எல்லாம பெற்று நோக்கிப் பெரும்போகம் அவை அளித்துப் பிறப்பினையும் ஒழித்துவிடுகிறாள். பலவிதமான உலகமாகி அதற்குள் புகுந்து உயிர் அளித்து ஆந்தர்யாமியாக இருந்தும், உலகத்தைக் கடந்தும ஆனந்த அகண்ட ஜோதியாகத் துலங்குகிறாள். அவளிடமிருந்துதான பிரமன், விஷ்ணு, உருத்திரன, மகேசுவரன், சாதசிவன என்கிற பஞ்சகர்த்தர் தோன்றினர். சித்சக்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்ற பஞ்ச சக்தி களும தோன்றின இதனால் உலக காரியம் உண்டா யிற்று. சக்திக்கு மேற்பட்ட ஈசுவரன இல்லை. செல்வம் வேண்டுமா? கவலை ஒழிய வேண்டுமா? விடுதலை வேண்டுமா? அந்தச் சக்தியிடம் பக்திகொள் என்பர் சாக்தர். அவளே வழி: அவளே குறி.

### 6. பழையோள் :

இந்தச் சக்தி வழிபாடு எங்கே தோன்றியது. எப்போது தோன்றியது என்று சொல்வதற்கு இல்லை. தொன்றுதொட்டு நடந்துவருகிறது என்றுதான் பொது வாகச் சொல்லக்கூடும். பார்வதி இமயமலையை இடமாக உடையவள். வைஷ்ணவி விந்திய மலையை இடங் கொண்டவள்: துர்க்கையும (துர்க்கம்-மலை) மலையில் இருப்பவளே: பண்டைத் தமிழ் மக்களின் வெற்றித் தெய்வமாகிய கொற்றவையும் மலைவாசிதான். எழில் மலையிலே கானமர் செல்வி (வன துர்க்கை)யைக் காண் கிறோம் (அகம 345) மலைச்சாரலிலே 'விறல் கெழு சூலிக் குப் பலி கொடுத்தலைக், குறுந்தொகை (218) கூறுகிறது. கடவுள் அயிரை - அயிரைமலைக் கொற்றவையை சேரர் வழிபட்டு வந்தனர். 'வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ' என்று முருகனை நக்கீரர் போற்றுகிறார். சிறுவன் என்பதற்கு 'வன துர்க்கையின் புதல்வன்' என்றும், வெல்போர் என்பதற்கு 'அவள் மகிடனைச் செற்றது' என்றும் நச்சினார்க்கினியர் உரை வகுத்துள் ளார்.

இவற்றைக் கருதும்போது மலைவாசிகளாகிய ஆதி மனிதரிடையே சக்தி வழிபாடு முதன்முதல் தோன்றி யிருத்தல் கூடும் என்று யூகிக்கலாம். காலப்போக்கிலே இவ்வழிபாடு பலபடியாக வளர்ந்தது. உலகம் முழுவதுமே பரவியிருந்தது. எனினும் இந்தியாவிலேதான் இன்றளவும் நிலைத்திருக்கிறது. தனிச்சமயமாகவும், வளர்ந்திருக்கிறது. எனவே இந்தியா இதற்குப் பிறப்பிடம ஆகலாம்.

### 7. உலகம்மாள் :

தந்திர சாத்திரங்கள் தோன்றியபின், அதாவது கி பி. 4, 5 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னர் இந்து மதத்திலே ஏற்பட்ட பிற்கால வளர்ச்சிதான் சக்தி வழிபாடு என்று சிலர் கருதுகின்றனர். அவர் கருத்துத் தவறானதே. மகஞ்சதாரோ ஹரப்பாவின் புதை பொருள ஆராய்ச்சிகளால் சக்தி வழிபாடு அங்கே நிலவி இருந்ததை அறிகிறோம. இதை ஆராய்ந்த சர் ஜான் மார்ஷல் 'இவ்வழிபாடு இந்தியாவிலே தோன்றியது' சிவபெருமானோடு தொர்புடையது. எனினும் சிற்றாசியா, எகிப்து, பொனீசியா கீரீஸ் முதலிய பண்டை நாகரிக நாடுகளிலும் இதுபோலும் வழிபாடு இருந்தது என் கிறார். 'சிந்துநதி தீரத்திலும் சுமேரியாவிலும் இவ்வழிபாடு ஒன்றுபோலவே இருந்தது வியப்புக்கு உரியது, என்கிறார். வி. ஆர். ஆர் தீட்சிதர், இருநாடுகளிலும் தேவிக்கு வாகனம் சிங்கம் ஆதல்போலவே அவள் கணவனுடைய வாகனமும் காளையே. போர்த்தெய்வாகிய அவள் கன்னியாகவும், மனைவியாகவும் மலைவனங்களிலே வசிப்பவளாகவும் இருநாடுகளிலுமே கருதப்பட்டாள்.

இதனுல் சக்தி வழிபாடு பண்டைக்காலத்திலே உலகம் முழுவதும் பரவியிருந்ததை அறிகிறேம். அதனுலும் லோக மாதாவாக அம்பாளை நாம் போற்றுவது முற்றிலும் பொருந்துவதே.

இவ்வழிபாடு ஆதி மனிதரிடையே அவர்கள் தாய்வழி உரிமை கொண்டாடி வந்த காலத்திலே தோன்றியிருத்தல் கூடும். நாகரிக வளர்ச்சியில் தாய்வழி மறைந்து தந்தை வழி தோன்றியது. எனினும், தாயை வழிபட்டு வந்த பணடைய வழக்கம் மட்டும் தொடர்ந்து நடந்து நிலைத்த வழிபாடாகவும் ஆயிற்று. அதனுல் பல லோக மாதாக்கள் (தாய்த் தெய்வங்கள) தோன்றினர். அவருள் எழுவரைப் புராணங்கள் போற்றுகின்றன. பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, மகேசுவரி, சாமுண்டி என்ற இவர்கள் தாயின் பல்வேறு வடிவங்களே. தமிழ் நாட்டிலே இவர்கள் வழிபாடு கி. பி. 5 ஆம் நூற்றுண்டுக்கு முன் தொடங்கி, பத்தாம் நூற்றுண்டு வரை வழக்கில் இருந்தது என்பதைப் பண்டைக் கோயிற் சிற்பங்களால் அறியலாம். இத்தாய்மார்களின் மூர்த்தங்கள் ஒரே பீடத்தில் வரிசையாக அவரவர்களின் அடையாளத் துடன் பதுமாசனத்திலே வீற்றிருப்பது போலச் செய்யப் பட்டிருக்கும். புறக்கணிக்கப்பட்டதால், இச் சிலைகளின் சிதைந்த கோலத்தைப் பழங்கோயிற் பிரகாரங்களிலே பார்க்கலாம். சேட்டை என்ற மூதேவியையும் நம் முன்னேர் வழிபட்டு வந்தனர். அவளுடைய கொடி காகம். காகம் மயிலாகவும், சேட்டை சுபபிரமணிய ராகவும் திருப்பரங்குன றிலே மாற்றப்பட்டிருப்பதாக டி. ஏ. கோபிநாதராவ் கருதுகிருர்.

## 8. வேத நெறியே :

வேத காலத்திலே சக்தி வழிபாடு நடந்தது என்ப தற்குச் சான்று உண்டா? இது ஆரியரல்லாதார்க்கு உரியது என்பர் சிலர். ரிக்வேத சம்கிதையில் ஆண்தெய்வங்களே ஆட்சி பெற்றிருப்பதால் அன்னை வழிபாடு அக்காலத்திலே நடந்தது இல்லை என்று முடிவுகட்டுதல் பொருந்தாது. வேதத்திலே பயிலுகிற உஷா, அதிதி, புவி, வாக் போன்ற பெண் தெய்வங்களை ஆராய்கிற யாரும் அவை யாவும் சக்திகளாகவே கருதப்பட்டிருந்தமையை அறிய லாம். 'மனிதன மண்ணிலே தோன்றினுன்; மண்ணி லேயயே மறைகிருன்' எனபதால வேதகால மக்களும் புவியைத் தாயாகவே போற்றினர். தைத்திரிய உபநிட தத்திலே புவித்தாயைக் காணலாம். அறிவுக்கும் சிந்தனைக் கும் செயலுக்குமகூட ஆதாரமாயிருக்கும் வாக்தேவ தையை முழுதும புகழும் சூக்தம் ரிக்வேதத்தில் உண்டு. எலலாப் பெருமைகளுக்கும் தான்தான காரணம் என்று வாக் தன் பெருமையைத் தானே விளக்கிச் சொல்லும். அந்த சூக்தம் சக்தி உபாசகர்களுக்கு மந்திரமாய்த் திகழ் கிறது. வாக் தெய்வத்தைச் 'சிந்தாதேவி' என்பர் தமிழர்,

எனவே, சக்தி வழிபாடு ரிக்வேதத்துக்குப் புதியதோ புறம்பானதோ அல்ல; இது வேதகாலத்துக்கு முற்பட்ட தாக இருக்கலாம். அனுரியரது பழக்கமாகவும் இருக்க் லாம். வேத ரிஷிகள் ஏற்கனவே நடைமுறையில இருந்த வழிபாடுகளை ஏற்றுக்கொண்டவர் என்று கருதுவதிலே தவறு இல்லை. இது வேத விரோதமானது அன்று.

கேன உபநிடதம் உமையின் துணையால் இந்திரன் பிரமத்தை அறிந்தான் என்று பேசுகிறது. ஒரு காலத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் போர் நிகழ்ந்தது. பரம்பொருளின அருளால் அப் போரிலே தேவர்கள் வெற்றிபெற்றுர்கள், ஆனுல் வெற்றி வெறியில் அவர்கள் பரம்பொருளை மறந்தார்கள். அவர்களுடைய அறியாமை யைப் போக்க, அவர்கள் முன்னே யட்ச வடிவில் பரம் பொருள் தோன்றியது. இது யார் என்று அறிய அத னிடம் அக்கினியைத் தேவர்கள் அனுப்பினுர்கள். நீ யார் என்று பரம்பொருள் கேட்கவே, அக்கினி தன் பிரதா பத்தை எடுத்துப் பேசினுன். ஒரு புல்லைப் பூமியிலே போட்டு இதை எரி என்று பரம்பொருள் கூறியது. அதை எரிக்க அக்கினியால் முடியவில்லை. பின் வாயுவும் முயனறு பார்த்தது. அதனுலும் அப்புல்லை அசைக்க முடியவில்லை. இந்திரன் யட்சனுடைய தத்துவத்தை அறிய முனைந்தான். அப்போது யட்சன் உருவம் மறையவே, வானத்தில் அழகே வடிவெடுத்தாற்போன்ற பெண் ஒருத்தி தோனறினுள். அவள்தான் இமவானின் மகளாகிய உமை. அவளிடம் இந்திரன் அந்த யட்சன் யார் என்று வினவினுன். அதுதான் பரம்பொருள் என்று அவள் சொனனுள். இங்கே உமை ஞானத்தின் உருவகம் எனினும், பின் வந்த நூலகளிலே அவள் சிவபெருமானின் துணையாகவே தோன்றுகிருள். வாஜசனேய சம்கிதை யில் அவள உருத்திரன் சகோதரியாகச் சொல்லப்பட் டிருக்கிருள்.

ஸ்ரீகண்டரும் பட்ட பாஸ்கரும் ஓம் என்ற பிரண வத்தினின்றும் உமா என்ற சொல் பிறந்தது என்பர். மேலும துர்க்கை மந்திரம் விஷ்ணு மந்திரங்களிலும் உயர்ந்தது எனறு புராணங்கள் முழங்குகின்றன. இதனுல் சக்திவழிபாடு வைதிகமானதுதான் என்பது நிச்சயமாகிறது.

## 9. சாக்த தந்திரங்கள்:

சக்தி வழிபாட்டை விளக்கியும் விவரித்தும் கி. பி. 4 – ஆம நூற்றுண்டின் பின்னர் பல தந்திர நூல்கள் எழுந்தன. நாளடைவிலே இவ்வழிபாடு எங்கும பரவி வந்ததற்கு ஏற்ப, தந்திரங்களும பலவாயின. சௌந்தரிய லகரியிலே ஸ்ரீசங்கரர் தந்திர நூல்களின் எண்ணிக்கை 64 எனருர். இவற்றுக்கும் சிவபெருமானே ஆசிரியர் என்பது அவர் கருத்து.

வேதவேள்வி அருகி, புதிய புதிய வழிபாட்டு முறைகள் தோன்றியிருப்பதைத்தான் இவை தெரிவிக்கின்றன. இவை வேதத்துக்கு விரோதமானவை அல்ல, இவற்றால வேதம் பூரணமாகிறது. யோகஞான நெறிகளுக்குத் தகுதி அற்றவர்களும், தாழ்ந்த தரத்திலே உள்ள பாமரர்களும் இவற்றால பயன் அடைந்தனர். வேதத்தின் கர்மகாண்டம் விதித்த சடங்குகளின வளர்ச்சியைத்தான் பெரும்பாலான தந்திர நூல்களிற் காண்கிறோம். சியாமள ரகசியம், சாரதிலகம், காளிகாதந்திரம், குலசூடாமணி, குலார்ணவம் முதலியவை சாக்தருடைய தந்திரங்களிற் சில. இவற்றைத் தழுவியவர் வங்காளம் அதைச் சார்ந்த நாடுகளில் வாழ்கின்றனர். இவர்களிலே வாமசாரிகள் - இடங்கையர் தட்சிணசாரிகள் - வலங்கையர் என்ற இரு பிரிவினர் உண்டு.

## 1. இடங்கையர்

வாமசாரத்திலே துர்க்கை காளி லட்சுமி என்பவர்களைச் சக்தி சொரூபமாகக் கருதி, மது, மச்சம், மாமிசம், மாது, முத்திரை என்னும் பஞ்சமகாரங்களைக் கொண்டு பூசிப்பர். இவர்களிலே சிலர் நள்ளிரவிலே இடுகாட்டுக்குப் போய்ப் புதைத்திருக்கும் பிரேதங்களைத் தோண்டி எடுத்து, அதனை மது மாமிசங்களால் பூசிப்பர், சிலர் பெண்களை நிறுத்திப் பூசிப்பர். இதைப் பூரணபிட்சை என்பர். வாமமார்க்கத்தின் ஐந்து மகாரங்கள் தவறுதலாய்ப் பொருள் செய்யப்பட்டு, சிற்சில இடங்களிலே இழிநிலையிலே அனுட்டிக்கப்பட்டு வருவது வருந்தத்தக்கதே. பால் உணர்ச்சியை ஒழிப்பதற்கு மாறாக மாது, காம உணர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகிறாள். யோக நெறியில் சித்சந்திர மண்டலத்தினின்றும் ஒழுகும் அமுததாரைதான் மது, கள் அல்ல. பட்டினி விரதங்களால் உடல் தினவை ஒடுக்குவதற்குத்தான மாமிசம் அறிகுறியே அன்றி, உண்பதற்கு அல்ல. மச்சமும் முத்திரையும் முறையே இடகலை பிங்கலை நாடிகளைக் குறிப்பன. இந்த வாமாசார வழிபாட்டால் உலகில உள்ள இன்பங்கள் யாவும் கிடைப்பதோடு முக்தியாம் பேரின்பமும் கிடைக்கிறது எனபது சாக்தர் நமபிக்கை. இவர்களைக் கௌலிகள் என்பர்.

## 2. வலங்கையர்:

இழிநிலை எய்திய வாமமார்க்கத்தை ஸ்ரீ சங்கரர் கண்டித்திருக்கிறார். அவர் காலம முதல் தட்சிணசாரிகள் தலை எடுத்தனர். இவர்கள் ஸ்ரீ வித்யோபாசகர் வேத நெறியில வழுவாது தகுந்த குருவை அடைந்து, ஸ்ரீ வித்தை முதலான பத்துவித மகாவித்தை மந்திரங் கொண்டு உபாசனைமுறை வழுவாது பூசைசெய்து, பராபட்டாரிகை என்ற பராசக்தியைப் பிரசன்னமாகச் செய்வர். இந்த வைதிக சாக்தோபாசனை தென்னாட்டில் நடந்து வருகிறது. இதற்கு அடிப்படை சௌந்தரியலகரி. இதற்கு மூலம் கௌடபாதருடைய சுபகோதயமும், சாக்த தந்திரங்களும் உபநிடதங்களுமே.

அத்வைத மதத்தை நிறுவி, நிர்க்குண பிரமத்தைத் தெரிவித்து, ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை மெய்ப்பித்த ஸ்ரீசங்கரர், பஜகோவிந்தம் பாடினாற்போலவே அம்பிகையைத் துதித்து சௌந்தர்யலகரி பாடினார். இதிலே மந்திர நூலைத் தழுவிய யந்திர தந்திரப் பிரயோகங்கள் உண்டு. தேவியின் அழகைக் காவியரசத்துடன் வருணிப்பதால் சௌந்தர்யலகரி எனப்படுகிறது.

## 10. ஸ்ரீவித்தை :

ஸ்ரீ சங்கரர் தாபித்த 'ஷண்மதங்'களிலே தேவிவழிபாடும் ஒன்று. ஸ்ரீவித்தையை இவர் பிரகாசப்படுத்தினார். இவரும் இவர் வழிவந்தோரும் நிறுவிய அத்வைத மடங்களிலே தேவியை ஸ்ரீசக்கரத்திலே எழுந்தருளச்செய்து, இன்றளவும் வழிபட்டுவருகின்றனர். சிருங்கேரியில் ஸ்ரீ சங்கரர் நிறுவிய மடாலயத்திலே ஸ்ரீசக்ரத்தில் சாரதாதேவியைப் பிரதிஷ்டை செய்தார். இதைச் சாரதாபீடம் என்பர். 'சர்வவேதாந்த பிரகாசினி பிரமவித்யா சாரதா' என்று சொல்லப்படுவதால் பிரமவித்தையில் வேறல்ல ஸ்ரீவித்தை என்பது புலனாகிறது. முக்கியமான சிவாலயங்களிலும் ஸ்ரீசக்ரம் தாபிக்கப்பட்டுள்ளது. இவற்றிலே முதன்மையானது காஞ்சியில் காமாட்சி கோயில். இதைக் காமகோடிபீடம் என்பர். சிதம்பரம் சிதாகாச ரகசியத்திலே ரம்மோனச் சக்ரம். அதாவது சிவச்சக்ரமும் ஸ்ரீசக்ரமும் பூசிக்கப்படுகிறது. திருக்குற்றாலத்திலே ஸ்ரீ சக்ர பீடம் உண்டு. ஆவுடையார் கோயிலிலே ஸ்ரீ சக்ர பீடத்தின் மீது தேவியின் பாதுகை வழிபடப்படுகிறது. திருவானைக்காவில் அகிலாண்டேசுவரியின் காதணி ஸ்ரீ சக்ர வடிவில் அமைந்தது. இந்தப் பட்டியலை இப்படியே பெருக்கிக் கொண்டு போகலாம்.

ஸ்ரீ சங்கரருக்குப் பிறகு ஸ்ரீ வித்தையை விளக்கம் செய்த ஞானிகளிலே வித்தியாரணியரும் நீலகண்டரும் சிறந்தோர் ஆவர். 18-ஆம் நூற்றாண்டிலே பாஸ்கர ராயர் இயற்றிய (லளிதா சகஸ்ரநாம பாஷ்யம் முதலிய) மூன்று நூலகள் ஸ்ரீ வித்தையின் 'பிரஸ்தானத்திரயம்' என்று சொல்லப்படுகிறது. சௌந்தரிய லகரிக்கு லட்சுமிதரர் உரை எழுதி ஸ்ரீ வித்தையை மேலும் தெளிவு படுத்தினார். காஞ்சி காமாட்சியை மூககவி துதித்த ஐந்நூறு சுலோகங்களும் பக்திச்சுவை மலிந்தவை. கவிப்பண்பும் வாய்ந்தவை. இதைச் செம்பாகமாகத் தமிழ்ச் செய்யுட்களிலே கோவை ஸ்ரீ நடேசக்கவுண்டர் அவர்கள் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளார், தமிழ்மொழியிலே தேவியின் புகழ் பாடி எழுந்துள்ள மாலைகள் பதிகங்கள் பல. இவற்றுள் அபிராமி அந்தாதி சிறந்தது.

## 11. லளிதா :

ஸ்ரீ வித்தையின் அதிதேவதை லளிதா மகா திரிபுரசுந்தரி. சோபை, விலாசம், இனிமை பெருமிதம்,

தைரியம், ஒளி, தகதகப்பு, ஔதாரியம் என்ற எண் குணத்தாள் ஆகிய லளிதா ' துணையும் தொழும் தெய்வமும் பெற்றதாயுமாய் ' இருக்கின்றாள். சிந்தூரம் போலச் சிவந்த மேனி, புன்முறுவல் பூத்த முகம். கருணை கலை எறியும் கண்கள். இப்படி அவள் திருமேனி வருணிக்கப்பட்டுள்ளது.

> *" ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்*
> *பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்கக்*
> *காத்தாளை அங்கையிற் பாசாங்குசமும் கருப்புவில்லும்*
> *சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே "*

என்கிறார் அபிராமிபட்டர். ஆசையின் வடிவமான பாசத்தையும், கோபத்தின அறிகுறியான அங்குசத்தையும, மனத்தின் சின்னமான கருப்பு வில்லையும், பஞ்சதன்மாத்திரைகளாகிய மலரம்புகளையும் தன்கைகளில கொண்டிருக்கிறாள் என்று லளிதா சகஸ்ர நாமம் கூறுகிறது. மிகுந்த வைபவத்தோடும் பலகோடி சக்தி கணங்களோடும் அனுக்கிரக மூர்த்தியாய் இவள் எழுந்தருளியிருக்கிறாள் என்பது கோட்பாடு. காஷ்மீரததில் ஸ்ரீ பிரமும தமிழ்நாட்டிலே காஞ்சிபுரமும் லளிதோபாசனையின் முக்கிய தலங்கள் எனறு லளிதோபாக்கியானம் கூறுகிறது.

## 12. ஸ்ரீ சக்ரம் ;

லளிதையின் முக்கிய உறைவிடம் மேரு. இதை ஸ்ரீ சக்ரம் என்பர். ( சிவன் சக்தி இவர்களுடைய சரீரமதான் ஸ்ரீ சகரம் என்று மந்திர நூல்கள கூறும் ) பூமி, கைலாசம், மேரு என்றபேதமுளள ஸ்ரீ சக்கரத்திலே லளிதையை ஆராதிப்பவர் பலர். லளிதோபாக்கியானததிலே ஸ்ரீ சக்ர வழிபாடுதான காணபபடுகிறது. லளிதையின் உபாசனை தக்கார்க்குத் தக்கபடி மந்திர ரூபமாயும் யந்திர ரூபமாயும சுலோகம், மாலை, கவசம் எனறு பலவிதமாகக காணப்படுகிறது. திரிபுரசங்காரஞ் செய்த சிவபிரான் தேவியாய் இருப்பதால், சபலம் சஞ்சலம் வாய்ந்த மனதுடையார் ஒரு நாளும இவளை உபாசிக்க முடியாது.

இவளுடைய சொருபத்தையும் தத்துவத்தையும் போதிக்கும் மநதிரங்கள பல. இவற்றுள் பதினைந்து எழுத்துள்ள பஞ்ச தசாட்சிரியம், பதினறு எழுத்துள்ள சோடசாட்சரியும முக்கியமானவை. குருமூலம் உபதேசம் பெற்று ஏதேனும் ஒரு மந்திரத்தை ஒருமை மனத்துடன் செபிப்பவர் மூலாதாரத்திலே ஒடுங்கி இருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி, தம மனக்கணணிலே தேவியைத் தரிசிப்பவர், இடைவிடாத செபத்தால் அநத சக்தி மேல்நோக்கிக் கிளம்பி, சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி என்ற கேந்திரங்களைக் கடந்து, ஆக்ஞை என்ற இடத்தைச் சேர்ந்து ஓர் அனல்கொழுந்து வடிவிலே வெளிப்படுகிறது. பின சகஸ்ராரத்திலே தோன்றும் அருட்சோதியினின்றும் பெறும் இன்பத்தை எப்போதும் துய்ப்பர். இதற்கு விளக்கமாகச் சில கோயில்கள் உண்டு. திருவாரூர் - மூலாதாரம, காஞ்சி - நாபி, சிதம்பரம் — அநாகதம, மதுரை-துவாதசாந்தம, ஆவுடையார்கோயில்-மகாசோட சாந்தம், இங்கே ஆத்மநாத சிவனும் யோகாம்பாளும் ஆயிரம் இதழ் சகஸ்ராரத்திலே தியானிக்கப்படுகின்றனர்.

## 13. மூர்த்த பேதங்கள் :

மகாபாரதத்திலே இரண்டிடங்களிலே துர்க்கையின் பிரார்த்தனை காணப்படுகிறது. விராடன் நகரிலே பிரவேசித்த போது யுதிட்டிரன துர்க்கையைத் துதித்தான். தேவகிக்கும் வசுதேவனுக்கும் மகளாகக் கிருஷ்ணன் பிறந்தான. பின் விந்தியமலையிலே குடி புகுந்தாள். சிவபிரான்தேவி மட்டும் துர்க்கையலல. பிரமம விஷ்ணுக்களின் தேவியரும் துர்க்கைகளே. ஆதலின வைஷ்ணவியை, துர்க்கை, காளி, மாகாளி, விந்தியா, வாசனி என்று யுதிட்டிரன் போற்றினான். பீஷ்ம பர்வத்திலே கிருஷ்ணன் தூண்டுதலால அர்ச்சுனன் துர்க்கையைப் பிரார்த்தித்தான். இப் பிரார்த்தனையிலே அவள். உமா, சங்கரி, சரசுவதி, சாவித்திரி என்று புகழப்படுகிறாள். கந்தனுக்குத் தாய் என்றும் சொல்லப் படுகிறாள். ஒரே சக்திதான் பல வடிவங்களிலே தோனறுகிறாள் என்பது இவ்விரு துதி மொழிகளால் நாம் அறிகிறோம்.

இம மூர்த்தி பேதஙகளிலே துர்க்கை, லட்சுமி, சரசுவதி, முக்கியமானவை. சண்டி. சாமுண்டி, கௌசிகி; போனற பேதங்கள் வெறும் பெயர்கள மட்டும் அல்ல; வெவ்வேறு சந்தர்ப்பங்களிலே நிகழ்ந்த சக்தியின அவதாரங்கள்தான் அவை. மகிஷனை வதைக்க சண்டி ஆனாள். சண்டன முண்டனை வதைக்கச் சாமுண்டி ஆனாள். சும்பன் நிசுபனை வதைக்க கௌசிகி ஆனாள். பண்டனை வதைகக யாககுண்டத்தினினறும தோன்றியவளதான் லளிதையும.

## 14. காளி :

லளிதையின் வேறானவள் காளி; காளி பயங்கரி; லளிதை சுந்தரி. காளி தத்துவம் அற்புதமானது. கோடானுகோடி யுகங்கள் கற்பங்கள் அடங்கிய காலத்தையே எடுத்து விழுங்கி அதாவது, காலங் கடந்து நிற்பவள், ஆதலின் தேவியை வடமொழியில் காளீ, காலிகா எனபர்; தமிழிலே காளி என்பர்.

*"காலமாம் வனத்தில் அண்ட கோளமாம்*
*மரத்தின் மீது*
*காளிசக்தி என்ற பெயர் கொண்டு - ரீங்*
*கார மிட்டுலவும் ஒரு வண்டு".*

என்று தொடங்கி, மாகாளியின் புகழைப் பாரதியார் பாடியிருக்கிறார். எங்கும் நீக்கமற நிறைந்தவள் என்பதால், நீலநிறத்தவளாக அவள் கற்பனை செய்யப்பட்டிருக்கிறாள். விரிந்த வானும் பரந்த கடலும் நீலமாகவே தோன்றுகின்றன இல்லையா? 'மேலுமாகிக் கீழுமாகி, வேறான திசையுமாகி விண்ணும் மண்ணும்' ஆன இயற்கைத் தாயை மூடி மறைப்பதற்கு ஒன்றும் இல்லை. ஆதலின் அவள் நிர்வாணமாய் நிற்கிறாள். அவளை 'முண்டமாலினி' என்பர். அதாவது, துண்டிக்கப்பட்ட தலைகளை மாலையாகக் கோத்து அணிந்துகொண்டிருக்கிறாள். தன்னிடமிருந்து தோன்றும் உயிர்கள் தன்னிடமே ஒடுங்குதலை உணர்த்துகிறது இத் தலைமாலை. இம்மாலையில் உள்ள பல்வேறு வயதுடைய தலைகள், பிறந்தவர் எந்நாளும் இறப்பர் என்பதற்கு விளக்கம். மக்கள் செய்யும் வினை அனைத்திற்கும் சக்தியாய் இருப்பவள் அவள்தான் என்பதற்கு அடையாளமாக வெட்டிய கரங்களைச் சரமாகத் தொடுத்து அரையிலே அவள் கட்டியிருக்கிறாள். அவள் சங்காரமூர்த்தி என்பதை நாவிலிருந்து கொட்டும் இரத்தம் தெரிவிக்கிறது. கணந்தோறும் அவள் ஜீவராசிகளை வதைக்கிறாள், வெட்டுகிறாள், மாய்க்கிறாள். உலகோர் சிந்தும் கண்ணீரை அவள் பொருட்படுத்துவதில்லை. மக்கள் மடிகின்றனர். நகரங்கள் அழிகின்றன; நாடுகள் காடாகின்றன. அவள் ஹூம் என்றால் அண்டங்கள் தவிடுபொடி. இந்த அழிவைக் கண்டு அஞ்சுபவர் அவளை வழிபட உரியார் அல்லர். சுயநலப் பற்றும், ஆணவத்தடிப்பும், பேராசையும் வாய்ந்தவர்க்கு அவள் பயங்கரிதான். வழிதவறியவன் அவள் வாளினின்றும் தப்பமுடியாது. நல்வழியில் நடப்பவன் அவளைக் கண்டு அஞ்சுவதில்லை. உயிரைத் திரணமாக மதிக்கும் ஆன்மத் தியாகிதான் அவளை வணங்கும் தகுதி வாய்ந்தவன். உயர்ந்த கொள்கைக்குத் தன்னை ஒப்புக்கொடுத்து, எவன் பெருமிதத்துடன் மாய்கிறானோ அவனுக்குத்தான் அன்னை அருள்செய்கிறாள். மரணபயம் அவனுக்கு இல்லை. இத்தகைய ஆன்ம வீரர் மலிந்திருந்ததால் முற்காலத்தில் நம் நாடு பலதுறைகளிலும் முன்னேயிருந்தது.

பண்டைய தமிழ் வீரர் செய்த ஆத்ம பரித்தியாகங்களைக் கலிங்கத்துப் பரணி புகழ்கிறது. இதன் காலம் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு. தமது உடலுறுப்புக்களையும் தலைகளையும் தாமே அறுத்துப் பலிபீடத்திலே நேர்த்திக்கடனாக வைத்து இவர்கள் காளியை வழிபட்டார்கள். கலிங்கம், கடாரம், சாவகம போன்ற தொலைதூர நாடுகளை இவர்கள் வென்றதில் வியப்பில்லை. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டியது இவர்களுக்கு எம்மாத்திரம்? காளிகோயிலிலே,

*"சலியாத தனி ஆண்மைத் தறுகண் வீரர்,*
*'தருக வரம்; வரத்தினுக்குத் தக்கதாகப்*
*பலியாக உறுப்பரிந்து தருதும்' என்று*
*பரவும் ஒலி கடல் ஒலிபோல் பரவுமாலோ*
*அடிக் கழுத்தினுடன் சிரத்தை அரிவராலோ*
*அரிந்தசிரம் அணங்கின் கைக்*
*கொடுப்பாராலோ*
*கொடுத்த சிரம் கொற்றவைகளைப்*
*பரவுமாலோ*
*குறையுடலும் கும்பிட்டு நிற்குமாலோ"*

என்று சயங்கொண்டார் பாடுகின்றார். இது வெறும் கற்பனை அன்று. வீரர்களும் தேவி உபாசகர்களும் தலைப் பலி தந்து தமது பிரார்த்தனைகளைச் செலுத்திவந்த பெருஞ் செயலை மகாபலிபுரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் உள்ள பல்லவச் சிற்பங்கள் மெய்ப்பிக்கின்றன.

கம்பவர்மன் ஆட்சியில் அமைந்த பத்தாம் நூற்றாண்டு சாசனம் ஒன்றுண்டு. வீரன் ஒருவன் தன் தலையை ஒரே வாள்வீச்சில் அறுத்து, தேவியின் பலிபீடத்திலே அதைத் தன் கையாலே வைத்தமாதிரி சிலை ஒன்று கிடைத்திருக்கிறது. இவ்வாறு பலி இட்ட அருஞ்செயலைப் பாராட்டி, ஊரார் அமைத்த அறப்புறம் அச்சிலையிலே பொறிக்கப்பட்டுள்ளது. 'படாரிக்குத் குறைத்தலை அறுதது பிடலிகைமேல் வைத்தானுக்கு ஊரார் வைத்த பரிசாவது என்று அச்சாசனம் தொடங்குகிறது. இவ்விரதம் தேவிகுப் பரணிகாணக் கொண்டாடப்பட்டது. இப்பரணி நோன்பை மகளிரும் நோற்றுவந்தனர். இன்னான் மனைவியும் இன்னான மகளுமான இவள் பரணி நோற்றுதறீ இது' என்று பொறிக்கப்பெற்றுள்ள கற்றூண்கள திருக்கோவலூர்ப்பக்கம காணப்படுகின்றன. இவை கி. பி. 9, 10 ஆம் நூற்றாண்டுக்கு உரியவை.

கி. பி. 7–ஆம் நூற்றாண்டிலே மகேந்திரவர்மன் சிங்கவரத்தில் குடைந்துள்ள குகைக்கோயில் சுவரிலே புடைப்புச் சிற்பமாக மகிஷாசுரமர்த்தனி விளங்குகிறாள். இதன் சிறப்பு என்னவென்றால், பிற சிற்பங்களிற்போல் இலலாது, தேவி வலதுகாலை மட்டும எருமைத் தலையேல் வைத்து, இடதுகாலைத் தரையிலே ஊன்றி, சங்கு சக்கரங்களைத் தாங்கி, பக்கவாட்டிலே சற்று சாய்ந்திருப்பதுதான். இதன வலதுபுறத்திலே ஒரு வீரன் மண்டியிட்டு, வலதுகையின் வாள்கொண்டு, தனது இடதுகால் தொடையைத் துண்டிக்கிறான். எதிரிலே பூசாரி மந்திரங்களைச் செபித்துக்கொண்டிருக்கிறான்.

காவிரிப்பூம்பட்டினத்துச் சுடுகாட்டில் இருந்த காளி கோயிலைச் சுற்றிலும், உயிர்க்கடன் கொடுத்தோரது தலைகள் தொங்குகின்ற மரங்கள் வளர்ந்திருந்ததை மணிமேகலை குறிப்பிடுகிறது. சிலப்பதிகாரத்திலே வேடர்கள் காளியை எப்படி வழிபட்டார்கள் என்பதை இளங்கோ

வடிகள் விவரமாகச் சொல்லியிருக்கிறார். நோய்வாய்ப்பட்டு விளியாத வீரரது பழங்குடியிலே ஒரு கன்னிப்பெண்ணைத் தேர்ந்தெடுத்து, அவளுக்குக் கொற்றவையின் கோலம் செய்விக்கிறார்கள். வேண்டும் வரிசைகள் நல்கி அவளை மேளதாளத்துடன் காளி கோயிலுக்கு அழைத்துச் செல்லுகிறார்கள், பலிபீடத்தைத் தொழுது துர்க்கையை 'அமரி, குமரி, கவுரி, சமரி' என்று அர்ச்சிக்கிறார்கள். 'பிறை சூடியவளே, முக்கண்ணி, நீலகண்டி' என்று போற்றுகிறார்கள். "யானைத்தோல் போர்த்து புலித் தோலை அரையிலே கட்டி, எருமைத் தலைமீது நின்றாய். இது என்ன மாயமோ? உன்னைத் தேவர்கள் வணங்குகின்றனர். வேதங்களுக்கும் அப்பாற்பட்ட மறைபொருள் நீ. வளைக் கையில வாள் ஏந்தி, நீ, மகிஷாசுரனை வதைத்தாய். மும்மூர்த்திகளின் மனக்கமலத்திலே சோதி விளக்காய் நிற்பவள் அல்லவா நீ. உன் திருவடிகளை வணங்குகிறோம். நாங்கள் செலுத்தும் கடன் இதோ எங்கள் கழுத்திலிருந்து சொரியும் இரத்தமே. இதை ஏற்றுக்கொள் சங்கரி, அந்தரி' என்று துதித்து வேடர்கள் குருதிப்பலி (அவிப்பலி) கொடுக்கின்றனர். இப்படி வழிபடும் வேடர்குலமே சிறந்த குலமாம்.

இளங்கோ காலத்திலேயே தேவியைப் பற்றிய புராண கதைகள் (தேவி மான்மியம், தேவி பாகவதம்) வளர்ந்து பூர்த்தியாகிவிட்டன. இக் கதைகளில் தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கை உறுதியானது. இக் காலப் பல்லவ பாண்டியர்களின புகழ்ச் சின்னமான சிற்ப வடிவங்களிலே மிகவும் சிறந்தது மகிஷாசுரமர்த்தனி என்பதும் இங்கே கருதத்தக்கது.



# 7. நவக்கிரகத் திருக்கோயில்களும் மக்கள் வழிபாடும் :

## 1. நவக்கிரக வழிபாட்டின் தோற்றம் :

மக்கள் பக்திசெலுத்தும் தெய்வத்திருவுருவங்கள், சிவநெறித் திருக்கோயில்களில் சிவலிங்கத்திருமேனி உள்ளிட்ட இருபத்தைந்து மாகேசுவரத் திருமேனிகள், சோழர் காலத்திலேயே ஒன்பது கோள்களை வழிபடும் சமயப்பண்பாடு பரவலாயிற்று. அம்மையப்பர் வழிபாட்டுடன் நவக்கிரக வழிபாடும் மக்களால் உற்சாகத்துடன் நடைபெறத் தொடங்கியது. வாழ்க்கையில் எதிர்ப்படும் நன்மை தீமைகளை ஒட்டி அவ்வழிபாடும் பரவலாக மலரத் தொடங்கி விட்டது. ஒவ்வொரு திருக்கோயிலிலும் நவக்கிரகப் பிரதிட்டை செய்யப்பட்டது, சில குறிப்பிட்ட திருக்கோயில்களை ஒன்பது கோள்களில் தனித்தனியே கோள்களுக்கு உரியவை என்று கருதும் மரபும் தொடர்ந்தது. சிவநெறிக் கோட்பாட்டில், நவக்கிரக வழிபாடு புகுவுதற்கு "வேயுறு தோளி பங்கன்" என்ற திருஞான சம்பந்தர் திருப்பதிகம் மூல இலக்கியம் ஆயிற்றோ என்றும் கருத இடம் உண்டு. "சிவபிரானை வழிபட்டால் கோள்கள் நல்ல நல்ல" என்று இறை வழிபாட்டில் ஊக்கம் ஊட்டுதலே பாலருவாயரின் குறிக்கோள். ஆனால் தமிழகச் சமுதாயம், அடிப்படையை மறந்து கோள் வழிபாட்டிலேயே அதிக நாட்டம் கொள்ளலாயிற்று. இது பொருள் உணராது விளைந்த புதிய மரபு என்று கூறுவது தவறாகாது.

நவக்கிரகங்களைப் பற்றியும், அவை சிறப்பாக வழிபடப்பெறும் திருக்கோயில்களைப் பற்றியும் இப்பகுதியில் விரிவாக ஆராயப்பெறும்.

## 2. சூரியன் :

நவக்கிரகங்ளில் முக்கியமாக விளங்குகின்றவன் சூரியன். சூரியனை நடுநாயகமாக வைத்து நவக்கிரக மண்டலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ரிகவேதமும், சூரியனைப் புகழ்ந்துள்ளது. மூன்று வித அக்கினிகளில் சூரியன் ஒருவன்; அவனுக்கு ஞாயிறு என்று மற்றொரு பெயர் உண்டு. சூரியனைக் கொண்டு நாழிகைகளைக் கணக்கிடுவதற்கு 'சூர்ய சித்தாந்தம்' என்று கூறுவர்.

ஓம் என்ற ஒலியிலிருந்து சூரியன் தோன்றினன். மும்மூர்த்திகளின் அம்சம் சூரியன், காசிப முனிவருக்கும் அதிதிக்கும் பிறந்தவன் என்பது பாரத வரலாறு. அதனால் அவனுக்கு ஆதித்தியன் என்றும் பெயர். சூரியன் சஞ்சிகை என்பவளை மணந்ததாகவும் பல மக்கள் பிறந்ததாகவும் வரலாறு உண்டு. சஞ்சிகை சூரிய வெப்பம் தாங்காமல் தன் நிழலைப் பெண் வடிவாக்கி அதைச் சூரியனிடம் அனுப்பினள். சாயாதேவி என்று பெயர்பெற்ற அப்பெண் தன்நிலையைச் சூரியனுக்குத் தெரிவிக்காமல் அவனுடன் வாழ்ந்து பல மககளைப் பெற்றாள். பின்பு உண்மை தெரிந்து சாயாதேவியும், சஞ்சிகையும் ஒன்று சேர்ந்து வாழ்ந்து வரலானார்கள். இவர்கள் தவிர பல மனைவியர் சூரியனுக்கு உண்டு. சூரியன் பெற்ற பிள்ளைகள் பிருகு, வால்மீகர், அகத்தியர், வசிஷ்டர், கர்ணன், சுக்ரீவன் முதலியோர்.

சூரியன் மிக்க தவம் செய்து கிரணங்களில் மிகுந்த வலிமை பெற்றவன். சூரிய கிரணங்களால் தான் மழை, பனி, வெப்பம் உண்டாகிறது. உலகில் சூரியனைவிட ஒளி பொருந்திய பொருள் கிடையாது. மற்றை எட்டுக் கிரகங்களுக்கும் ஒளி அளிப்பவன். ஒற்றைச் சக்கரமுடைய ரதத்தில் ஏழு குதிரை பூட்டி வருபவன். அருணன் என்பவர் சூரியனுடைய சாரதி. அனுமானுக்கு நவ வியாகரணங்களையும் கற்றுக்கொடுத்தவன் சூரியன்.

சூரியன் ஒரு ராசியிலிருந்து மற்றொரு ராசிக்குச் செல்லும்போது மாதம் பிறக்கிறது. இதை விஷு புண்ணிய காலம் என்கின்றோம். தை மாதப்பிறப்பு உத்தராயணம், ஆடி மாதப் பிறப்பு தக்ஷிணயனம், மற்றும் அர்த்தோதய புண்ணிய காலம், மகோதய புண்ணியகாலம் முக்கியமானவை. சூரியனும் சந்திரனும் சேர்ந்துள்ள காலம் அமாவாசை. ராகு, கேதுக்கள் பற்றுவதால் சூரிய கிரகணம் உண்டாகின்றது என்பது புராணம். விஞ்ஞான அடிப்படையில் அப்படி நடப்பதில்லை.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச்
சொந்தமான
சூரியனார்கோயில்
அருள்மிகு சிவசூரியப்பெருமான் திருக்கோயில்

சூரியன் வெண்தாமரையில் வீற்றிருப்பவன் என்று ஆகமங்கள் கூறுகின்றன. இரண்டு கைகள் ஒரு முகத்துடன் சூரிய மண்டலத்தின் நடுவே சிவபெருமான் வீற்றிருக்கின்றார். அப்போது சிவசூரியன் என்று சிவாகமம் கூறுகின்றது. சூரிய மண்டலத்தின் நடுவில் விஷ்ணு திகழும் போது அவன் சூரியநாராயணன் என்று அழைக்கப்படுவதாக விஷ்ணு புராணம் கூறுகின்றது.

தைமாதப் பிறப்பு, மகரசங்கராந்தி. சைவர்களும் வைணவர்களும் சூரியனைப் பூசிக்கின்றனர். சூரியனை வழிபடுவதால் கண்நோய், இருதயநோய் காமாலை முதலிய நோய்கள் நீங்குகின்றன.

வால்மீகி ராமாயணத்தில் கதிரவனுடைய துதியாக "ஆதித்திய ஹிருதயம்" என்ற பகுதி உள்ளது. இராவண யுத்தத்தில் இராமர் சோர்வடையாமல் இருக்க அகத்திய முனிவர் உபதேசித்தது. சூரியனுடைய திருநாமங்கள் பல. ஆதித்தியன், ஸவிதா, சூரியன், ககன்பூஷா, பானு, கபஸ்திமான், ஹிரண்யரேதஸ் ஸப்தஸப்தி, பாஸ்கரன், மார்த்தாண்டன், ரவி, பிங்களன் மற்றும் நூற்றுக் கணக்கானவை.

ராகு, கேதுக்களை அமிர்தம் கடையும்போது காட்டிக் கொடுத்ததால் அவர்கள் அவனைப் பீடிப்பதாகவும் அதுதான் கிரகணம் என்று புராணம் கூறுகின்றது.

பாகவதத்தில் சூரியன் மேருமலையை வலம் வருவதாகக் கூறப்பட்டுள்ளது.

மார்க்கண்டேய புராணம், பிரம்ம புராணம் முதலியவற்றில் சூரியன் வரலாறு கூறப்பட்டுள்ளது.

தமிழ் நூல்களில் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் " ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று சூரியனை வாழ்த்துகின்றார். கண்ணகிக்குச் சூரியனுடைய குரல் அசரீரியாக சாட்சி சொல்லியதாகப் பாடல் உள்ளது. "கள்வனோ அல்லன் ... ..."

சூரியன் பாலை நிலத்திற்குத் தலைவன். கலித்தொகையில் நச்சினார்க்கினியர் சூரியனைப் பற்றி உரை எழுதியுள்ளார்.

திருமுருகாற்றுப்படை, சிலப்பதிகாரம், புறநானூறு, சூரியன் சிறப்பைக் கூறுகின்றன.

காவிரிப்பூம்பட்டினத்தில் சூரியன் கோயில் இருந்ததாக இளங்கோ அடிகள் கூறியுள்ளார். "பகல் வாயில் உச்சிக்கிழான் கோட்டம்"

சங்கீதமும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர் நவக்கிரகங்களின் மீது 9 கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

சூரியனைப்பற்றி "சூரியமூர்த்தே நமோஸ்துதே"

என்று பாடியுள்ளார்.

சூரியன் சிம்ம ராசிக்கு அதிபதி. அதிதேவதை அக்னி. பிரதி அதிதேவதை – ருத்ரன்.

சூரிய நமஸ்காரம் சிறப்பானது; அதற்குத் தனி மந்திரம் உண்டு. கண் ஒளி பெருகும். "கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்" என்பது பழமொழி.

மயூரகவி என்ற புலவர் "சூரிய சதகம்" என்ற நூல் இயற்றியுள்ளார்.

விஞ்ஞானிகள் சூரியனைப்பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டே இருக்கின்றார்கள். கவிஞர்கள் சூரியனுடைய அழகைக் காவியங்களில் வருணிக்கின்றார்கள். சூரியன் நம் நாட்டுக்கு மட்டுமல்லாமல் உலகில் எல்லா நாடுகளுக்கும் தேவைப்பட்டவன். அவனைப் பாடாத மொழியில்லை: வணங்காத மக்கள் இல்லை. வேதங்கள் அவன் புகழைக் கூறியுள்ளன. சூரியன் கமலமலரை மலர்த்துபவன்.

அமரகவி பாரதியார் சூரியனைப்பற்றி " நீ ஒளி. நீ சுடர் நீ விளக்கம் நீ காட்சி. மின்னல், ரத்தினம், கனல், தீக்கொழுந்து" என்று கவிதை புனைந்துள்ளார்.

மக்கள் சூரியனைப் பல விதத்தில் பூசை செய்வார்கள். யந்திரத்தில் ஆவாகனம் செய்தும் உருவம் எழுதியும் வழிபடுவார்கள். சிவாலயத்தில் பரிவார தேவதையாக சூரியன் உள்ளான். நவக்கிரகத்தில் ஒன்றாக வைத்து வலம் வருகின்றார்கள்.

சூரியனுக்குத் தமிழ் நாட்டிலும் மற்றும் வட நாட்டிலும் பல கோயில்கள் உள்ளன.

சோழநாட்டில் சூரியனார்கோயில் என்ற தலத்தில் சூரியனுக்குத் தனிக்கோயில் உள்ளது. மற்ற கிரகங்களுக்கும் அங்கு கோயில் உண்டு, இக்கோயில் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்தது.

**21. மற்றும் பல கோயில்கள்:**

சிதம்பரத்திலிருந்து 16 கல் தொலைவில் உள்ள உடையார் குடியில் செம்பியன் மாதேவியால் கட்டப்பட்ட கோயில் உள்ளது. சூரியதேவர் விக்ரகம் உள்ளது. திருக்கோவிலூரை அடுத்த கீழூர் திருச்சி மாவட்டம் அன்னூர் ஆலம்பாக்கம், கும்பகோணம் தாலுக்கா சித்தநாதசுவாமி கோயில், திருக்கோடிகா, திருக்கோயிலூர் வீரட்டானம், தென்ஆர்க்காடு மாவட்டம் எறும்பூர் புதுக் கோட்டை, பக்கலில் உள்ள நீர் பழலி, திருச்சி கரூர் பதையில்உள்ள அள்ளூர், நாவலூர் திருமெய்ஞ் ஞானம், திருப்பூந்துருத்தி, திருசோற்றுத்துறை, திருக்கண்டியூர், கும்பகோணம் நாகேஸ்வரர் கோயில், திருச்சி மாவட்டம் திருக்கட்டளை, பூம்புகார் முதலியன சூரியனுக்குச் சிறப்பான இடங்கள், புகார் நகரில் 2500 ஆண்டுகளுக்கு முன் சூரிய வழிபாடு இருந்தது.

கங்கைகொண்ட சோழபுரத்தில் நவக்கிரகங்கள் அனைத்தும் ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளன. 7 குதிரைகளால் இழுக்கப்பட்ட ரதத்தின் அருகில் அருணன் தேரோட்ட பதுமபீடமாக அமைந்துள்ள ஒரே வட்ட வடிவக்கல்லில் சூரியனும், சுற்றிலும் 8 கிரகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நவக்கிரக அமைப்பு வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. வைத்தீஸ்வரன்கோயிலில் "நவக் கிரக யந்தரம்" கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. அங்காரகன் கோயில் பக்கலில் உள்ளது.

வடநாட்டில் "கோனார்க்" என்ற இடத்தில் சூரியனுக்குத் தனிக் கோயில் உள்ளது என்று கூறுகின்றனர்.

"சூரிய காந்தக் கல்" என்று ஒரு கல் உண்டு. இதில் சூரிய ஒளி பட்டால் நெருப்பைக் கக்கும்.

"காசினி இருளைநீக்கு கதிரொளியாகி எங்கும்
பூசுரர் உலகோர் போற்றப் பொசிப்புடன் சுகத்தை [நல்கும்
வாசி ஏழுடைய தேர்மேல் மகாகிரி வலமாய்வந்த
தேசிகா; எனை ரட்சிப்பாய், செங்கதிரவனேபோற்றி"

**விஞ்ஞானம்:**

சூரியன் உலகின் ஜீவாத்மா. பூமியிலிருந்து 93,000,000 மைல் தூரத்தில் உள்ளது. வெப்பம் 1,000 000 - சி. பூமியைப்போல் 332000 மடங்கு கனமுள்ளது. மற்றும் 1,300,000 மடங்கு பெரியது. அதன் விட்டம் 435000 மைல். அதன் வயது சுமார் 2000 கோடி வருடங்கள். சூரியன் ஒரு நெருப்புக் கோளம். சமீபத்தில் விஞ்ஞானிகள் சூரியன் என்றுமே அழியாது என்று கண்டுபிடித் துள்ளார்கள்.

**3. சந்திரன்:**

சூரியனுக்கு அடுத்சுபடியாக நவக்கிரக மண்ட லத்தில் வருபவன் சந்திரன். சூரியன் வெங்கதி ரோன். சந்திரன் தண்கதிரோன். சந்திரனை எல்லோரும் விரும்புவர். அதனால் அவனுக்கு லோகப்பிரியன் என்று பெயர். அழகன், பெண் களின் உள்ளம் கொள்ளைகொள்பவன். பயிர் வளர சந்திரன் உதவி தேவை கவிகளின் உணர்ச்சியை ஊட்டுபவன். கலைஞர்களும், ஓவியர்களும் சந்திரனை அதிகமாகத் தீட்டுவார்கள்.

வேதங்களில் இவனுக்கு ஸோமன் என்று பெயர். சந்திரன் பற்றிப் பல கதைகள் உண்டு. தக்ஷ பிரஜாபதி கதை யாவரும் அறிந்ததே. அதனால் அவனுக்கு வளர்பிறை தேய்பிறை ஏற் பட்டது. இதிகாசத்திலும், பாரதத்திலும் அவன் வருகிறான். வில்லிபுத்தூர்ஆழ்வார் தம் பாரதத் தில் சந்திரனைப் பாடியுள்ளார், சிவபெருமான் முடிமேல் இருப்பவன் தேவர்கள் அமுதைக் கடைந்த பொழுது அவ் வெப்பத்தைத் தணித்த வன். அந்தணர்கள் சந்திரனை வழிபடுகின்றனர்.

கந்தபுராணத்தில் சந்திரன் வரலாறுகளைக் காணலாம். சந்திரன் தேவாலயங்களில் பரிவார தேவதையில் ஒருவன். சந்திரன் தூய வெண்ணிற முடையவன். வெள்ளை ஆடை உடுப்பவன். "சிற்ப ரத்தினம்" என்னும் நூல் சந்திரனைத் தேரில் அமர்ந்த கோலத்தில் காட்டுகின்றது.

அவனுடைய தேவியர் காந்தி, சோபை என்ற இருவர். ரோகிணி சந்திரன் பக்கலில் உள்ளதாக பூர்வகாரண ஆகமம் கூறுகின்றது. நவக்கிரக ஆராதனம் என்னும் நூல் சந்திரனை வழிபடும் முறைகளைக் கூறுகின்றது. கற்கடக ராசிக்கு அதிபன் சந்திரன். "நவக்கிரக தோத்திர சங்கிரகம்" என்னும் நூலில் சந்திரனுக்கு 28 பெயர்கள் கொடுக் கப்பட்டுள்ளன. சுதாதரன், குமுதப்பிரியன் என்ற நாமங்கள் விசேஷமானவை.

சந்திரன் உள் காணப்படும் நிழல் மான் போன்றது. அவன் ரோகிணிபதி; மூலிகைகளுக்கு வளர்ச்சி தருவதால் "ஔஷதீசன்" என்ற பெயர். நட்சத்திரங்களுக்கு நாயகன்.

பாண்டிய மன்னர்கள் சந்திர வம்சத்தில் தோன்றியவர்கள், இனிய உருவான அவனுக்கு இனிப்பு மிகவும் விருப்பம். யோகிகள் அன்பன். அவர்கள் மூச்சைச் சத்திரகலை என்பர்.

சிலப்பதிகாரத்தில் "திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்" என்று இளங்கோ அடிகள் பாடியுள்ளார். பூம்புகார் நகரில் நிலாக்கோட்டம் என்று சந்திரன் கோயில் இருந்தது என்பர்.

குறுந்தொகையில் "தொழுது காண்பிறை" என்று கூறப்பட்டுள்ளது, மக்கள் பிறையைக் காண்பது பழைய வழக்கம். திருக்கோவையாரில் சந்திரனைப் பற்றிய பாடல் உள்ளது. "மைவார் கருங்கண்ணி செங்கரம் வெள்ளைச் சிறுபிறைக்கே"

"பிள்ளைத்தமிழ்" என்ற பிரபந்தத்தில் அம் புலிப் பருவம் என்று தனியே ஒரு பகுதி உள்ளது. பாரதியார் சந்திரனைக் காதல் தெய்வம் என்று கூறியுள்ளார்

"சோமதேவன் புகழ்" என்ற பாட்டைப் பாடி யுள்ளார்.

அவன் தேர் 10 சக்கரங்களையும் 2 குதிரைகளை யும் உடையது. வெள்ளை அல்லியை உடையவன். அலங்காரப் பிரியன். வெண் குடைமீது சிங்கக் கொடி உடையவன்.

பிறைச் சந்திரனை ஆயுள் வளரும் பொருட்டுத் தொழுவார்கள். 1000 பிறை கண்டவர்கள் உண்டு. திருவிளையாடற் புராணம் சான்று.

சித்தாந்த சேகரம், சிற்பரத்தினம் முதலியன சந்திரனைப்பற்றி கூறும் நூல்கள்.

சூரியனிடமிருந்து சந்திரன் பிரிந்து நிற்கும் நாள் பௌர்ணமை, நிறைமதி என்று பெயர். "நாலாம் பிறைச் சந்திரனைக் கண்டால் நாய்பட்ட பாடு படுவர்" என்பது பழமொழி.

முஸ்லீம்கள் பிறை தொழுதலைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

திருவக்கரை, திருக்கருகாவூர், திலதைப்பதி, திரு இடைமருதூர், திருக்கோவலூர், நீர்பழனி, திருக்கட்டளை, புகார் நகர் முதலிய தலங்கள் சந்திர னுக்கு உரியவை.

திருவேங்கடம் சிறப்பான சந்திர க்ஷேத்திரம்.

2500 ஆண்டுகளுக்கு முன் பூம்புகாரில் சந்திர வழிபாடு இருந்தது.

சந்திரனுக்கு அதிதேவதை - நீர் (வருணன்) பிரதி அதிதேவதை–கௌரி.

"சாந்திர மானம்" என்னும் கணக்கும் உண்டு. தெலுங்கு நாட்டில் சிறப்பு.

சந்திரன் ஆயுளை வளர்ப்பவன், 1000 பிறை களைக் கண்டவர்கள் சதாபிஷேகம் என்ற சாந்தி யைச் செய்துகொள்ள வேண்டும்.

"சந்திரகாந்தக் கல்" என்ற ஒரு கல் உண்டு. இதில் சந்திரன் ஒளி பட்டால் அதனின்று நீர் துளிக்கும்.

விஞ்ஞானம் :- சந்திரன் பூமியைச் சுற்றி வரும் கிரகம். சூரிய ஒளியைப் பெற்று அதைப் பூமிக்குப் பிரதிபலிக்கின்றது. சூரிய சந்திர கிரகணங்களுக்கு ஆதாரமானது. அமாவாசை, பௌர்ணமைக்குச் சநதிரனே காரணம். சமீபத்தில் சந்திரமண்ட லத்தை மனிதன் சுற்றியதும் - அடைந்ததும் விஞ்ஞான உலகின் முன்னேற்றம்,

"அலைகடல் அமுதந்தன்னில் அன்று வந்துதித்துமிக்க
கலைவளர் திங்களாகிக் கடவுளோர்க் கமுதம் ஈயும்
சிலைநுதல் உமையாள் பங்கன் செஞ்சடைப் பிறை [யாய்மேரு
மலைவலமாக வந்த மதியமே போற்றி போற்றி"

4. அங்காரகன் : (செவ்வாய்)

நவக்கிரக மண்டலத்தில் மூன்றாவதாக வருப வன் அங்காரகன், மங்களன், குஜன், செவ்வாய், செம்மீன் முதலிய பெயர்களும் இவனுக்கு உண்டு. பூமிதேவியினால் வளர்க்கப்பெற்றவன். அதனால் குஜன் என்ற பெயர் வந்தது.

சிவபெருமானின் நெற்றிக்கண்ணால் வேர்வை உண்டாகிப் பூமியில் விழுந்தது, அதிலிருந்து குழந்தை வடிவாகத் தோன்றினான் என்பது புராணம். அவன் தவம் செய்து கிரக பதவியை அடைந்தான். மற்றொரு வரலாறு பாரத்வாஜ முனிவர்பால் தோன்றிய கருவிலிருந்து வளர்ந்தான். அவனிடத்தில் கலைகள் பயின்றான். (அபிதான சிந்தாமணி)

வீரபத்திரரே அங்காரகன் என்றும் கூறுவர். தக்க யாகத்தில் வீரபத்திரன் தக்கனை சம்ஹாரம் செய்து பராக்கிரமத்தால் உலகை நடுங்கவைத்தான். தேவர்கள் அஞ்சிப் பெருமானை வணங்கி வேண்டி னர் வீரபத்திரர் தம் பயங்கர உருவத்தை மாற்றி சாந்த சொரூபமாய் அங்காரகனாய்த் தோன்றினார். வீரபத்திரருக்குச் செவ்வாய்க் கிழமை சிறந்தநாள்.

அதனால் அங்காரகனுக்கு அந்த நாள் சிறப்பாக அமைந்தது. செவ்வாய்க்கிழமை விரதம் பற்றி உபதேச காண்டம் சொல்கின்றது.

அங்காரகன் இரத்தம்போல் சிவந்த தேகத்தை உடையவன். செம்மலர் அவனுக்கு விருப்பம். 4 கைகளை உடையவன். அபயம், சக்தி, ஆயுதம், கதை, சூலம் முதலியன கொண்டவன். அங்காரகனின் வாகனம் மேஷம் (ஆடு). எட்டுக் குதிரைகள் பூட்டிய தேரில் செல்பவன் என்று அறிகின்றோம்.

முத்துசாமி தீட்சிதர் "அங்காரகம் ஆச்சிரயாமி" என்று பாடியுள்ளார். தன்னை வணங்குபவர்களுக்கு நன்மை செய்பவன். மேஷ ராசிக்கும் விருச்சிக ராசிக்கும் உடையவன், அங்காரகனை வழிபடுவதால் வெட்டுக்காயம், புண் முதலியவைகளால் உண்டாகும் துன்பம் நீங்கும். அங்காரகனுக்கு சிவப்புக் குடை உண்டு. மேருவை வலம் வருபவன்.

முத்துக்களில் செந்நீரோட்டம் உடைய ஒரு வகை உண்டு. அதற்கு "அங்காரகன்" என்று பெயர். சிலப்பதிகாரத்தில் இது கூறப்பட்டுள்ளது. செவ்வாய் ஆண் கிரகம்; துவரை, செப்புப் பாத்திரம், பவழம் முதலியவற்றைத் தானம் செய்தால் அங்காரகன் மகிழ்ச்சி அடைவான். அங்காரகன் அசுப கிரகம். ஆனால் மங்கல உருவம் உடையவன்.

சிவனுடைய கண்ணிலிருந்து தோன்றியதால் இவன் முருகன் அம்சம் என்று கூறப்படுகிறது. செவ்வாய்க்கிழமையன்று முருக வழிபாடு சிறப்பு. அங்காரகனுக்கும், முருகனுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

பழைய காலத்தில் ரோமர்கள் செவ்வாயைக் கடவுளாகக் கொண்டாடினர் என்று சரித்திரம் கூறுகிறது. அங்கு அவனுக்கு மார்ஸ் என்று பெயர், பல கோயில்களையும் ரோமர்கள் கட்டினர்.

" செங்கண்ணன் செம் மேனிச்
செல்வன் செம் மாலையினன்
அங்கையில் வேல் சூலம்
அடற்கதை கொள் • மங்கலத்தான்
மோதுந் தகரேறும்
மூர்த்தி நில மகட்குக்
காதற் சேய் அங்காரகன்"

அங்காரகனுக்குத் திருநாமங்கள் பல, அவன் செவ்வண்ண மேனியை நினைப்பூட்டுகின்றன. லோகிதாங்கன், ரக்தாயதேஷணன், ரக்தவர்ணன், கதிதரன், குமாரன், மகாகாயன், மங்கலன், தனப்பிரதன், ஹேமகுண்டலி, ரோகநாசனன், ரக்தவஸ்த்ரதரன் மற்றும் பல ( நவக்கிரக ஸ்தோத்திர சங்கிரகம் )

நவக்கிரகத் தலங்களில் ஒன்றான பழநி அங்காரகனுக்கு உரிய தலம். வைத்தீஸ்வரன் கோயிலில் அங்காரகன் பூசித்துப் பலன் பெற்றதால் இதுவும் அங்காரகத் தலமாகக் கூறப்படுகிறது. இதற்கு கல்லில் மூலஸ்தான மூர்த்தியும் அழகான செப்புத் திருமேனியும் உள்ளது. ஒவ்வொரு செவ்வாயும் அங்காரகன் ஆட்டு வாகனததின்மீது இங்கு வலம் வருகின்றான்.

"முந்நீர் நாப்பண் திமில் சுடர் போலச்
செம்மீன் இமைக்கும் மாகவிசும்பின் '

என்பது புறநானூறு.

திருச்சிறுகுடியில் அங்காரகனுக்கு ஆலயம் உளது. அங்காரகன் அவந்தி நாட்டவன். பாரத்வாஜ கோத்ரம். தேவி சத்திதேவி. இவன் குமாரன் கரேசன் என்று சித்தாந்த சேகரம் என்னும் நூல் கூறுகின்றது.

அதிதேவதை - பிருதிவி, பிரதி அதிதேவதை – க்ஷேத்திர பாலகன்.

செவ்வாய் கிரகம் தணல்போல் காணப்படும். சூரியனைச் சுற்றிவர 687 நாட்கள் ஆகும். சுமார் 2 வருடம். ரோமர்களால் போர்க்கடவுளாக வணங்கப்பட்டது. இவை விஞ்ஞான விளக்கம்.

**செவ்வாய்க்குத் தோத்திரம்:**

"வசனநல் தைரியந்தான் மன்னவர் சபையில் வார்த்தை
புசபல பராக்ரமங்கள் போர்தனில் வெற்றி ஆண்மை
நிசமுடன் அவரவர்க்கு நீணிலந் தன்னில் நல்கும்
குசநில மகனாஞ் செவ்வாய் குரைகழல் போற்றி! போற்றி!

## 5. புதன் :

புதன் சந்திரனுக்கும் தாரைக்கும் உதித்தவன். புதனைப் பூசித்தால் அறிவு ஓங்கும். வித்தைகள் எளிதில் வரும்.

குருவின் மனைவியாகிய தாரை சிலகாலம் சந்திரனுடன் வசித்துப் புதனைப்பெற்றாள். அவன் யாருடைய புதல்வன் என்று சந்தேகம் வர, தாரை சந்திரனுடைய புதல்வன் என்று வெளியிட்டாள். புதன் அறிவில்

சிறந்தவனுக விளங்கினுன். இளன் என்னும் அரசன் ஒரு காலத்தில் அம்பிகையின் சாபத்தால் இளை என்ற பெண் ஆனுள். புதன் இளையுடன் இன்புற்ருன். இளை அம்பிகையின் சாபத்தால் பின்பு வரத்தால் ஒரு மாதம் ஆணுகவும், ஒரு மாதம் பெண்ணுகவும், மாறிமாறி வாழ்ந்தாள். புதனுக்கு புரூரவ என்ற மகனைப் பெற்ருள். புதன் சிவபெருமானைத் துதித்து இளையை மறுபடியும் இளன் ஆக்கினுன்.

புதன் வரலாற்றைப் பாரதமும், பாகவதமும் கூறுகின்றன. தாரைக்கும் சந்திரனுக்கும் உதித்ததால் பிரமன் அவனைச் சூரியன் பகலில் உறையும்படி செய்தான். ஐயங்கார் பாகவதம் என்னும் நூல் இதைப்பற்றி கூறுகின்றது.

புதன் சிவனைத் துதித்து நவக்கிரகங்களில் ஒன்ருனுன். புதன் பிரதிட்டை செய்த இலிங்கம் காசியில் உள்ளது ( காசி காண்டம் )

ரிக்வேதத்தின் 5-வது காண்ட அதிகாரி புதன். ( அபிதான சிந்தாமணி ).

புதன் சிங்கவாகனம் உடையவன். மஞ்சள் மாலை அணிந்தவன். பொன்மீது ஆசை உடையவன். மஞ்சள் ஆடை புனைபவன். 4 கரங்களிலும் வரதம், வாள் கேடயம், கதை உடையவன். புதன் விஷ்ணுவைப்போல் தோற்றமுடையவன். விஷ்ணுத்தர்மோத்தரம் என்னும் நூல் இதைக் கூறுகிறது. பச்சை நிறத்தையும் விரும்புகின்றவன்.

முத்துசாமி திட்சிதர் புதனைப்பாடியுள்ளார். புதன் மிதுன ராசிக்கும் கன்யா ராசிக்கும் அதிபதி. புத்தகத்தைக் கையிலே கொண்டவன். புதன் அலி உருவினன் என்று கூறுவர். புதனைப் பூசித்தால் கவிபாடும் திறமை ஏற்படும். அதிதேவதை - விஷ்ணு. பிரதி அதிதேவதை - நாராயணன்.

புதனுக்குப் பல பெயர்கள் உண்டு. சில முக்கியமானவை - புத்திமதாம் சிரேஷ்டன், புத்தி தாதா, புத்தி விவர்த்தனன், தனப்பிரதன் மனோஹரன், விஷ்ணுரூபி, கிரக பீடாஹரன் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. மற்றைக் கிரகங்களால் ஏற்படும் பீடையை நீக்குபவன் ( நவக்கிரக ஸ்தோத்ர சங்கிரஹம் ).

புதன் சுபகிரகம், புதன் க்ஷேத்திரம் மதுரை, திருவெண்காட்டைப் புதன் க்ஷேத்திரம் என்று கூறுகின்ருர்கள். இங்குப் புதனுக்கும் கோயில் உண்டு. புதனுக்குக் காசியில் கோயில் உண்டு. புதவார விரதம்பற்றி ''விரத சூடாமணியில்'' கூறப்பட்டுள்ளது. புதன் வியாபாரத்தில் கெட்டிக்காரன்.

'' பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாது ''

என்பது பழமொழி. புதன் வாதநோய் தீர்ப்பான், தர்க்க சாஸ்திரத்தில் நிபுணன்.

விஞ்ஞானம்: புதன் ஒளியுள்ள கிரகம். சூரியன் பக்கத்தில் இருப்பதால் அதிகமாகக் காணமுடியாது. சில மாதங்கள் சூரிய உதயத்திற்கு முன்னும் சில மாதங்கள் சூரிய அஸ்தமனத்திற்குப் பின்னும் ஒரு மணி நேரம் காணலாம். புதன் சூரியனைச் சுற்றிவர 88 நாள் ஆகும். சூரியனுக்கு மிக மிகப்பக்கமுள்ள கிரகம் புதன். மிகத்தூரமுள்ள கிரகம் சனி, ரோமானியர்களால் சாதுர்யமான தேவதையாகக் கருதப்பட்டது,

'' மதனநூல் முதலாவுள்ள மறைகளும் கல்வி ஞானம்
விதமுடன் அவரவர்க்கு விஞ்சைகள் அருள்வோன் திங்கள்
சுதன் பவிசு பாக்கியங்கள் சுகம்பல கொடுக்க வல்லன்.
புதன்கவி புலவன் சீர்மால் பூங்கழல் போற்றி போற்றி! ''

## 6. பிரகஸ்பதி (வியாழன்)

பிரகஸ்பதி என்ருல் மேதாவி என்று பொருள். அறிவிலே சிறந்தவன். நவக்கிரகங்களில் ஒன்ருன பிரகஸ்பதியை வியாழன் என்று கூறுகின்ருேம். குரு என்றும் பெயர் பிரம்மாவின் பேரன், ஆங்கீரச ரிஷிக்கும் சிரத்தா தேவிக்கும் பிறந்தவன். மனைவிமார் தாரை, சங்கினி.

பிரகஸ்பதி காசியில் பலகாலம் தவம்செய்து தேவர்களுக்கு குருவாக விளங்கும் பதவி பெற்ருர். பிரகஸ்பதி ஒரு நீதி நூல் இயற்றியதாகத் திருக்குறள் பரிமேலழகர் உரையில் காணப்படுகின்றது.

ஒரு சமயம் பிரகஸ்பதி நீராடச்சென்றபோது நீர் தெளிவாக இல்லாததால் அதைச் சபித்தார்; தவளை, மீன் முதலியவற்ருல் நீர் கலக்கமடைக என்று சாபம் கொடுத்தார்.

பிரகஸ்பதியின் தேர் 4 சக்கரங்கள் கொண்டது. 8 குதிரைகள் பூட்டப்பட்டது. ஒரு முகம் 4 கைகள் கொண்டவர் பிரகஸ்பதி. ஜபமாலை, கமண்டலம், யோக தண்டம், அபயம் கொண்டவர். இவர் நிறம் பொன்னிறம். சாந்த மூர்த்தி; அதிதேவதை - பிரமன், பிரதி அதிதேவதை - இந்திரன்.

விஷ்ணு தர்மோத்தரம் என்னும் நூல் 'பிரகஸ்பதி இரண்டு கரமுடையவர்' என்று கூறுகின்றது. புத்தகமும் அட்ச மாலையும் ஏந்திக் கொண்டிருப்பவர்.

தேவகுரு, "சுராச்சாரியார்". குரு என்ற திருநாமங்கள், இந்திரனும், தேவர்களும் இவர் உபதேசத்தால் நன்மை பெற்றனர். வழிபாட்டு தானியம் – கடலை. தேர்வில் தேராத மாணவர் குருவை வழிபட்டுக் கடலை தானம் செய்து கடலை சாப்பிட்டால் வெற்றி காண்பர் என்பது ஒரு நம்பிக்கை.

குரு பிராமண குலத்தில் உதித்தவர் என்று தீட்சிதர் பாராட்டிப்பாடுகின்றார். தன்னைப் பணிந்தவர்கட்கு வேண்டியவற்றைக் கொடுப்பார். பிரகஸ்பதி இயற்றிய நூல் ஒன்று உண்டு.

"அமிர்த சஞ்சீவினி" என்ற மந்திரத்தைச் சுக்கிரனிடமிருந்து அறிந்துவர தன் மகன் கசனை பிரகஸ்பதி அனுப்பி அவன் மூலம் கற்று உணர்ந்தார் என்று மகாபாரதம் கூறுகின்றது.

சோழ நாட்டில் திருத்தேவூர் என்ற தலத்தில் பிரகஸ்பதிக்குத் தனி இடம் உள்ளது. தலத்து இறைவன் பெயர் தேவகுருநாதன். திருவாரூர், ஆலங்குடி, மாயூரம், இத்தலங்களை குருஸ்தலமாகவும் தட்சிணாமூர்த்தி வடிவத்தைக் குருவாகவும் கருதி மக்கள் வழிபடுகின்றனர். திருச்செந்தூர் சிறப்புப் பெற்ற குருதலம். தொண்டைநாடு திருவலிதாயம் குருதலம்.

பிரகஸ்பதி தனுர் ராசிக்கும் மீன ராசிக்கும் தலைவர்.

விஞ்ஞானம்: குரு சூரியனைச் சுற்றிவர 12 வருடங்கள் ஆகின்றன (4332 நாட்கள்) பூமியைப் போல் 1360 மடங்கு பெரியது. இதற்கு 12 உபகிரகங்கள் உள்ளன. சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் போல் 5 மடங்கு அதிகம் இதற்கும் சூரியனுக்கும் உள்ள தூரம். கிரகங்களில் மிகப் பெரியது. ரோமர்களால் தேவதைகளுக்கு அரசனாகக் கருதப்பட்டது. மழைக்கு அதிபதி என்று பெயர்.

"மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்கு
அரசன் மந்திரி
நறைசொரி கற்பகப் பொன்நாட்டினுக்கு
அதிபனாகி
நிறைதனஞ் சிவிகை மன்றல் நீடு போகத்தை
நல்கும்
இறைவன் குருவியாழன் இணையடி போற்றி
போற்றி"

7. சுக்கிரன் (வெள்ளி):

சுக்கிரன் நவக்கிரக மண்டலத்தில் 6–வது ஆக் சூரியனுக்குக் கிழக்கில் சுப கிரகமாக விளங்குபவன். இவன் அசுரகுரு. பிருகு முனிவருக்கும் புலோமசை என்பவளுக்கும் பிறந்தவன். பார்க்கவன் என்ற பெயருடையவன்.

சிவபெருமானைக் குறித்துத் தவம்செய்து அமிர்த சஞ்சிவீனி மந்திரத்தை உபதேசம் ஆகப் பெற்றவன். இது இறந்தவர்களை எழுப்பும் தன்மை உடையது. அசுரர்கள் இதை அறிந்து இவனைத் தங்கள் குருவாகப் பெற்றனர். இவ்வரலாற்றைக் காசிக்காண்டம் கூறுகின்றது.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் ஏற்பட்ட போரில் இறந்த அசுரர்கள் மீண்டும் மீண்டும் உயிர்பெற்று எழுந்தனர். தேவர்கள் கூட்டம் குறைந்தது. அவர்கள் சிவனிடம் முறையிட்டனர். குபேரன் சிவனிடம் முறையிட்டான்; இதை அறிந்த சிவன் பார்க்கவனை உடனே அழைத்துவரச் செய்து அவனை எடுத்து விழுங்கினார். சிவன் வயிற்றில் பலகாலம் இருந்து பின்பு தேவர்களின் வேண்டுகோளின்படி பார்க்கவனை சுக்கில வழியாக வெளியே வரச்செய்தார். அதனால் சுக்கிரன் என்றும் தூய வெண்மையாக வந்ததால் வெள்ளி என்றும் பெயர் பெற்றான். (காசிக்காண்டம்)

மகாபலியிடம் விஷ்ணு வாமனனாக வந்து 3 அடி மண்கேட்ட பொழுது கமண்டல நீரை வெளி வராமல் வண்டு உருவம் எடுத்துத் துவாரத்தை அடைக்க, திருமால் தருப்பையால் குத்த சுக்கிரன் கண் ஊனமடைந்தது, அதனால் ஒற்றைக்கண் உடையவனானான். அசுரப்பெண்ணை மணந்து பல அசுரர்களைப் பெற்றெடுத்தான். இரண்டு மனைவியர். புதல்வர் நால்வர், தேவயானை, அரசை என்ற இரண்டு பெண்கள் உண்டு. கயமுகாசுரன், சுக்ரன் மகன் என்று நூல்கள் கூறுகின்றன. ஆனால் கந்த புராணத்தில் வரும் கயமுகாசுரன் இவன் இல்லை.

மகாபாரதத்தில் தேவயானிபற்றிய வரலாறு வருகின்றது. தேவயானியை மணந்த பிறகு யயாதி அவளுடைய தோழியைக் காதலித்ததால் கோபித்து மூப்பு அடையுமாறு யயாதியைச் சபித்தான் சுக்ரன். மூப்பை யாராவது மாற்றிக்கொள்ள இசைந்தால் அவருக்குக் கொடுக்கலாம் என்றும் அருளினான்.

சுக்கிரன் வரலாறுகள் பல உள்ளன. 'சுக்ரநீதி' என்ற நூல் சுக்கிரனால் செய்யப்பட்டது. ஞான வாசிஷ்டம் என்ற நூல் சுக்கிரனுடைய வரலாற்றைக் கூறுகின்றது.

எட்டுக் குதிரைகள் பூட்டிய ஐங்கோண வடிவமும் 4 சக்கரங்களும் கொண்ட வெள்ளித் தேரை உடையவன் சுக்கிரன். ஒரு முகம் 4 கைகள். சடைமுடி மரவுரி தரித்திருப்பவன். சுகீர்த்தி என்ற தேவியைப்பெற்றவன். விஷ்ணு தர்மோத்திரம் என்னும் நூல், சுக்கிரன் ஒரு முகம் 2 கைகள் கொண்டவன் என்கின்றது. நிதியும் புத்தகமும் தாங்கியவன்.

ஸ்ரீ முத்துசாமி தீட்சிதர் சுக்கிரனின் பெருமைகளைக் கீர்த்தனை வாயிலாகக் கூறுகின்றார். சுக்கிரன் தன்னை வழிபடுகின்றவர்களுக்குச் செல்வத்தை அளிப்பவன். சுபகாரியங்களைச் செய்விப்பவன்.

அதிதேவதை — இந்திராணி

பிரதி அதிதேவதை — இந்திர மருத்துவன்.

மேருவை வலம் வருபவன் சுக்கிரன்:

சுக்கிரத் தலங்கள்:

பாண்டிய நாடு — திருவாடானை

தொண்டை நாடு — திருவேற்காடு

சோழ நாடு — ஸ்ரீரங்கம்.

வடமொழி நூல் ஒன்றில் சுக்கிரனை எப்படிப் பூஜிக்க வேண்டுமென்ற செய்திகள் உள்ளன.

சுக்கிரனுக்கு பிரீதியான வண்ணம் வெண்மை. சுக்கிரன் ஆனந்த மயமாக இருப்பவன். உசநன் என்ற பெயர் உண்டு. மற்ற பெயர்கள் காவியன், ஹிமாபன், குந்தவளன், சுக்லாம்பரதரன், வேத வேதாங்க பாரகன், நீதிக்ஞன், பிரபு கருணாசிந்து முதலியன. பதவியால் வந்த பெயர் குரு. மழை பெய்ய உதவுபவன். இனிப்புப் பண்டங்கள், மணி, வைரம், பூஷணங்கள் இவை விருப்பமானவை.

சுக்கிரதசைதான் மிகவும் பெரியது. 20 ஆண்டுக் காலம் சுக்கிரதசையில் துன்பப்படுபவர்களும் உண்டு; சுக்கிரன விருஷப துலாராசிக்கு அதிபதி.

**விஞ்ஞானம் :**

சுக்கிரனுக்குச் சூரியனைச் சுற்றிவர 235 நாட்கள் ஆகும். சுமார் 8 மாதம். ரோமர்களால் காதல் தெய்வமாக வணங்கப்பட்டது. மிக அழகான பெண்ணாகவும் வணங்கினர்.

''மூர்க்கவான் சூரன் வானன் முதலினோர் குருவாய் வையங்
காக்கவான் மழை பெய்விக்கும் கவிமகன் கனகம் ஈவோன்
தீர்க்க வானவர்கள் போற்ற செத்தவர்தமை எழுப்பும்
பார்க்கவன் சுக்ராச்சாரி பாத பங்கயமே போற்றி! போற்றி!!''

**8. சனி பகவான் :**

சனி பகவான் நவக்கிரக மண்டலத்தில் 7 ஆவதாக சூரியனுக்கு மேற்கில் அசுப கிரகமாக விளங்குபவன். இவன் பயங்கரமானவன். எல்லோரையும் ஆட்டிவைப்பவன். ஆனால் தன்னை வழிபட்டவர்களுக்கு அருள் புரியும் வள்ளல்

சூரியனுக்கும் சாயா தேவிக்கும் இரண்டாவது குமாரனாகத் தோன்றியவன் சனி. சனி பகவான், சனீச்சுவரன், சனைச்சரன் என்றும் கூறுவர்

சனி, தன் பெரிய தாயாரான சஞ்சிகையை உதாசீனமாகப் பேசினான். அதனால் அவளுடைய குமாரனான யமனால் தண்டத்தால் காலில் அடிக்கப் பட்டுக் கால் ஊனமடைந்தான். அதனால் வலக் கால் சிறிது நொண்டி ஆயிற்று. மெல்ல நொண்டி நடப்பவன். தக்கயாகத்தில் சனிக்கு ஒரு கண் போயிற்று என்ற கதை உண்டு

சனிக்கு மூன்று மனைவிகள். அவர்கள் நீலா, மந்தா, சேஷ்டை. சனியின் புதல்வன் குளிகன், குளிகனில் எது செய்தாலும் மேலும் மேலும் பெருகும். அதனால் நல்ல காரியங்களை செய்வர். தீயன செய்யக்கூடாது. சனியின் பிடியில் சிக்கித் தவிப்பவர் பலர்.

சனி, சிவனைக் குறித்துத் தவம் செய்து காசியில் இலிங்கம் பிரதிட்டை செய்து கிரகப்பதவி அடைந்தான்.

ஒருமுகம் 4 கைகள், அம்பு, வில், வாள், வரதம் முதலியன கொண்டவன் நீலமேனி, சடைமுடி, கருநிற ஆடை, கருஞ் சந்தனம், நீல மணிமாலை முதலியன உடையவன் என்று நவக்கிரக ஆராதனம் கூறுகின்றது. சனி ஒரு முகம் 2 கைகள் உடையவன் என்று விஷ்ணு தர்மோத்திரம் கூறுகின்றது.

சனி பகவான் வாகனம் காக்கை. கழுகு வாகனம் உடையவன் என்றும் கூறுவர். சனிபகவான் தோத்திரம் என்ற நூல் 12 பாடல்களால் சனி கிரகத்தைத் துதிக்கின்றது (காசிமடம் வெளியீடு) அதிலவரும் ஒவ்வொரு பாடலும் "சனியனே காகமேறும் தம்பிரானே" என்று முடிகின்றது. வடமொழியில் கழுகை வாகனமாகக் கூறுகின்றார்கள்.

சனிக்கு 108 நாமங்கள் உண்டு. சனிக்கு மந்தன், பிணிமுகன், முதுமகன், முடவன், காரி என்ற பெயர்கள் தமிழ் நூல்களில் வருகின்றன.

பிரியமான மலர் வன்னி. சனி தாமத குண முடையவன். பிரியமான உலோகம் – இரும்பு. தானியம்-எள்; சுவை–கசப்பு. இவனுக்கு ஜடாதரன் என்றும் பெயர் உண்டு.

சனியை ஆயுள் காரகனுக சோதிட நூல் சொல்கின்றது. இவனை வழிபட்டால் நீண்ட ஆயுளுடன் வாழலாம்.

"சனியைப்போல் கொடுப்பாரும் இல்லை, கெடுப்பவரும் இல்லை" என்பது பழமொழி

சனிக்குச் சிறப்பான கோயில் உள்ள இடம் திருநள்ளாறு. சனிப்பெயர்ச்சி நாளன்று அங்கு லட்சக்கணக்கான மக்கள் கூடி வழிபடுவர். நளனுக்குத் துன்பம் நீங்கியத் தலம் திருநள்ளாறு. அதிதேவதை – யமன். பிரதி அதிதேவதை - பிரஜாபதி.

"வெய்ய சுடரோன் சாயை
மேவு மகன் சூற்கரத்தான்
பைய நடக்கின்ற
பங்கு கரு மெய்யன்
இனியன் அருளுங்கால்
இன்றேற் கொடியன்
சனியன் அவன் சீற்றம் தவிர்"

சனி பகவானுக்குத் தனியே 108 நாமங்கள் உண்டு. வடமொழியிலும் தமிழிலும் இவனைப் பற்றிய துதிகள் பல உண்டு.

விஞ்ஞானம் :

சனிக்கிரகம் சூரிய மண்டலத்திலிருந்து அதிக தூரம் உள்ளது. இது சூரியனைச் சுற்றிவர 10789 நாட்கள் (29½) வருடம் ஆகும். இதைச் சுற்றி ஒரு மோதிரம் போன்ற வளையம் உள்ளது. சனியை வேளாண்மைக்கு அரசன் என்று ரோமர்கள் கருதினர்.

"முனிவர்கள் தேவர்ஏனை மூர்த்திகள்
முதலானோர்கள்
மனிதர்கள் சகலவாழ்வுன் மகிமை அல்லால்
வேறுண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே !
காகம் ஏறும்
சனியனே உன்னைத் துதித்தேன் தமியனேற்
கருள்செய்வாயே"

- நவக்கிரக தோத்திரம்.

9. ராகு :

ராகு நவக்கிரக மண்டலத்தில் 8 ஆவதாக சூரியனுக்குத் தெற்கில் அசுபக் கிரகமாக விளங்குபவன். இவன் சாயாகிரகம் என்று கூறப்படுபவன், விப்ரசித்தி என்ற அசுரனுக்கும் தட்சனின் பெண்ணை சிம்மிகை என்பவளுக்கும் பிறந்தவன், சுக்கிரனுடைய அன்பன்.

திருப்பாற்கடலைக் கடைந்த வரலாறு நாம் அறிந்ததே. ராகு சுக்கிரன் அருளால் தேவவடிவம் பெற்று, அமிர்தத்தை வாங்கி உண்டான். சூரிய சந்திரர் இதைக் குறிப்பால் காட்டத் திருமால் தன் கையிலிருந்த சட்டுவத்தால் ராகு தலையில் அடித்தார். தலை துண்டித்து வீழ்ந்தது. கைகள் உடல் மற்ற உறுப்புகள் வேறு இடத்தில் போய் வீழ்ந்தன, ராகு அமிர்தம் உண்டதால் தலை அழியாமல் வளர்ச்சிபெற்றுப் பின்பு பாம்புடல் ஒன்றுடன் சேர்ந்தது.

பின்பு விரோதம் காரணமாக சூரிய சந்திரர்களைப் பிடிக்கத் தொடங்கினன், அதுதான் கிரகணம் என்று கூறப்படுகின்றது, விஞ்ஞான ரீதியாக இது வேறு விதமாகக் கூறப்படுகின்றது.

தவத்தின் வலிமையால் கிரக பதவி அடைந்தவன் ராகு. ராகுவின் மனைவி சிம்ஹி, மகன் அமுதகடிகன். கரிய ஆடை, கரிய உடல் உடையவன். சூலம், கேடயம், வாள், வரதம் கொண்டவன். கருணைபெருகும் கண்கள் உடையவன். "சிற்பரத்தினம்" என்னும் நூல் இவைகளைக் கூறுகின்றது. முறம்போன்ற வடிவமான ஆசனத்தில் வீற்றிருப்பவன். வாகனமாகச் சிங்கத்தையும், ஆட்டையும் உடையவன்.

அதிதேவதை – துர்க்கை அல்லது பசு. பிரதிஅதிதேவதை – காலன் அல்லது பாம்பு. திருக்கோயில்களில் ராகுவைத் தனியே வைத்துப் பூசிக்கின்றனர். விடப் பிராணிகளால் உண்டாகும் உபாதையை நீக்குபவன் ராகு.

ராகுவின் தலம் - காளஹஸ்தி. திருமாலைக் குறித்துத் தவம் செய்து கிரக பதவி அடைந்தான். ராகு மேருவை அப்பிரதக்ஷிணமாகச் சுற்றி வருகிறுன்.

"கயானசித்ர" என்று தொடங்கும் மந்திரம் ராகுவை வழிபட உரியது. வாமதேவ ரிஷி இயற்றியது.

ராகுக்கு உரிய தானியம் உளுந்து. ஆட்டை வாகனமாகக் கொண்டவன், சனிக்கும் சுக்கிரனுக்கும்

நண்பன். ஞானகுருவாகிய முருகனுக்கு மகிழ்ச்சி அளிப்பவன்.

காஞ்சீபுரம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில் அருகில் உள்ள ஊரகம் உலகளந்த பெருமாளைத் தரிசனம் செய்தால் ராகு பிரீதியாகும் என்று பெரியோர் கூறுவர்.

முத்துசாமி தீட்சிதர் ராகுவைப்பற்றி பாடியுள்ளார்.

'' வாகுசேர் நெடுமால் முன்னம்
வானவர்க்கு அமுதம் ஈய
ஏகி நீ நடு விருக்க இருசிரம்
அற்று வெய்ய
பாகுசேர் மொழியாள் பங்கன்
பரன்கையில் சிரமே பெற்ற
ராகுவே! உன்னைத் துதித்தேன்
ரட்சிப்பாயே! ரட்சிப்பாயே! ''

விஞ்ஞானம் :

" ராகு கேதுக்கள் கிரகங்கள் அல்ல. அவைகளை Nodes என்று கூறுவர். அவை மாயாமயமானவை." (Imaginary points) என்பர்.

10. கேது :

ராகுவின் கதையைப் போலவே கேதுவின் கதையும் உள்ளது. இரண்டும் ஒன்றுதான். தலை துண்டிக்கப்பட்டதும் இரண்டு உடல்கள் ஏற்பட்டன. தலை ராகு என்றும், உடல் கேது என்றும் பெயர் பெற்று வாழலாயின.

கேது பின்பு விஷ்ணுவை நோக்கித் தவம் செய்து பாம்புத்தலை பெற்றான். கேது செம்பாம்பு உருவமுடையவன் என்று கூறுவர். கேது தேவலோகத்திலிருந்து பூலோகத்தில் வீழ்ந்ததும் மினி என்ற பிராமணன் எடுத்து வளர்த்தான். கேது நிறம் கறுப்பு. இரண்டு கைகள் உடையவன். ஒருகை அபயத்தைக் காட்டும். மற்றொன்று கதை பிடித்திருக்கும். பத்துக் குதிரைகள் பூட்டிய தேரில் வருவான். '' கேதும்க்ருண்வன் '' என்பது அவனுடைய மந்திரம். அதற்கு ரிஷி மதுச்சந்தர். அதனை அன்றி '' ஓம்க்ரும் '' என்ற மந்திரமும் உண்டு. அதற்கு ரிஷி ஜயச்சந்தர். சித்தாந்த பஞ்சாங்கம் இதைக் கூறுகின்றது.

கேது மிகவும் கோபமுடையவன். முக்கோண வடிவம் பெற்ற கொடியை உடையவன். முருகவேளுக்கு வெண் கவரியை வீசுபவன். மேருவை இடமாகச் சுற்றுபவன்.

கேதுவுக்கு எட்டுப்பிள்ளைகள் உண்டு. புகை நிற மேனியன் என்றும் கூறுவர். கழுகின் மேல் ஊர்பவன், அதிதேவதை - சித்திரகுப்தன். பிரதி அதிதேவதை - பிரம்மா, [illegible] என்ற பெயரும் உண்டு. தும்ர கேது, [illegible]து, மஹா கேது, சர்வ கேது முதலிய பெயர்கள் உண்டு. சினமுடையவன். ஆதலால் ரௌத்திர கேது என்ற பெயரும் உண்டு.

கேதுவை அலி என்றும் கூறுவர். பிரியமான ரத்தினம் – வைடூரியம், தானியம் – கொள், மலர் – செவ்வல்லி, சுவை - புளிப்பு, சிங்க வாகனமும், 6 குதிரைகள் பூட்டிய ரதமும் உண்டு என்று கூறுவர்.

ராகுவுக்கும் கேதுவுக்கும் தோற்றத்தில் சில ஒற்றுமைகள் உண்டு.

கேதுவின் மனைவி சித்ரலேகா. எட்டுப் பிள்ளைகளில் அவமிருது என்பவன் ஒருவன்.

சூர்யசந்திரர் விரோதி. சுக்கிரன், சனி நண்பர்கள். கேது, படத்துடன் கூடிய 3 அல்லது 5 தலைகள் கொண்ட பாம்புத் தலையுடையவன்

கேது நவக்கிரகங்களில் ஒன்றாக வைத்துப் பூசிக்கப்படுகின்றான். சகல பீடைகளையும் நீக்குபவன். தைரியம், செல்வம், வெற்றி, ஞானம் முதலியன தருபவன்.

கேதுத்தலம் காளஹ[illegible] [illegible]றுவர்.

மாதுசேர் நெடுமால் [illegible] வானவர்க்கு
அமுதம் ஈயும்
போதுநீ நடுவிருக்கப் புன்சிரம் அற்று வெய்யத்
தீதில் சேர் கதிர் [illegible]ங்கச்சிவன் கையில் சிரமே
பெற்ற
கேதுவே! உன்னைத் [illegible]தித்தேன் கீர்த்தியாய்
ரட்சிப்பாயே.

நவக்கிரகத் தலங்கள் :

1. சூரியன் - சூரியனார் கோயில் (தஞ்சை மாவட்டம்
2. சந்திரன் - திருப்பதி (ஆந்திரம்)
3. செவ்வாய் - பழனி, வைத்தீஸ்வரன்கோயில் (தஞ்சை மாவட்டம்)
4. புதன் - மதுரை, திருவெண்காடு.
5. பிரகஸ்பதி - திருச்செந்தூர், திருவிரும்பூளை (ஆலங்குடி)
6. சுக்கிரன் – ஸ்ரீரங்கம்
7. சனி – திருநள்ளாறு.
8. ராகு } திருநாகே
9. கேது } ஸ்ரீ காளஹஸ்தி ( ஆந்திர தேசம் )

# பயன்பட்ட நூல்கள் :


| | | |
|---|---|---|
| சைவ இலக்கிய வரலாறு | – | ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை |
| கல்லெழுத்தில் தேவார மூவர் | – | கே. எம். வேங்கடராமையா |
| சாசனத் தமிழ்க்கவி சரிதம் | – | மு. ராகவையங்கார் |
| சைவத் திருக்கோயிற் கிரியை நெறி | – | கைலாசநாதக் குருக்கள் |
| கனகாபிஷேக மலர் | – | தருமையாதீனம் |
| புள்ளிருக்கு வேளூர் கும்பாபிஷேக மலர் | – | வைத்யநாதசுவாமி திருக்கோயில் வைத்தீசுவரன்கோயில் |
| தருமையாதீனத் தேவாரப் பதிகங்கள் | – | உரைப் பதிப்புக்கள். |